

ப. தியான்

# துகள்

நாடகநூல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துகள்

மேடை நாடகங்களின் தொகுப்பு நூல்

ஆசிரியர்

திரு ப. தியான்

எனை ஈன்றவர்க்கும்
என் மண் காத்தவர்க்கும்
இந்நூல் காணிக்கை

நாடகத்தென்றல் வெளியீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர்: துகள்

நூலின் விடயம்: நாடகப் பிரதி

நூலாசிரியர்: ப. தியான்

அட்டைப்படம்/
நூல்வடிவமைப்பு: செல்வன் கீர்த்திகன் தியான்

தட்டச்சு உதவி: செல்வி கீர்த்தனா தியான்
திருமதி சோபியா பாஸ்கரன்

செயற்திட்ட உதவி: திருமதி கல்யாணி இராஜ்குமார்
செல்வி கீர்த்தனா தியான்

வெளியிட்டத்தேதி: 27.10.2018 (முதற்பதிப்பு)

வெளியீட்டு உரிமை: ப. தியான் / நாடகத்தென்றல்

Book Title: Thugal
Author: P. Thiyan
Content: Scripts of plays staged by P. Thiyan
Published by Nadahathenral on 27th of October 2018

Copyright © 2018 by P. Thiyan and Nadahathenral
All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணத்திலும் எழுத்திலும் உள்ளத்திலும் உறைவோரே...
வணங்குகிறேன்

மௌனமாகவே நாங்கள்
உங்களை சுவாசிக்கின்றோம்.
காற்றின் பரப்பளவெங்கும் உங்கள்
இளம் சிரிப்பு நிதானமாக சலசலப்பதால்
எங்கும் எதிலும் உங்களையே
ஞாபகிக்கின்றோம்.

மானத்தின் அளவுகோள் உங்கள்
மரணத்தால் ஈடுசெய்யப்படும் போது
மனிதத்தின் பிரசவம் உயிர்ப்பிக்கப்படுகிறது.
எப்படி உச்சரிப்பது உங்களை?

சொற்களின் சேர்வையில்
செதுக்கப்படும் எந்தப் பதமும்
உங்களை ஒப்புவித்து
உயிர்பித்துவிட முடியாது தவிக்கின்றனவே!!
மாவீரர்களே
அகதியெனும் தொடர் பதிப்பில்
அடுத்த அத்தியாயம் நாங்கள்; என்பதனால்
ஏற்படும் வலியை
உங்கள் கல்லறையோரம்
மௌனமாகவே உச்சரிக்கிறோம்.

மனிதத்தின் நேசர்களே! எம் மண்ணின் விதைகளே!
நாங்கள் வார்த்தைகளை தொலைத்து
கண்களின் ஈரத்தில்
நனைந்துவிடும் அழுகையின்
அழுகுரல்களை எப்படிச் சொல்வது?
முடியவில்லை முடியவில்லை
எங்களுக்காய் நீங்கள் எரியுண்டீர்கள்
எங்களுக்காய் நீங்கள் வெடித்து சிதறுகின்றீர்
எங்களுக்காய் யாவையும் இழந்தீர்

-தியான்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை



அணு எப்படித் துகள்களால் ஆனதோ அதேபோல் இந்தப்படைப்பு சிறு துகள்களைப்போல் ஆனது எனலாம். பரந்துபட்ட தமிழர் கலை இலக்கியப் பரப்பானது அணுவைப் போன்று சிறிதாக எம் கரங்களுக்குக் கிடைக்கப் பெற்றாலும் அணுவின் இயக்கு சக்தி போல் எம்மை எங்கள் கலை இலக்கியப் பரப்பை அது இயக்குவது சிறப்பு. பல வர்ணங்களின் சிதறிய துகள்கள் அழகுபடுத்தும் காட்சியைப்போல் இந்நூலில் வர்ணத்துகள்களாக சிந்தியிருக்கும் எனது சில நாடக வெளிப்பாடுகள் உங்களை ஈர்த்து அழகுபடலாம்.

பேரன்பிற்கினியவர்களே! தாய்மண்ணில் காற்றாய் படர்ந்த என்னை நின்று நிதானித்து திசையறிந்து பயணிக்க வைத்தது தமிழ் இலக்கியம். அதன் வழியில் என் பயணம் விசுவமடு மகாவித்தியாலய ஆசிரியர் திருவாளர் தம்பு அவர்களால் "அரிச்சந்திர மயான காண்டமாகவும்" "வள்ளித் திருமணத்தினூடாகவும்" அழகுபடுத்தப்பட்டது. அங்கே என்னை அறிய முற்பட்டேன் சில வெற்றிகள் பல தோல்விகள். எனினும் முயற்சியோடு பயணித்த என்னை முரசுமோட்டை முருகானந்த மகாவித்தியாலயம் அரவணைத்தது.

அங்குதான் நாடகத்தின் தரம் நிலை புதிய சிந்தனை நடிப்புத்திறன் போன்ற பல்வேறு விடயங்களை அறிந்து தெரிந்துகொள்ள என்னைத் தூண்டினார் என் ஆசிரியர் திருவாளர் தவராசா கிருஸ்ணப்பிள்ளை அவர்கள். கலைப் பசியோடு இருந்த எனக்கு நல்ல விருந்தாக "போதையின் பதையில்" என்ற நாடகம் அமைந்தது. அதை எமக்குப் பழக்கிய அவரின் திறமையும் ஒரு கருவை உயிர்ப்படைச் செய்யும் ஈடுபாட்டையும் காட்டினார்.

மாவட்டரீதியில் சிறந்த நடிகராகவும் சிறந்த நாடகமாகவும் பாராட்டப்பட்டு எங்கள் பாடசாலை மாணவர்கள் நாடக சக நடிகர்கள் அனைவரும் நாம் பயணித்த வாகனத்திலே தாளம்போட்டு பாடி ஆடி வந்த அந்த மகிழ்ச்சியின் தொடர்ச்சியாக என் நாடகப் பயணமும் தாயகத்தில் வெளிவந்த சாளரம் என்ற சஞ்சிகையில் தொடங்கிய இலக்கியப் பயணமும் தொடர்கிறது.

ஆரம்பத்தில் தாயகத்தில் படிக்கும்போதும் பின் ஆசிரியராகி கற்பிக்கும்போதும் நாடகம் என்ற கருவின் உருவகம் எனக்குள் ஆழப்படுத்திய பொறியின் இயங்குநிலை பலத்தளங்களைக் காட்டி அனுபவங்களைத் தந்தது. புலம்பெயர்ந்து வாழிடம் தேடி யேர்மனியில் கால்பதித்த எனக்கு தமிழாலயம் பிராங்பேர்ட் மீண்டும் கருவாகி என் நாடக முயற்சிக்கு உயிர் தந்தது. அன்று "போதை" என்ற நவீன நாடகத்தின் ஊடாக நான் பலருக்கு அறிமுகமானேன். பலரின் பாராட்டைப் பெற்றேன். அதன்பின் தொடங்கிய எனது நாடக முயற்சிகள் மெல்ல மெல்ல தவழத் தொடங்கி இன்று 65ற்கு மேற்பட்ட மேடை நாடகங்களை நெறிப்படுத்த உரமானது.

நீண்ட நாட்களாக நாடகத்தின் நெறியோடு நடந்த எனது ஒரு முயற்சியாக 2006 ஆண்டு "நாடகத்தென்றல்" என்ற பெயரோடு நாடகங்களுக்கு ஒரு தளமாக பல கலைப் பேராளர்களின் ஆசியோடு நாடகப்போட்டியை நடாத்தி அப்போட்டியின் மூலம் சிறந்த நடிகர், நடிகை, குழந்தை நடிப்பு, காட்சி அமைப்பு, கதை, இயக்குநர் போன்ற தெரிவுகளை அனுபவம் மிக்க நாடகக் கலைஞர்கள் மற்றும் கலையார்வம் மிக்க இளைய தலைமுறையினர் ஆகியோரை கொண்டமைந்த சிறந்த நடுவர் குழுவின் தெரிவில் மதிப்பளித்தும் சிறப்பித்தும் வருகிறது எமது நாடகத்தென்றல்.

அதன் தொடர்ச்சியாக இவ்வாண்டு நாடகத்தென்றல் தனது பன்னிரண்டாவது அகவை நிறைவில் போட்டிகளற்ற நாடக விழாவில் இந்த நாடகத்தொகுப்பை ஒரு நூலாக்கி வெளியிடுவது எனக்கு மட்டற்ற மகிழ்வைத் தருகிறது.

இன்றைய எமது அவசர வாழ்வியல் சூழலிலும் தொலைக்காட்சி தொடர்களிலும் ஏராளமானவர்கள் மங்கி மயங்கிக் கிடக்கும் ஒரு நிலையில் நாடகத்தின்பால் ஈடுபாடு கொண்டு அதற்கான முயற்சிகளிலும் முனைப்புகளிலும் தங்களை ஈடுபடுத்தியிருக்கும் நாடக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்வலர்களை பெருமனதோடு வாழ்த்துவதில் மனம் மகிழ்கிறது. எனது பல்வேறுபட்ட நாடகங்களில் பங்கேற்று நடித்த கலைஞர்களையும் ஊக்குவிப்புச் செய்து உடனிருந்த நண்பர்களையும் இவ்வேளை நினைவிருத்தி அவர்களுக்கு நன்றி சொல்வதில் பேருவகை ஏற்படுகிறது. முத்தமிழில் நாடகமும் ஒன்று. எமது வாழ்வின் இயலோடு காற்றளைந்துவரும் இசையை இணைத்து வாழ்வின் இயலை நாடகமாக்கிய ஓர் ஒப்பற்ற இலக்கிய வாழ்வை கொண்டவர்கள் தமிழர்கள். இன்றைய அவசர வாழ்வின் வேகம் எமது மேடை நாடகத்தின்பால் அவர்களை இட்டுச் செல்வதில் சிரமத்தை சந்திக்கிறது. புலம்பெயர் வாழ்வில் நாங்கள் எமது இருப்பை தக்க வைத்துக்கொள்ள பாடுபடும் அதே வேளை நாம் எமது நாடகம் இலக்கியம் சார்ந்த முனைப்புகளிலும் ஈடுபடுவது கட்டாயமானதாக இருக்கிறது.

எமது வேர்களை தாய்மண்ணில் விட்டுவிட்டு இங்கே வேர்பரப்பி வாழ்வதென்பது நிரந்தரமானது இல்லை. இங்கு வாழும் எமது சிறார்கள் தம் வேர்களைத்தேடிச் சென்று சுயமாக வாழ நாளை அவர்களை அடையாளமிட்டு அனுப்பி வைக்க உதவுவது கலைதான் எனவே நாம் நாடக இலக்கியத்தையும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

உலகின் பல்வேறு திசைகளில் வாழும் தமிழர்கள் தங்கள் அடிகளை தொலைத்துவிடும் அவல நிலை மெதுவாக தலை தூக்குகிறது. இன்றைய பெரியவர்கள் பெற்றோர்கள் செய்யும் தவறு வருங்கால இளைய தலைமுறையினரை அடையாளமற்றவர்களாக்கி அநாதைகளாக்கிவிடும். எனவே நாங்கள் எதிர்கால தலைமுறையினரிற்கான மொழி இலக்கிய கற்பித்தல்களோடு முத்தமிழையும் ஊட்டி வளர்க்கவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

எமது வாழிட நாடுகள் நாடகத்திற்கு முதலிடம் கொடுத்து அதகற்கான பயிற்சிகளை வழங்கி வளங்களைக் கொடுத்து மிகவும் ஊக்கமளிக்கின்றன. எமது வருங்கால சந்ததியினர் அவற்றைப் பெற்று கற்று அவர்களது நாடகக் கலையோடு எமது நாடகக் கலையையும் வளர்த்தல் எமது இருப்பிற்கான சிறந்த பதிவாகவும் எமது கலையின் சிறப்பிற்கும் உகந்ததாக இருக்கும் என்று நம்புகிறேன். இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் 21 நாடகங்களும் கலைஞர்கள் பயிற்சி பெற்று மேடையில் நடித்து வெளிப்படுத்தும் வகையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் அவற்றைப் பயன்படுத்தும் வகையில் எழுதப்பட்டிருக்கிது.

இந்நாடகங்களை நூலுருவாக்க உதவிய திருமதி கல்யாணி இராஜ்குமார், திருமதி சோபியா பாஸ்கரன், ஆகியோருக்கு எனது நிறைவான நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். எனது எல்லா நாடகங்களிலும் குழந்தை முதல் இன்றுவரை மறுப்பேதும் கூறாமல் கொடுத்தப் பாத்திரத்தை குறைவின்றி நடித்து இன்று அட்டைப்பட வடிவமைப்பையும் நூல் வடிவமைப்பையும் செய்து எனக்கான ஊக்குவிப்பாகவும் இருந்து செயலாற்றிய எனது அன்புச் செல்லங்கள் கீர்த்தனா, கீர்த்திகன் இருவருக்கும் எனது வாழ்த்தையும் பெற்றதன் பயன் கண்டு மகிழ்ந்து பாராட்டுவதில் பெருமையும் கொள்கிறேன்.

ஒரு வண்டியில் இரண்டு மாடுகள் ஒரு சேர நடந்தாலே பயன். அந்த பயனை எனது வாழ்க்கைத் துணையாக வந்து எனது எல்லா முயற்சிகளிலும் முன்னெடுப்புகளிலும் சிறந்த மதியாளராக தக்க பொழுதில் சரி பிழைகளை சுட்டிக் காட்டி என்னில் பாதியாக இருக்கும் என் துணையாள் திருமதி சுமதி தியான் அவரையும் இவ்வேளை நினைவிருத்தி உங்களுடன் பகிர்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்நூலுக்கான உரைகளை வழங்கி இந்த நாடக நூலுக்குச் சிறப்புச் செய்திருக்கும் திரு தவராஜா கிருஷ்ணப்பிள்ளை அவர்களுக்கும் திரு அன்ரன் பொன்ராஜா அவர்களுக்கும் திரு தயாநிதி தம்பையா அவர்களுக்கும் திரு சிறிதாஸ் கந்தையா அவர்களுக்கும் திரு பேரம்பலம் பாலராஜா அவர்களுக்கும் எனது மனம் நிறைவான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். இவர்கள் நாடகத்தின் தளத்தை விரிவடையச் செய்பவர்கள் புதிய உத்திகளை புதிய வடிவங்களை நாடகங்களுக்குள் புகுத்தி சிறப்பிக்கும் நாடகவல்லுநர்கள் அவர்களை வாழ்த்தி நன்றிக்கரம்பற்றி நெகிழ்கிறேன்.

தியான் 27.10.2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை



இன்று அறிவியலின் உந்தலினால் சினிமாவின் ஆதிக்கம் மக்களை கட்டிப்போட்ட நிலையில் தளர்வுற்றிருக்கும் நாடகக்கலைக்கு முண்டு கொடுத்தாற்போல் திரு பழனிவேல் தியாகராசா (தியான்) என்ற பெயருடைய கலைஞனின் "துகள்" என்ற நாடகத்தொகுப்பு நூல் வெளிவருகின்றது.

கலைஞன் தியான் எனது வளமிகு மாணவர்களில் ஒருவர். மருத நிலப் பண்புகளையும் முல்லை நிலப் பண்புகளையும் அதிகந்தாங்கி நின்று வீரத்தாலும் மனவுறுதியாலும் "அடங்காப்பற்று" எனப் பெயரெடுத்த வன்னிமண்ணிலே இவரின்பால் கருக்கொண்ட கலைஞானம் ஐரோப்பிய யேர்மன் தேசத்தில் உருக்கொண்டு தொடர்வதை நான் வாழ்த்திப் பாராட்டுகின்றேன்.


நாடகத்துறையில் இவருக்கிருந்த ஆர்வத்தையும் திறமையையும் இவரது பள்ளிப்பருவத்தில் என்னால் அரங்கேற்றப்பட்ட "போதையின் பாதையிலே" என்ற நாடகத்தினூடாக அறிந்து கொண்டேன். இந்நாடகம் மாவட்டரீதியாக வெற்றியீட்டியமையானது கல்வியாளர்கள் மத்தியில் இவருக்கு சிறந்த நாடகக் கலைஞன் என்ற அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுத்திருந்தது எனலாம். இதனூடாக இவர் சார்ந்திருந்த "முரசுமோட்டை முருகானந்தா" பள்ளிக்குப் பெருமை சேர்த்துக்கொடுத்தார்.
இவருக்கு நாடகத்தின்பால் இருந்த ஆர்வமும் ஆற்றலும் இவரை இன்று அறுபத்தைந்திற்கும் மேற்பட்ட நாடகங்களை இயக்கி மேடையேற்றிய சாதனையாளராக உங்கள் முன் நிறுத்தியுள்ளது. இத்தோடு நின்றுவிடாமல் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக "நாடகத்தென்றல்" என்னும் நாடகப்போட்டி நிகழ்வினூடாக இளம் தலைமுறையினரிடையே நாடகக் கலையின் ஈர்ப்பை வளபர்ப்பதற்காக அவர் எடுக்கும் முயற்சி மிகச்சிறப்பானதாகும்.
"துகள்" எனும் நாடகத் தொகுப்பு நூலில் இடம்பெற்றுள்ள அத்தனை நாடகங்களும் நயத்துடனும் கருத்தாளத்துடனும் அமைக்கப்பட்டிருப்பதானது ஆசிரியரின் நாடகத்தின் பாலுள்ள ஆற்றலைக் கோடிட்டுக் காட்டுகிறது. மக்களின் முன்னே குவிந்துள்ள தவறான கருத்தோட்டங்களை அகற்றி உண்மையானதும் செம்மையானதுமான கருத்துக்களை மக்கள் மனங்களில் இந்நாடகங்களினூடாக விதைத்திருக்கின்றார்.
இவரது நாடகங்களில் வெறுமனே இவர் நாளாந்த வாழ்வியலில் காணப்படும் குறைகளும் குமுறல்களும் அதற்கான தீர்வுகளும் மட்டுமே சுட்டிக்காட்டவில்லை. மேலாக எம் இனத்தின் உண்மையானதும் மேன்மையானதுமான வரலாற்றை, ஆரியம் எவ்வாறு தமக்கே உரித்தான சித்து விளையாட்டினூடாக தமிழர்களின் மூளையைக் கட்டிப்போட்டு தமக்குச் சாதகமாக மாற்றியமைத்து தமிழர்களை இழிவு நிலைக்கு தள்ளியதென்பதை கோடிட்டுக் காட்டவும் தவறவில்லை.
இதனால் இவர் வழமையான கலைஞர்களிலிருந்து சற்று மாறி தனது தடத்தை அமைத்திருப்பது சிறப்பானதாகும். இத்தகைய சிறப்புகளையுடைய அடக்கமே உருவான இக்கலைஞனின் படைப்புகள் மக்கள் மனங்களைத் தொடும் என்பதில் சந்தேகம் இல்லை. இத்தகைய கலைஞன் பல்லாண்டு பல்லாண்டு காலம் வாழ்ந்து தமிழிற்கு பல அரிய நூல்களை அளிக்க வேண்டும் என இறையருள்வேண்டி வாழ்த்துகிறேன்.

கி. தவராசா
பிரான்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடகப் பிரதிகள்: வரலாற்று ஆவணச்சான்றாக....



'தியான்'- முதலில் சந்தித்த இடம் 2016 பிரான்ஸ். பரிசில் நடைபெற்ற உலக நாடக விழா. நாடக விழாவில் அவர் குறியீட்டு வடிவிலான 'மரணம்' நாடகத்தை நெறியாள்கை செய்து மேடையேற்றியிருந்தார். பாராட்டுதலுக்குரிய படைப்பாக இருந்தது. பின்னர் அவர் என்னுடன் பேச வரும் போது, என் நேரமின்னையால் எனது தமிழ் நாடகக் கல்லூரி மாணவன் கலைவளரி இரமணனை அழைத்து அவனுடன் பேசுமாறு கூறிவிட்டு சென்றுவிட்டேன். பின்னரும் அவருடன் கலந்துரையாடும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. அதன் பின்னர் சென்ற ஆண்டு அவர் நடத்திய நாடகப் போட்டிக்கு நடுவராகப் பணிபுரிய அழைப்பு வந்தது. அழைப்பை ஏற்று யேர்மனிக்குச் சென்றேன். உளமார்ந்த வரவேற்பு. அன்பான மனைவி, ஒரு சோடி விடலைக் குஞ்சுகள். கீர்த்தனா, கீர்த்திகன் இருவரின் கலை, பண்பாட்டு ஆர்வங்கண்டு அதிர்ந்து போனேன். அவரகளின் யேர்மன், தமிழ் இரு மொழி ஆளுமை கண்டு பரவசமடைந்தேன்.

நாடகப் போட்டிக்கான நிர்வாக வேலைகள் அனைத்தையும் அவரது பிளளைகள் இருவரும்தான் கவனித்தார்கள். தியான் இரு நாடக நடுவர் குழுக்களை அமைத்திருந்தார். முதலாம் தலைமுறையினரும், இரண்டாம் தலைமுறையினருமாக இரு குழுவினர்கள். இரண்டாம் தலைமுறையில் நாடக ஆர்வமுள்ள நடன ஆசிரியர்களும், நாடக ஆர்வலர்களும் பங்கேற்றனர். இவ்வேற்பாடு எனக்கு ஆரம்பத்தில் நெருடலாக இருந்தது. இரண்டாம் தலைமுறையினர் நாடகத்தின் நுணுக்கங்களைப் புரிந்து அவர்கள் உருவாக்கும் நாடகங்களைத் தரமாக உருவாக்க வேண்டுமென்ற தூரநோக்குடன் தியான் செயற்பட்டதை உணர்ந்து பின்னர் பெருமைப்பட்டேன்.
நாடகப் போட்டி முடிவில் 'வழக்கு' என்ற நாடகத்தை தியான் நெறியாள்கை செய்து மேடையேற்றியிருந்தார். இது நாடகத்திற்கும், வழக்காடுமன்றத்திற்கும் இடையிலுள்ள நிகழ்வாகவிருந்தது. புலம்பெயர் சமூகத்திலுள்ள பிரச்சனைகள், சவால்களை நடுக்கருவாக வைத்து நகைச்சுவையாக வேடையேற்றியிருந்தார். தியானின் பலமே அவரது விகடத் தன்மை. புலம்பேர் சமூகத்தில் புரையோடிக்கிடக்கும் முக்கிய, தீவிரத்தன்மையான விடயங்களை நகைச்சுவையாக்கி, அந்த விடயங்ளை இலகுவாக்கி, அதை அணுகுதல் இவரது பலமாக இருந்தது. சரி - பிழை என தீர்வுகளை வலிந்து திணிக்காது அதன் தீர்வுகளை ஒவ்வொருவரும் தமக்கேற்ற விதத்தில் பார்க்கும் ஒரு வெளியைக் காட்டுவது இவரது நாடகப் பிரதிகளுக்கு வலுச் சேர்த்தது என எண்ணுகிறேன்.

தியான் கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக, யேர்மன் நாட்டில் பல்வேறு மாவட்டங்களிலும், சுவிற்சலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளிலும் தனது மேடைப் படைப்பு ஆளுமையை வெளிப்படுத்தியிருந்தார். இவரது பங்களிப்பு யேர்மன் கலை பண்பாட்டுக் கழகத்திற்கும் வலுச்சேர்த்தது.

இசை கற்றுக்கொள்ள இசை ஆசிரியரிடமும், நடனம் கற்றுக்கொள்ள நடன ஆசிரியரிடமும் செல்லும் நாம், நாடகம் என்றதும் 'நாடகப் பிரதியைக் கொண்டுவா நான் செய்கிறேன்' என்பது நியாயமான விடயமா? இசை, நடனம் போன்றே நாடகமும் இன்று கல்விக்குள் உள்வாங்கப் பட்டுவிட்டது. அதனால் இதற்கான அடிப்படை செய்முறை, கற்கைமுறைப் பயிற்சிகளும் வரையறுக்கப் பட்டிருக்கிறது. ஒரு நடிகருக்குத் தேவையான உடற்பயிற்சிகள், குரற் பயிற்சிகள், சுவாசப் பயிற்சிகள் பெற்று நமது உடல்மொழியையும், உரையாடலையும் வளப்படுத்தவேண்டும். அவ்வாறே அரங்காற்றலுக்கு ஆதாரமான அரங்கைத் திட்டமிட்டுப் பாவிக்கவேண்டும். ஒளி, மேடை, மேடைப் பொருட்கள், உடை நாடகத்தை செறிவூட்டுபவை. இவற்றின் தொழில் நுட்பங்களையும் புரிந்திருக்க வேண்டும். உலக நாடகக் கலைக்கும், இலக்கியத்திற்கும் பெரும் பங்களிப்புச் செய்த பல பிதாமகர்களைப் பெற்ற யேர்மன் நாட்டிலிருக்கும் நீங்கள் உங்கள் படைப்புகளில் அவர்களது சிறு தாக்கத்தையேனும் கொண்டுவருதல் தமிழ் நாடகக் கலைக்கு மேலுமொரு புதிய பாய்ச்சலைக் கொடுக்குமென நம்புகிறேன். தாய் மண்ணில் பல பரிமாணம் எடுக்கும் நாடகம் புலம்பெயர் தளத்திலும் பல பரிமாணங்கள் எடுக்கவேண்டும். தமிழ் நாடகப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டின் வீச்சு, புலம்பெயர் மண்ணின் நாடகப் பண்பாட்டின் வீச்சில் தாக்கம் செலுத்தவேண்டும். உரையாடலை மனப்பாடம் செய்து ஒப்புவித்தலை நிறுத்தி அரங்காடலை உருவாக்கவேண்டும். நமது நாடகத் தரத்தை நாம் உயத்தாவிட்டால், புலம்பெயர் மண்ணில் பல விடயங்களில் எம்மை விட்டுப் பிரிந்து செல்லும் எமது பிள்ளைகள் எமது நாடகத்தைப் பார்க்க வராத சூழல் உருவாகும்.

போரின் கோரப்பிடியிலிருந்து தப்பிப் புலம்பெயர்ந்த தமிழ் இனம்- புலம்பெயர் நாடுகளில் எவ்வாறு தடம் பதித்தது? எவ்வாறு தாய்நாட்டுடன் தன் தொப்பிள்கொடி உறவை தக்கவைத்தது? என்பனவற்றின் ஆவணச்சான்றாக இவரது நாடகப் பிரதிகள் இருக்கின்றன. அதனால் இந்நாடகப் பிரதிகள், நாடகப் பிரதிகளாக மட்டுமல்லாது புலம்பெயர் வாழ்வின் வரலாற்று ஆவணச்சான்றக இருப்பதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அத்துடன் இந் நாடகப் பிரதிகள் நேரிய நாடகப் படைப்புகளாக அரங்கேறவேண்டுமென்று வாழ்த்தி விடை பெறுகின்றேன். நன்றி.

பொன்ராசா அன்ரன்
சுவிற்சலாந்து
19.07.2018


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் பார்வையில்......



திரு.தியான் அவர்களை இது வரை நேரில் சந்திக்கும் வாய்ப்பு எனக்கு கிட்டாத போதிலும் இவரது கலைப் பணி சார்ந்த அனைத்தையும் அறியக்கூடியவனாக இருந்திருக்கின்றேன். முகநூலின் வருகையின் பின் இவரது கவிதைகளைப் படிக்கும் சந்தர்ப்பம் நிறையவே கிடைத்திருக்கிறது. இன்று வரை அந்த அழகிய தருணங்கள் என் மனதினை வருடி வாசம் பரப்பிய வண்ணம் நீள்கின்றது. காலக் கொடுமைகளால் கன தூரத்தில்.. எங்கோ நாட்டிலே நங்கூரமிடப்பட்டு வாழ்வினை அமைத்துக் கொண்டிருந்தாலும் தன்னிலை மாறாமல் தாயக மண்ணையும் மக்களையும் உயிரென அவர் நேசித்து வருவதின் வெளிப்பாடுகளுக்கு இவரது படைப்புக்கள் கட்டியம் கூறி நிற்பது சாட்சியம்.

தேசிய விடுதலையின் பால் கொண்ட கரிசனம் இவர் மேற்கொண்ட முயற்சிகளில் பளிச்சிடுகின்றது. மக்கள் சமுதாய வாழ்வியலை அக. புறச் சூழலுக்கேற்ப எடுத்துரைப்பது தான் இலக்கியமாகும். அவ்வழியே நாடகங்களும் அடங்கும். அடக்கு முறைகளின் அடிப்படைக்கு மாறிய கொடுமைகளை சங்கம் மருவிய காலத்திலும் அதன் பின்னரும் தோன்றிய சமுதாய விழிப்புணர்வுகளில் காண்கின்றோம். அந்த வகையிலே திரு தியான் அவர்களின் எழுத்துப் பணி சாட்டையைக் கையில் எடுக்க வேண்டிய தேவைகளும் முனைப்புக்களும் வேகம் நிறைந்த வகைகளாகவே காண முடிகின்றது.

நாகரீக வளர்ச்சியை எட்டி விட்ட நிலையிலும் எங்கள் ஆட்சியாளர்களும் அவர்களுக்கு எடுப்பார் கைப்பிள்ளையாகிப் போனவர்களும். காலத்தின் கண்ணாடியாகின்றனர். தியான் அவர்கள் மேடையேற்றிய நாடகங்கள் பற்றி பல தடவை அறிய முடிந்தாலும் எனக்கு அவற்றை பார்க்கும் கொடுப்பனவு கிட்டவில்லை. ஆனால் இன்று இவரது “துகள்“ எனும் நாடக நூலின் பக்கங்கள நான் புரட்டும் போது தான் நாம் இதுவரையில் எமது நாடகங்களுக்காகப் புரட்டாத பக்கங்கள் பல புரட்டப் பட்டு நேர்த்தியாக பிரதி எழுதப்பட்டிருப்பதைக் கண்டு பூரிப் படைகின்றேன்.

நாடகவியலுடன் அரங்க செயல்பாடுகளும் வெள்ளிடை மலை. கூத்து வடிவங்கள். குறியிசை நாடகங்கள். நகைச்சுவை. சரித்திர நாடகங்கள். நவீன கூத்து வடிவங்களில் பல நாடக அளிக்கைகளை அரங்கேற்றியிருப்பது காண முடிகின்றது. கம்பன் கொன்ற இராவணன் இதில் இவர் கையாண்ட யுக்திகள் பிரமிப்பு. போதை. சந்தி. பைத்தியம் . மகுடம். போன்று பல நாடகங்கள் சமூக விழிப்புணர்வுக்கானவை. தீப்பொறி. சுதந்திரப் பொங்கல் எமது விடியலுக்கான வார்ப்புக்கள்.

சில நாடகங்களில் எளிமை கவ்விக்கொள்கின்றது. மேலும் சில நாடகங்கள் சில படிகள் ஏறி அவதானிக்க வைக்கின்றது. இயந்திர வாழ்விலும் இன்னல்கள் சூழ்ந்த இடர்பாடுகளுக்கு மத்தியிலும் இவரது முயற்சிகள் எழுத்துருவாகி ஆவணமயப்படுத்தல் மிக அவசியமானதே.. எமது அடுத்த தலைமுறையினருக்காக இவரது நாடகங்கள் வாழும் நாட்டுக்கேற்ப மொழி பெயர்க்கப்பட்டு நூலாக்கம் பெறவேண்டியது காலத்தின் கட்டாயமாகும். திரு. தியான் அவர்களை வாழ்த்தும் வயது எனக்கிருக்கலாம். படைப்புக்களை விமர்சிக்கும் தகுதி இருக்கா என்பது கேள்விக்குறியே.. !

மூத்த நாடாக ஆசான்களால் இன் நூல் நிறுக்கப் பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. கருத்துக்கள் அனைத்தையும் உள்வாங்கி மேலும் பல ஆக்கங்களை பிரசவிக்க வேண்டும் எனக் கேட்ட படி வாழ்த்துக்களைக் கூறி விடை பெறுகின்றேன்.

விடுதலையின் வேர்

த. தயாநிதி.

பிரான்ஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்த்துகின்றேன்
தியான். ப
தமிழுக்குக்கிடைத்த
தங்கமப்பா
அப்பப்பா
அவர் தமிழ் அருமையப்பா


நற்றமிழை
நாவினில் குடியிருத்தி
செந்தமிழை
செழுமையாய் சீரமைத்து
தங்கத் தமிழை
தாலாட்டுப்பாடி
முத்தமிழை
முத்தாய்க் கோர்த்து
தாய் மண்ணின் மாறாத
தமிழின் சுவைதனை
தெவிட்டாது தரும் - உந்தன்
உயரிய பணியை
உளமார வாழ்த்துகின்றேன்

நாடகம், நடிப்பு
நாடகத்தென்றலின்
நாடித்துடிப்பு
நாட்டுக் கூத்தினை
நவீன கூறுகளாக்கி
நயம்பட இயம்புவதே
நம் தமிழுக்குச்சிறப்பு
தலை வண்ணமிது
நரை கொண்டு
நீடுழி வாழட்டும்

மீண்டும் தமிழோடு
க. பத்தாஸ்
நெதர்லாந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12 வது அகவையில் நாடகத் தென்றல் ! வாழ்த்துக்கள்



புலம் பெயர் நாடுகளில் எம்மக்கள் பல வேலைப்பழுக்களுக்கு மத்தியிலும் எமது மொழியும் கலையும் அழிந்து விடக்கூடாது என்ற நல்லெண்ணத்துடன் செயல்படும் இவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

திரு. தியான் அவர்கள் 'நாடகத் தென்றல்" என்னும் நிகழ்வினை பன்னிரெண்டு ஆண்டுகள் நடத்தி வருகிறார் என்றால் அது ஒரு சாதனைக்குரியவிடயம். பல நூற்றாண்டைக் காண வாழ்த்தி மகிழ்கின்றோம்.

திரு. தியான் அவர்கள் 1999 இல் கலைக்கண்ணின் 6வது வெளியீடான அறிவரங்கத்தில் எனக்கு அறிமுகமானார் அவரின் பேச்சுத்திறனை அனைவரும் பாராட்டினார்கள்.

இவர் 2000 ஆண்டில் 'போதை" என்ற நாடகத்தை அரங்கேற்றி பிராங்பேர்ட்டில் தடம்பதித்தார் எனலாம். அன்றில் இருந்து இன்றுவரை 65 நாடகங்களுக்கு மேல் வெளியிட்டது மட்டுமின்றி ஐரோப்பாவில் பல நாடுகளிலும் தனது நாடகங்களை வெளியிட்டு பிராங்பேர்ட் தமிழ் மக்களுக்குப் பெருமை சேர்த்துள்ளார் என்றால் அது மிகையாகாது.

நாடகத்தென்றல் தென்றலாய் உலகெங்கும் பரந்துவாழும் எம் கலைஞர்களை உறங்கவிடாது தட்டி எழுப்பி எம் நாடகக்கலையை ஊக்கிவிப்போர்களில் திரு.தியான் அவர்களுக்கும் பெரும் பங்குண்டு. நாடகம், கூத்து, வில்லுப்பாட்டு, கவியரங்கம், நவீன நாடகங்கள் போன்ற கலைகளில் எமது சிறார்களைப் பங்கேற்க வைத்து வருவதுடன் தமிழாலயத்தில் தமிழ்மொழியையும் பயிற்றுவித்து வருகின்றார்.

இவரது மனைவி பிள்ளைகளும் இவரைப் போன்று சகல விடயங்களிலும் பங்கேற்றி சிறப்பாக செயல்பட்டு வருகின்றார்கள். திருமதி. தியான் சுமதி அவர்கள் ஈழவர் திரைக்கலை மன்றம் ஐரோப்பா ரீதியாக தயாரித்த கனவுகள் என்ற திரைப்படத்தில் கதாநாயகியாக நடித்து எல்லோரது பாரட்டையும் பெற்றவர். இவரது மகள் கீர்த்தனா மகன் கீத்திகன் இருவரும் சிறந்த கலைஞர்கள் கலைக்கண் திரைப்பட விழாக்களில் இவர்களின் குறம்படங்கள் பலரது பாராட்டைப் பெற்றது மொத்தத்தில் ஒரு கலைக்குடும்பம் எனலாம் இவர்கள் மேன் மேலும் சிறப்புடன் வாழ எமது வாழ்த்துக்கள்.

இவரது கலைப்பயண ஆரம்பம் விசுவமடு மகாவித்தியாலயத்தில் ஆசிரியர் திரு.தம்பு அவர்களின் அரிச்சந்திர மயாணகாண்டம், வள்ளி திருமணம் போன்ற நாடகங்களில் பங்கேற்றதுடன் தானும் பல நகச்சுவை நாடகங்களை இயக்கி தனது ஆசான் திரு.தம்பு வின் பாராட்டுதலைப் பெற்றார். மேற்படிப்பின் போது முரசுமோட்டை முருகானந்தா மகாவித்தியாலயத்தின் க.போ. உயர்தரக் கல்வி ஆசிரியர் திரு.தவராஜா அவர்களின் போதையின் பாதையில் என்ற நாடகத்தின் மூலம் நாடகப் போதை ஊட்டப்பட்டு இன்று வரை நாடகப் போதையில்தான் உள்ளார் எனலாம்.

ஈழத்தில் இவரது கவிதைகள் கட்டுரைகள் சாளரம் என்ற சஞ்சிகையில் வெளிவந்தது அதைத்தொடர்ந்து புலம்பேர் வாழ்வில் தேச விடுதலை, தேசியம் சார்ந்த பல கவிதை, கட்டுரைகள், சிறுகதைகள் போன்றவற்றை எரிமலை, தமிழருவி, ஈழமுரசு, ஐ.பி.சி வானொலி போன்ற ஊடகங்களில் தனது ஆற்றலை வெளிப்படுத்தினார். மேலும் தினமொரு கவிதையை தனது Whats app பின் மூலம் எழுதிவருவது இவரது ஆற்றல்களை வெளிப்படுத்தும் சிறப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல மேடை நாடகங்களை நெறிப்படுத்திய இவரின் துகள் என்ற இந்த நாடக நூலானது எம்மத்தியில் நாம் பார்த்து இரசித்த நாடகங்களின் தொகுப்பாகும். பல்வேறுவிதமான நாடகங்களை மேடை மைப்பு காட்சிகளின் விளக்கம் உட்பட எதிர்காலத்தில் மற்றவர்களும் எடுத்துப் பயன்படுத்தும் வகையில் அழகாக எழுதியிருப்பதும் சிறப்பானதே. எனவே துகள் என்ற இந்த நாடக நூல் சிறப்பாக வெளிவரவும் இது மற்றவர்களுக்கு பயனுள்ள பதிவாக அமையவும் வாழ்த்துகிறேன்.

கலைக்கண் பேரம்பலம் பாலராஜா.

27.10.2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்

கம்பன் கொன்ற இராவணன் ..... 1
முகம் ..... 8
போதை ..... 14
சந்தி ..... 22
பைத்தியம் ..... 34
மரணம் ..... 39
மகுடம் ..... 45
ஏன் ..... 54
எழுச்சி ..... 60
தீப்பொறி ..... 64
சுதந்திரப்பொங்கல் ..... 69
பந்து ..... 72
அன்பு ..... 81
திருத்தங்கள் ..... 86
இயமகாண்டம் ..... 90
பானைப்பத்திரம் ..... 103
கரங்கள் ..... 110
வாய்க்கரிசி ..... 114
வெட்கம் ..... 121
குற்றவாளிகள் ..... 125
ஒரு கண் ..... 133

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பன் கொன்ற இராவணன்

நாடகவகை: நவீன கூத்துவடிவம்

களங்களின் எண்ணிக்கை: 1. களம்

திறந்தமேடை

| | | | |
|---|---|---|---|
| கலைஞர்கள் | 1. வினயன் | 2. தாய் | 3. கவிஞர் |
| | 4. கம்பன் | 5. வள்ளுவர் | 6. சிறுவர்கள் 2-3 |

- *செயல்*

*திறந்த மேடையில் வினயன் என்ற மாணவன் ஆசிரியரிடம் சென்று கல்வி, கலைகளை கற்றுவிட்டு தன் தாயாரிடம் வருதல்*

பாடல்கள் கூத்தின் வடிவில் பாடுதல் வேண்டும்.

- *பாடல்*

*வினயன்:* *வாறேனே வாறேனே வினயனும் நானும் - வந்த*
*மக்களுங்கள் நல்வரவை நயப்புடன் ஏற்று - பலக்*
*காதவழி நடந்து வந்தேன் பெரியோரே கேளிர் - என்*
*தாய் முகத்தை கண்டிடவே ஓடோடி வாறேன்.*

உரை: பெரியோர்களே சிறியோர்களே அன்னையரே தந்தையரே வினயன் எனும் அழகுத்தமிழ் பெயர் சூடிய நான், வளர்மதி எனும் பெயர்கொண்ட என் பாசமிக்க தாயாரின் வேண்டுதற்படி

- *பாடல்*

*வினயன்:* *எண்கணிதம் இலக்கியம் இலக்கணம்*
*பொருண்மியம் நாட்டுடை போர்நிலை*
*நன்னெறியும் நயம்பட வில்வித்தையும்*
*வாட்போரும் மல்லர்போல் மற்போரும்*
*கற்றுக்கொண்டேன் நல்லவற்றைப்*
*பெற்றுக்கொண்டேன்.*

உரை: பெரியோர்களே நான் என் அன்னையின் வாழிடம் நோக்கிச் செல்கின்றேன். (வினயன் செல்லல்)

- *செயல்*

*தாய் தன்னோடு மகிழ்வாய் இருக்கும் அயலவர்களின் மழலைப் பிள்ளைகளுடன், தான் வணங்கும் இராமனின் வடிவங்களை அலங்காரப்படுத்தி அழுகு செய்து மகிழ்கிறாள். இராமரைப் போன்று அலங்கரிக்கப்பட்ட சிறுவர்கள்*

- *பாடல்*

*தாய்:* *மத்தளங்கள் இங்கே முழங்கிவர நல்ல*
*பாட்டொலிகள் இங்கே இசைத்துவர அடா*
*மழலைகள் நிறைவாய் சிரித்துவர*
*மகிழ்ச்சிதான் மனமிக மகிழ்ச்சிதான்*

- *செயல்*

*மகன் வினயன் தாயாரை நாடி வருதல். தாயாரைக் கண்டதும் மகிழ்வோடு சென்று வணங்கி வாழ்த்துப் பெறல்*

வினயன்: அதோ எனது தாயார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ *பாடல்*

*வினயன்:* *தாயவளாம் என்னைப்பெற்றவளாம்*
*தன்னையே தானுருக்கி தந்தவளாம்*
*மேதினியில் நாம் வாழ்வதற்கே தன்*
*மடிசுமந்த பெற்ற தாயவளாம்.*

• *செயல்*

*மகனைக் கண்டதும் அளப்பெரிய இன்பமாய் ஓடிச்சென்று அவனைக் கட்டிக்கொள்கிறாள் தாய்.*

❖ *பாடல்*

*தாய்:* *செல்வமே அன்பே மைந்தனே*
*கண்ணே காந்தளே எந்தன் நேசனே*
*இல்லமேகிட வாடா வாசா*
*செல்வமே தமிழ் செல்வமே*

வினயன்: தங்கள் விருப்பப்படி கற்றறிந்து வந்துள்ளேன் தாயே

தாய்: மகனே கற்றோருக்கு சென்றவிடமெல்லாம் சிறப்படா. சரி நீ போய் நீராடிவிட்டு வா. இன்று என் குல தெய்வம் இராமனை வணங்கிவிட்டு உண்டு பசியாறிப் பேசுவோம்.

வினயன்: தாயே மன்னிக்கவும் யாரந்த இராமன்..... கடவுளா

தாய்: செல்வமே என்ன பேசுகிறாய் (தாய் அதிர்ந்து போகிறாள்)

❖ *பாடல்*

*தாய்:* *கற்றறிந்து வந்தவனா கடும் சொல்லில் சாடுகிறாய்*
*காக்குமந்த கடவுளையே யாரென்று வினவுகிறாய்*
*ஏது கற்றாயோ மகனே தீது சொன்னாயே (2)*

(மகன் தாயாரைப் பார்த்துப் பணிவோடு பாடுகிறான்)

❖ *பாடல்*

*வினயன்:* *தயவுடனே அம்மா கேட்டிடவும் நான்*
*நிந்தையேதும் அம்மா செய்யவில்லை*
*கற்றறிந்தேன் அம்மா சத்தியத்தை அதைக்*
*காப்பதுவே பெற்றதன் பெரும் பயனாம்.*

தாய்: மகனே எது சத்தியம். தவறாக் கற்றனையோ

வினயன்: தாயே சற்றுப் பொறுமையாகக் கேளுங்கள்

தாய்: கடவுளையே நிந்தித்துப் பேசுவதை எப்படி பொறுமையாக் கேட்பது

• *செயல்*

*ஒரு கவிஞன் தாய், வினயன் இருவரது விவாதத்தையும் கேட்டுவிட்டு மேடைக்கு வருதல்.*

❖ *பாடல்*

*கவிஞன்:* *வந்தனம் வந்தனம் வந்தனமே வந்த*
*சனங்களுக்கு வந்தனமே*
*நிந்தை செய்வதை கண்டதுமே அடா*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நித்திரைவிட்டு ஓடிவந்தேன்.*
*குந்தகமாகப் பேச வேண்டாம் அடா*
*குறை தேடிப் பேச வேண்டாம்*

தாய்: வருக கவிஞரே வருக. மாந்தரைக் காத்த மகானை அன்பின் இருப்பிடத்தை இராமரை கடவுளா என வினவுகிறான் என் மகன்

வினயன்: தாயே சற்றுப் பொறுமையாகக் கேளுங்கள். உண்மை என்ன......

தாய்: கற்றறிந்து வருக என்றேன்..... ஆசையோடு அனுப்பி வைத்தேன்..

கவிஞர்: சிறுவனே கேள் !

- *பாடல்*

*கவிஞர்:* *இராமனாக வந்தார் அரக்கன்*
*இராவணனைக்கொன்றார்*
*கண்ணனாக வந்தார் அரக்கன்*
*நரகா சுரனைக் கொன்றார்*
*சிம்மமாக வந்தார் இரணியன்*
*நெஞ்சத்தையேப் பிளந்தார்*
*எங்கும் இருப்பவராம் அவரே*
*இராமன் என்ற இறையாம்.*

- *செயல்*

வினயன் கவிஞரையும் தாயாரையும் நோக்கிப் பாடுகிறான்)

- *பாடல்*

*வினயன்:* *சிந்தனை அற்றக்கதையால் சிதையுது தமிழினம்தான்*
*வினைப்பயன் நானறியேன் தாயே பதறுது என் மனமே*
*அரக்கர்கள் என்றும் பொய்யாய் கயவர்கள் என்றும்*
*கோர்த்து அடிமைகள் ஆக்கப்பட்டோம் நாங்கள்*
*இழிநிலையாக்கப்பட்டோம்.*

தாய்: மகனே என்ன பிதற்றுகிறாய் நாங்கள் அரக்கர்களா தவறாகக் கற்றனையோ

வினயன்: தாயே உண்மையைக் கூறுகின்றேன்

கவிஞர்: எதுவுண்மை

வினயன்: தமிழர்தம் வாழ்நிலையே உண்மைக்கு மாறாகத்தான் உள்ளது.

தாய்: உனக்குப் பித்துப் பிடித்துவிட்டதா ஏன் உளறுகிறாய்

கவிஞன்: அதிகமாகக் கற்றுவிட்டாரோ........

தாய்: ஐயகோ.... என் மகன் பிதற்றுகிறான். இராமா... என் மகனைக் காப்பாற்று

- *பாடல்*

*தாய்:* *பித்துப்பிடித்துப் பேசுகிறான்*
*பேதையாகப் பேசுகிறான்*
*காக்கும் கடவுளையே*
*கண்முன்னே தூற்றுகிறான்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பாசம் வைத்த என் பிள்ளை*
*பாவம் செய்து பழி சூடுகிறான்.*

வினயன்: தாயே சற்றுப் பொறுமையாகக் கேளுங்கள்

- *பாடல்*

*வினயன்: ஆசைக்கும் பேராசைக்கும் அடிமையான மாந்தன் தன்-*
*அகத்தைப்புதைத்து அறனை மறந்து அடங்கிடும் போது*
*மதியது இழக்க மமதைகள் ஓங்க*
*மறந்திடும் உண்மை மன்னரும் மாக்களும்*
*போலியாய் தறிக்கெட்டுப் போனதும் உண்மை*
*இராமனின் காதையை இறைவனுக்கு நிகராய்*
*ஏற்றிட்ட தன்மை இறைநிலை இல்லை*
*இடர்நிலை என்றே மொழிகிறேன் தாயே*

உரை: பலக் கோடாரிக் காம்புகள் செய்த சதி. அதில் கம்பனும் செய்தான் வம்பு தமிழினத்துக்கு

- *செயல்*

*கம்பன் வந்து கோபத்தோடு பாடலுக்கு ஏற்ப அசைதல்*

கம்பன்: என்ன, வம்பு செய்தேனா யார் சொன்னது

- *பாடல்*

*கம்பன்: நல்ல சொல்லெடுத்துக் கோர்த்துத் தந்தேன்*
*இராமனின் கதையை பலர்*
*கொண்டாடி மகிழ்கின்றார் குறையென்னக் கண்டீர்*
*கவி கம்பனென்று பேரெடுத்த கம்பனும் நானே*
*தமிழ்க் கோர்த்தெடுத்த அழகுதனை மறந்தது ஏனோ*

தாய்: கம்பனின் கைத்தடியும் கவிபாடும் என்று பெயரெடுத்தக் கம்பனா வாருங்கள்

கவிஞர்: ஆகா அன்னைத் தமிழுக்கு அழகுடுத்திச் சிறப்புச்செய்த செம்மலே வருக

வினயன்: கவியரசே வருக, இராவணனைக் கொன்ற இராம நேசனே வருக

கம்பன்: என்ன கூறுகின்றாய் உன் வார்த்தையில் வக்கிரம் தெரிகிறது.

- *பாடல்*

*வினயன்: வக்கிரத்தைக் கண்டீரோ வக்கிரத்தைக் கண்டீரோ*
*பெருங்கவியே ஐயா பெருங்கவியே*
*தமிழினை அழகாக்கி தமிழனை இழிசெய்தீர்*
*மறந்தீரோ ஐயா மறந்தீரோ*

கம்பன்: தமிழை அழகு படுத்தியவன் நான்

வினயன்: ஆனால் தமிழினத்தை அழுக்காக்கிவிட்டீர்களே

தாய்: மகனே...... மூத்தோரிடம் இப்படியா பேசுவது

கவிஞர்: வான்மீகியை அப்படியே தமிழாக்கினார் அதுதானே கவியரசே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பன்: ஆமாம் அதுதான் உண்மை

வினயன்: எதுவுண்மை இராமனை கடவுள் என்றும் இராவணனை அரக்கன் என்றும் கூறியதா உண்மை. சுத்தப்பொய்.

தாய்: ஐயகோ.. என் மகன் பிதற்றுகிறான். மூத்தோரிடம் மரியாதையின்றி தர்க்கம் புரிகிறான் இராமா... என் மகனுக்கு அருள் காட்டு....

- *செயல்*

*அவ்வேளை திருவள்ளுவர் மேடைக்கு வருகிறொர்- எல்லோரும் மரியாதையோடு அவரை வரவேற்றல்.*

தாய்: ஈரடியால் இதயத்தைத் தொட்டவரே இனியமொழியில் குறள்தந்த பெருந்தகையே வருக

கம்பன்: தமிழின் அழகே தத்துவத்தின் முத்தே தமிழினத்தின் முதலே வருக

வினயன்: தமிழுக்கு உயிர் தந்து எம் நிலை காத்தப் பெருமானே வருக வருக

கவிஞர்: வாழ்க்கையை வரிகளில் செதுக்கி வாழும் முறை சொன்ன வள்ளலே வருக

❖ *பாடல்*

*வள்ளுவர்: அழகுத் தமிழ்க் காத்து தினம் சிறப்புடனே வாழ்கவே*
*செம்மைமிகு அன்னை மொழி குறைவிடுத்துக் காக்கவே*
*ஒன்றுபட்டு ஓரணியில் நிற்கவேண்டும் என் மக்காள்*
*உங்கள் உயிர் மேலது உண்மைத்தமிழ் தான் மக்கள்*

கம்பன்: தெய்வப்புலவரே வள்ளுவத்தந்தையே வையம்போற்றும் குறள்தந்த பெரியவரே

வள்ளுவர்: கம்பனே தமிழுக்கு அழகு செய்தாய் வாழ்க

வினயன்: வள்ளுவத் தந்தையே வாழ்வியலை அடியிட்டுச் சொன்ன எம்பெருமானே... கவியரசர் தவறு செய்து விட்டார்

வள்ளுவர்: அப்படியா குற்றம் யார் செய்யினும் குற்றம்தான். கம்பனின் கவியாளுமையில் குற்றமா என்ன குற்றம் கண்டாய் மகனே..

கவிஞர்: தெய்வப்புலவே.. அடக்கமாக வைத்த கவி கம்பன் அன்னைத் தமிழ் உடுத்த கவி அவர் கவியில் நான் காணேன் குற்றம்.

வள்ளுவர்: மொழிமாற்றுச் செய்தவன் கம்பன். இராவணனை இடம் மாற்றி விட்டான் போலும் (நகைப்பு)

கம்பன்: மொழிமாற்றுச் செய்தேன். உண்மை.

வினயன்: என் மூத்தோன் இராவணன் எப்படி இடம் மாறிப்போனான்.

வள்ளுவர்: கம்பா... பதில் கூறு...

தாய்: எனக்குப் புரியவில்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பன்: வள்ளுவத்தந்தையே மன்னிக்கவும்

வள்ளுவர்: இராவணனை அரக்கனாக்கிவிட்டாயே...

கவிஞன்: இராவணன் யார், அரக்கனா இல்லையா

தாய்: அப்படியென்றால்...

வள்ளுவர்: தமிழர்கள் தம் சுயநலங்களால் சுயத்தை இழக்கின்றனர். வரலாறுகளில் தமிழ்மன்னர்கள், மக்கள் அரக்கர்களாகக் குரங்குகளாக் காட்டப்படுகிறார்கள்

வினயன்: ஆரியரின் மதத்திணிப்பால் நாங்கள் எங்களையே அவமதிக்கிறோம்

கம்பன்: ஆமாம் வான்மீகி எழுதிய காவியத்தில் நான்தான் தவறு செய்தேன்.என்னை மன்னியுங்கள். அன்று ஆரியரின் ஆதிக்கத்தில் நான் மயங்கிக் கிடந்ததால் வந்த வினை

- *பாடல்*

*கம்பன் குற்றத்தைச் செய்து விட்டேன் ஐயோ*
*குழம்புதய்யா எந்தன் மனது - நான்*
*திட்டமிட்டு செய்யவில்லை அட*
*மடமையில் மயங்கி விட்டேன்*
*பெரியோரே என்னை மன்னிப்பீரே - நான்*
*பெருங்கேடு செய்துவிட்டேன்*
*இராவணனே தமிழ் மன்னன் ஐயா*
*அவன் அரக்கனல்ல இராமனிலும் மேலவனாம்*

கவிஞர்: அப்படியென்றால் இராவணனை அரக்கனாக்கி அடிமைசெய்து கொண்டாடி மகிழ்கிறோமா

- *பாடல்*

*வள்ளுவர்: ஆரியர் சதியில் அமிழ்ந்துவிட்டோம் நாங்கள்*
*அரக்கர் குரங்காய் காட்டப்பட்டோம்*
*இராவணன் கொடியோன் என்றோதி*
*தமிழ் இனம் இழிந்தது கண்டீரோ*
*நரகாசுரனயும் அரக்கனென்றார்*
*தீபா வளியனவே மகிழ்ந்து வென்றார்*
*விடுதலை வேண்டிய வீரர்களை இன்று*
*வீழ்த்திய வடிவம் முதல் கொண்டு*

தாய்: என் மகனே நீ கற்றது மெய்யடா தமிழுக்குச் சிறப்படா

வள்ளுவர்: வரலாறை அறியுங்கள் தமிழை அறியுங்கள்

- *பாடல்*

*ஞால ஒளி முதல்வனே பகலவன்*
*பச்சயமும் பசிக்குணவும் தருபவன்*
*நன்றியுடன் நாம் பணிந்தோம் பண்புடன்*
*நாலும் கெட்டுத் திரிகிறோம் மடமையில்*

தாய்: மெய்தான் நாம் நாமாக வாழவில்லை. வெற்று மரமாகிவிட்டோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினயன்: இல்லையம்மா மரம் எவ்வகையிலும் பயன்தரும். ஆனால் நம் இனந்தான் தன்னிலை கெட்டு நிற்கிறது

கம்பன்: உண்மைதான் தாய்மொழியைக் கேவலப்படுத்திப் பேசுகிறார்கள்

வள்ளுவர்: தனித்தியங்கும் தமிழுக்குள் எண்ணற்றக் கலப்புகள்

- *பாடல்*

*கவிஞர்:* *அக்கப் பக்க மொழியெடுத்து அழகு தமிழ் கோர்த்தெடுத்துச்*
*செந்தமிழைச் சிதைக்கிறார்கள் தமிழர்கள் அடா*
*தாய்மொழியின் தரமுணரா கயவர்கள்*
*எத்தனையோ மொழிக்கலப்பு ஏராளமாய் மொழியழிப்பு*
*உற்றவரே செய்வதிங்கே தெரியுதே ஐயோ*
*இனமிருக்க மொழியிழக்க நேருமோ*

இளையோர்:

இனி நாங்கள் அழகுத் தமிழை இழிவாக்க மாட்டோம் எம் மொழி தமிழ் நங்கள் கலப்பற்ற தமிழில் பேசுவோம் எழுதுவோம் வளர்வோம் தமிழ் எங்கள் உயிரினும் மேல்

- *பாடல்*

*வாழிய வாழிய தமிழ் மொழி*
*வாழிய வாழிய தமிழ் இனம்*
*உயிரினும் மேலது தாய்மொழி*
*உணர்ந்து நாம் பேசுவோம் இனத்திட*
*நல்லத் தமிழ் பேசுதல் நாவின்பம்*
*கலப்பறுத்தத் தூய தமிழ்ப் பேசுவோம்.*

<u>*நிறைவு*</u>





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகம்

நாடகவகை: குறியிசை வடிவம்

களங்களின் எண்ணி க்கை: 1. களம்

திறந்தமேடை

கலைஞர்கள்
1. ஒருவர் 1,2
2. தாய்
3. பெரியவர்
4. பெண் 1,2
5. இன்னொருவர்
6. சிறுவன்
7. யுவதி
8. நகையாளர்
9. சிறுமி 1,2,3,4
10. ஆசிரியர்
11. மற்றவர்

- *செயல்*

*மேடையில் கலைஞர்கள் ஒவ்வொரு செயல் நிலையில் அசையாது நிற்றல் (கறுப்பு வெள்ளை) முகமூடி (முகப்பூச்சு) அணிந்தவர் முகமூடி அணியாதவர் பாதி முகமூடி என தத்தம் முகமூடி நிறத்திற்கு ஏற்ற ஆடையுடன் கலைஞர்கள் வேறு பட்டு நிற்றல். பாடலுக்கு அனைத்துக் கலைஞர்களும் அசைதல்*

❖ *பாடல்*

*முகம் முகம் முகம் அக முக கரு*
*இது புது முகம் இதம் தரும் சுகம்*
*அகதியின் முகம் அது ஒரு தரம்*
*அடிமையின் முகம் அது ஒரு விடம்*
*எங்களின் முகம் எது எது எது எது?*

- செயல்

*கலைஞர்கள் பாடலோடு ஆடியபடி கலைந்து தத்தம் உரிய இடத்திற்கு செல்லல்.*

ஒருவர்: எல்லாரும் உங்கட உண்மை முகங்களை ஒருமுறை நினைவுபடுத்திக் கொள்ளுங்கோ

மற்றவர்: ஆமாம் முகமூடி போட்டவர்களும்தான்

இ-ஒருவர்: முகமூடி போட்டவர்களா?

பெண்: ஆமாம் தங்கள் தங்கள் முகங்களை இழந்தவர்கள்

பெரியவர்: தம்மையும் தம் மொழியையும் மறந்து முகங்களை இழந்த போலி மனிதர்கள்

பெண் 2: போலி மனிதர்களா?

யுவதி-: முகங்களை இழந்த போலி மனிதர்களா? யார் அவர்கள்

பலர்-: ஆமாம் யார் அவர்கள் யார் அவர்கள்?

- *செயல்*

*பாடலுக்கு கலைஞர்கள் அனைவரும் அசைந்தாடல்*

❖ *பாடல்*

*முகத்தை தொலைத்தவர்கள் எங்கே? தம்*
*முகத்தை தொலைத்தவர்கள் எங்கே?*
*அகத்தை மறைத்து புது முகத்தை சூடிகொண்ட*
*முக மூடி மனிதர்கள் எங்கே*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*முக மூடி மனிதர்கள் எங்கே?*
*தாயை மிதித்தவர்கள்*
*தமிழை மறந்தவர்கள் இவர்கள்*
*தரம்கெட்டு முகங்களை மூடி சூடிய கயவர்.*

- *செயல்*

*பாடலின் பின் கலைஞர்கள் அசையாது நிற்றல் அவ்வேளை சுவைசேர்ப்பி வருதல்*

நகை: ம்.... இதுகள் எந்த நாட்டு சனங்கள்? தமிழ்ச் சனம்மாதிரி தெரியுது ! வெள்ளைக்காரன் மாதிரி முகத்துக்கு வெள்ள பூசிக்கொண்டு நிக்குதுகள் ம்.... ஜெர்மன்காரன் கெட்டான் போங்கள்.

தாய்: பிள்ள முகமூடிய துலைச்சுப் போடாத

சிறுமி 1: ஓமம்மா ஆனா நான் எந்த முகமூடிய போடுறது?

ஒருவர் 2: எந்த முகமூடியோ எனக்கொண்டும் விளங்கேல்ல

பெண்: அகதியா வந்த சனங்களுக்கு கனக்க முக மூடிகள் இருக்கு

தாய்: என்ன பிள்ள புதுசா கேக்கிற

சிறுமி 1: டொச், பிரெஞ்சு, இங்லீஸ், ஸ்பானிஸ் எண்டு இருக்கல்லே அதில எதப்போடுறது?

சிறுவன்: என்ர அப்பா சொன்னவர் நாங்கள் ஜேர்மன் முகமூடிதான் போடவேணுமாம்.

- *செயல்*

*சிறுவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நிலையில் அசைதல் (விளையாடல்)*

யுவதி: அது சரி ஜேர்மன் முகமூடிதானே போடவேணும் .

பெரியவர்: உதென்ன பைத்தியக் காரத்தனம்

ஒருவர்: எத்தனை நாட்டுக்காரன் வந்து எங்கட நாட்ட ஆண்டவன்

ஆசிரியர் ஓமோம் போர்த்துக் கீசுக்காரன், ஒல்லாந்துக்காரன் ,டச்சுக்காரன், பிரிட்டிஸ்காரன் எத்தனை எத்தனை நாட்டவன்

பெண்: உவங்களில ஆரெண்டாலும் எங்கட மொழிய படிச்சி தங்கடபிள்ளையள தமிழரா வளத்திருக்கிறாங்களே ?

ஒருவர் 2: சே சே ஆர் வளத்தவன் தங்கட விசயத்தவெல்லோ எங்களில திணிச்சவன்

பெரியவர்: அப்ப ஏன் எங்கட சனங்கள் தங்கட பிள்ளைகள தங்கட பிள்ளைகளா வளக்காம டொச்சுக்காரனா பிரிட்டிஸ்காரனா வளக்குதுகள்?

- *செயல்*

*கலைஞர்கள் அசையாது நிற்றல் அவ்வேளை சுவைசேர்ப்பி வருதல்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகை: எட விசருகளே !உங்க பார் உந்தப் பிள்ளைகள .. அங்க அதுகள் கொஞ்சப்பேர் தமிழ் தமிழ் எண்டு கத்துதுகள் .இங்க இதுகள் காய் பூய் எண்டு டொச்சில கதைக்குதுகள் அத பெற்றார் பாத்து சிரிச்சிக் கொண்டிருக்குதுகள் .உதுகள் தமிழ் பிள்ளைகளா? எனக்கொண்டும் புரியேல்ல.

- *பாடல்*
  *(எல்லோரும் அசைந்தாடல் )*

*புரியவுமில்லை தெரியவுமில்லை*
அறியாதசனமென்று சொன்னாலும் தொல்லை
ஏனிந்த மோகம் ஏனிந்த மோகம்
அந்நிய மொழிதான் இவரது உயிரா?
புரியவுமில்லை

சிறுமி 2: எங்களுக்கு டொச் படிக்கத்தான் விருப்பம்

சிறுமி 3: ஓ எங்களுக்கு தமிழ் பேச வராது அது கஸ்டமானது

தாய்: அது சரிதானே இங்க வாழப்போறதுகளுக்கு இந்த நாட்டு மொழிதானே முக்கியம்.

யுவதி: உண்மதான் தமிழ்ப் பிள்ளைகளுக்கு தமிழே தெரியாம வளக்கிறதுதான் இப்ப பெற்றாருக்கு விருப்பம்.

ஆசிரியர்: ஆனா தமிழாலயங்களில படிக்கிறதுக்காக எத்தனை பிள்ளையள் ஆர்வமா வருதுகள்

பெண்: ஓமோம் உண்மை சில பெற்றார் தமிழுக்காகவும் கஸ்டப் படுகினம்.

சிறுமி 4: நாங்கள் தமிழாக்கள் தமிழிலதான் கதைக்க வேண்டும் எண்டு அம்மா சொன்னவா

பெரியவர்: ஆனா பல தமிழ்பிள்ளையள் ஏன் தங்கட தாய் மொழியில கதைக்கிறதில்ல?

ஆசிரியர்: தமிழாலயத்தில கூட பிள்ளையள் டொச்சிலதானே கதைக்குதுகள்

ஒருவர்: பிள்ளைகளும் திருந்தாகினம் பெற்றாரும் திருத்தமாட்டிகினம்.

மற்றவர்: பிள்ளைகளுக்கு கூடிப்போச்சுது சுமை கூடிப்போச்சுது .

ஒருவர்: உது சும்மா விடுகிறகதை ஒரு பிள்ள டொச்சு பாடத்தோட வேற 3 மொழிய கட்டாயம் படிக்குதுகள்

சிறுவன்: ஓமோம் நாங்கள் டொச், இங்லீஸ், ஸ்பானிஸ், பிரெஞ்ச் எண்டு விரும்பின பாடங்கள படிக்கிறம்.

பெரியவர் 2: அப்படியெண்டா தமிழ படிக்கத்தான் கஸ்டமாமோ

யுவதி: அப்பிடித்தான் சொல்லுகினம்

மற்றவர்: என்ர பிள்ள அது படிக்குது இது படிக்குது எண்டு சொல்லுவினம் ஆனா தமிழ் படிக்குது எண்டு சொல்ல வெக்கம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- *செயல்*

*சிறுவர்கள் ஒவ்வொரு நிலையில் அசைதல் வாத்தியங்கள் வாசித்தல்*

தாய்: ஏன், என்ர பிள்ள பரத நாட்டியம் பழகிறா, வயலின்; வீணை, கீபோட்... இப்பிடி என்னென்னவெல்லாம் பழகிறா

மற்றவர்: உதத்தான் சொன்னன் சுமை கூடிப்போச்சுது எண்டு ஆனா தமிழில நல்லா கதைக்குங்களோ?

ஒருவர்: உதெல்லாம் ஒரு விளம்பரம்

சிலர்: தேவையில்லாமல் கதையாதிங்கோ நாங்கள் பிள்ளைகளுக்கு எல்லாம் தெரிஞ்சு இருக்க வேணுமெண்டு நினைக்கிறம்

பெரியவர்: சரி தாய்மொழி தெரிஞ்சு இருக்க வேணுமெண்டு யாராவது அக்கறை காட்டுகினமோ?

சிலர்: என்ன தாய் மொழி அதுகள் இங்க வாழப் போறதுகள் அதுகளுக்கு ஏன் உது

- செயல்

*எல்லோரும் அசையாது நிற்றல் இசை*

நகை: அடப்பாவிகளா வாய்கூசாமல் உப்பிடிச் சொல்ல உங்களுக்கு என்ன துணிச்சல் இனிமேல் ஒண்டும் சொல்றதுக்கில்ல எல்லாம் பட்டு திருந்தட்டும் .

பெரியவர்: பாருங்கோ உதப்பற்றி என்ன சொல்லுறது?

ஒருவர்: சொல்றதுக்கு ஒண்டுமில்ல நாட்டில தின்னவுமில்லாமல் குடிக்கவுமில்லாமல் சனம் உரிமைக்காக போராடிச் சாகுதுகள்

ஆசிரியர்: இதே ஜேர்மனியில 60 லட்சம் யூத சனத்த சாக்கொண்டத எங்கடையள் மறந்திட்டுதுகள்

பெண்: இந்த முகமூடி மனிசர் தங்கட சொந்த முகம் கூட இல்லாமல் சாகப்போகுதுகள்.

சிறுமி 4: அப்ப எங்கட நில? முகத்தை தொலைத்து நாடோடியா அலையிறதா?

இ. ஒருவர்: கொஞ்ச காலம் பொறுமையா இருந்து பாத்தால் தெரியும்.

- *பாடல்*

*காலம் நகர்ந்து கனவுகள் நிறைந்தது*
*வாழ்க்கை சிதைந்தது இங்கே ஓ ..*
*முகங்கள் அழிந்தது இங்கே*
*முக மூடிகள் அணிந்தனர்*
*முகங்களை தொலைத்தனர்*
*மொழியை இழந்தனர் இவர்கள்*
*தமை மூடி மறைத்தனர் அழகாய்*
*அந்நிய தேசம் அதில் மிக நேசம்*
*கொண்டது இவர்தம் முறையா? தமிழ்*
*கொல்வதென்பது சரியா*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- *செயல்*

*கலைஞர்கள் அசையாது நிற்றல்*

- *அறிவிப்பு*

*ஜேர்மனி வாழ் வெளிநாட்டவர்களே இன்றைய எமது பொருளாதார வேலையில்லா திண்டாட்டம் காரணமாக சில நாட்டு அகதிகளை நாம் அவர்தம் நாடுகளுக்கு திருப்பி அனுப்ப முடிவு செய்துள்ளோம் அந்த வகையில் வியட்நாம் சோமாலியா சிறிலங்கா போன்ற நாட்டைச்சேர்ந்த அனைவரையும் அவர் தம் நாடுகளுக்கு எதிர்வரும் மாத இறுதிக்குள் அனுப்பிவைக்க முடிவெடுத்துள்ளோம்.* நன்றி ஜேர்மனிய வெளிநாட்டமைச்சு

- *செயல்*

*கலைஞர்கள் தங்கள் முகமூடிகளுடன் தடுமாறல் திகைப்பு*

சிலர்: ஐயய்யோ நாங்கள் என்ன செய்வம் எங்கட முகங்களை தொலைச்சிப் போட்டமே?

- *இசையால் அதிர்வு காட்டல்*

பெரியவர்: பாருங்கோ உவையளிட நிலைய தமிழ் தெரியாத தமிழர்

பெண்: தங்கட முகங்கள மறந்திட்டினம் இப்ப என்ன செய்யப் போகினம்?

ஒருவர்: பரிதாபம் தமிழ்ச் சனத்தாலயே இவையள் ஒதுக்கப்படப் போகினம்.

இ. ஒருவர்: எந்த ஒரு சமுதாயமும் தங்கட மொழிய மறக்கக் கூடாது

பெரியவர்: சொந்த முகத்த துலைச்சவை தங்கட முகமூடியக்கூட காப்பாற்றிக்கொள்ள முடியேல்ல

பெண்: அது எப்பிடி முடியும் தமிழ்ச் சனம் தெரிஞ்சே வேற மொழி ஆக்களா தங்கள மாத்திக் கொள்ளப் பாக்கினம் .

ஆசிரியர்: உலகத்தில எங்கயும் தமிழாக்கள மாதிரி யாரும் மொழிமாறி இனம்மாறி தங்கள இழிவுபடுத்தினது கிடையாது.

ஒருவர்: இனியெண்டாலும் தமிழ் சனம் திருந்த வேணும்.

ஆசிரியர்: இப்ப படிக்கிற பிள்ளையள் தாங்களெண்டாலும் தங்கட தாய் மொழிய படிக்க முன்வரவேணும்

இ-ஒருவர்: சில பிள்ளையள் தமிழாலயம் (தமிழ்ப் பள்ளிக்கூடம்) போறமெண்டா பெற்றார் விடுறதில்ல

பெண்: சாமத்திய வீடு கல்யாணவீடு பிறந்த நாள் எண்டு அவையள் ஓடித்திரிவினம் அதுக்க பிள்ளையள எங்க விடுறது?

பெரியவர்: உண்மதான் 5 நாளும் தவறாம ஜேமன் பள்ளிக்கூடம் போவினம் ஆனா வாரத்தில ஒருநாள் நடக்கிற தமிழாலயத்துக்கு (தமிழ்ப் பள்ளிக்கூடத்திற்கு) அவையளுக்கு நேரமிராது.

ஆசிரியர்: தமிழர் தாங்களே திருந்த வேணும் இல்லாட்டி அடிபட்டுத்தான் சாகவேணும்.

ஒருவர்: இனி பேசிப் பிரயோசனமில்ல எல்லாருக்கும் தமிழ் உணர்வு வரவேணும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகமூடி மனிதர்கள்:

ஐயோ நாங்கள் என்ன செய்வம் எங்கட பிள்ளையள ஆரெண்டு காட்டுவம் எங்களுக்கு என்னதான் வழி.

❖ *பாடல்*

*என்ன வழியம்மா என்ன வழியம்மா*
*நாமும் அறியோமம்மா எங்கள்*
*முகமும் இழந்தோமம்மா*

*வாழும் நாடெங்கள் சொந்த நாடென்று*
*கனவில் வாழ்ந்தோமம்மா நாங்கள்*
*முகத்தை தொலைத்தோமம்மா*
*உரிய முகத்தை அழித்தோமம்மா*

*ஏனிந்த அடிமையம்மா*
*எவர்க்காக சுமந்தமம்மா*
*பாவியானோமம்மா துயரில் நொந்து*
*துடிக்கின்றமே !*


*ஐயோ அவலம் கொண்டோமம்மா*

ஜேர்மனி நாட்டவர் வசனம்:

ஆகா அகதிகளே! உங்களுக்கு என்னத் திமிர். எங்கள் நாட்டுக்குள் வந்த உங்களுக்கு வாழ இடம் கொடுத்தால் நீங்கள் நாங்களாக முடியுமா? வீணான கற்பனை வேண்டாம். திருந்திவிடுங்கள்! அல்லது முகத்தை தொலைத்து விட்டு முகவரியும் இல்லாமல் நாடெல்லாம் அலைந்து யாருமற்ற அநாதைகளாவீர்கள். வாழுங்கள் ஆனால் நீங்களாகவே வாழப்பாருங்கள்

நகை: இனியென்ன எல்லாத்தையும் அவங்களே சொல்லிப்போட்டாங்கள் .திருந்துங்கோ என்ன திருந்தி பிள்ளையளுக்கும் தமிழ் மொழிய படிப்பியுங்கோ சரி நான் வாறன்.

<u>*நிறைவு*</u>




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதை

நாடகவகை: நவீன கூத்துவடிவ நாடகம்

களங்களின் எண்ணிக்கை: 1. களம்

திறந்தமேடை

| கலைஞர்கள் | 1. போதை | 2. அறிஞர் 1 | 3. அறிஞர் 2 |
|---|---|---|---|
| | 4. பெண் | 5. அண்ணா | 6. வெள்ளைச்சுருட்டு |
| | 7. சுருட்டு | 8. பொது 1,2 | 9. பொதுமக்கள் |

- *செயல்*

*சுருட்டும் வெள்ளை சுருட்டும் வருதல் அவ்வேளை பாடல் ஒலிக்கிறது.*

- *பாடல்*

*சுரு:* *வாடா அடா வாடா*
*வாடா வெள்ளை சுருட்டே - போதை*
*பாதையை இங்கே பரப்பிடுவோம் நாங்கள்*
*பரப்பிடுவோம் ( வாடா.....)*

*மாந்தர் மயங்கிடனும் அவர்*
*மதியினை நாங்கள் சிதைத்திடனும்*
*மெதுவாய் அழித்திடனும்*
*போதையின் பாதைதனில் இந்த பு*
*வியெல்லாம் நின்று சுற்றி வரனும்*
*வாடா வெள்ளை சுருட்டே.....*

*வெ.சு:* *மென்மை மிகுந்தவனாம் வெள்ளை*
*சுருட்டெனும் பெயரெடுத்த சிகரட்டும் நான்*
*புகை கக்கும் வகை நான் சுகம் கொட்டும் விதம் தான்..*
*மென்மை மிகுந்தவனாம்.....*

*சுரு:* *ஓகோ.... சுருட்டு மண்டான் சுருட்டு*
*நல்ல சுருட்டும் நானிவனே நல்ல புகையிலை சுற்றிவரும்*
*தரமுளவன் சுகம் அள்ளித்தருவேன். போகம் இட்டுத் தருவேன்.*
*நானும் நல்ல சுருட்டு....*
*வாடா வெள்ளை சுருட்டே - போதை*
*பாதையை இங்கே பரப்பிடுவோம் நாங்கள்*
*பரப்பிடுவோம் ( வாடா.....)*

சுரு: ஆகா பார் எவ்வளவு சனக்கூட்டம் என்று.

வெ. சுரு: ஆமாம் இந்த சனக்கூட்டத்தில் கொஞ்ச பேரையாவது எங்கள் பக்கம் இழுக்க முடியாதா?

சுரு:- ம் உனக்கு அறிவிருக்கிறதா?

வெ சுரு: அதை நீ கேட்கிறாயா? ம்.........

சுரு: நான்தான் இதம் தரும் இனிமையின் பிறப்பினன் என்னைப் பணம் படைத்தவர் ஏற்று சுகம் காண஽பார். தெரியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெ.சு: *(கர்வமாக சிரிப்பு)* இதோ இந்த சிங்கார பூமியில் சிகரெட் என்றுதான் எனக்குப் பெயர். மனித ஐவிரலில் நானே ஆறாவது விரல் புரிகிறதா? நானே இன்றைய உலகின் சர்வமும். சிறியவர் முதல் பெரியவர் வரை யாவரும் எனை ஏற்று சுகம் காண்பர். பெண்ணே நீ என்னிடம் வா....?

சுரு: ம்... பிதற்றாதே... வீணான விதப்புரை அது. ஜெர்மனியில் என்னை சிகார என்று செல்லமாக அழைப்பர். நான் கௌரவமானவன்.

வெ.சு: ஆகா பொக்கு பொக்கு என உனை புகையிழுக்கவே போதும் என்றாகிவிடும்

சுரு: ஏய்.. வெளுளைச் சுருட்டே! அதிரசமாய் புகைபவன் நான்.

வெ.சு: இது வீண் பேச்சு
சுரு: பொறு பொறு

- *செயல்*

*ஒரு பெண்ணும் அவளின் தம்பியும் வருதல்*

வெ.சு: ஆகா மானடர்கள்! வருக வருக தங்கள் வரவு கண்டு எமக்கு மகிழ்ச்சி.

பெண்: யார் நீங்கள் ?

சுரு: நாங்களா ஆகா ( சிரிப்பு ) எங்களைத் தெரியாதா?

பெண்: ஓ பூமியை பாழ்படுத்தி மனிதரை நாசமாக்கும்

வெ.சு: இல்லை இல்லை பெண்ணே நீ தவறாக புரிந்து வைத்திருக்கிறாய்

அண்ணா: தங்கையே இவர்களுடன் வீணான பேச்சு வேண்டாம் வா நாங்கள் போகலாம்.

சுரு: ஆகா நன்றாக பேசுகிறாய் அழகான இளைஞன் நீ.

வெசு: இந்த பூமியில் உன்னைப்போன்ற இளைஞர்களின் வசிகரமே எங்கள் கையில்தான் இருக்கிறது.

பெண்: அண்ணா இந்த பேச்சில் மயங்கிவிடாதே வா போகலாம்.

- *செயல்*

*அவ்வேளை இடியென ஒரு சிரிப்பொலி அத்தோடு வெசு. சு பயந்து நடுங்க பெண்ணும் அண்ணனும் அச்சத்தோடு சுற்றிலும் தேடிப்பார்த்தல்.)*

❖ *பாடல்*

*போத போத நான்தான் போத (4)*
*சர்வதேச மட்டத்திலே சகலகலா வல்லவனாம்.*
*சங்கதிகள் பல கொண்ட சந்தோச நாயகனாம்.*
*போத போத போத .....*
*விந்தை இந்த உலகத்திலே விநோதங்கள் செய்பவனாம்*
*வேகம் இந்த உலகமென்று வீரியத்தை தருபவனாம் ( போத..)*
*வானுயர பறந்திடலாம் வசந்தமதை பெற்றிடலாம்.*
*எட்டாத கொப்பெல்லாம் எட்டுத் தொட்டுப் பார்த்திடலாம். (போத ...)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அத்தனைக்கும் ஒரு புனிதன் அர்த்த முள்ள போதையிவன்*
*வித்தகத்தை காட்டிடவே வேகம் கொண்டு நானும் வந்தேன். (போத ..)*
*அற்புதமாய் அவதரித்த ஆசையுள்ள போதையிவன்*
*ஆடலுடன் பாடலையும் அள்ளித் தரும் அபின் கஞ்சா அபின் கஞ்சா.*

- *செயல்*

*பாடல் முடிந்து போதை ஆவேசமாக மேடையில் சுழல ஏனையோர் பயந்து ஓடித்திரிதல்.*

போதை: ஆகா (சிரிப்பு) மானிடக்கூட்டம் பெருகி நிற்கிறது. மனிதர்களே இந்த உலகில் நானே சகலமும். உங்களை சொர்கத்தில் தவழவிடும் வலிமை பெற்ற வள்ளவன். ஓ.. யார் நீங்கள் என் பாதை தேடி வந்தீர்களா? ம்..... வருங்கள் பெண்ணே! இளைஞனே வாருங்கள் மனித இளமைகßகு இதம் தரும் போதை நான்தான். என் அருகே வாருங்கள்.... பாருங்கள் என்னை. இந்த உலகின் சகலமும் நானே அபின் கஞ்சா கெரோயின்... இப்படி இப்படி சகலமும் நானே உங்களுக்கு என்ன வேண்டும்?

- *செயல்*

*இருவரும் மறுத்து பின் வாங்கல்.*

- *பாடல்*

*மானிட வாழ்வுதனில் இளமை பொங்கும் இளைஞர்களே ! (இளைஞர்களே)*
*கூன் விழுந்த கிழவர்களே குடிமக்களே வாரீர் (2) வாரீர்*
*வானுயரப் பறந்திடலாம்*
*வானுயரப் பறந்திடலாம். பூமிக்குள்ளும் நீந்திடலாம் (2) நீந்திடலாம்*
*போதையின் பாதைதனில் சாதனைகள் கண்டிடலாம் (கண்டிடலாம்)*

வெ.சு: ஏய் மனிதர்களே போதையின் சகலமும் ஆனவர் அழைக்கிறார். செல்லுங்கள்

சுரு: ஆமாம் சந்தோசம் அழைக்கிறது செல்....

அண்ணா: தங்கையே வா போய்விடுவோம் இது ஆபத்தானது

வெ.சு: இளைஞனே அஞ்சாதே வா இப்படி நாங்கள் கெட்டவர்களல்ல வா...

- *செயல்*

*அண்ணரன வெ.சு சு வேறுபக்கமாக அழைத்துச் செல்லல்.*

போதை: பெண்மணியே பார் உன் அண்ணனை போதை சேதம் விளைவிப்பதல்ல தயங்காதே

பெண்: போதையே எனக்கு தயக்கமாக இருக்கிறது.

போதை: ஏன் என்ன தயக்கம்?

பெண்: உன் போதையின் பாதை கொடியது என்கிறார்களே....?

போதை: *(சிரிப்புடன்)* யார் சொன்னது மடையர்கள்.

வெ.சு: ஆமாம் மடையர்கள்

சுரு: இந்த விஞ்ஞான உலகின் விவேகி இவர். இளமைக்கும் முதுமைக்கும் கூட ஏற்றம் இவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெ.சு: பெண்ணே உன் வாழ்கையின் வசந்தத்தை மறுக்காதே

சுரு: ஆமாம் வாழ்கை ஒருமுறைதான் வாழ்வதும் ஒருமுறைதான்

போதை: இன்னும் ஏன் தயக்கம் தயங்காதே

பெண்: நானும் ஒரு முறை வாழப்போகும் அந்த வாழ்க்கையை தொலைத்துவிட விரும்பவில்லை. ஆனால்....

போதை: என்ன என்ன ஆனால் தயங்காதே நான் காட்டும் பாதையைப் பார். அது எவ்வளவு இனியது. இதோபார் சகலவிதமான போதையும் என்னிடம் உண்டு.

வெசு: மானிடர்களே இந்த போதையார் உங்களுக்கு சகலமும் தருவார். என்றாலும் என்னையும் ஒருமுறை புகைத்துப்பாருங்கள்.

சுரு: அதெப்படி நீ மட்டுமா சுவைஞன் நானில்லையா மக்களே போதையாரின் பாதையில் நானும் இன்று புகழப்படுபவன் என்னையும்

போதை: ஏய் என்ன திமிரா நசித்து விடுவேன் வாயை மூடுங்கள். யாரும் அஞ்சத் தேவையில்லை உங்களைப்போன்ற பலபல இளைஞர் யுவதிகள் என்னிடம் சரணாகதியாகி சொர்க்கத்தில் திளைக்கிறார்கள்.

வெ.சு: உண்மைதான் போதையாரே இந்த பிராங்பேர்ட் நகர வீதியில் உங்கள் பக்த்தர்கள் காலை மாலை வேளை பாராது இரவு பகல் பாராது குளிர் வெப்பம் பாராது ஊசியேற்றி போதையிழுத்து எவ்வளவு ஆனந்தமாக நகர உலா வருகிறார்கள்.

போதை: ஆகா உண்மைதான் இந்த இளைஞர்கூட்டத்தை என் பிடியில் தக்கவைத்துக் கொண்டால் உலகமே என்பாதத்தில் ( சிரிப்பு ) அதன்பின் நானே சகலமும் நானே சர்வமும்..........

சுரு: மதிப்புக்குரிய போதையாரே தங்களால் நாங்கள் பெருமை கொள்கிறோம் பெண்ணே கேட்டாயா இனியும் நீ தயங்குவது சரியல்ல

போதை: இளைஞர்களே யுவதிகளே வாருங்கள் இதோ போதைநான் அழைக்கிறேன் ..

பெண்: போதையே நானß ஒ..ஒரு ஒரே முறை...

❖ *பாடல்*

*ஏதோ அழைக்கிறது சுவையொன்று*
*தெரிகிறது காலம் இனித்திடுமோ...*
*எந்தன் எண்ணம் நிறைவேறுமோ?.... (ஏதோ)*
*வசந்தம் நீயென்றால் வருவேன் உன்னிடத்தில்*
*நேசம் கொள்வேனடா உந்தன்*
*பாதை செல்வேனடா போதை பாதை செல்வேனடா.*
*சிகரெட்டும் சின்ன சுருட்டும் பாவையென் கைவரட்டும் (2 )*
*வாழ்க்கை இனிக்கட்டுமே...... புதிய*
*உலகை காட்டட்டுமே புதிய உலகை காட்டட்டுமே.*

பெண்: போதையே நான் உன் பாதை வழி நானும் வருகிறேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ *பாடல்*

*வந்தனம் மக்காள் வந்தனம்*
*உங்கள் வருகைக்கு எந்தன் வந்தனம் (2)*
*தான்னன்னே தானனே தானனன்னே*
*வஞ்சியுன் வருகைக்கு வந்தனம் - வகை*
*கண்டவுன் கருத்துக்கு வந்தனம்*
*வாழ்க்கையின் ஏக்கமே போய்வீடும் - இனி*
*வசந்தமே வாழ்வாய் வந்திடும்.*
*உலக மக்கள் என்னில் வருகின்றார்*
*ஊசி மருந்து தூளும் எடுக்கின்றார்.*
*சாற்றும் இந்த போதைக் கொப்பில்லை*
*சாகசத்திற்கிங்கு தடையில்லை.*

- *செயல்*

*பாடலுடன் போதையும் பெண்ணும் அண்ணனும் (மயங்கி) செல்ல இன்னொரு கூட்டம் போதையை தேடி மிக அவலமாக போதைக்கு அடிமையாகி தம் பாவிப்புக்கு போதையில்லாது துவண்டு வருகிறது. அக் கூட்டத்தின் போதைக்கான தத்தளிக்கும் காட்சி சோக இசை பின்னனியில்*

❖ *பாடல்*

*போதையெங்கே போதையெங்கே*
*போதையெங்கே போதையெங்கே - போதை*
*எங்கே.... ஐயா போதையெங்கே*
*காலும்தான் வலிக்கிறது கைகளும்தான் நடுங்கிறது (போதை...)*
*உச்சத்திலே வாழ்க்கையென்றார் இளமை என்றும் நிலைக்குமென்றார் (போதை...)*
*நாடி நரம்பு இழுக்கிறது நாவும் செத்து துடிக்கிறது (போதை....)*
*நெஞ்சுக் குளி வலிக்கிறது உடல் நிமிர்ந்து நிற்க மறுக்கிறது... (போதை...)*
*காசு பணம் கையிலில்லை கால்களிலும் வலிவு இலßலை. (போதை...)*
*ஊசி மருந்து காணவில்லை தூள் பொடியும் போதவில்லை (போதை...)*
*குளிக்க மனம் ஒப்பவில்லை குடலும் உணவை கேட்பதில்லை (போதை...)*
*பந்த பாசம் விட்டோடி பாவியாகி தவிக்கிறோமே (போதை...)*

- *செயல்*

*போதைக்கு அடிமையானவர்கள் ஒவ்வொருவராக சோர்ந்து விழும் நேரம் ஒரு அறிஞர் வருகிறார். அவர் அம் மக்களைப் பார்த்து மிக மிக வேதனைப் பட்டு கண்ணீர் வடிக்கிறார்.*

அறிஞர் 1: ஓ... என்னருமை மக்களே! இது என்ன இது என்ன கொடுமை ஐயகோ.......

- *செயல்*

*அவர் ஒவ்வொருவராக பார்த்து சோகமாய் உலாவ இன்னொரு பெண் அறிஞர் வருதல்*

அறிஞர் 2: ஓ... இது என்னக் கொடுமை ஐயகோ போதையின் பாதையில் போய் இப்படி நாசமாய்ப் போனார்களே கடவுளே.....

அறிஞர் 1: ஐயோ சமுதாயமே அற்ப சுகம் தேடிப் போய் இப்படி அரக்கனிடம் மாட்டிக் கொண்டனரே......

அறிஞர் 2: வாழ்க்கையில் பேரின்பம் காணப் போவதாய் இப்படி பழாய் போனீர்களே...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிஞர் 1: இதுதானஒ வாழ்ககையா? குடியால் குடியே கெடும் என்பார் இந்தப் போதையால் மனித இனமே நாசமாவதா?

அறிஞர் 2: மதுவின் தீதை அறியாதார் யார் அப்படியிருந்தும்.....

அறிஞர் 1: மதுவால் மாய்கிறார்.

அறிஞர் 2: புகைபிடிப்பது தீமை என்றார் அதையே எழுதியும் வைக்கிறார்

அறிஞர் 1: அப்படியிருந்தும் புகைக்கிறார் தாமே புகைந்து இருமி இரத்த வாந்தி எடுத்து சாகிறார்

அறிஞர் 2: ஐயோ இது கொடுமை

- *பாடல்*

*ஐயகோ கொடுமை ஐயா இது பெருங் கொடுமை கொடுமை ஐயா*
*ஞாலத்தை கண்ட மனிதன் இங்கு கோலம்தான் கெட்டு போனான்.*
*காலத்தை வென்ற மனிதன் இங்கு நாலும்தான் கெட்டுப்போனான்.*
*ஐயா பெரியோரே எங்கள் அறிஞோரே செவி கேளுமய்யா....*
*வாழத்தான் வந்து பிறந்தான் இவன் சாகவா போதையுண்டான்.*
*வையகம் தளைக்க வந்தான் இன்று வகையிலா சாவை கொண்டான்*
*அம்மா பெரியோரே எங்கள் தாய்மாரே...*

அறிஞர் 1: கடவுளே நான் எப்படிச் சொல்வேன் வாழவேண்டியவர்கள் இப்படி.....

அறிஞர் 2: பாருங்கள் வயது பேதமின்றி வாலிபங்கள் விழுந்து கிடப்பதை

அறிஞர் 1: வயது போனவர்கள் வயதுக்கு வராதவர்கள் ஆண் பெண் என்று...

அறிஞர் 2: புகை இழுத்து புகை ஊதி கரியாகுவதா வாழ்க்கை?

அறிஞர் 1: இல்லை இல்லை மனிதன் சிந்திக்க வேண்டும். மனிதன் சிந்திக்க வேண்டும்.

அறிஞர் 2: ஆமாம் இனியும் இதை அனுமதிக்க முடியாது போதையை நாங்கள் இல்லாது ஒழிக்க வேண்டும்.

- *செயல்*

*போதை அட்டகாச சிரிப்புடன் மேடைக்குள் குதித்து தாண்டவமாடல் போதையோடு சில மனிதர்களும் வரல் போதையும் அறிஞரும் எதிர்ப்பட்டு தம் நிலையை (குறி) அசைவினால் வெளிக்காட்டல். அவர்களிடையே அகப் பட்டுக் கொண்ட மக்கள் இரண்டு பக்கமும் ஒன்று மாறி ஒன்றாக சாய்தல். வசனங்கள் அற்ற பின்னனி இசை*

போதை: ஏய் பொடிப் பயலே போய்விடு இல்லையேல் உன்னை...

அறிஞர் 2: ஏய் போதையே நீ ஒழிந்து விடு அல்லது நாம் உனக்கு அழிவை தந்து விடுவோம்.

போதை: ஆகா ஏய் பெண்ணே என்ன சொன்னாய்...

- *பாடல்*

*யாரடி நீ எடியேய் யாரடி நீ...*
*சின்னத்தனமாய் என்னிடம் வந்து*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*போடா என்று சொல்ல யாரடி நீ...*
*என் மந்திரக் கையாலே மயக்கியுன் மதி கெடுப்பேன் யாரடி நீ*
*அடா போதையின் பாதைதான் தோதடா தோதடா ஓடடா நீ*
*சின்னப் பயலே ஓடடா நீ பேதையே ஓடிவிடு....*

போதை: என்ன துணிச்சல் ம்..... சகல வல்லமையும் படைத்த என்னிடமா இங்கிருந்து ஒழிந் தோடுங்கள்.

அறிஞர் 1: ஏய் போதையே தீது செய்வது நீ போய் விடு உடனே இங்கிருந்து ஓடிவிடு.

அறிஞர் 2: எம் மக்களை மயக்கி போதையூட்டி அவர்களைப் பாழடிப்பவன் நீ.. ஓடிவிடு.

போதை: ஆகா என்ன நான் ஓடுவதா? மடையர்களே இதோ பார் உன் மக்களனை வரையும் என் பாதைக்கே இழுக்கிறேன்.

அறிஞர் 1: நிறுத்து. அடாவடித்தனமாய் நீ அதிகாரம் செய்கிறாய்.

அறிஞர் 2: எம் மக்களை நாங்கள் காப்போம். மக்களே இங்கே வாருங்கள்

போதை: *(சிரிப்பு)* மக்களே வாருங்கள் இதோ சகல சந்தோசமும் நான் தருகிறேன்.

அறிஞர் 1: மக்களே மயங்கி விடாதீர்கள். இங்கே வாருங்கள். இது இனிய வாழ்க்கையல்ல இடுகாட்டு வாழ்க்கை.

போதை: என்ன சொன்னாய்?...... உன்னை

அறிஞர்: போதையே இனியும் உன் பலம் வலுக்காது ஓடிவிடு...

❖ *பாடல்*

*ஓடிடு ஓடிடு உடனே - இல்லை*
*ஒழித்திட புகுவோம் உன்னை.*
*யாதிடம் வந்தாய் ஏதிடம் சொன்னாய்?*
*ஓடிடு ஓடிடு உடனே....*
*மக்கள் எழுவார் சிந்தை தெளிவார்*
*மனிதராய் வாழப்புகுவார்- உடனே*
*ஓடிடு ஓடிடு உடனே...*
*தீதோ செய்தாய் தீவைத்தெரிப்போம்- அந்தோ*
*அழிவையுன் நேரம் குறிப்போம்*
*ஓடிடு ஓடிடு இல்லை*
*ஒழித்திட ஓங்குமே எங்கள் கைகளே.*

- *செயல்*

*பாடலுடன் போதையும் வெ.சு, சு பின்வாங்க மக்கள் தெளிதல்*

பெண்: ஆமாம் ஒழித்திடத்தான் வேண்டும் போதையின் பாதையை அழித்திட வேண்டும். போதை என்ற படுகுளியில் பாவி நான் விழுந்தேன்...

அண்ணா: தங்கையே தரம்கெட்டுப்போனது நானும்தான் போதையை நாங்கள் இல்லாது ஒழிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது 1: ஓ... நான் நடைப்பிணமாகிப் போனேன். போதை எம் சாவை குறிவைக்கிறது... பாவி நான் பாதியில்தானும் தெளிந்தேனே...

பொது 2: இனியொரு காலமோ சமுதாயமோ போதைக்குள் விழுந்து விடக் கூடாது.

அறிஞர் 1: ஆமாம் குடி குடியைக் கெடுக்கும் குடி ஊரைக் கெடுக்கும்...

அறிஞர் 2: போதை இதோ எங்களால் ஒழிக்கப் படட்டும்...

எல்லோரும்: போதை ஒழிந்தானß போதை ஒழிந்தான் இன்னொரு சமுதாயம் பாதை மாறிடக் கூடாது... போதையே ஒழிந்துபோ........

- *செயல்*

*கலைஞர்கள் போதையை சுற்றி ஆடி ஒரு கறுப்பு துணியால் போதை சிகரெட் சுருட்டு ஆகியோரை மூடி ஆடிப் பாடல்.*

- *பாடல்*

*வெல்லுவோம் வெல்லுவோம் வாழ்க்கையை*
*விரட்டுவோம் விரட்டுவோம் போதையை*
*மனிதனுக்கு போதையென்ன போகமா?*
*மனிதனே போதையாலே சாவதா?*
*விடுதலை விடுதலை விடுதலை விடுதலை விடுதலை......*

*நாளையை வெல்வது நம் கடன்*
*நாட்டையும் காப்பது நம் கடன்*
*உழைத்திடும் வர்க்கமே வாழிய*
*புகைத்திடல் தீதென பாடுக...லால லா...*
*எழுகவே எழுகவே எழுகவே*
*தமிழெனும் அகமொழி வளர்கவே.....*
*தமிழினால் உலகினில் கூடுவோம்.*
*தாயக தர்மப் போரை ஊக்குவோம்... லால லா...*

- *செயல்*

*கலைஞர்கள் சபையோரை சுற்றி பாடலுடன் ஆடி மகிழ்வுடன் வருதல்*

<u>நிறைவு</u>




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தி

நாடகவகை: குழுக நாடகம் (நகைச்சுவை)

களங்களின் எண்ணிக்கை: 1. களம்

திறந்தமேடை

கலைஞர்கள்
1. அழகு 2. குபேரன் 3. பண்டிதர் 4. கமலம்
5. கண்மணி 6. கந்தர் 7. தாய் 8. மதுரா
9. சாலினி 10. தம்பி

- *செயல்*

*இரண்டுபேர் (அழகு, குபேரன்) திருடர்களைப்போல் ஒருவர் பின் ஒருவராக பயத்துடன் மேடைக்கு ஓடி வருதல்.*

இருவரும்: ஐயொ நானில்ல நானில்ல நான் திருடயில்ல...

- *செயல்*

*இருவரும் ஒருவரில் ஒருவர் மோதுண்டு பின் தங்களை இனங்கணால்.*

அழகு: அட நீ .. நீ ..குப்ப சே கு ..கு குபேரனல்லே?

குபே: அட ஓ நீ அசடு சே அழகில்ல

அழகு: எங்கயடா போயிருந்தனி பயந்து பயந்து வாறாய் ஏன் என்ன நடந்தது?

குபே: ஆர் ஆர் நானோ பயந்தோ சே ..நீ..

அழகு: உஸ் மெதுவா கத

குபே: ஏன்ரா? ஏன் என்ன நடந்தது?

அழகு: அந்த கோழிகள் நிக்கிற வீடு இருக்கல்லே

குபே: எந்தக் கோழி ? கோழிகள் நிக்கிறது ஒரு வீட்டில மட்டுமே?

அழகு: அட பொறு, கமலமக்காவின்ர வீட்டுக்குப் பக்கத்து வீடு ..

குபே: ஓ... கீதபொன்கலம் அண்ணர்ட வீடு...

- *செயல்*

*அவ்வேளை ஒரு பண்டிதர் ஒரு சங்கீதப் பாடலுடன் வருதல் அழகுவையும் குபேரனையும் கண்டதும் செருமிக்கொண்டு அவர்களைக் கவனித்தல்*

அழகு: உஸ் கதய நிப்பாட்டு பெருசு வருகுது

குபே: ஓமடா கத குடுத்திடாத மனுசன் விட்டிட்டுப் போகாது.

பண்: ம்... (செருமுதல்) கடுமையா யோசிக்கிறியள் என்ன செய்யிற பிளான்

- *செயல்*

*எதிர்பாராத அந்தக்கேள்வியை சமாளிக்க மரத்தடி கோயிலைக் காட்டி வணங்குதல்*

அழகு: ஒண்டுமில்ல சும்மா சாமி கும்பிட ...முருகா...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குபே: டேய் அது முருகன் இல்லையடா பிள்ளையார்

அழகு: பிள்ளையாரப்பா டேய் குபேரா ஏதாவது ஒரு தேவாரம் பாடு

குபே: தேவாரமா? ஐயொ நானென்னடா பாடுறது?

அழகு: அதுதான்ரா நீ சுடலையடியால வரேக்க பாடுவாய் ஏதோ பாலும் ..எண்டு

குபே: ஓ ..சரி ...பாலும் தெளிதேனும் பாகும் பருப்பு...

அழகு: நிப்பாட்டு நிப்பாட்டு ...உந்த தேவாரத்த நீ மட்டுமே பாடு..

குபே: ஏன் என்னத்துக்கு? கடவுளில கோபமே?

அழகு: சே சே அப்பிடியொண்டுமில்ல நீ தனியாவேப் பாடு

குபே: அப்ப ஏன் காய் வெட்டுராய்

அழகு: காய் வெட்டுரதோ ஆர் நானோ ம் உந்தத் தேவாரத்தப்பார் பால் தேன், பாகு அங்கால

குபே: ஓ பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் ..எட ..ஓமடா பருப்பு

அழகு: அதுதான் பருப்பு அதக்கண்டு எவ்வளவு காலம் தெரியுமே ...மணந்து பாக்கவே காசு குடுக்கவேணும் நீ அதத்தாரன் இதத்தாரன் எண்டு பாடுராய்.

குபே: கோதாறி மறந்தே போனன்

பண்: ஓகோ கடவுளிட்ட கடுமையான வேண்டுதலோ? பாவம் கடவுள், அவரையும் பழுதாக்கிப் போடுவான்கள்.

அழகு: சரி சரி பாடு பெருசு விட்டிட்டுப்போகுதில்ல..

குபே: பாலும் தெளிதேனும்..

அழகு: பொறு ! பால் அன்னம்மக்கா பசுமாட்ட மேச்சலுக்கு அவுட்டுவிடயில மெதுவா கறந்து போடலாம் தேன் காட்டில அங்க இங்க தடவி ஒருமாதிரி எடுத்துப் போடலாம் ம் அங்காலப்பாடு..

குபே: பாலும் தெளிதேனும் பாகும்

அழகு: அதையும் தண்ணிக்க சீனியப் போட்டு பாகாக்கி சமாளிக்கலாம் ஆனா பருப்ப சேத்துப்போடாத

குபே: பாலும் தெளிதேனும் பாகும் பாகும் ...பாகும் ..ஆகா பாகற்காயும் வந்திட்டுது வந்திட்டுது பார் பாலும் தெளிதேனும் பாகும் பாகற்காயும் பாத்தியா .....கவிதை கவிதை வருதடா...

அழகு: பறவாயில்ல நீயும் எதுகை மோனையெல்லாம் போட்டு கவிதை எழுதுறாய்.

குபே: பின்ன நான் ஒரு கவிஞன் .சரி என்னோட சேர்ந்து பாடு பாலும் தெளிதேனும் பாகும் பாகற்காயும் நாலும் கலந்துனக்கு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகு: குபேரா பிறகும் ஒரு பிரச்சனை வருது பார்

குபே: என்னடா என்ன பிரச்சனை நான்தான் அழகா கவிதையாபாடிட்டனே நாலும் கலந்துனக்கு நாம் தருவோம் சரிதானே..

அழகு: நாம்தான் ஆனா கலந்து தாறம் என்றது வேண்டாம் பிள்ளையாருக்கு படைச்சுப் போட்டு பிறகு நாங்கள் தானே சாப்பிடுறது

குபே: ஓ...... கலந்து குடுக்கலாம்தானே?

அழகு: எப்பிடி பாலும் தேனும் பாகும் அதுக்க பாகற்காய் சாப்பிடமுடியுமே? தனித்தனியே நாம் தருவோம் எண்டு பாடுவம்

பண்: டோய் நீங்கள் இன்னமும் என்னடா செய்துகொண்டிருக்கிறியள் .பிள்ளையாரை கடத்திப் போகவே திட்டம் போடுறியள்.

அழகு: இல்ல நாங்கள் கண்ணமூடி கும்பிட்டுக்கொண்டிருந்தம் நேரம் போனது தெரியேல்ல

பண்: சரி சரி நானிப்ப திரும்பி வருவன் கெதியா கும்பிட்டுப் போட்டு போங்கோ

குபே: முதல் உந்தாள ஏதாவது செய்யவேணும்

பண்: என்ன என்ன சொன்னனி...

குபே: ஒண்டுமில்ல பாலும் தெளிதேனும் பாகும் பாகற்காயும் நாலும் தனித்தனியே நாம் தருவோம் துங்கக் கரிமுகத்து தூமணியே நீயெமக்கு சங்கத்தமிழ்

அழகு: ஐயோ திருப்பியும் குழப்புறான் புள்ளையாரப்பா என்னக் காப்பாத்து

குபே: என்னடா என்ன குழப்புறன் விளக்கமா சொல்லன்

அழகு: பின்ன நான் வெளிநாட்டுக்குப் போறதுக்கு பிள்ளையாரட்ட கேக்கவேணும் நீ சங்கத்தமிழ் கேக்கிறாய் இப்ப தமிழ கதைக்கவே சனத்துக்கு விருப்பமில்ல 10 சொல்லுக்கு 5 சொல்லு இங்கிலீஸ சேத்து கதைகுகுதுகள் அதுக்க சங்கத் தமிழ கேட்டு பேச வெளிக்கிட்டா சனம் துரத்தி துரத்தி அடிக்குங்கள்.

பண்: யேய் உண்மைய சொல்லுங்கோ ஆர் உங்கள துரத்தினது?

குபே: ஐயய்யோ நானில்ல இவன்தான் கோழி களவெடுத்தவனாம்

அழகு: அடப்பாவி !கடவுளே நானொண்டும் செய்யேல்ல பரமண்ணதான் கோழி களவெடுத்தவர்

கமலம்: என்ன பண்டிதரய்யா என்ன உவங்களோட நிக்கிறியள்?

பண்: வா கமலம் ஆர்ரையோ கோழிய களவெடுத்திருக்கிறாங்கள்

கமலம்: கோழியோ ஆர்ட கொழி ஆர் களவெடுத்தது?

அழகு: கமலமக்கா நான் களவெடுக்கயில்ல பரமண்ணதான் சொன்னவர்..

பண்: என்ன ஏது எண்டு விளப்பமா சொல்லு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavahaham.org

குபே: ஒண்டுக்கும் பயப்பிடாம தைரியமா சொல்லு

கமலம்: ஆகா பேந்து? நீர் என்ன செய்வீர்? (குபே தலை கவிழ்தல்)

அழகு: பரமண்ண சொன்னவர் பக்கத்து வீட்டுக்க தன்ர கோழி போட்டுதெண்டு அத ஒருக்கா சாச்சி கொண்டு வரச்சொல்லி

கமலம்: நீ போய் சாச்சனியே ?

அழகு: ஓ படலையால போகப் போனன், ஆனா அது வேண்டாம் வேலியால ஒரு சந்தொன்ற காட்டி அதுக்குள்ளார கடந்து போ எண்டார். பின்ன நானும் வேலியக் கடந்து போனன் அங்க கனக்க கோழிகள் நிண்டது

குபே: எது அவர்ட கோழியெண்டு தெரியுமே உனக்கு?

பண்: டேய் நீயென்ன குறுக்கு விசாரணையே செய்யிராய்? நீ சொல்லு

அழகு: எனக்கு எது அவர்ட கோழி எண்டு தெரியேல்ல, அதனால எது உங்கட கோழி எண்டு கேட்டன் அதுக்கு அவர் கத்தாத கோழி வெருண்டு போயிடும் கத்தாம உள்ளதில பெரிய சேவலாப் பாத்து சாச்சா எண்டார் ..பின்ன நான் நல்ல பெரிய சேவலாப்பாத்து சாச்சிக் குடுத்தன்

பண்: பார் எப்பிடி மத்தவைய பேய்க்காட்டி வாழுறாங்கள் .அது சரி உனக்கு அறிவில்லையே? ஆர்ரையும் வளவுக்க கேளாமல் போகக் கூடாதெண்டு

குபே: ஐயொ அது கூடாதல்லே வேலிய கடந்து சே ..சே நான் இனி உன்னோட சேரமாட்டன்

கமலம்: ஏன் நீர் பெரிய திறமோ ரோட்டில நிண்ட நாவல் மரத்தால ஏறி கதிரித் தம்பியண்ணர்ட வளவுக்க போய் அவரட்ட அடிவாங்கினது மறந்திட்டுதோ?

பண்: சரி சொல்லு பிறகு?

அழகு: பிறகென்ன அவர் கோழிய சாக்காட்டி கறிவச்சி போட்டு எனக்குத் தரயில்ல

குபே: ஆகா) சிரிப்பு (எனக்குத்தெரியும் ஏமாந்திட்டான்

கமலம்: நீ குத்துவாங்கப் போறாய் ஏன் தரயில்ல

அழகு: கோழிக்கறி சமைக்கையில முழு வாசத்தையும் நான் சாப்பிட்டுட்டேனாம் அவருக்கு வெறும் சக்க மட்டும்தான் இருக்கெண்டு சொல்லி திரத்தினவர்

குபே: அதுக்கே பயந்து பதுங்கி பதுங்கி வந்தனி?

அழகு: நீ பேசாமலிரு சரியா?

பண்: நீ கொஞ்சம் பேசாமல் இரு பாப்பம், நீ சொல்லு

அழகு: நான் அவர்ட கறிக்க உப்ப அள்ளி கொட்டிப் போட்டு; ஓடி வந்திட்டன் .

கமலம்: பண்டிதரய்யா உதுக்கு ஒரு வழி செய்ய வேணும் உப்பிடியான ஆக்களால உந்தப் பெடியள் என்னதான் நாடு மக்கள் எண்டு கஸ்டப்பட்டாலும் உருப்படமுடியாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்: ஒமோம் உவங்களையும் கூட்டிக்கொண்டு காவல் நிலையத்தில ஒரு முறைப்பாட செய்து போட்டு வாரன்.

கமலம்: ஓ நானும் ஒருக்கா கனகம்மாவ பாத்திட்டு வாரன்.

- *செயல்*

*எல்லோரும் மேடையைவிட்டு வெளியேறல். கண்மணி மேடைக்கு வருதல்*

கண்மணி: கமலமன்ரி கமலமன்ரி ....கமலமன்ரி அக்காவுக்கு சரியான வருத்தம் எங்க போனீங்கள்? கமலமன்ரி..

கந்தர்: பிள்ள என்ன என்ன ஏன் ஆழறாய் என்ன நடந்தது?

கண்மணி: எங்கட அக்கா இருக்கிறாவல்லே அக்கா அவாவுக்கு என்னென்னவோ செய்யிது எனக்கு பயமா இருக்கு தம்பியவும் காணயில்ல

கந்தர்: சரி வா போய் பாப்பம் வா) ..இருவரும் வெளியேறல்(

தம்பி: அக்கா அக்கா. (*அழுது கொண்டு வந்து செல்லல்)*

தாரினி: புத்திசுவாதீனமான பெண் மேடைக்கு வந்து தடுமாறல் யேய் யாரது? வாயிங்கே என்ன நடந்தது மன்னனுக்கு

கமலம்: எடி புள்ள என்ன செய்யிராய்? அடடா என்னம்மா செய்யிராய்) தாரினியுடன் கமலம் சில சிமிடம் அவளது உடையை சரி செய்து சிரமப்படுதல்(

தம்பி: கமலமன்ரி அக்கா உங்களத்தேடிக்கொண்டு போட்டா

கமலம்: சரி நீயெங்கயும் போயிராத பேசாமல் இதில இரு

கந்தர்: கமலமக்கா எங்க போயிருந்தியள் இவள் பிள்ள உங்களத் தேடிக்கொண்டுப் போனாள்

கமலம்: என்ன செய்யிரது இவையின்ர அம்மா விசரானதோட இவளுக்கும் பிரச்சனை யாக்கிடக்கு சின்னதுகள் அம்மாவும் இல்லாம அப்பாவும் இல்லாம தவிச்சுக் கொண்டு இருக்குதுகள்.

கண்மணி: கமலமன்ரி தம்பிக்கு சரியா பசிக்கிதாம்

பண்: யாருக்கு பசிக்குது கண்மணி இந்தா இதக்கொண்டு போய் தம்பிக்கு குடுத்து சாப்பிடு

தாரினி: எல்லாரும் அமைதியா இருங்கோ அம்மா வரப்போறா

கந்தர்: நாட்டில சமாதானம் எண்ட அளவில பேச்சு நடக்குது ஆனா ஆமிக்காரங்கள் தங்கள பலப்படுத்துறாங்கள் எண்டு கேள்வி

பண்: சமாதானம் எண்டா சந்தோசம் தானே ஆனா முடிவா ஒரு தீர்வு வராம நாங்கள் முழசா ஒண்டையும் நம்பிடக் கூடாது .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலம்: நான் இவள் தாரினிய அவளின்றர அம்மாவின்ர இடத்தில விட்டிட்டு வாறன் இந்தச் சின்னன்களோட இவள வச்சிக்கொண்டிருக்க ஏலாது.

கந்தர்: கமலக்கா தவராசா மாஸ்ரர் தன்ர மோனப்பாக்கப் போறதாச் சொன்னார் தாரினிய அவரோட விட்டுவிடுங்கோவன்.

பண்: மாஸ்ரர்ட மோன இனி சுகமாக்க முடியாதாம் பாவம் .உவளுக்கும் நாளுக்கு நாள் கூடிக்கொண்டு போகுது இனி இங்கயிருந்தா கஸ்டம்தான் சாமாதானம் எண்டாப்போல ஆமான மருந்து சாமான்கள் எல்லாம் வந்தே கிடக்கு?

கமலம்: உண்மதான் புனர்வாழ்வுக்காரப் பெடியங்கள் அங்கினக்க ஏதோ செய்யிறதால சனங்கள் கொஞ்சம் நிம்மதியா இருக்கு

கந்தர்: உவையள் மட்டுமே வெளிநாடுகளில இருக்கிற எங்கட சனங்கள் எங்களுக்காக தங்களான உதவிகள செய்கினம் அவையளாலதான் நாங்கள் கொஞ்சமேனும் வயிராற கஞ்சி குடிக்கமுடியுது.

பண்: அது சரிதான் ஆனா எல்லாருமே உதவி செய்கினம் நாட்ட மறக்காத சனங்களும் இருக்குது மறந்த சனங்களும் இருக்குதுகள்

கமலம்: சிலருக்கு ராஜயோகம் இப்ப சமாதானம் எண்ட பேச்சிக்கே எங்கட சனங்கள் எப்பிடி அள்ளுப்பட்டு வருதுகள் ஆனா லெவல் காட்டுர சனமிருக்கே

கந்தர்: ஆரது என்ன நடந்தது

பண்: ஆர் வேலாயுத்தாரின்ர மூத்தவளின்ர விசயமே

கமலம்: பின்ன அங்க கூட்டி கழுவுரது கக்கூசு அதுக்க கதையும் ஆளும் வெளிநாடெண்ப்போல ஆளும் மாறி கோலமும் மாறவேணுமே?

கந்தர்: சரியக்கா உதவிடுங்கோ உங்கட மோனப்பத்தி ஏதாவது செய்தி வந்ததே?

கமலம்: அதுதான் செக்கோவோ சக்கோவோ என்னமோ ஒரு இடத்தில திருப்பியும் பிடிப்பட்டிட்டானாம் .அழுது அழுது கடிதம் எழுதியிருக்கிறான்.

பண்: அவன் நல்ல கெட்டிக்காரன் அப்பவே நாடு மக்களெண்டு திரிஞ்சவன்

கந்தர்: என்ன செய்யிறது வெளிநாட்டுக்குப் போன எல்லாருக்கும் எல்லாமும் நல்லதா அமையுமே?

கமலம்: உண்மதான் என்ர பெடியன் உதத்தான் கத கதயா எழுதுவான் என்ன செய்யிறது அவனுக்கு கெட்ட நேரம் *(கமலம் மகனின் நினைவால் அழுதல்)*

பண்: உத நினைச்சி கவலப்படாத எல்லாம் நன்மைக்கே எண்டு விடு என்னசெய்யிறது நல்லாப் படிச்சவன் கெட்டிக்காரன்

கமலம்: எல்லாம் என்ர பிழ இஞ்ச சண்ட அங்கபோய் இரு எண்டு துரத்தினன் இப்ப நாட்டுக்குமில்லாம வீட்டுக்குமில்லாம தெருவில நிக்கிறான்.

பண்: சரி உதவிடு அவனுக்கு ஒண்டும் நடவாது .அவன் எப்பிடியும் வருவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தர்: கமலமக்கா செல்லாச்சியக்காவின்ர மோளும் யேமனில இருந்து வந்திருக் கிறாளாம் கண்டனீங்களே?

கமலம்: ஓ கேள்விப்பட்டன் அவளின்ர பிள்ளையள் ஏதோ புரியாத பாசையில கதைக்குதுகளாம் செல்லாச்சி ஒண்டும் புரியாம புலம்பிக்கொண்டிருந்தா சரி நான் வாறன் அட இஞ்சப் பாருங்கோ இவள...
(தாரினியை ஒழுங்கு செய்தல்

பண்: சரி நீ போட்டு வா கவனம் அவள் உன்னை உச்சிப்போடுவாள்.

கந்தர்: பெடியள் புனர்வாழ்வு கழகத்தால ஏதோ குளம் திருத்தப் போறாங்களாம் நான் போறன் நீங்கள் வாறியளே?

பண்: ஓமோம் நாங்கள் கட்டாயம் உதுகளில பங்களிப்பு செய்யவேணும் கண்மணி சாப்பிட்டு தம்பியோட விளையாடு நாங்கள் பிறகு வாறம். (ப, க வெளியேறல்)

தம்பி: அக்கா அக்கா அம்மா வருவாவா? ஏன் அம்மா வாறதில்ல?

கண்மணி: அம்மா ஒரு நாளைக்கு எங்களட்ட வருவாவாம் ஆனா நாங்களிப்ப அம்மாவ போய்பார்க்க முடியாதாம் கமலமன்ரி சொன்னவா

தம்பி: எனக்கு அம்மா வேணும் நாங்கள் அம்மாட்டப் போவமே?

கண்மணி: சே நாங்கள் அங்க போக ஏலாது .எங்கள விடமாட்டினம்

தம்பி: அக்கா எனக்கு இன்னும் பசிக்குது

கண்மணி: பொறுங்கோ கமலமன்ரி வரட்டும் அது வரைக்கும் ஏதாவது விளையாடுவமா?

தம்பி: சரி அக்கா

- *செயல்*

*அவ்வேளை யேர்மன் நாட்டிலிருந்து வந்த தமிழர் பிள்ளைகள் டொச் மொழியில் பேசிக்கொண்டு வருதல்*

- *செயல்*

*தாயகத்துப் பிள்ளைகள் சிலநிமிடம் ஒருவரையொருவர் பார்த்து மொழிதெரியாது தடுமாறுதல் சிறிது நேரத்தில் அழகு வந்து சேர்தல்*

கண்மணி: உங்களுக்கு என்ன பேர்?

மதுரா: Wie bitte ?

கண்மணி: வி பிட்ட நல்ல பேர் ஆனா தமிழாக்கள் மாதிரி தெரியேல்ல நான் கண்மணி

சாலினி: Tut mir leid, ich verstehe dich nicht.

தம்பி: ஐயோ இவையளுக்கு தமிழ் பேசத்தெரியேல்ல (சிரிப்பு)

மதுரா: Wir haben kein tamil gelernt.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகு: ஐயோ எனக்கொண்டும் புரியிதில்லயே ....என்ன பேசுறீங்கள் ? நான் அழகு அழகு விளங்கயில்ல என்ர பேர் அழகு

மதுரா: Oh... Enra per Alagu

அழகு: நீங்கள் தமிழாக்கள் இல்லையா?

கண்மணி: இவையள் என்ன பாசை கதைக்கினம்

குபே: காய் எவ்றி பொடி வட்டிஸ் த புரபளம்

அழகு: சரி வந்திட்டான் உன்ன ஆரும் கேட்டவையே?

குபே: யார் இது ஊருக்குப் புதுசா? கலோ!

மதுரா: Hi!

அழகு: ஏதாச்சும் விளங்குதே?

குபே: என்னடா பேசுதுகள் ஒண்டுமே விளங்கயில்ல எங்கயிருந்து வந்திருக்கினமாம் கேட்டியே?

அழகு: விட்டனெண்டா அதுகளுக்கு நாங்கள் பேசுரதே விளங்குதில்ல அதுக்க எங்கயிருந்து வந்தவையெண்டு விசாரிக்கட்டாம் .விசரன்

கண்மணி: நல்ல சட்டையெல்லாம் போட்டிருக்கினம் என்ன?

அழகு: உனக்கு அதிலயே கண் போகுது?

தாய்: ஏய் என்ன செய்றியள்?

குபே: அன்ரி ஒண்டும் செய்யேல்ல உங்களுக்கு ஒண்டு தெரியுமே இவை எங்கயோ வெளிநாட்டிலயிருந்து வந்திருக்கினம் இவான்ற பேர் வி பிட்டயாம் ஆனா கொஞ்சம் வாய்

தாய்: ஓ அப்பிடியோ இவா ஆராம்

அழகு: இவாவோ? இதுவும் அதமாதிரி கேஸ்தான் .பெரியவாய் ஆனா தமிழ்தெரியாது நீங்கள் எதுவும் பேசலாம்

தாய்: என்னவும் பேசலாமே?

குபே: ஓ தமழ்த்தெரியாத கழுதைகள் பிறகேன் இங்க வரவேணும் குரங்குகள்

கண்மணி: உவையின்ர அம்மாவும் வந்திருக்கிறாவ அவாவுக்கு தெரிஞ்சால் பேசமாட்டாவே?

அழகு: அவாவ நான் காணட்டும் சும்மா அந்தமாதிரி நாலு கேள்வி கேக்கிறன்

குபே: ஒரு கேள்வி நான் கேட்கிறன் எனக்கொண்டு சொல்லித்தா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பி: நானும் கேக்கட்டே

கண்மணி: நீங்கள் என்ன கேக்கிறது அது அவைதான் கேக்கிறது

தம்பி: என்ர அம்மா எப்ப வருவா எண்டு கேக்கவேணும்.

பண்: என்ன பிள்ள உன்னத்தேடி வீட்டப் போனா நீ இங்க நிக்கிறாய்

தாய்: வணக்கம் ஐயா பிள்ளையள தேடி வந்தன்) பிள்ளைகள் விளையாடல்(

பண்: உவை உன்ர பிள்ளைகளே அடடே பிள்ளைக்கு என்ன பேர்?

அழகு: ஐயொ உங்கட பிள்ளையளா?

குபே: நான் ஒண்டும் தப்பா கதைக்கயில்ல அன்ரி உவன்தான்.

தாய்: அது பரவாயில்ல என்ர பிள்ளையள தமிழ் தெரியாத ஆக்களா வளத்திட்டன் இப்ப நான் நல்லா அனுபவிக்கிறன்

பண்: ஏன் பிள்ள உதுகளுக்கு தமிழ் தெரியாதே? தமிழ் தெரியாமலே வளத்தனி?

கமலம்: அடடே எப்பிடி இருக்கிறியள் நீங்கள் வந்ததா கேள்விப்பட்டன் .

தாய்: இருக்கிறம் கமலமக்கா இங்க வந்தப்பிறகுதான் வேதனையா இருக்கு

அழகு: ஏனுங்கோ நாங்கள் பார்க்க அவலமா நிக்கிறமா?

தாய்: எப்பிடி சொல்றது உதுகளுக்கு தமிழ்த் தெரியாது அதின்ர பலன் இப்ப என்னத்தான் பிடிச்சு ஆட்டுது.

கந்தர்: சரி இனி தமிழ படிப்பிக்கலாம்தானே கவலப்படாதைங்கோ

தாய்: அதுதான் என்ர முதல் வேல அங்கயும் தமிழாலயம் எண்டு பள்ளிக்கூடங்கள் இருக்குது.

கந்தர்: அது சரி தெரியுமே பேச்சுவார்த்தையெண்டு பேசிக்கொண்டு ஒருபக்கம் ஆமி தங்கள பலப்படுத்துதாம்.

தாய்: உண்மையாவோ கடவுளே சண்டையெதும் தொடங்கிட்டா பிறகு நாங்கள் போனப்பாடில்லல உடன போயாக வேணும்.

கண்மணி: கமலமன்ரி தம்பிக்கு சரியா பசிக்குதாம் ஏதாவது சாப்பிட இருக்கே?

கமலம்: சரி நீ அவனோட விளையாடிக்கொண்டிரு நான் சங்கக்கடையில சாமான் வாங்கிக் கொண்டு வாரன்

அழகு: கமலாக்கா நான் போய் வாங்கிவரட்டே

பண்: எங்க போறது நீ வெளிநாட்டுகுகெல்லே போகனுமெண்டனி அதுக்கு உந்தக் காசுகாணாது..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- *செயல்*

*அழகு வெளியேறல்*

குபே: ஆர் போறது வெளிநாட்டுக்கு ? நாங்கள் போகயில்ல

பண்: அப்ப முடிவாவே சொல்றியள்.

கந்தர்: போனது காணும் இனி நாட்டுக்கும் ஆக்கள் தேவைதானே

கமலம்: அது சரி போனதுகளும் வரவேணும் என்ர மோனுக்கு அதுதான் எழுதிப் போட்டிருக்கிறன்.

பண்: சரி கமலம் பொழுது சாய்றதுக்கிடையில போட்டுவா அழகு நீயும் போட்டு வா

கந்தர்: பண்டிதர் குடிசை போட பெடியள் கொஞ்ச கிடுகுகள் கேட்டவங்கள் வாருங்கோவன் போய் அந்த அலுவலப் பாப்பம்.

பண்: டேய் குபேரா நீ பிள்ளையளப் பாத்துக்கொள் நாங்கள் ஓடிட்டுவாறம்

குபே: ஓ போட்டு வாங்கோ) பண் , கந்தர் வெளியேறல்

தம்பி: அக்கா அம்மா எப்ப வருவா எனக்கு அம்மா வேணும்.

குபே: தம்பி அக்காவோட விளையாடுங்கோ அம்மாவ கமலமன்ரி கூட்டி வருவா.

தம்பி இல்ல பொய் நீங்கள் சும்மா சொல்றீங்கள்.

கண்மணி: இல்ல உண்மையா அம்மா வருவா நீங்கள் என்னோட வந்து விளையாடுங்கோ

தம்பி: எனக்கு விளையாட விருப்பமில்ல நான் வரயில்ல

- *செயல்*

*அழகு அவசரமாக ஓடிவருதல்*

அழகு: டேய் கமலமன்ரி செத்துப் போனா

குபே: என்னடா கமலமன்ரி செத்திட்டாவா? என்னென்டடா?

அழகு: இபப சொல்ல நேரமில்ல எங்க பண்டிதரும் கந்தையா மாமாவும்.

குபே:: கிடுகு பின்ன போட்டினம்.

கண்மணி: ஐயய்யோ கமலமன்ரி செத்திட்டாவா?

தமிபி: ஏனக்கா அழுறீங்கள்?

குபே: கண்மணி தம்பிய பாருங்கோ நானும் போட்டு வாரன் .

- *செயல்*

*மேடையில் கண்மணியும் தம்பியும் தவித்தல் அவ்வேளை புத்தி பேதலித்த அவர்களின் தாய் வருதல்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பி: அக்கா அம்மா வந்திட்டா அக்கா அம்மா வந்திட்டா இஞ்சப் பாருங்கோ

கண்மணி: அம்மா எப்பிடி வந்தனீங்கள் அம்மா? *(புத்தி பேதலித்த அம்மாவின் பின் பிள்ளைகள் செல்லல்)*

- *செயல்*

*சிறிது நேரத்தில் பண்டிதர் கந்தர் அழகு குபேரன் மதுரா சாலினி தாய் எல்லோரும் வருதல்.*

பண்: என்னடா என்ன நடந்தது கமலத்துக்கு?

அழகு: நான் சைக்கிலில ஏத்திக்கொண்டு போனன் திடிரெண்டு பெரிய சத்தம் கேக்கவும் நானும்விழுந்து போனன் பிறகுதான் தெரியும் அது எங்கட சைக்கில் ரீயுப் வெடிச்ச சத்தம் எண்டு ஆனா கமலமக்காவ தேடினா அவா செத்துகிடந்தா.

கந்தர். அடக்கடவளே பூமியே வெடிக்கிற மாதிரி விழுந்த குண்டுகளில வராத சாவு சைக்கில் ரீயுப் வெடிச்சி வந்ததா?

பண்: வரும் இன்னும் வரும் மனசுக்கயே கிடந்து அழுந்தின பயம் இப்ப சின்ன சத்தத்தக் கூட தாங்காம வெடிக்குது .கடவுளே

தாய்: எப்ப எங்கட சனத்துக்கு விமோசனமோ? கடவுளே

பண்: கடவுள் கடவுள் எண்டா கடவுளின்ர பிரச்சனைய ஆர் தீர்க்கிறது.

கந்தர்: சரி வாங்கோ இனி ஆகிற வேலையப் பாப்பம்.

- *செயல்*

*புத்தி பேதலித்த அம்மாவுடன் பிள்ளைகள் தவித்தல் சிறிது நேரத்தில் அம்மா மரணித்தல் பிள்ளைகள் அம்மாவைக் கட்டிப்பிடித்து அழுதல்*

தாய்: ஐயோ இதென்ன

பண்: என்னடி என்ன இது .இவள் என்னெண்டு இஞ்ச வந்தாள் .

கந்தர்: பிள்ளையள் அம்மா எப்ப வருவா எப்ப வருவா எண்டு கேட்டுக்கொண்டே இருந்ததுகள் அவள் பிரேதமா வந்து கிடக்கிறாள்.

அழகு: கண்மணியும் தம்பியும் மயங்கி கிடக்கினம்.

தாய்: என்ர பரம்பொருளே பிள்ளையள் அழுது அழுது பசியில மயங்கிட்டுதுகள்.

பண்: சமாதானம் எண்டாப்போல எல்லாம் சரியா இனித்தான் எங்களுக்கு பெரிய கடம இருக்கு.

கந்தர்: இதுகள கமலமக்காதான பராமரிச்சா இப்ப அவவும் இல்ல தாயும் இல்ல இதுகள இனி எப்பிடி வளக்கிறது?

தாய்: பண்டிதரய்யா நான் அவை ரெண்டு பேரையும் பொறுப்பெடுத்து அவையளின்ற படிப்பிலயிருந்து எல்லாத்தையும் நானே பாக்கிறன் .

கந்தர்: உண்மையாவே ...என்னால நம்ப முடியேல்ல

அழகு: எனக்கு மனசுக்கு நிம்மதியா இருக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குபே: உங்கள மறக்க முடியாது...

பண்: பிள்ள உன்னமாதிரி ஒவ்வொருதரும் இருந்தா, எங்கள எங்கட சமுதாயத்த யாராலும் ஒண்டும் செய்ய முடியாது

கந்தர்: கேக்க எவ்வளவு சந்தோசமா கிடக்கு எங்கட நாட்ட மீட்க உதவிதான் தேவ அத ஒவ்வொருதரும் செய்யவேணும்.

தாய்: வாருங்கோ வெளிநாட்டில இருக்கிற எங்கட சனங்கள் உதவுறதில ஒருநாளும் பின் நிக்காயினம் வாருங்கோ அவையளட்டயும் உதவி கேப்பம்.

- *செயல்*

*உதவி கேட்டு மக்களிடம் செல்லல்.*

<u>*நிறைவு*</u>







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பைத்தியம்

நாடகவகை: குறியிசை நாடகம்

களங்களின் எண்ணிக்கை: 1. களம்

திறந்தமேடை

| | | | | |
|---|---|---|---|---|
| கலைஞர்கள்: | 1. உரைஞர் 1,2,3 | 2. யுவதி | 3. முதியவர் | 4. பெண் |
| | 5. ஆசிரியர் | 6. வேதியர் | 7. இளைஞர் | 8. சிறுமி |

- *செயல்*

*மேடையை நோக்கி மனநிலை பாதித்த ஒரு இளம்பெண் வருதல். மேடையில் ஏறமுடியாது (படியை விட்டுவிட்டு) தவித்தல் மனம் பேதலித்திருப்பதை முகத்தாலும் செய்கையாலும் காட்டுதல்.அவ்வேளை சாதாரண ஒரு பெண் வந்து மனநிலை பாதித்த பெண்ணுக்கு உதவி செய்தல்.*

- *செயல்*

*மேடை திறக்குமுன் முன்னிருந்து ம.நி.பா பெண் மேடைத் திரைச்சேலையைப் பிடித்து உள்ளும் வெளியும் போய் வருதல் தொடர்ந்து ஏனைய கலைஞர்களும் மேடைத்திரையை விலக்கிக்கொண்டு மேடைக்குள் செல்லல். முதியவர் மேடை திரைச்சேலை அருகே வந்து நின்று பார்வையாளர்களைப் பார்த்து.*

முதியவர்: பாத்தனிங்கள் தானே ? எல்லாரும் உள்ளப் போட்டினம் .தம்பியவை உந்த மறைப்ப (திரையை) எடுத்துவிடுங்கோ !

- *செயல்*

*திரை அகலல் மேடையில் கலைஞர்கள் தத்தம் போக்கில் அலைதல் அவ்வேளை. . . . .*

உரை 1: அன்பானவர்களே ஒடிந்துபோன உறவுகளைத் தேற்றி இடிந்து போன மனிதனை எழுப்பி மனம் வெடித்துப்போன சொந்தங்களை நினைவுகொள்ள கூடியுள்ள உங்கள் அனைவருக்கும் பைத்தியங்களின் வணக்கம்.!!

உரை 2: இன்று எம்மண்ணில் சமாதான சந்தம் கேட்கிறது ஆனால் இந்த அவலம் அன்று தொடங்கி இன்றுவரை ஓயாமல் ஒலிக்கிறது .இந்த ஓலத்தை இந்த அவலத்தை நீங்கள் உள்ளெடுத்து பார்க்க சற்று பின்நோக்கி செல்லவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

உரை 3: பைத்தியம் என்ற கேலிச்சொல்லால் சிரிப்பூட்டப்படும் முகங்களோடு மனங்களையும் தொலைத்தவர்கள் இவர்கள் .எங்கள் நேசத்துக்குரியவர்களே இனவாத அரசின் கொடுவாய் பல்லிடுக்கில் சிக்குண்டு சிதறுண்ட எம்மக்களின் தசைத்துண்டுகளில் மிகச்சிறிய துண்டொண்றை மிகச் சிரமப்பட்டு வெளியெடுத்திருந்தாலும் அதன் துடிப்பை வேதனையை அப்படியே ஒப்புவிக்கமுடியவில்லை .என்றாலும் அன்பானவர்களே !நீங்கள் உங்கள் சுவாசக் கணக்கில் ஒரு தடவையையேனும் காற்றுக்கொரு கதவை இட்டு இந்த மனம் பேதலித்தவர்களின் ஓலங்களை உள்ளிழுத்து ஒரு முறை உச்சரித்துப் பாருங்கள் இவர்கள் பைத்தியக்காரர்களா?

- *செயல்*

*இவ்வசனத்தின்பின் கலைஞர்கள் தத்தம் நிலையில் அப்படியே நிற்றல்*

- *இசையொலி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுவதி: தமிழ்ச்சனங்கள் எல்லாம் இப்ப பைத்தியங்கள் தானே கூறியபடி மேடைக்கு வருதல் இடுப்பில் ஒரு பிள்ளையுடன்

இளைஞன்: ஆரக்கா நீ விசர்கதை கதைக்கிற? தமிழ்ச் சனமெல்லாம் பைத்தியமெண்டா அப்ப எங்களுக்காக சாகிறவை ஆர்?

முதியவர்: எட தம்பி நீ விளங்காம கதைக்கிற அவள்பிள்ள ஒரு ஆதங்கத்தில பேசுறாள்.

இளைஞன்: அது சரி அதுக்காக உப்பிடி சொல்லலாமே?

யுவதி: பார் ஒவ்வொண்டையும் எல்லாம் புத்திமாறி நிக்குதுகள்

முதியவர்: புத்திமாறினதுகள் மட்டுமே இன்னும் எத்தனை எத்தனை அவலம் எங்கட மண்ணில

வேதியர்: கடவுளயும் காணயில்ல கோயிலயும் இடிச்சுப் போட்டான்கள்.

இளைஞன்: ஓமப்பு தமிழனுக்கு என்ன தலைவிதியோ

ஆசிரியர்: பிள்ளைகள் எல்லாரும் பள்ளிக் கூடத்துக்கு வாங்கோ.

முதியவர்: விதியுமில்ல ஒண்டுமில்ல அந்த அறுவாங்களின்ற கொடுமை கண்டியோ அதுதான் உதுகள் பைத்தியமாயிட்டுதுகள்

யுவதி: பைத்தியம் பசி, பட்டினி ம் என்ன செய்யப் போறமோ தெரியேல்ல

இளைஞன்: என்ன செய்யிரது எல்லாரும் பைத்தியங்கள்? இனி இருக்கிற நாங்கள் பைத்தியமாகிறதுதான் மிச்சம் (ஆச்சரியம்)

முதியவர்: அதுவும் நடக்கும் நாங்கள் ஆளுக்கொரு பக்கமா நாட்ட மறந்து எங்கள மறந்து திரிஞ்சால் அதுக்கு தூரமில்ல

யுவதி: உண்மதான் தமிழ்சனமெல்லாம் பைத்தியமாகப் போகுதுகள்.

- *செயல்*

*கலைஞர்கள் ஒரு கணம் நின்று பின் இசைக்கேற்பவல்லாது தத்தம் பேதலித்த நிலையில் நடமாடல்.*

- *பாடல்*

*இவர்கள் வாழ்வை தொலைத்தவரா?*
*இனியவாழ்வை வெறுத்தவரா?*
*தொலைத்தது தொலைந்தது யாதுமென்றார்*
*மனம் தொலைந்;ததும் அலைந்திடும் பரிதாபம்*
*தொலைந்;ததும் அலைந்திடும் பரிதாபம் (இவர்கள்)*
*வெடித்து சிதறிடும் குண்டு மழை - அதில்*
*வெந்து கருகிடும் மனித தலை (2)*
*கண்டவரெல்லாம் பேதலித்தார்*
*பைத்தியமாயிங்கு பரிதவித்தார்.*
*இதுதான் இவர்தம் வாழ்க்கையென்றால்*
*இனியும் இழப்பதற்கெதுவுண்டு....*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- *செயல்*

*பாடல் முடிவடைய கலைஞர்கள் அப்படியே ஒரு கணம் நிற்றல். கலைஞர்கள் அசைவுக்காக ஒரு மெல்லிசை*

பெண்: அம்மாவ கண்டனீங்களே ? என்ர அம்மாவ...

முதியவர்: உவள் பிள்ளயின்ர அம்மாவ அவள் கண்முன்னாலயே ஆமிக்காரங்கள் பிடிச்சி சித்திரவத செய்து கொண்டுப்போட்டாங்கள்.

- *செயல்*

*ஒரு ஆண் (பைத்தியம்) மக்களை நோக்கி ஓடி வந்து கூக்குரலிடல்*

ஆண்: ஆமிக்காரன்கள் வாறாங்கள் எல்லாரும் ஓடுங்கோ ஓடுங்கோ...

இளைஞன்: நிலமும் காஞ்சிக்கிடக்கிறதால எத சாப்பிடுறது என்னத்த செய்யிறதெண்டே தெரியேல்ல

சிறுமி: அம்மா அம்மா பசிக்குது.

யுவதி: அப்பு உவையளப் பாத்துக்கொள்ளுங்கோ இவள்பிள்ளைக்கு ஏதாவது சாப்பிடக் தேடிக் கொண்டுவாரன்) யுவதி வெளியேறல்(

முதியவர்: ஓம்பிள்ள தூரத்துக்கு போயிராத அறுவாங்கள் கண்ட இடத்தில நிப்பாங்கள்.

இளைஞன்: அப்பு அப்பு அந்தப்பிள்ள உதால எங்கேயோ போகுதன ..

- *செயல்*

*இளைஞன் பிள்ளையைத் தேடி வெளியேறல்*

முதியவர்: எடா ஓடடா ஓடு அதுகள் ஒண்டும் விளங்காததுகள் கெதியா ஓடு ..
(தமக்குள்) சே நாடெல்லாம் உந்த நிலையாத்தான் கிடக்கு போக்கரப் போவாங்கள் வாழவும் விடுறான்களில்ல சாகவும் விடுறான்களில்ல.

- *செயல்*

*முதியவர் மனநிலை பாதித்தவர்களுடன் அல்லாடல் உடன் பின்னனி இசை*

இளைஞன்: அப்பு இவா தன்ரபாட்டில எங்கயோ போய்கொண்டிருந்தா ஒரு மாதிரியா கூட்டி வந்திட்டன் .

யுவதி: ஒண்டும் கைக்கு கிடைக்கயில்ல முருக்கமிலைய பறிப்பமெண்டா அதுவும் காய்ஞ்சிக் கருவாடாக்கிடக்கு.

இளைஞன்: அப்பு இதென்னன இப்பிடியே வாழமுடியுமே? இதுக்கு என்னதான் வழி?

சிறுமி: அம்மா அம்மா பசிக்குது) .சிறுமி பசியால் மயக்மடைதல்

முதியவர்: எடி பிள்ள அவனப்பார் எதையோ எடுத்து தின்னுறான்.

இளைஞன்: இதென்னக்கா என்ன இறைச்சியிது?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுவதி: அப்பு ஏதோ செத்து காஞ்சிக்கிடக்கு இதப்பாருங்கோ...

முதியவர்: அங்கபார் அவள் சின்னவள் படுத்திட்டாள் என்னெண்டு பார்.

- *செயல்*

*வாங்கிப்பார்த்தல் சற்று நேரம் அதை நுணுக்கமாகப் பார்த்து, பின் மணந்துபார்த்தல் எதையோ உணர்ந்தவராய் திகைத்தல்*

முதியவர்: எடக் கோதாரி இது மனிச இறைச்சியடா .....கடவுளே!

இளை: என்னப்பு எ..எ என்ன ..மனிச இறைச்சோ? சே....

யுவதி: அப்பு இஞ்சொருக்கா வாங்கோ)...பதற்றம் (ஐயோ இதென்னக் கொடுமையப்பு ? கடவுளே ..கண்கெட்ட கடவுளே..ஏனெங்கள இப்பிடி போட்டு வாட்டுற?

முதியவர்: பிள்ள இனி அவள் பசிக்குதெண்டு சொல்லமாட்டாள்.

யுவதி: என்னப்பு சொல்லுறியள் ஆ ..ஐயொ கடவுளே? (அழுதல்)

இளைஞன்: கடவுளே பசியில துடிச்சி இப்பிடி சாகிற நிலையா எங்களுக்கு

- *செயல்*

*மூவரும் பிள்ளை பசிக் கொடுமையால் துடித்து இறப்பதை கண்டு கதறி அழுதல்*

- ❖ *பாடல்*

*ஓ மகளே நீ தான் ஐயோ மகளே நீ தான்*
*பசியினில் துடித்தையோடா*
*மகளே செல்வமகளே!*
*அம்மா அம்மாவென்று*
*(ஐயோ என்ற செல்வமே)*
*பசி பசியென்று தவித்தையோடா*
*மகளே செல்வ மகளே!*

யுவதி: அப்பு நான்னென்ன செய்வன் ஆர் பெத்த புள்ளயோ அம்மா அம்மா எண்டு கடவுளே ஏன் எங்களுக்கு இப்பிடி ஒரு சோதனை பசியொருபக்கம் பைத்தியமா சனம் ஒரு பக்கம் பாவியள் எங்கட சனத்த பச்சையா கடிச்சித் தின்னுறாங்கள் அதுகளும் மனிசர்தானே?

இளைஞன்: அக்கா அக்கா அழாதைங்கோ இந்தக் கொடுமையள இனி நாங்கள் நிப்பாட்டுறதுக்கு வழிசெய்வேணும்.

முதியவர்: ஓமடா கொஞ்சம் கொஞ்சமா இனவாத பேயள் எங்கள முழுசா திண்டுடுங்கள் இவ்வளவு நாளும் விழுந்த குண்டுகளில ஆனது இதெண்டா இனி ..இரசாயன ஆயுதங்கள வாங்கிப் போட்டாங்களாம்.

யுவதி: என்னப்பு கொஞ்சம் கொஞ்சமா கொல்லுறத விட்டிட்டு இப்ப முழுசா ஒரேயதா சாக்காட்டப் போறாங்களே?

இளைஞன்: உதுக்கு உடன வழிசெய்யவேணும் .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுவதி: எங்கட போராட்டம் உச்சத்தில இருக்கைக்க இப்பிடி பொதுமக்கள குறிவச்சிப் பழி தீர்க்கிறது எந்த விதத்தில நியாயம்?.

முதியவர்: எங்களுக்கெண்டு எந்த நாடுமில்ல நாதியுமில்ல எங்கள நாங்கள்தான் காப்பாற்றிக்கொள்ள வேணும்.

யுவதி: பட்டினியில பாதி செத்து பைத்தியமா மாறி பாதி செத்து மொத்தமா முழுசனமும் சாகிறதுக்கிடையில எங்கட சனத்த காப்பாத்தவேணும்.

இளைஞன்: வீட்டுக்கொராள் நாட்டுக்கெண்டா நாட்டில பாதி பேர் வெளிநாட்டில அவையளட்டத்தான் நாங்கள் போகவேணும்.

முதியவர்: ஓமோம் உண்மதான் ஆனா வெளிநாட்டில இருக்கிறவை உதவி செய்யாமலில்ல ஆனா பலபேருக்கு அந்த மனம் இன்னும் வரயில்ல.

யுவதி: எல்லாருக்கும் அந்த மனம் வரவேணும் இல்லையெண்டா இப்பிடி ஒவ்வொண்டா சாகிற சனங்கள மொத்தமா அவையளே கொண்டு போடட்டும்.

முதியவர்: பிள்ள அவசரப்படாத எங்கட சனங்கள் எங்கள கைவிடமாட்டினம்

- *செயல்*

*கலைஞர்கள் மேடையைவிட்டு கீழிறங்கி பார்வையாளரிடம் பணம் சேகரித்தல்.*

- *பாடல்*

*அவைதனில் வந்திருக்கும் பெரியோரே*
*எங்கள் அவலத்தைக் கண்டுணர்ந்த தாய்மாரே*
*பைத்தியமாய் பரிதவித்தோம் பார்த்து உணர்ந்தீர் இப்போ*
*வைத்தியமாய் வந்துதவும் வந்து நிற்கிறோம்.*

*வாழ்க்கையை இழந்திங்கு வருந்துகிறோம்*
*உங்கள் வருகையில் வந்து நின்று இரஞ்சுகின்றோம்.*
*தாய்மாரே தந்தைமாரே கைகொடுப்பீர்*
*தமிழர் வாழ்வுக்காய் ஒன்றாகி குரலெடுப்பீர்.*

<u>*நிறைவு*</u>



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணம்

நாடகவகை: நவீன இசை வடிவம்

களங்களின் எண்ணிக்கை: 1. களம்

திறந்தமேடை

கலைஞர்கள்

| | | |
|---|---|---|
| 1. அரசியல்வாதி | 2. கூலி 1,2,3.4 | 3. இனவாதி |
| 4. கிழவி | 5. இளைஞன் | 6. கிழவர் |
| 7. பைத்தியம் | 8. பெண் 1,2,3 | 9. ஆசிரியர் |

- செயல்

*இனவாதம் மேடைக்கு மெதுவாக வர முன்னாலும் பின்னாலும் இனவாதக் கும்பல் இனவாதத்தைப் போற்றிப் பாடி வருதல். இடையே இனவாதத்தின் கூலிகள், காணும் மக்களை வதைசெய்தல் சிலர் இனவாதத்துக்கு அடிபணிந்து இனவாதம் போடும் எச்சிலை ஏற்று அடிபணிதல்*

*இனவாத அரக்கன் தாளத்திற்கேற்ப அசைந்தாடி வர கூலிகள் பாடி வருதல்*

- *பாடல்*

*இனமழிக்க இனமழிக்க இனமழிக்க வா வா*
*இந்த மண்ணும் எங்களுக்கு என்றுரைக்க வா வா*
*தமிழினத்தை அழித்திடவே திடமெடுத்து வா வா*
*தமிழீழம் என்று சொல்வோர் தலையெடுக்க வா வா*

கூலி 1: எம்பெருமானே எமையாளும் உங்கள் பாதங்கள் தொட்டு வணங்குகிறேன். தமிழீழக் கனவை அழித்து தமிழரை வேரோடு அழிக்கும் காலம் எப்போ

கூலி 2: 30 வருடகால வரலாற்றை அழித்த இனவாதப்பெருமானே

கூலி 3: மெதுவாகப்பேசு எங்களோடு துணைவந்த நாடுகளை மறந்து விட்டாய்

கூலி 4: அவர்கள் எப்போதும் எங்கள் கூடவே வருவார்கள். ஏனென்றால் அவர்களுக்கும் தமிழரை அழிப்பதில் ஆர்வம் அதிகம்.

கூலி 1: முள்ளி வாய்க்காலோடு அடங்குவார்கள் என்று பார்த்தால்

கூலி 3: மீண்டும் சிலிர்க்கிறார்கள்

கூலி 4: விடக்கூடாது அவர்களின் உச்சியில் அடித்து

❖ *பாடல்*

*உச்சியில் அடியடா*
*ஓட ஓட அடியடா*
*மூச்சி பேச்சி இல்லாமல்*
*மண்ணுக்குள்ளே*
*போகும் வரை*
*அடியடா அடி அடி ஓட ஓட அடியடா*

இனவாதி: அவர்கள் புத்திசாலிகள் பலசாலிகள் மெல்ல மெல்ல சாகடிக்க வேணும் - வெளியேறல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*களம் மாற்றம்*

- *செயல்*

*மேடைக்கு வந்த மக்கள் தத்தம் வேலைகளில் ஈடுபாட்டுடன் நிற்றல் .பள்ளிக்கூடம் ,ஆசிரியர் கற்பித்தல் ,உழவர் உழுதல் ,நண்பர்கள் பேசிக்கொண்டிருத்தல் ,சிறுவர்கள் விளையாடுதல் .*

*பின் நிலையாக நிற்றல் சிறிது நேரத்தில் கிழவி வருதல்*

கிழவி: எட தம்பியவை இஞ்ச ஓடி வாங்கோ கெதியா ஓடி வாங்கோ

இளைஞன்: என்னன ஏன் கத்துறாய்

பெண்: உது சும்மாவே கத்திக்கொண்டுதானிருக்கும் உங்கட அலுவலப்பாருங்கோ

கிழவி: அட போக்கறப்போவாளே அவன் சுந்தரத்தின்ர மோன அவங்கள் இழுத்துக்கொண்டு போறாங்கள்

இளைஞன்: ஆரன ஆர் இழுத்துக்கொண்டு போறது

கிழவி: எங்கட உயிர எடுக்கிறதுக்கெண்டே வந்து நிக்கிற அந்தப்பாவியள்தான்

இளைஞன்: ஏன் வாறாங்கள் ஏன் சாக்கொல்லாறாங்கள்

கிழவன்: இது நல்லதுக்கில்ல அப்பப்ப அங்கயிங்கயெண்டு சனங்கள் சாகுதுகள்

பெண் 2: எல்லாரும் சாகத்தானேப்போறம்

பெண் 3: சாகிறதுகள் சாகட்டன்

சிறுமி: நானும் சாகவேணுமோ

- *செயல்*

*எல்லோரும் அசையாது நின்று அனைவரும் பாடலுக்கு ஏற்ப அசைதல், ஒன்றாக கூடுதல்*

- *பாடல்*

*பிறந்தவரெல்லாம் சாக*
*வேண்டும்*
*சாவு மட்டும்தான்*
*எல்லையில் உண்டு*

எல்லோரும்: அப்போ ஏன் பிறந்தோம் சாகவா.......வாழவா ? மரணம் யாரிடம் இருக்கிறது ? யார் எம்மீது வீசுவார் ?

- *செயல்*

*எல்லோரும் அசையாது நின்றல்*

கிழவி: ஏன் சாக வேணும்.... வாழ வேணும்
*(கிழவிக்குப்பின் ஒவ்வொருவரும் தத்தம் வசனங்களுடன் அசைதல்)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞன்: ஐயய்யோ ...சாகிறதோ எனக்குப்பயம் நான் வாழ வேணும் நான் வாழ வேணும்

பெண்: நீ வாழ்ந்து என்னத்த கிழிச்ச சாவன்..

கிழவர்: ஏய் பிள்ள என்ன பேசுறாய் உப்பிடிச் சொல்லாத

அரசியல்: பெரியோர்களே தாய்மார்களே2016 ம் ஆண்டு வரும் தேர்தலில் எனக்கு வாக்களித்தால் நான் மரணத்தோடு ஒரு உடன்படிக்கைப் பேசி கையெழுத்து வாங்கி

பைத்தியம்: ஆள் மாறீட்டுது வாக்கு மாறேல்ல... ஆள் மாறீட்டுது வாக்கு மாறேல்ல ஆள் மாறீட்டுது வாக்கு மாறேல்ல

ஆசிரியர்: பொய் சொல்லக்கூடாது எப்பவும் உண்மை பேசி மகிழ்ச்சியா வாழ வேணும் அப்பத்தான் உங்கடப்பிள்ளைகளும் நல்லவர்களாக வாழ்வார்கள்.

சிறுவன்: எப்படி நாங்கள்தானே சாகப்போறமே

கிழவர்: அதெப்படி சும்மா சாகிறது உது நடவாது உது பொய்..

பெண் 2: செத்திட்டார் செத்திட்டார்.....

கிழவி: ஆர் செத்தது ஆர் செத்தது

ஆசிரியர்: மரணம் வந்து கொண்டு போட்டுது ....மரணம் கிட்ட கிட்ட வருது....

அரசியல்: பயப்பட வேண்டாம் மக்களே ...பயம் வேண்டாம் எங்களை நம்புங்கள் எங்களுக்கு வாக்களியுங்கள் நாங்கள் மரணத்தைக் கட்டிப்போடுகிறோம் கட்டி தூக்கில் போடுகிறோம் .ஆசையோடு வந்த மக்கள் ஏமாற்றத்துடன் தலை கவிழ்ந்து திரும்புதல்

இளைஞன்: நிமிருங்கள் எழுந்திருங்கள் உறுதி பெறுங்கள்

பெண்: ஏன் ஏன் என்ன செய்யப்போறம்

கிழவர்: நான் செய்திருக்க வேண்டியத நீ செய்யப்போறாய் நானும் உன்னோட வாறன்.

பைத்தியம்: அடிச்சு விரட்டுங்கோ நல்லா அடிச்சு துரத்துங்கோ...

- *பாடல்*

*உரமான திடத்தோடு வலுவான மனதோடு*
*களமாட எழுந்திங்கு வா வா*
*புயல் காற்றாக நீ வீசி அனலாக எரித்திங்கு*
*மரணத்தை வென்றிட வா வா*

ஏனையோர்: என்ன போராட்டமா ஏன்... எதுக்கு....

பெண்: திரும்பவுமா.....

கிழவி: இருக்கிறதுகள் வாழ வேணுமெண்டா போராடத்தானே வேணும்

ஆசிரியர்: இப்படியே இருந்திட்டுப்போவம் ...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞன் 2: மரணம் எங்களட்ட வரயில்லத்தானே...

கிழவர்: வந்தால்

பெண்: வராது

சிறுமி: நாங்கள் பாவம்

இளைஞன்: ஓ உலகமே கைவிட்ட வாழ வழியற்ற பாவங்கள் நாங்கள்

அரசியல்: ஐக்கிய நாட்டுச் சபையிலே வட்ட மேசை இடையிலே பல நாட்டுத் தலைவர்கள் மத்தியிலே ஒலி வாங்கியைப் பிடித்துப் பேசினேன் போர் நடக்கும்போது மரணங்கள் தவிர்க்க முடியாதது என்று....

எல்லோரும்: பொய் இது பொய் அப்பட்டமானப்பொய் உலகம் கண்ணை மூடிக்கொண்டு பேசுகிறது நாங்கள் ஏமாளிகள் அல்ல...

பைத்தியம்: நீ நீ.... நீ எல்லாரும் சாகப்போறீங்கள் மரணம் வரப்போகிறது

இளைஞன்: வாருங்கோ ...எல்லாரும் ஒண்டா நிப்பம்....மரணத்தை எங்கள் மேல் ஏவி விட்டிருக்கினம்

ஆசிரியர்: வரலாறுகளில் அப்படி பல முறை நடந்திருக்கு இது இன அழிப்புதான்....

கிழவி: என்ர குஞ்சுகள் 30 வருசமா போராடி தனிச்சு வாழ்ந்த எங்கள அறுத்து போட்டாங்கள்

பெண் 2: ஓ இப்ப நாங்கள் சேர்ந்து நிப்பம்

- *செயல்*

*எல்லோரும் கை கோர்க்க முனைய மரணம் உடன் கூலிகள் அரசியல் வாதி இணைந்து ஆடி வருதல்*

- *பாடல்*

*மரணம் மரணம் நான்தான் மரணம்*
*மரணம் மரணம் நான்தான் மரணம்*

*உலக மொத்த நாடுகளும்*
*உங்கள் மேல பழிய தீர்க்க*
*கூடிக் கூடிப் பேசி என்னை*
*உயிரெடுக்க அனுப்பி வைத்த*

*மரணம் மரணம் நான்தான் மரணம்*
*தமிழரென்ற உங்களை நான்*
*தவிடு பொடி ஆக்கி விட்டு*
*இனமழித்த மரணம் என்று*
*இவ்வுலகில் பதிவு செய்ய*
*பல நாடுகள் விதந்துரைத்த*
*பலசாலி மரணம் நானே*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- *செயல்*

*மக்கள் மரணத்தின்பால் சிக்குண்டு மாய்தல், எழ முயலல், சிதைந்தோடல் மக்கள் வீழ்ந்து விட்டப்பின் இனவாதம் ஈழக்கனவை சிதைத்தல். (ஈழம்போன்ற அமைப்பை உடைத்தல் அல்லது இடித்தல் காட்சி)*

*களம் மாறுகிறது*

பெண்: ஐயோ என்ர கடவுளே ....இனி இங்க இருக்க முடியாது. (*தொலைப்பேசியில்)* கலோ..... கலோ..... நான் கதைக்கிறன் நான் அங்க வரப்போறன் உடன என்ன வெளிய எடுங்கோ....

இளைஞன்: என்ன வடிவா கேக்கயில்ல கொஞ்சம் சத்தமா சொல்லுங்கோ....ஐக்கிய நாடுகள் சபையில.. சே... சே... அப்படியொண்டுமில்ல... அது இயற்கை மரணம் 2 பேர் செத்தவையள்

ஒருவர்: ஓமோம் ஒருதர் இயற்கையாய் செத்தவர் மற்றவர் சும்மா செத்தவர் .எங்களுக்கு ஒரு பிரச்சனையும் இல்ல

கிழவர்: கோடரிக் காம்புகள் ...உதுகள் இருக்குமட்டும் நாடெங்க ஒன்றும்

இளைஞன்: உதுக்காகவே அத்தனை மாவீரர்கள இழந்தம் எத்தனை தியாகங்கள் எத்தனை இழப்புகள்...

பைத்தியம்: நாடில்ல வீடில்ல பிச்சதான் வேணும் பிச்சதான் வேணும்

பெண் 3: அடிமையாப் பிறந்து அடிமையா சாகிறம் எங்களின்ர தலைவிதி....

இளைஞன்: யார் சொன்னது காலம் காலமா அடிமையா இருந்து சாகிறத விட போராடி சாகிறது மேல்

சிறுவன்: நான் அவங்கள அடிக்கப்போறன்...

கிழவி: இஞ்ச ஆரும் சும்மா சாகத்தேவையில்ல ஒத்துமையா ஒரு மனமா எல்லாருமா நிண்டா எதையும் சாதிக்கலாம்

அரசியல்: வாய மூடிக்கொண்டு சும்மா இருங்கோ.... அவர் வந்தா இருக்கிறவையும் இல்லாமல் போவீங்கள் நான் இப்ப வெறும் ஆளில்ல இராச மந்திரி....

பைத்தியம்: களை பிடுங்கினாத்தான் பயிருக்கு நல்லது... களை பிடுங்குங்கோ...

இளைஞன்: ஆமாம் எல்லாம் செய்யவேண்டும் தமிழன் ஒருதன் உயிரோட இருக்கும் வரையில் தமிழீழக்கனவு அழியாது

ஆசிரியர்: உரிமை வேண்டுமென்றால் உணர்வோடு வாருங்கள்.

அரசியல்: நீங்கள் சத்தம் போட்டு பேசினதால அழியப்போறீங்கள் செத்து தொலையுங்கள்....

- *செயல்*

*இனவாதம் கோபத்தோடு வருதல்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ *பாடல்*

*அடித்தடித்து அழுத்தினாலும்*
*எழுந்திடத்தான் துடிக்குதோ*
*பொடிப்பொடியாய் நசுக்கினாலும்*
*போராடத்தான் துடிக்குதோ*
*முடிவெடுத்தேன் உங்களை நான்*
*முற்றாகத்தான் அழித்திட*
*பழியாகப் போறீர்கள்*
*பதறுகளே சின்னப் பதறுகளே....*

❖ *பாடல்*

*மக்கள்:* *வீழ்வதற்கு பிறப்பதில்லை உயிரினங்கள்தான்*
*வாழ்வதற்குப் பிறந்த நாங்கள் போராடுவோம்*
*சத்தியத்தைக் கற்றுத்தந்தார் எந்தலைவர்தான் அவர்*
*மூச்செடுத்து வந்துவிட்டோம் அழிவுனக்குத்தான்.*

- *செயல்*

*மக்கள் ஈழத்தை கட்டியமைக்க முயலல்*

அரசியல்: ஐயோ... கடவுளே ஐரோப்பா அமரிக்கா கனடா எண்டு உவங்கள் அவங்கட பாராளுமன்றத்துக்குள்ளயே போக வெளிக்கிட்டிட்டாங்கள்...

பைத்தியம்: சத்தியம் தோக்காது விடுதலை நெருப்ப மூடிவைக்க முடியாது.

*<u>நிறைவு</u>*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகுடம்

நாடகவகை: சரித்திர நாடகம்

களங்களின் எண்ணிக்கை: 6

மேடை அமைப்பு இரு வேறு அரச அவைக் காட்சிகள், நந்தவனக்காட்சி

| | | | | |
|---|---|---|---|---|
| கலைஞர்கள் | 1. வீரன் 1,2,3, | 2. தளபதி | 3. மன்னன் | 4. ஒற்றன் |
| | 5. தமிழகை | 6. மந்திரி | 7. புலவர் | 8. எழிலி |
| | 9. தென்னவன் | 10. தூதன் | 11. தளபதி 2 | 12. அரசன் |

மன்னன், மந்திரி படைத்தலைவர் போன்றோர் அமரத்தக்க வகையில்அரியணைகள், கொடி, குடை இருக்க காவலாளிகள் காவல் புரிய காட்சிப்படுத்தல். இந்நாடகத்தில் இரண்டு நாட்டு அரசர்களின் அரசவைக்காட்சி இடம்பெறுகிறது. முதலாமவது அரசவைக்காட்சியானது ஈழமன்னை நினைவிருத்தியும் இரண்டாமாவது சிங்கள அரசிரின் அரசவையை நினைவிருத்தியும் அமைத்தல் சிறப்பு. தளபதி 2 தமிழ்தேசத்தில் இருந்துகொண்டு அயல்நாட்டு அரசனோடு இணைந்து செயற்படும் துரோகி ஆகும்.

*களம்- 1 ஈழவர்களின் அரசியல் அரசவை*

- செயல்

*திறந்த அரசவை மேடையில் மந்திரி வீரர்கள் அமர்ந்து இருக்க மன்னர் வருகை.*

வீரன் 1: எழுகின்ற கதிர்போலும் இயைகின்ற தமிழ் காக்க வலுகொண்டெ ழுந்திட்ட வள்ளலே வருக.

வீரன் 2: புவியாண்ட தமிழ் ஒளிர புயலாக எழுந்து புது. உயிர் கொடுத்த உத்தமனே வருக.

தளபதி: சீர்கொண்ட தமிழ் காக்க சீரான படைகொண்டு இனங்காக்க வந்தவனே வருக.

மன்னன்: வாழ்க நாடு வாழ்க மக்கள் வாழ்க தமிழ் வாழ்க வாழ்க அனைவரும் வருக. அமர்க

- *செயல்*

*மன்னன் அமர மற்றவர்களும் மரியாதையோடு தத்தம் இருக்கைகளில் அமர்தல்*

மந்திரி: மாமன்னா மாற்றாரின் இடிபோலும் அழுத்தத்தால் அடி மெலிந்த தமிழ் தன்னை முடி கொண்டு ஆள விடியல் தந்த தங்களை நட்புடை நாட்டு அரசுகளும் மாந்தரும் வாயார வாழ்த்தி மனநிறைவோடு வாழ்த்துகிறார்கள்.

மன்னன்: அப்படியா அந்த வாழ்த்துகள் எமது மண்ணுக்கும் அதைக்காக்கும் வீரர்களுக்கும் நிறைவோடு அமையட்டும்.

தமிழகை: அகந்திறந்தெங்கள் வீரத்தை வினையாக்கி பாருக்கே பாவையரின் வலிமைதனை சீர்செய்து காட்டியவரே வணக்கங்கள்.

மன்னன்: வணக்கம், வணக்கம் .தமிழகை பெண்ணினத்தின் வீரத்திலகம் நீர், வாழ்க.

வீரன் 2: மாமன்னா வளம்மிகுந்த எம் மண்ணின் மீது அயல் நாட்டு மன்னனின் பார்வை பதிந்திருக்கிறது போலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரி: ஆமாம் மன்னா ! அயல் நாட்டு ஒற்றர்களின் நடமாட்டம் மிகுந்திருப்ப தாகத்தான் அறிகிறேன்.

வீரன் 1: வந்தேறு குடிகளாக வந்தவர்கள் .வஞ்சகமாக வலை விரிக்கிறார்கள் கயவர்கள்.

புலவன் : ஊழிக்காடி கூலிக்கோடி மலிந்தனன்.
மார்பிலா அயலான் எங்கள்
வேலிதாண்டி வருவானோ வந்தினன்.
வேருக்கே வினை படுமென
விட்டோடிப் போலனே.

மன்னன்: ஆகா அருமை அருமை . உண்மை புலவரே! ஆனால் எங்கள் தாய் மண்ணில் அயலவன் காலூன்றத்தானே அயலவன் அடம் பிடிக்கிறான்.

தளபதி: மாமன்னா அவனது கொட்டத்தை அடக்க எனது படை வீரர்களும் நானும் சென்றாலே போதும். ஆம் என்று ஒரு வார்த்தை கூறுங்கள் வெற்றியை சித்தமாக்குகிறேன்

மன்னன்: தளபதியாரே !சற்றுப்பொறுங்கள் .எமது அவசரம் எதிரிக்கு பலமாகி விடும்.

மந்திரி: எமது மண்ணை கையாடுவதில் அவனுக்கு பேருவகை போலும். மன்னனா அவர்களை அப்படியே விடுவது நல்லதல்ல. உடனடியாக நாம் போர் தொடுத்தே ஆக வேண்டும்.

வீரன் 1: எமது வலிமையைக்காட்டி இனி யாருமே தமிழர் மீது படை தொடுக்க நினைப்பதையே தகர்த்தெறிதல் வேண்டும்.

புலவர்: மன்னனின் கூற்று சரியானதே .சிந்தித்து செயற்படல் சாலவும் நன்று.

தமிழகை : தமிழரை யாரும் இழிவாக நினைத்திடக் கூடாது அதற்கு நாம் அனுமதிக் கவும் முடியாது.

மன்னன் : தமிழகை எங்கே அழைத்து வாருங்கள் அவனை.

- செயல்

*தமிழகை ஒரு ஒற்றனை அழைத்து வருதல் .அவையோர் ஆச்சரியப் படுதல்.*

மந்திரி: மன்னா யாரிவன் தூதுவனா? ஒற்றனா?

மன்னன்: நயவஞ்சகமாக எமது மண்ணை ஆக்கிரமிக்க அடித்தளமிட்டுக் கொண்டிருக்கிறான் அயலவன். அவனுக்கு மறைமுகமாக இருந்து வேவு பார்ப்பவன் இல்லையா தமிழகை?

தமிழகை : ஆமாம் மன்னா .பல்வேறு வேடங்களில் திரிந்த ஒற்றன்.

தளபதி: ஒற்றனா இவன்? மன்னா உத்தரவிடுங்கள் உடனே சிரசறுத்து சின்னா பின்னமாக்கி விடுகிறேன்.

மந்திரி: சிங்கத்தின் குகைக்குள் சிற்றெலிகளின் ஒய்யாரமாகண்ட துண்டமாக வெட்டியெறிய வேண்டும் இவர்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றன்: மாமன்னா. நான் ஒற்றன் தான்.

தளபதி : மன்னா அவனை பேச விடுவதே தவறு .தலையைக் கொய்தெறிய வேண்டும்.

மன்னன் : சற்றுப்பொறுங்கள் .அவன் பேசட்டும் .ஒற்றனே நீ சொல்ல வந்ததைச் சொல்.

ஒற்றன்: மன்னா நான் எனது அரசின் கட்டளையை செய்ய வந்தவன். ஆனால் இந்த மண்ணிலே உள்ள வீரர்களின் நேர்மையும் தம் தாய் மண்ணின் மீது அவர்கள் கொண்டுள்ள பற்றும் என்னை பாதித்திருக்கிறது.

தளபதி: ஆகா அருமை .அருமையான நடிப்பு .ஒற்றனுக்கு உயிர் ஆசை வந்துவிட்டது.

வீரன் 2: மன்னா இவனது வார்த்தைகளை நம்பாதீர்கள்.

மன்னன்: அமைதியாக இருங்கள் .என்ன தான் சொல்கிறான் என்று கேட்போம். நீ சொல்.

ஒற்றன்: அரசே நீர் வளம் நில வளம் அதற்கீடாக நேர்மையும் நீதி ஆட்சியும் மனிதர்களை நேசிக்கும் உங்கள் நேயமும் என்னைக் கவர்ந்தது.

மன்னன் : வீணான புகழாரம் வேண்டாம் .விடயத்தைச்சொல்.

ஒற்றன் : மன்னிக்கவும் மாமன்னா சத்தியத்தை தான் பேசுகிறேன்.

புலவர்: மன்னருக்கு புகழாரம் பிடிக்காது .விடயத்தை மட்டும் விளக்கமாகச்சொல்.

ஒற்றன் : எங்கள் மன்னர் பெரும் பேராசையால் போராடத் துடிப்பதை தவிர்ப்பதற்காக நான் பலவும் முயன்றிருக்கிறேன்.

மந்திரி: அப்படியென்றால் நீ உனது நாட்டிற்கு துரோகம் செய்கிறாய் இல்லையா?

தளபதி : ம்.....வேவு பார்க்க வந்தவனுக்கு விருந்து படைக்க வேண்டுமா?

மன்னன்: தளபதியாரே ! பொறுமை காருங்கள்.

ஒற்றன்: மன்னா தயவுசெய்து என்னை நம்புங்கள் .நான் ஒற்றன் தான் ஆனால் இந்த மண்ணுக்கு நான் வஞ்சகம் செய்யவில்லை.

மன்னன் : அப்படியா? தளபதி, தமிழகை அந்த ஒற்றனை விட்டு விடுங்கள் .ஓடித்தப்பட்டும்.

தளபதி: மன்னா !எதிரியை தன்னிச்சையாக போக விடுவது ஆபத்தானதல்லவா?

மன்னன்: தளபதியாரே !அச்சம் வேண்டாம் .அவன் தமிழகையின் பார்வைக்குள் தான் இருப்பான் .மந்திரியாரே! நான் படைப்பலங்களைப்பார்வையிட்டு வருகிறேன்.

*களம் 2*

*ஈழவர் அரசமைப்புக்குள் இருக்கும் ஒரு பூஞ்சோலை* (நந்தவனத்தில் காதலர் சந்திப்பு)

தென்னவன்: அள்ளி எடுத்தென் அகம் தொட்டு நுகர
கிள்ளி எடுக்கட்டுமா அல்லி மலரே!
சொல்லிப்போவாயோ? எள்ளி நகைப்பாயோ.
கள்ளியென் கயலே காவியத்தின் அழகே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழிலி: ம்....கூம்....இந்த மலர்ச்சோலையில் அல்லி மலரில்லையே கவிஞரே!

தென்னவன்: என் அல்லி மலர் நடமாடும் அழகு மலர் என்னைக் கவர்ந்த மலர்.

எழிலி: ஓகோ அப்படியா? நல்லது .பார்த்து கவிஞரே! மரம், செடிகளும் கூடவே வரலாம்.

தென்னவன்: எழிலி உன் பேச்சில் உன் அழகில் எனக்கு எல்லாமே மறந்து போகிறது.

எழிலி: வீரரே !ஒற்றர்களின் நடமாட்டமும், எதிரியின் போர் வெறியும் தினம் தினம் எம் காதுகளில் படுவதை அவதானிக்கிறீர்களா?

தென்னவன்: ஆமாம் எழிலி அறிகிறேன் .என்னை தவறாக எண்ணுகிறாயோ.

எழிலி: என்ன சொல்லுகிறீர்கள் .புரியவில்லை.

தென்னவன்: நான் நாட்டை மறந்து உன் மீது காதலில் விழுந்து கிடக்கிறேன் என்று எண்ணுகிறாயோ?

எழிலி: இல்லை .இல்லை .நான் அப்படிச் சொல்லவில்லை உங்கள் அன்பின் நிறைவைப் பெற்றவள் நான். எங்கே நாங்கள் பிரிய.

தென்னவன்: எழிலி அப்படிச்சொல்லாதே .போர் முரசு எப்போது கொட்டும் எனக்காத் திருக்கிறேன். வஞ்சகனை நொடியில் சிதைத்து விட்டு வந்து உன் கழுத்தில் மாலை சூடுவேன்.

ஒற்றன். மன்னிக்கவும் வீரரே .வணக்கம் தாயே.

தென்னவன்: யார் நீர்? எதற்காக வந்தீர்?

ஒற்றன்: நான் ஒரு ஒற்றன்.

தென்னவன்: ஒற்றனா ? எந்நாட்டு ஒற்றன்?

ஒற்றன்: பதட்டம் வேண்டாம் வீரரே .தாங்கள் என்னை மன்னரை சந்திப்பதற்கு வகை செய்வீர்களா?

எழிலி: ஏன் ? எதற்காக? மன்னரை சந்திக்க வேண்டும்?

தென்னவன்: நீர் ஒர் ஒற்றன். நீர் என்னோடு பேசிக்கொண்டு இருப்பதே அதிகம். மன்னரை சந்திக்க வேண்டுமா என்ன விளையாடுகிறீரா?

தமிழகை: யார் விளையாடுவது ? தென்னவனா? நீயா எழிலி

எழிலி: வாருங்கள் தமிழகையாரே வாருங்கள் .என்ன இந்தப் பக்கம்?

தமிழகை: போர் முரசு கொட்டப் போகிறார்கள் .காதலியின் கருவிழிக்குள் வசப்பட்ட உங்களுக்கு கேட்கிறதா என்று பார்க்க வந்தேன்.

தென்னவன்: ஆகா அருமை .தமிழகை அவர்களே காதல் எங்களுக்கு இருக்கலாம். ஆனால் எங்கள் காதல் இந்த மண் மீதும் எங்கள் தமிழ் மீதும் என்பதை அறியீர்களோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகை: உங்கள் வீரத்திற்கும் ஒப்புமையற்ற தேசப்பற்றிற்கும் முன்னால் நான் சிறு துரும்பு சும்மா விளையாட்டாகக் கூறினேன்.

எழிலி: தாங்கள் வீரத்தளபதி உங்கள் தியாகத்திற்கேற்ப எங்கள் உயிர் உடல் எண்ணம் அனைத்துமே இந்த மண்ணுக்காகத்தான்.

ஒற்றன்: ஆமாம் மாற்றான் மண்ணுக்காக ஆசைப்படாத சுதந்திர வீரர்கள் நீங்கள் உங்கள் தியாகமும் அறமும் நிச்சயம் வெல்லும்.

தமிழகை: சரி நான் இவரை மன்னரிடம் அழைத்துச் செல்கிறேன். நீங்கள் பேசி விட்டு வாருங்கள்.

தென்னவன்: ஆகட்டும். இதோ சற்று நேரத்தில் வந்து விடுகின்றோம்.

எழிலி: அமைதியாய், செழிப்பாய் இருக்கும் .எமது மண்ணுக்குள் எதிரிகளின் அடாவடித் தனங்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன.

தென்னவன்: எழிலி வஞ்சகனை எதிர்த்து எம் மண்ணைக் காப்பதில் உறுதியோடும் உளத்தென்போடும் போராடுவோம்.

எழிலி: தமிழன்னை நம்மோடு துணையிருப்பாள்.

தென்னவன் : எழிலி போர்க்களத்தில் நான் வீரமரணம் அடைந்து விட்டால் நீ.....

எழிலி: அடைந்தால் வெற்றி .இல்லையேல் வீரமரணம். உங்களோடுதான் இந்த எழிலி. வாழ்விலும் சரி மரணத்திலும் சரி.

தென்னவன்: ஆமாம் எழிலி .எண்ணங்கள் வலியைத்தருவன வா செல்வோம்.

*களம் 3*
*சிங்களவர்களின் அரசியல் அரசவை*

அரசன்: (மேடையில் எதிர்பார்ப்புடன் நடமாடிக்கொண்டிருத்தல்)

தூதன்: மகாபிரபு மன்னிக்கவும். வருகின்ற வழியில் சிறு தடங்கல்.அது தான் தாமதம்.

அரசன்: பரவாயில்லை. இதற்கெல்லாம் காத்திருப்பது சிரமமில்லை. சரி காரியம் என்னவாயிற்று.

தூதன்: பிரபு வடபுலத்து மன்னர்களில் அதிகமானோர் நம் பக்கம் தான் நிற்கிறார்கள். ஆனாலும்....

அரசன்: என்ன ஆனாலும்.... யாரேனும் எம்மை எதிர்ப்பார்களா?

தூதன்: இல்லை பிரபு.வடபுலத்தின் பெரும் இராச்சியத்தில் உள்ள தமிழர்கள் கொதித்தெழுந்தால் எமது நாடோ நாமோ கதியில் சின்னாபின்னமாக்கப் படுவோம். அதன் தாக்கம் வடவரின் இராச்சியத்தையே அழித்து விடும் என்று தான்.

அரசன்: (கை கொட்டிச்சிரித்தல்) இதற்காகவா இந்தப்பூடகம். நீ அதைப்பற்றி யோசிக்காதே.தென்னகத்து மன்னன் வடவரின் கைப்பிள்ளை தன் இனத்தையே விற்கத் தயாராக இருக்கின்றான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூதன்: அப்படியென்றால் வெற்றி எமக்கே. எம்மைச்சுற்றி உள்ள அரசர்கள் எம்மோடுதான் கை கோர்ப்பார்கள்

.

அரசன்: ஆமாம். ஆனால் மிகவும் வலிமைமிக்கப்படை ஈழ மன்னரிடம் உண்டு முதலில் நாம் அதை உடைத்தாக வேண்டும்.

ஒற்றன்: மன்னிக்கவும் மகாபிரபு. நானும் வரலாமா?

அரசன்: ஆகா. வா வீரனே வா. எப்படி இருக்கிறாய்?

ஒற்றன்: தங்கள் கருணை என் பாக்கியம் பிரபு.

அரசன்: சரி. எப்படி உன் நிலைப்பாடுகள் . ஈழதேசத்தின் வாசமெப்படி?

தூதன்: வேவு பார்ப்பதிலும் வெற்றிக்கு வழிசமைப்பதிலும் வல்லவராய் இருப்பவர் தாங்கள் தானோ?

ஒற்றன்: இல்லை. ஒரு நாட்டைக் கட்டிக்காப்பதில் ஒவ்வொரு குடிமகனுக்கும் பங்கு இருக்கிறது.அதில் எனது பங்கு மிகச்சிறியது.

அரசன்: ஆகா மகாவீரனே உனது தன்னடக்கம் பாராட்டத் தக்கது.சரி விடயத்தைக்கூறு.

ஒற்றன்: பிரபு நான் ஈழதேசத்தில் சிறைப்பிடிக்கப்பட்டிருந்து தான் வருகிறேன்

அரசன்: என்ன சிறைப்படுத்தப்பட்டாயா? அப்படியாயின் நீ தப்பிவர வாய்ப்பேயில்லையே.

ஒற்றன்: ஆமாம் பிரபு. ஈழத்து மாமன்னன் வாழ்வளித்து அனுப்பி விட்டார்.

தூதன் : ஈழத்தேச மன்னன் சிறைப்படுபவர்களை பெருமனத்தோடு மன்னித்து விடுவாராம்.

அரசன்: நிறுத்து . அவனைப்பற்றி என்ன புகழாரம்? போதும் விடயத்திற்கு வா.

ஒற்றன்: மன்னிக்கவும் பிரபு. அங்கிருக்கும் சூழல் எமது படை பலத்திற்கு பெரும் சேதத்தைத்தான் ஏற்படுத்தும்.

அரசன்: என்ன பிதற்றுகிறாய்?

ஒற்றன்: உண்மை பிரபு. அங்கிருந்து மக்கள் நாம் போர் தொடுத்தால் கிளர்தெழுந்து போர்த் தொடுக்க ஆயத்தமாகவிருக்கிறார்கள்.

தூதன்: அப்படியென்றால் எமது பலம் போதாதா.

ஒற்றன்: போதாது பிரபு. ஈழத்தேசத்து வீரர்கள் பராகிரமத்திலும் பகைவரை பந்தாடுவதிலும் மிகச்சிறந்தவர்களாக உள்ளார்கள்.

அரசன்: என்ன வேவு பார்க்க போனாயா? அல்லது அந்தத் தமிழர் கூட்டத்தைப்பற்றி புகழாரம் சூட வந்தாயா?

தூதன் : கைதானவர் விடுதலை செய்யப்பட்டார் அத்தோடு விலைப்பட்டாரோ?

ஒற்றன்: என்ன பேசுகிறாய்? சிந்தித்துப்பேசு.வீணாக நாம் எமது படைவீரர்களையும் படைக்கலங்களையும் இழக்க நேரிடும். அப்பாவி மக்கள் பலியாவார்கள்.

அரசன்: ஓகோ போருக்குப் பயந்து உன்னை தூது அனுப்பி உள்ளானோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றன்: பிரபு நான் சொல்வதைக் கேளுங்கள்.

அரசன்: நீ யார் எனக்குச் சொல்வதற்கு? பாதகனே ஒற்றனாய் சென்று அவர்களோடு ஒட்டிக்கொண்டாயோ? உன்னை கண்டதுண்டமாக வெட்டியெறிய வேண்டும்.

தூதன்: மகாபிரபு! யாரோ வருவது போல் தெரிகிறது.

அரசன்: இவனை இழுத்துச்செல்.

தூதன்: ஆகட்டும் பிரபு.

தளபதி 2: என்ன மன்னரே கோபத்தில் முகம் சிவந்து கிடக்கிறது?

அரசன்: வாருங்கள் தளபதியாரே வாருங்கள் நலமாக இருக்கிறீர்களா?

தளபதி 2: நலத்தில் குறையில்லை. உங்கள் கடைக்கண் பார்வை பட்டாலே போதும்.

அரசன்: அச்சம் வேண்டாம். எதிர் கால ஈழத்தேசத்தின் அதிபதி நீங்கள் தான். உங்கள் கனவு நனவாக ஒரு காரியம் ஆக வேண்டும்.

தளபதி 2: என்ன சொல்லுங்கள்? ஈழத்தின் மகுடம் எனக்கு கிடைப்பதற்காக நான் எதையும் செய்வேன் சொல்லுங்கள்.

அரசன்: உங்கள் மன்னர் ஒரு புதுப்படைப்பலத்தை உருவாக்கியிருப்பதாக அறிந்தேன். நீங்கள் அது பற்றி கூறவில்லையே.

தளபதி 2: அதுவா விடயம்? அதைப்பற்றி கவலை வேண்டாம். அது எனது பார்வையில் தான் இருக்கிறது.

அரசன்: சரி வாருங்கள். ஈழமண்ணின் மாமன்னரே உங்களுக்காக ஒரு விசேட களியாட்ட நிகழ்வு காத்திருக்கிறது.

தளபதி 2: என்னை இப்போதே மன்னனாக்கிவிட்டீர்கள் பிரபு.

அரசன்: இன்னொரு சிலநாட்களில் தாங்கள் தானே மாமன்னர். நான் இப்போதே ஆசையோடு அழைக்கின்றேன். தவறில்லையே

தளபதி 2: உங்கள் சித்தம் என் பாக்கியம்.

அரசன்: உங்களுக்காக வகைவகையான மதுக்களும் மாதுக்களும் காத்திருக்கின்றன வாருங்கள்.

*களம் 4*
*ஈழவர்களின் அரசியல் அரசவை*

தமிழகை: மந்திரியாரே! எம்மைச்சுற்றி பெரும் சதி நடந்து கொண்டிருக்கிறது.

வீரன்: எங்கள் மன்னரின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம்.

எழிலி: ஆமாம். எமது வலிமையை வளத்தைக்கண்டு சிங்கள அரசோடு பல நாட்டரசுகள் கூட்டுச்சேர்திருக்கின்றன.

தென்னவன்: இரகசியமாக தமது படைப்பலங்களை நகர்த்திக் கொண்டிருக்கின்றன.

தமிழகை: நேரடியாக போர்தொடுக்கமுடியாத கோழைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரி: உண்மைதான். நாம் உடனடியாக செயற்பட வேண்டும்.

எழிலி: எமது தளபதியாரை அடிக்கடி காணமுடியாது உள்ளது கவனித்தீர்களா?

மந்திரி: அவர் எமது படைகளுக்கு பயிற்சி அளித்துக்கொண்டிருக்கின்றார்.

வீரன்: அமைதி மன்னர் வருகிறார்.

மந்திரி: மன்னா என்ன ஆழ்ந்த யோசனையில் இருக்கின்றீர்கள்?

மன்னன்: எமது மக்களை காப்பாற்றியாக வேண்டும்.

- *செயல்*

*அவ்வேளை காயப்பட்டு இயலாத நிலையில் ஒற்றன் வந்து மன்னர் முன் விழுகிறான். அவனை வீரர்கள் பிடித்து நிறுத்த முயற்சித்தல் ஒற்றன் உயிரிவிடும் நேரம் தன் கருத்தை கூறுதல்*

ஒற்றன்: மன்னா... ஆபத்து. பல நாட்டு படைகளைத் திரட்டி எமது மன்னர் இரகசியமாக உள் நுழைந்து விட்டார். மக்களை கொடூரமாகத் தாக்கி அழிக்கிறார்...

மன்னன்: நண்பனே என்ன சொல்கிறாய்?

ஒற்றன்: ஆமாம் நல்லவர்கள் வாழ வேண்டும். தளபதி.....உங்கள்..... தளபதியின்.......

மன்னன்: ஆ.....மனிதர்களை கொன்று புசிக்கும் காட்டேரிகளில் ஒரு வைரமணியா ? நண்பனே! உனக்கு வீர வணக்கங்கள் .சரி துரிதப்படுத்துங்கள்

எல்லோரும்: வெற்றி அல்லது வீரமரணம்.

மன்னன்: எமது மண்ணுக்காகவும் இனத்தின் விடியலுக்காகவும் போராடுவோம்.

- *செயல்*

*அனைவரும் போராட்டத்திற்குப் புறப்பட்டுச் செல்லுதல்*

*களம் 5*

*போரின் பின் சிங்கள அரசன் தளபதி 2 உட்பட ஈழமண்ணில் நின்று பேசுதல்.*

அரசன்: என்ன தளபதியாரே! ஈழதேசத்தை காப்பாற்றி விட்டோம். இனியென்ன?

தூதன்: மக்களை அழித்தாயிற்று இவர் யாரை வைத்து ஆட்சி செய்யப் போகிறார்?

தளபதி 2: பிரபு மகுடத்தைக் காணவில்லையே? ஆ... அதோ... மகுடம்....

அரசன்: மக்களே இல்லை. மகுடம் எதற்கு தளபதியாரே?

தூதன்: மன்னரைக் காணவில்லை. மகுடம் மட்டும்தான் இருக்கிறது.

தளபதி 2: என்ன மன்னரைக் காணவில்லையா? நீயென்ன பிதற்றுகிறாயா? தேடிப்பார்.

தூதன்: என்ன? நான் தேடிப்பார்ப்பதா? என்ன நினைத்துக் கொண்டாய்?

அரசன்: தளபதி! நீ இந்த மகுடத்தைச்சூடிக் கொள்ளலாம். ஆனால் நீ எங்களுக்கு இணையாக முடியாது.

தளபதி 2: என்ன சொல்கிறீர்கள்? என்னை வாயாரப்புகழ்ந்து வானுயர உயர்த்தினீர்களே உங்களுக்கு நிகராக என்னையும்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன்: உண்மை. ஆனால் அதை மறந்து விடு. நாங்கள் கொடுப்பதை வாங்கிக்கொள். போடுவதைப் பெற்றுக்கொள்.

தூதன்: ஆமாம். நீ இல்லையென்றால் என்ன? உன்னைப் போல் உன் இனத்தை விற்றுப் பிழைக்க உன்னைப்போல் பலர் காத்திருக்கிறார்கள்.

தளபதி 2: ஆகட்டும் மகாபிரபு. ஆகட்டும் தூதரே. எனக்கு மகுடம் சூட்டுவது?

அரசன்: சரி ஏற்பாடு செய்கிறேன்.

- *செயல்*

*அரசனும் தூதனும் இரகசியமாகப் பேசிக்கொள்ளுதல்*

தூதன்: அரசே... பாருங்கள் இந்த மகுடத்திற்காக தன் இனத்தையே காட்டிக் கொடுத்த வனை. இவனுக்கு வெட்கமில்லையா.....

அரசன்: ஈழ மன்னன் இறந்துவிட்டதாக நாடு முழுவதும் அறிவிக்கச்சொல்... உதவி செய்த மன்னர்களுக்கு பிரமாண்டமான விருந்துக்கு ஏற்பாடு செய்...

தூதன்: ஆகட்டும் அரசே உத்தரவு... இவனை.... இப்படியே விடுவதா....

அரசன்: அவன் மகுடம் தலைக்கு ஏறுமுன்னே அவனது மக்கள் அவனை அடித்துக் கொல்வார்கள்...

*களம் 6*

*தளபதி 2 தனக்குத் தானே மகுடம் சூட்டும் போது ஒரு சிறுவன் கல் எடுத்து எறிகிறான். எல்லோரும் தேடிப்பார்த்து யாருமில்லை எனப்புறப்பட சிறுவன் துடிப்போடு எழுகிறான்*

*<u>நிறைவு</u>*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன்

நாடகவகை: நவீனக் கூத்து

களங்களின் எண்ணிக்கை: 1. களம்

திறந்தமேடை

கலைஞர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. உரைஞர் 1, 2 | 2. மன்னன் | 3. மகாராணி | 4. காதலன் |
| 5. காதலி | 6. இளைஞன் | 7. தோழன் | 8. காவலர் 2 |

*களம் 1*
*கட்டியக்காரர் வந்து அவைக்குக் கட்டியங்கூறல்*

- *பாடல்*

*வந்தனம் வந்தனம் வந்தனமே இங்கு*
*வந்தவர்க்கெல்லாம் வந்தனமே*
*வந்தனம் வந்தனம் வந்தனமே இங்கு*
*வந்தவர்க்கெல்லாம் வந்தனமே*

*தந்தனம் தந்தனம் தந்தனமே கட்டி*
*கதை பொழிவில் தந்தனமே*

உரை: அவையோரே அரங்கமர்ந்திருந்து எங்கள் ஆட்டக்கூத்தை காண ஆவல் கொண்டிருக்கும் பெரியோர்களே பெற்றோர்களே நண்பர்களே கலா இரசிகர்களே

- *பாடல்*

*கட்டிக் கட்டிக் கதைக் கூறவந்தோம்*
*கட்டியங்கூற நானும் வந்தேன்*
*இற்றைக்கால நிகழ்வதனை நாம்*
*பற்றிக்கதைக் கூறவந்தோம்.*

உரை: நாடு அதை நாடு வீடு பெரிதெனின் நாடு அதனிலும் பெரியது. ஆகவே நாடு அதை நாடு

- *பாடல்*

*நாட்டைக்காக்க வீட்டை விட்டுப் போகும் வீரனே*
*நட்புறவு விட்டு நாடு காக்கும் வீரனே*
*பட்டம் பதவி சுற்றம் உற்றம் கட்டுகளில்லா*
*ஏற்றம் நாடே எந்தன் மண்ணே என்றுப் போவோனே*

உரை: நாங்கள் ஒப்பற்ற ஓர் இனத்தின் முகங்களைக் கொண்டவர்கள். அந்த முகங்களின் சுவடுகளில் எழுந்த ஒரு பதிவு இந்த நவீனக்கூத்து ஏற்றமைக எமதருமை மக்களே

- *பாடல்*

*வந்தனம் வந்தனம் வந்தனமே இங்கு*
*வந்தவர்க்கெல்லாம் வந்தனமே*
*வந்தனம் வந்தனம் வந்தனமே இங்கு*
*வந்தவர்க்கெல்லாம் வந்தனமே*

*தந்தனம் தந்தனம் தந்தனமே கட்டி*
*கதை பொழிவில் தந்தனமே*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavahaham.org

- *செயல்*

*மேடைக்கு ஒரு பெண் அழகாக நடந்து வருதல் .அவ்வேளை அங்குவரும் அவளது காதலன் அவளை வருணித்துப்பாடுதல்.*

❖ *பாடல்*

*காதலன்:* *தன்னந்தனிமையிலே தன்னந்தனிமையிலே*
*தடம்பதித்து போறப்பெண்ணே*
*தங்க சிலைபோலே மிளிருதடி உன்னழகு*

❖ *பாடல்*

*காதலி:* *நாட்டுக்கு காவலனே எனை கவர்ந்த நாயகனே*
*நாட்டுக்கு காவலனே எனை கவர்ந்த நாயகனே*
*போர்ப்பறை கேட்குதய்யா செவியிலே அந்தோ*
*பெண்மனது துடிக்குதய்யா வலியிலே*

காதலன்: கண்ணே எனைக் கவர்ந்த காந்தகியே போர்முரசு வீரனுக்கான வெற்றியொலி

காதலி: ஆமாம் நீங்கள் என்னைப்பற்றி சிந்திப்பதில்லை .

காதலன்: கண்ணே என் எண்ணத்தில் சிந்தனையில் இந்த மண்ணின் மதிப்பிற்குப் பின் உன் நினைவோட்டம் மட்டும்தான் நிறைந்திருக்கிறது .அச்சம் வேண்டாம்.

காதலி: அது சரி எதிரிகளின் தலை உருளும் உங்கள் வாள் வீச்சில் என் நினைவுகள் எப்படி இடைவரும்

❖ *பாடல்*

*காதலன்:* *அந்நியர் படையெடுத்தால் பொருதிடும் தேகம் அன்பே*
*உந்தன் நினைவலையால் மீண்டு வரும் உன் ஆவி (2)*
*கண்ணே என் கலையழகே களங்காதே மானே*
*விடுதலை பெற்றதுமே சூடுவோம் மாலை*
*(அந்நியர்......)*

காதலன்: என்ன என் செல்வமே சொல் ஏன் அச்சம் எதற்கு பயப்பிடுகிறாய்

❖ *பாடல்*

*காதலி:* *நெஞ்சம் பதறுதன்பே கண்ணீர் பெருகுதன்பே*
*காரணத்தை நானறியேன் அத்தான்*
*நான் வேதனையில் மாய்கிறேனே அத்தான்*
*போர்ப் பறைதான் காரணமோ அறியேன் அந்த*
*பொல்லாத சொப்பனமோ அறியேன்*

காதலன்: இந்த வீரனின் வெற்றிக்கனியே நீதான் போரும் போர் வீரமும் தமிழனின் சொத்து அங்கே வீணான எண்ணமோ விபரீதமான கற்கனையோ கூடாது. வெற்றி அல்லது வித்து இதுதான் வீரத்தின் யாப்பு கலங்காதே கண்ணே...

- *செயல்*

*அவ்வேளை மாகாராணி வருதல்*

❖ *பாடல்*

*மகாராணி:* *வீராதி வீரன் நீயன்றோ வீரனே*
*தாய் மண்ணின் மறவன் நீயன்றோ*
*இந்த மண்ணின் மீது*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*காதல்கொண்ட வீரன் நீயன்றோ*
*அந்த கன்னியவள் உன்னில் காதல்கொண்டாள் நலமன்றோ*
*வீராதி வீரன் நீயன்றோ வீரனே*
*தாய் மண்ணின் மறவன் நீயன்றோ*
*களத்துக்கு நீயோ புக துணிந்தாய் இந்தக்*
*கன்னியின் மனதை தேற்ற மறந்தாய்*

காதலன்: வணக்கம் மகாராணி தாங்கள் வருவீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை தயவு செய்து மன்னியுங்கள்.

மகாராணி: எதற்கு மன்னிப்பு காதல் செய்வது குற்றமில்லையே காதல் இல்லையேல் இவ்வுலகம் இல்லை அந்த அன்பின் வலிமைதான் வாழ்க்கை

காதலன்: இல்லை மகாராணி ...நாங்கள் போர்ப்பறை...

மகாராணி: உங்;கள் திருவிளையாடல்களை கயல்விழி என்னிடம் கூறிவிட்டாள் . காரணமின்றி எதற்குப் பொய் நான்தான் மன்னிப்பு கோரவேண்டும் இடையூறுக்கு

காதலன்: இல்லை தாங்கள் *(காதலன் காதலி வெட்கப்படுதல்)*

மகாராணி: சரி போதும் வெட்கப்பட்டது நான் சென்று வருகிறேன் .கயல்விழி கலங்காதே உன் அத்தான் உன்னோடுதான் இருப்பார்

- *செயல்*

*மகாராணி செல்லுதல். கயல்விழியும் வெட்கத்துடன் பின் செல்லல். இளவரசன் வருதல்.*

❖ *பாடல்:*

*இளவரசன்:* *கிட்டிப் புள்ளு பம்பரமும்*
*கிளித்தட்டு விளையாட்டும்*
*நித்தம் எம்மை மகிழ்வூட்டும் ஆமாம்*
*நித்தம் எம்மை மகிழ்வூட்டும்*
*போர்ப்பறையும் வாள்வீச்சும்*
*பொங்கியெழும் வீரத்தினால்*
*புத்துணர்வை மீட்டித் தருதே எம்மை*
*போர்க்கோலம் சூடச்சொல்லுதே*

தோழன்: நண்பனே ஆடிப்பாடி விளையாடும் மனமில்லையா உனக்கு

இளவரசன்: இல்லை நண்பா என் தந்தையின் இளவயதிலிருந்தே இந்த படையெடுப்பு நடக்கிறது ஏன் என்றுதான் புரியவில்லை

தோழன்: வா உன் தந்தையிடமே கேட்போம் (செல்லுதல்)

❖ *பாடல்*

*மன்னன்:* *எட்டுத் திசையிலும் வெற்றித் திருமுகம்*
*முட்டி மோதி ஒலிக்கும்*

*வஞ்சப் பகைவரின் நெஞ்சம் பிளந்திட*
*தமிழர் வீரம் பெருகும்*

இளவரசன்: இரத்தம் யுத்தம் நித்தம் இங்கே சித்தம் கலங்குதே தந்தையுங்கள் காலமெல்லாம் போரில் போகுதே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னன்: ஆகா மகனே வாடா செல்லா நீதான் இன்பமே எங்கள் மண்ணை எடுப்போர் தலையை கொய்தல் தவறோடா

மன்னன்: மகனே என் குலவிளக்கே வா ..வாழ்தல் சாவது பொருட்டே ஆனால் மானமும் வீரமும் நிறைந்து தாய் மண்ணிலே மடிவதுதான் மனிதர்க்கழகு

தோழன்: மன்னிக்க மாமன்னா ஏன் இந்த நீண்ட யுத்தம்

மன்னன்: ஆகா சிறுவனே வா அருகே! நல்ல கேள்வி

- *பாடல்*

*ஓரினம் ஒற்றுமையாய் வாழ்ந்திட வேண்டுமே*
*ஒற்றரும் கெட்டவரும் எம்மினத்தில் உள்ளரே*
*அற்ப சலுகைக்காய் அலைந்திடல் கூடியே*
*அன்னை மண்ணை ஏலமதில் விற்பவர்கள் கோடியே*

இளவரசன்: தந்தையே ஏன் எம்மினத்திலே இப்படி இனத்தையே விற்றுப்பிழைக்கும் எத்தர்கள்

மன்னன்: ஆசை யாரை விட்டது

- *பாடல்*

*வயித்துக்காக இனத்தை விற்றும் வாழ்கிறார் பலர்*
*வசதிக்காக இனத்தை உண்டும் வாழ்கிறார்*
*கோடாரிக் காம்புகளாய் குலத்தை வெட்டி சாய்க்கிறார்*
*பாடையிலே போகயிலே வசைகளைத்தான் சுமக்கிறார்* .
*வயித்துக்காக இனத்தை விற்றும் வாழ்கிறார் பலர்*
*வசதிக்காக இனத்தை உண்டும் வாழ்கிறார்*

மகாராணி: ஆமாம் மகனே நாம் இன்று அல்லல் படும் அவலவாழ்வுக்கு இனத்துரோகிகளும் ஒரு காரணம்

மன்னன்: மாதங்கி சரி போர்ப்பறையின் ஒலிகொட்டும் ஓசை என்னை போர்களம் வா வா என்கிறது நான் புறப்படுகின்றேன்.

மகாராணி: சென்று வெற்றியோடு வாருங்கள் உங்களுக்காக இந்த மாதங்கி காத்திருப்பாள் .

இளவரசன்: உங்கள் வாள் வீச்சுக்கு எதிரிகள் பயந்தோடுவார்கள் தந்தையே .உங்கள் வெற்றிச் செய்தி யோடு உங்கள் வரவை பார்த்து காத்திருப்போம்

மன்னன்: வெற்றி முரசு கொட்டிட வேண்டும் வீரதமிழன் ஆண்டிட வேண்டும் பொய்யர் கயவர் பொசுங்கிட வேண்டும் மாண்டவீரன் உய்த்திட வேண்டும் வஞ்சம் பொறாமை சூது களைய புத்தம் புது தமிழினம் ஆள வேண்டும் .

காதலன்: மாமன்னா தாங்கள் போர்கோலம் கொண்டுவிட்டால் மக்களை யார் வழி நடத்துவது இந்த இறுதி யுத்தத்திற்கு அடியேனை அனுப்பக் கூடாதா?

மன்னன்: மாவீரா வெற்றித் தழும்புகளை கோர்த்திருக்கும் உன் வீர வரலாறு இந்த மக்களை வழிநடத்தட்டும் அன்றேல் நான் களப்பளியானால்

மகாராணி: மன்னவா இதென்ன..?

மன்னன்: மண்ணுக்காக நம் இனத்திற்காகத்தான் நான் ..மரணம் மனிதனுக்குத்தான் மாவீரனுக்கு இல்லை செல்கிறேன் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(மகாராணி சோகத்தில் இருக்க மகன் கயல்விழி தேற்றி அழைத்துச் செல்லல்)*

தோழன்: மாவீரரே எனக்கும் வாள் பயிற்ச்சி கற்றுத் தருகின்றீர்களா?

காதலன்: அதெற்கென்ன வா கற்றுத்தருகின்றேன் .ஆழைத்துச்செல்லல் .

மகாராணி: போய்வாறேன் என்று போனாரே போர்க்களத்தில் சாய்ந்தாரே வெற்றிக்கு மகனாக வீரத்தின் விழுதாக சத்தியத் தமிழுக்காய் சாய்ந்தாரே என்னை தனியாக விட்டு போனாரே

காதலி: மகாராணி கலங்காதீர்கள் பலநூறு எதிரிகளை மாய்த்துவிட்டு வீரமாய் வீழ்ந்த மாமன்னரின் பிரிவை தாளாமல் நீங்கள் தவிப்பது கண்ணீரை வரவழைக்கிறது... கலங்காதீர்கள்...

காதலன்: மகாராணி ..மன்னனனுக்குப்பின் எம்மண்ணையும் எம் மக்களையும் காக்க வேண்டிய பொறுப்பு என்னைச் சேர்ந்தது எனக்கு போகவிடை தாருங்கள்

மகாராணி: மாமன்னர் மரணமென்றால் வீரனே உடன்கட்டை ஏறல் முறையோ விழிகளில் நீரை கொட்டி கவலையில் கண்ணீர் விட்டு வாழ்ந்திடல் முறையாமோ

காதலன்: மகாராணி தாங்கள் பல போர்க்களம் கண்டு வென்றவர் என்றாலும் இந்த மண்ணைக் காக்கும் கடமையை எனக்குத்தாருங்கள் நான் செல்கின்றேன்.

காதலி: ஆமாம் மகாராணி எதிரிகளின் கொட்டத்தை அடக்கி வெற்றிவாகையோடு அவர் வருவார் நம்பிக்கையோடு அவரை களம் செல்ல அனுமதியுங்கள் .

மகாராணி: நான் போர்க்களம் செல்கிறேன் மகனே! *(மகனை அழைத்தல்)* போய் வாறேன் மகனே போய்வாறேன் உன் தந்தையின் வழித்தடத்தில் போய்வாறேன். கண்ணே என் கண்மணியே கலங்காதே அன்னை களமாடப்போகும்போது திடமாகு

மகாராணி: நான் செல்கின்றேன் வீரரே எனது குதிரையை ஆயத்தப்படுத்துங்கள் இதோ வந்துவிடுகிறேன்.

- *செயல்*

*காதலன் செல்ல மகாராணி கயல்விழியிடம் வருதல்*

காதலி: எத்தனையோ காதலர்கள் மண்ணுக்காக தம்மை தியாகம் செய்கிறார்கள் நான் போரில் வெல்வேன் இந்த மண்ணையும் மக்களையும் காத்து நல்லாட்சி செய்யுங்கள் நான் செல்கின்றேன் *(செல்லல். போர்க்குரல் ஒலி வடிவில்)*

இளவரசன்: என் தாய் தந்தை இருவரும் போர்க்களித்தில் வஞ்சகர்களின் சதியில் வீரத்துடன் சாய்ந்துவிட்டனர் .இனி என் தந்தை விருப்பப்படி நான்தான் அடுத்தவன்..

காதலன்: இளவரசே மானத்தர் வாழ்வது ஒருமுறைதான் எமது மன்னரும் மகாராணியும் வீரத்தடம் பதித்த வரலாற்றின் பதிப்பில் என்னோடு இந்த இனவாத யுத்தமும் காட்டிக்கொடுத்து அற்பர்களாய் ஆளானவர்களின் சரித்திரமும் அழியட்டும்

காதலி : அத்தான்

காதலன்: என்ன கயல்விழி என்ன இது போர்க்கோலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலி: விடுதலை மட்டும்தான் அத்தான் எனது நோக்காக தெரிகிறது. தயவுசெய்து மறுக்காதீர்கள் உங்களோடு நானும் களமாடி வீரத் தழும்புடன் என் தாய்மண்ணில் வாழவேண்டும் அல்லது களத்திலே மாளவேண்டும்.

தோழன்: ஏன் இந்த யுத்தம்.

இளவரசன்: நாங்கள் அடிமைகளாக வாழ்வதா எமது மண் எமது வாழ்வு அதை யார் தீர்மானிப்பது.

காதலி: ஆமாம் ஏன் நாங்கள் வாழத்தகுதி அற்றவர்களா வரலாறுபடைத்தவர்கள்

காதலன்: சரி புறப்படுங்கள் வெற்றி அல்லது வீரமரணம்..

- *கட்டியங்கூறல்*

*வீரத்தின் மரணம் விதையாகும்*
*விதைகள் நாளை தோப்பாகும்*
*தோப்புகள் இங்கே உருவாகும்*
*தோல்விகள் இல்லை விடிவாகும்.*

- *நிறைவுப் பாடல் ( எல்லோரும் இணைந்து பாடுதல் )*

*வாழிய வாழிய வாழியவே*
*செந்தமிழ் சீராளர் வாழியவே*
*களம் பலக் கண்டு மண்ணது மீட்க*
*மண்ணடி விதைகள் வாழியவே*
*வாழிய வாழிய வாழியவே*
*செந்தமிழ் சீராளர் வாழியவே*
*களம் பலக் கண்டு மண்ணது மீட்க*
*மண்ணடி விதைகள் வாழியவே*

*நிறைவு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுச்சி

நாடகவகை: கூத்திசை நாடகம்

களங்களின் எண்ணிக்கை: 1. களம்

திறந்தமேடை

கலைஞர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. தலை | 2. கூலி 1,2 | 3. இளைஞன் | 4. இளைஞி |
| 5. ஒட்டுப்படை | 6. முதியவர் | 7. தாய் | 8. தாய் 2 |
| 9. மாணவர்கள் | 10. தேரர் | 11. மந்திரி | 12. கவிஞன் |
| 13. மகன் | 14. தமிழ்த்தாய் | | |

*திறந்த மேடையில் கலைஞர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நிலையில் அசையாது நிற்றல்.*

*மேடையின் நடுவே ஒரு கூண்டுக்குள் தமிழ்த்தாய் சிறை வைக்கப்பட்டிருக்கிறார். அவரைச்சுற்றி இனவெறியாளர்களின் முற்றுகை. தமிழீழத்தாய் ஒருத்தி மகனை போருக்கு அனுப்புதல், இன்னொருத்தி வேகம்கொண்டு போகும் மகனை இழுத்துப்பிடித்தல். வெடித்துச்சிதறும் கப்பல், வெடிக்கும்வீரன் (காட்சிப்படுத்தல்) தொழிலாளிகள் வறுமையின் கோரத்தில் மக்கள், புலம்பெயர் மண்ணின் மக்கள் மாணவர்கள் உலகத்தார், தலையாட்டிகள் எனப்பலர். மேடையின் அமைதிக்கூடாக பேரினவாதசக்திகள் தாளலயத்துடன் வருகிறார்கள். அவர்களைப்பின் தொடர்ந்து தமிழ்க்கூலிகள் வருதல். ஒருவரில் ஒருவர் மோதி தடுமாறுதல்.*

தாளம்: தத்தின் தின்னா கிடதின் தின்னா தத்தின் தின்னா தொந்தகுகு தகஜணு
தத்தின் தின்னா கிடதின் தின்னா தத்தின் தின்னா தொந்தகுகு தகஜணு
தத்தின் தின்னா தொந்தகுகு தகஜணு கிடதின் தின்னா தொந்தகுகு தகஜணு
தொந்தகுகு தகஜணு தொம் தொந்தகுகு தகஜணு தொம்
தொந்தகுகு தகஜணு தொம்

தலை: நாங்க ஒங்கள நல்லாருக்கோணும் .தமில் ஆக்கள எங்களுக்கு நல்லா விருப்பம். *(தமிழ்க்கூலிகள் பேச்சை ஆமோதித்து தலையாட்டி, தலையாரியின் கால்களைப் பிடித்து விட்டு தமது பணிவை காட்டுதல்)*

இளைஞன்: ஓ... தமிழாக்களில இவையளுக்கு நல்ல விருப்பம் .

இளைஞி: அதான் நாளொண்டுக்கு 5, 10 எண்டு போட்டுத் தள்ளுகினம்.

கூலி 1: கூடக் கதைச்சா கூடைக்குள்ள போட்டு அமுக்கு .மாத்தையா கோவிக்கப்போறார்

ஒட்டுப்படை: அவையள நாங்கள் பாத்துக்கொள்றம் மாத்தையாவ நீங்கள் பாருங்கோ

தாய்: இவங்களும் எங்கட வயித்தில வந்து பிறந்தவங்கள்தானே

முதியவர்: பெத்த தாய வித்து பிழைக்கிறாங்கள்.

ஒ படைகள்: மாத்தையா இந்த சனங்கள் மத்தவைய தூண்டிவிடுகினம் உவைய சும்மா விடக்கூடாது.

- *செயல்*

*மக்களை அச்சுறுத்தும் வகையில் கூலிக் குழுக்கள் செயற்பட முனைய உலகம் வருகிறது.*

தாளம்: தத்தின் தின்னா நனதின் தின்னா தக்கிடதரிகிட திகுதகதரிகிட..

தேரர்: ஓ.... மகே தெய்யோ முட்டாள் மனுசங்க ஏய் சத்தம்போட வேணா.. (இரகசியமாக) மாத்தையா உலக ஆக்கள் எங்கள பாக்குராங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலை: நீங்கள் பொறுங்க தேரர் ..ஏ ..ஏய் நீங்கள் என்ன செய்ரது .தமில் ஆக்கள் எங்கட ஆக்கள்… இவங்கள உடன புடிங்க…

தேரர்: சரி சரி விடுங்க மாத்தையா அவங்கட கண்ண கட்டியாச்சு .

கூலி 1: என்ன மாத்தையா நாங்கள் பயந்துபோனம்

மந்திரி: பயப்பட வேண்டாம் நீங்க முகமூடி போட்டு காட்டி குடுத்த மாதி ஒரு கண்கட்டிவித்ததானே

கூலி 2: மாத்தையா எங்களுக்கு நீங்கதான்…… (தலையை சொறிதல்(

தலை: மம தெமல ஆக்களுக்கு எல்லாம் தாரது. இந்தா தமில் ஆளுங்கள நம்பவேணும் நீங்க.

கவிஞன்: நம்பிக்கை… எம் கை இருக்கும்வரை நையப்புடைப்போம். எச்சில் இலை காவும் பச்சத்துரோகிகள் இவர்கள்.

இளைஞி: தமிழினத்தின் தலைவிதியா இது? உலகை ஏமாற்றி எம்மக்களுக்கு செய்யும் வஞ்சம்

தலை: தலைவிதி ஆகா) சிரிப்பு (உங்கட தலைவிதியப் பாருங்க நல்லா.

தேரர்: உங்ளுக்கு சுதந்திரங் இல்லே அது எங்ககிட்டே இருக்குது .

- *செயல்*

*கூலிகளும் இனவாதிகளும் தமிழ்த்தாயை கொண்டுவருதல்*

தமிழ்த்தாய்: அன்பு வழி அகிம்சை என்று வாழும் மக்களே அறம் ஒருபோதும் வீழாது

இளைஞன்: அம்மா தமிழ்த்தாயே இதென்னக் கொடுமை உன்னை நான் மீட்கிறேன்.

தாய் 2: தம்பி நீ போனால் ஆரப்பு எங்கள பாக்கிறது .போராட கனபேர் இருக்கினம் நீ..

இளைஞன்: அம்மா என்னை போகவிடுங்கோ

தமிழ்த்தாய்: என்னை மீட்பதற்காக எத்தனை தியாகங்கள் போராட்டங்கள் இனவாதிகள் என்னை விடமாட்டார்கள்

தாய்: இல்லைத்;தாயே இல்லை உன்னை காப்பாத்த என்ர மகனை அனுப்பிறன்

மகன்: அம்மா என்னை விடுங்கோ என்ர மண்ண நான் காப்பாத்த வேணும் விடுங்கோ

தலை: என்ன அதுகள் என்னா சொல்ரது நீங்களுக்கு நான் நல்லது செய்யிரதுதானே..

மந்திரி: மாத்தையா நிலைமை மாறுது கொடுவாள எடுத்துக்குடுங்கோ.

கூலி 1: மாத்தையா நீங்கள் யோசியாதைங்கோ ..இந்த சனங்கள நாங்கள் பாத்துக் கொள்றம்.

- *செயல்*

*சூழ இருக்கும் மக்களை அடித்து ஆக்கினை செய்யப்புகுதல்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாளம்: தா கிட தரிகிட திகுதக தரிகிட தி கிட தரிகிட திகுதக தரிகிட

மாணவர்கள்: நிறுத்துங்கள்! *(அனைவரும் திகைத்து நிற்றல் மாணவர்கள் ஆக்ரோசமாக ஆடி வருதல்)*

- *பாடல்*

*உயிரினைக் கொடுத்து உரிமையை வெல்வோம்*
*உடலினில் விடுதலை உரமதை புதைப்போம்*
*வஞ்சகம் செய்வோர் வகைநிலை உடைப்போம் - அடி*
*வருடிகள் ஆனவர் களைகளை எடுப்போம்*

*(பாடலின்போது கூலிகளும் ஒட்டுப்படைகளும் ஓடி ஒழிந்து பயந்து நிலை காட்டுதல். புலம்பெயர் மண்ணின் காட்சி இவ்வேளை ஏனைய கலைஞர்கள் அசையாது நிற்றல்).*

- *பாடல்*

*நிலம் விட்டேகி புலம்பெயர்; வாழ்வு கண்டோம்*
*வளம் தேடிநிதம் தொல்லையில் உழலுகின்றோம்*
*பணம் வந்த போதும் மண் பாசமது குறையாது இம்*
*மண்ணில் நாங்கள் புதைந்தாலும் எம் உணர்வுகள்*
*இனியும் சாகாது .*

*(பாடலின்போது எரிமலை, களத்தில், பத்திரிகைகள் கொடுத்தல் மாவீரர் படத்திற்கு வணக்கம், கொடி வணக்கம், மாணவி மாவீரர் உரை நிகழ்த்துதல் போன்ற காட்சிகள் நிகழல்)*

ஒட்டுப்படை : மாத்தையா இவங்களுக்கு வெளிநாட்டில இருக்கிற தமிழ்ச்சனங்கள் காசு துவக்கு மோட்டச் சைக்கிள் எல்லாம் வாங்கிக் குடுக்கினமாம் .

கூலிகள்: ஆனா மாத்தையா நீங்கள் எங்களுக்கு என்னவும் தரயில்ல தாரன் தாரன் எண்டு சொல்லி

மந்திரி: மாத்தையா கொழும்பு குண்டு வெடிப்பு எண்டு ஒண்டு தேவையில்லையா

கூலிகள: ஐயோ மாத்தையா நாங்கள் ஒண்டும் கேக்கமாட்டம் உங்கட காலடி நிழல்தான் வேணும்

தலை: தெமல ஆக்களுக்கு தெமலதான் சரியான ஆள்

மாணவர்கள்: வெட்டிப்பேச்சும் வீண் வார்த்தையும் இங்கே வேண்டாம் ஏய் எச்சில்..

கவிஞன்: பிச்சையெடுத்து பிணமாய் வாழும் பிணக்கூட்டமே விடுதலை ஒன்றே இலக்கு வெற்றிக் கொட்டும் முரசு

கூலி 2: மாத்தையா மாத்தையா காப்பாத்துங்கோ

மந்திரி: எங்கள ஆர் காப்பாத்துறது?

தேரர்: என்னா பயமா? இஞ்ச பாருங்க சாமான் எப்பவும் மடிக்கத்தான் இருக்கும்

தலை: ஏய் கூலிகளே யார் இவங்க உடன துரத்துங்கோ.

கூலிகள்: மாத்தையா இவங்கள் படிக்கிற பசங்கள் துள்ளுவாங்கள் ரெண்டு போட்டால் அடங்கிடுவாங்கள் .

மாணவன்: நாங்கள் அடங்கிறதா எங்கள அமைதியா வாழவிடுங்கோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த்தாய்: பாருங்கள் பண்பாய் கேட்கிறார்கள் எங்ளை விட்டு விட்டு போங்கள்

முதியவர்: உங்கட அடக்குமுறையால நாங்கள் கஸ்டப்படுரம்

தாய்: எங்கட பிள்ளையள் படிக்க வேணும் வாழவேணும் தயவுசெய்து போங்கோ

கவிஞன்: நாங்கள் மண்டியிடவில்லை அகிம்சையா அமைதியா கேட்கிறோம் எங்களை வாழவிடுங்கோ

இளைஞன்: வேண்டாம் கேட்டது போதும் இனவாதிகளுக்கு மனசாட்சியே இல்லையே

இளைஞி: உரிமையை மறுத்தால் உதைத்து பறிப்போம்

தலை: உங்களுக்கு என்ன உரிமை இருக்கு உங்கள விட்டாத்தானே உரிமை கேப்பீங்க ..

கூலிகள்: மாத்தையா உவங்கள பூண்டோட அழிக்கவேணும்

முதியவர்: அடக்கோடாரி காம்புகளே அவன் போடுற பிச்சைக்காக கேவலமாய் நடக்கிறீங்களே

தமிழ்த்தாய்: ம்... இவர்களும் தமிழர்கள்தான் ஏன் உணர்வுகளை இழந்து வாழ்கிறார்கள்.

தாய்: உணர்வுகளை விற்றுவாழ்கிறார்கள் அவர்களையும் திருத்தவேண்டும்

கூலிகள்: மாத்தையா எங்களுக்கும் இனம் மானம் ரோசம் இருக்கிறது.

மந்திரி: சே வாய மூடுங்க ஒங்களுக்கு ஒரு மண்ணாங்கட்டியும் இல்ல

மாணவர்கள்: பொறுத்தது போதும் விடுதலை ஒன்றாய் வீறுகொள்வோம் .

தேரர்: வாங்கடா பொடிப்பசங்க மாத்தையா தமில் அழிக்கோணும்

தாளம்: தா தி தொம் நம்

*(தாளத்திற்கேற்ப இனவாதிகளும் தமிழர்களும் அசைந்தாடல் தமிழ்த்தாய் அதற்கேற்ப சுழலல் ஈற்றில். தமிழ்த்தாய் மீட்பு இனவாதிகள் அழிக்கப்படுகிறார்கள் எல்லோரும் மகிழ்ச்சி வெற்றி முரசு)*

- *பாடல்:*

*விடிவு ஒன்றே இலக்கு அதை வென்று எடுப்பதாய் முழக்கு*
*கொடிய பகை வென்று பறை கொட்டு முரசே முரசு*
*தமிழர் தாகம் தணியாது தரணியில் ஈழம் உருவாகும்.*

<u>*நிறைவு*</u>




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீப்பொறி

நாடகவகை: இசை நாடகம்

களங்களின் எண்ணிக்கை: 1. களம்

திறந்தமேடை

கலைஞர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. கட்டியக்காரர் | 2. இளைஞர் 1,2 | 3. பெண் | 4. மகள் |
| 5. மனைவி | 6. கணவன் | 7. முதலாளி | 8. ஆமி 1,2 |
| 9. தாய் | 10. உரைஞர் | | |

- *செயல்*

*வெறுமையான மேடைக்கு ஒரு அழகான பெண் கவலைகளை மறந்து சுதந்திரமாக தனக்குள் பாடியபடி சந்தோசத்துடன் நடந்து வருதல்*

❖ *பாடல்*

*இனிக்கும் நேர பொழுதில் - மங்கை*
*இன்னல்கள் மறந்து நடந்தாள்*
*மயக்கும் மலரின் மணம்போல்*
*மனம் கொண்டாட மகிழ்தாடி வந்தாள்.*
*ம்..... ம்........ ம்......*

- *செயல்*

*அவ்வேளை இரண்டு இளைஞர்கள் உற்சாகமாக பேசி சிரித்தபடி மேடைக்கு வருதல் வந்தவர்கள் இளம் பெண்ணைப் பார்த்து அதிசயத்து அவளது அழகில் மயங்கி திகைத்து பேசிக் கொள்ளுதல்*

இளைஞர் 1: டேய் யாரடா இது ஓ ...என்ன அழகடா ....

- *செயல்*

*இளைஞர்கள் அவளைக் கடந்து போய் விசிலடித்து திரும்பிப் பார்த்தல் அவ்வேளை பெண் அசையாது நிற்றல்.*

❖ *பாடல்*

*வேலையில்லா வெறும் பயல்கள்*
*வீதியிலே சுத்தி வந்து*
*ஊர்மேயும் உத்தியத்தான் பாருங்கோ தெருவில்*
*சீர் கெட்ட சேட்டையத்தான் கேளுங்கோ*
*தாய் தந்தை உழைச்சு போட்டு*
*நாளும் பொழுது சமைச்சு போட்டு*
*கற்பனையில் வளர்த்த பெடிகள் கேவலம்*
*காவாலியாகி ஊர சுத்துது.*

இளை 2: ஓமடா நான் இதுவரைக்கும் காணாத ஆளா இருக்கிறா

இளை 1: டேய் மனச பறிக்கிறாளடா....

இளை 2: வா மெதுவா கதைப்பம் *(தொண்டையை செருமிக்கொண்டு)* கலோ ஐ ஏம்..

இளை 1: டேய் உன்ர பேர்தான் முக்கியமா... காய் நான்... அதுசரி உங்கட பேர் என்ன?

இளை 2: என்ன உங்களுக்கு புடிச்சிருக்கா..?

பெண்: தயவு செய்து என்ன விடுங்கோ நான் போக வேணும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளை 2: இதப்பாரடா உவாவ ஆர் பிடிச்சிருக்கிறது விடட்டாமாம்

இளை 1: அப்ப புடிச்சுப்போட்டு விடுவம் எது வசதி?

- *செயல்*

*இளைஞர்கள் அவளைக் கிண்டலடித்து கேலி செய்ய அவள் மிகவும் சிரமப் பட்டு அவர்களிடமிருந்து விடுபட்டு ஓடுகிறாள் அவர்களும் அவளைத்துரத்திக் கொண்டு ஓடுதல் . மறுபக்கமிருந்து ஒரு கணவன் தன் மனைவியை தலைமயிரில் பிடித்து இழுத்துக் கொண்டு வந்து மேடையில் தள்ளி அவளைத் துன்புறுத்தி அடித்து கொடுமையாக நடந்து கொள்கிறான் அவனது மகள் பயந்து அழுகிறாள்*

கணவன்: ஏய் என்னடி என்ன திமிரடி உனக்கு நான் ஆர் நான் ஆர் .. ஏய் எழும்படி ஆரட்ட அழுது சாதிக்கிறாய்

மகள்: அப்பா அம்மாவ அடிக்காதைங்கோ ..

கணவன்: யேய் மூடடி வாய ஆருக்கு கத சொல்றாய் எனக்கோ போடி போடி உள்ள

மனைவி: ஐயோ ...பிள்ளைய அடிக்காதைங்கோ

கணவன்: ஏய் நான் அவள அடிப்பன் உதைப்பன் நீ வாய மூடு.

மகள்: அப்பா !!அம்மா பாவம் அடிக்காதைங்கோ உங்கள கெஞ்சிறன்..

கணவன்: என்னடி கெஞ்சிறியோ ம் ..அப்ப நான் என்ன கொடுமக் காறனோ... பொறு வாறன் உங்கள் ரெண்டு பேரையும் விட்டாத் தாண்டி பிரச்சனை பொறு வாறன்

உரை: (ஒலிவடிவில் - *கலைஞர்கள் அசையாது நிற்றல்)* உலகில் பெண்ணடிமையின் நிலைப்பாடு ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொரு வகையில் பெண்கள் அடிமைகளாக நடத்தப்படும் கொடுமையை நாங்கள் அறிகிறோம். இதோ எம்மினத்துள் எங்கோ ஓர் மூலையில் கேட்கும் அழுகுரல்

- *செயல்*

*கணவன் கோபாவேசத்துடன் வெளியேறுகிறான் உடனே மகள் தாயிடம் ஓடி வருகிறாள்.*

மகள்: அம்மா ஏனம்மா அப்பா உங்கள அடிக்கிறார்

மனைவி: தெரியேல்லேயே ..ஏன் அடிக்கிறார் நான் என்ன செய்ய வேணும் எண்டே தெரியேல்ல ..கடவுளே ..பெண்ணாப் பிறந்ததே தப்பம்மா

மகள்: அப்ப நாங்கள் பொம்பிளைகளா பிறக்கக் கூடாதா?

மனைவி: இல்லம்மா எல்லாரும் அப்பிடியில்ல..

கணவன்: யேய் என்னடி தாயும் மோளும் குசுகுசுக்கிறியள் வாடி இஞ்சால ..உவளுக்கு ..

மனைவி: இஞ்சாருங்கோ சான் வேலைக்கு போக வேணும் போகாட்டா முதலாளி பேசுவார்

கணவன்: ஆரடி உன்ர முதலாளி அவனோட ஏன்ரி கதைக்கிறாய் யேய் நான் நான் நீ... போ போ... யேய் நீ என்னட்ட நல்லா அடிவாங்கப் போறாய் இப்ப போ... எடியேய் என்னடி செய்யிறாய் போ போய் தேத்தண்ணி வை...

மகள்: அப்பா ...ஏ..ஏ .எனக்கு....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவன்: என்னடி ...எ ..ஏவா போடி போ சொன்னத செய்...

- *செயல்:*

*கணவன் மனைவி மகள் எல்லோரும் வெளியேற மேடைக்கு ஒரு முதலாளி வருகிறார் ..*

முதலாளி: ம் வேலைக்கு ஒரு ஆள் தேவ ...ஓ ..நல்ல சம்பளம் குடுப்பன் ஆனா பொம்பிளயா கொஞ்சம்..

மனைவி: முதலாளி... நான் வர நேரமாயிட்டுது .

முதலாளி: ஓ ..நேரமாயிட்டுது ..அது தெரியும் ..தெரியாமலா இதில நிக்கிறன்? நான் பாவம் எண்டுதான் உமக்கு அந்த வேலைய தந்தன் ஆனா நீர்

மனைவி: முதலாளி இனி ஒழுங்கா வருவன் இந்த தடவ ஒருக்கா..

முதலாளி: என்ன ஒருக்கா ..இது நெடுகத்தானே சொல்றீர் ..அது சரி என்ன முகமெல்லாம் வீங்கி போயிருக்கு அந்த அழகு தெரியாம அசிங்கமாக் கிடக்கு போம் போய் முகத்த கழுவி பௌடரப் போட்டு வடிவா வாரும்..

மனைவி: முதலாளி இப்பிடி கதையாதிங்கோ எனக்கு கஸ்டமா இருக்கு

முதலாளி: பரவாயில்ல உம்மட கஸ்டத்ததானே நான் போக்க வழி சொல்லுரன்

- *செயல்:*

*மனைவி திகைத்து நிற்க முதலாளி அசையாது நிற்றல்.*

- *பாடல்*

*காலமொன்று கூடுமோ ...எந்தன்*
*கவலையுந்தான் ஈடேறுமோ*
*பாவியரின் பார்வையிலே -எங்கள்*
*பாதையெல்லாம் பாலாகியதே...*

*காம வெறியினிலே தடுமாறும் கேவலங்கள் - அதில்*
*சேமம்தான் ஆகிடுமோ என் வாழ்வு - இல்லை*
*செத்து புதைவதுவோ என் வாழ்வு*

*பெண்ணென்றால் பெருந் தொல்லை*
*ஊண்பருக துடிக்குதுகள்*
*வீணான வாழ்வாமோ எம் வாழ்வு -அட*
*வேரற்ற மரமானோம் ஐயகோ...*

மனைவி: முதலாளி யாரும் பெண்ண பெண்ணா பாக்கிறதில்ல நீங்களும் அப்பிடித்தான் நீங்கள் வேற யாரையும் வேலைக்கு எடுங்கோ..

முதலாளி: இஞ்ச இஞ்ச...வாரும் நான் சொல்றத கேளும்... சரி போட்டா ம்... அவசரப் பட்டிட்டன்

- *செயல்*

*இருவரும் வெளியேற பெண்ணை துரத்தி வந்தவர்கள் மேடைக்கு வரல்*

இளை 1: என்னடா ஆள் மாறிட்டுது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளை 2: எங்க போகப் போறா ஆனா நான் ஆள் ஆர் எங்க இருக்கிறா என்றத அறியாம விடன்.

இளை 1: ஓ... அவவின்ர அப்பா அண்ணணன்மார் ஆரும் இருந்து காணோணும் அப்ப உன்ர தெரியும்

இளை 2: டேய் என்னடா சத்தம் ..ஆரோ வருகினம் போல..

இளை 1: ஓமடா செத்தை சரசரக்குது ஆமியோ ..வா மெதுவா போயிடுவம்

தாய்: தம்பியவ என்ற மோள கண்டியளே ..

இளை 1: உங்கட மகளோ எங்களுக்கு தெரியாதே ஆள் எப்பிடி இருப்பா?

இளை 2: சின்ன பிள்ளையோ இளம் ஆளோ

இளை 1: டேய் அந்த ...

தாய்: என்ன தம்பி கண்டனீங்களே என்ர பிள்ளைய கண்டனியளே சொல்லுங்கோ ஐயொ ..காலையில போனவள இன்னும் காணோமே... *(தாய் வெளியேறல்)*

இளை 1: டேய் நாங்கள் கண்டமெல்லே அவளா இருக்குமோ?

இளை 2: அவளாயிருந்தால் பரவாயில்ல உந்த கிழவிய சமாளிச்சிப் போடலாம் வா அவள தேடுவம்

ஆமி 1: அடோ என்ன செய்யிரது வா

ஆமி 2: தெமல பொடி *(இளைஞர்களை சுற்றிப் பார்த்தல்)*

இளை 1: ஓ ..சேர் நா நாங்கள் சும்மா ..

இளை 2: வீட்ட போறம் சேர் ..

ஆமி 1: வீட்டுக்கு போறது சரி நாமலும் வாரங்

ஆமி 2: ஒயா எல் ரீ ரீ த ரெயினிங் எடுத்ததா? வா பாப்பம்

இளை 2: இல்ல சேர் ..நான்

ஆமி 1: சரி சரி நா சொல்றத செய் (இளைஞர்களை கேலிக்குள்ளாக்கல்)

ஆமி 2: மாத்தயா அத்தி யமு... *(ஆமி இளைஞர்களை துரத்திவிட்டு தாமும் போதல்)*

தாய்: எங்கயம்மா போயிருந்தனி ..உன்ன காணயில்ல எண்டு பதறிப்போனன்

பெண்: அம்மா நான் வரும் போது ரெண்டு...

- *செயல்*

*திடிரென ஆமி வர தாயும் மகளும் தடுமாறுகிறார்கள்*

ஆமி 1: ஓ... பியுட்டிபுல்... யே... நம மொக்கத்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமி 2: யே குட்டி... எங்க போறது...

தாய்: ஐயா... நாங்கள் வீட்ட போறம் இவா என்ர மகள்.

ஆமி 1: ஓ... மகள் ம் யேய் எல்ரீ ரீக்கு முதல் உதவினதானே ..

தாய்: இல்லய்யா ..நான் யாருக்கும் எதுவும் செய்யேல்ல

ஆமி 2: நீ பொய் சொல்ரது நாங்கள் உன்ர மகள விசாரிக்க வேணும்

தாய்: ஐயா அவளுக்கு ஒண்டும் தெரியாது அவள் சின்னப்பிள்ள

- *பாடல்*

*அட ராலாமி ஓடி வாடா அந்த*
*அழகான பெட்டையை பிடிப்பமடா*
*ஆளை மயக்கி நிற்கும் இந்த*
*பைங்கிளியை பத்திரமாய் கடத்தி செல்வோம் - நாங்கள்*
*கடத்தி செல்வோம் கேம்புக்கு இழுத்துச் செல்வோம்.*

*(பெண்ணை பலவந்தமாக இழுக்க தாய் அவர்களிடம் கெஞ்ச ஆமி தாயை அடிக்கிறார்கள் பெண் கதறி அழுகிறாள்)*

- *பாடல்*

*ஐயோகோ பாவிகளா ..*
*எந்தன் பைங்கிளியை விட்டுப் போடா..*
*எது வேண்டும் எடுத்துச் செல்லும்*
*எந்தன் குலமகளை விட்டுச்செல்லும்*
*ஐயகோ யாருமில்லையோ இந்த கொடுமைதனை*
*கேட்பார் இல்லையோ...*

தாய்: ஐயா உங்களுக்கு கோடி புண்ணியம் கிடைக்கும் என்ர பிள்ளைய விட்டுடுங்கோ யாராவது வாங்களேன் என்ர பிள்ளைய காப்பாத்துங்களேன்...

- *செயல்*

*ஆமி மகளை இழுத்துக் கொண்டு போக மனைவி மகள் ஓடி வர மனைவியையும் அவர்கள் அடித்துப் போடுகிறார்கள் இறுதியில் விழுந்து கிடந்த மகள் எழுந்து அழுகிறாள்*

கணவன்: யேய் இஞ்ச என்னடி செய்யிராய் அப்பன் என்ன சொன்னன் போடி போய நான் சொன்னத செய் (மகளை வெருட்டல்)

மகள்: உங்களுக்கு கண்ணில்லையா அம்மா காயப்பட்டு கிடக்கிறா இரக்கமில்லையா

கணவன்: என்னடி சொன்னாய்..

மகள்: அப்பா நீங்கள் செய்யிறது சரியான பிழை இனி உது நடவாது முதல் உங்களட்ட இருந்து நாங்கள் விடுபட்டாத்தான் எங்கட அடிமத்தனம் ஒழியும் .

கணவன்: என்னட்டயே கதவிடுறியோ ..விட்டணெண்டா ..

மகள்: விடுங்கோ பாப்பம் அப்பா அம்மாவ மாதிரி என்னை அடக்கி வைக்க முடியாது.

- *செயல்*

*தந்தை திகைத்து நிற்க மகள் உற்சாகத்துடன் நடக்கிறாள்)*

<u>*நிறைவு*</u>


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரப்பொங்கல்

நாடகவகை: குமுக நாடகம்

களங்களின் எண்ணிக்கை: 1. களம்

திறந்தமேடை

கலைஞர்கள்

1. விமலா 2. கமலா 3. குகன் 4. தவம் 5. கீதா

*அரங்க அமைப்பு:*

*வன்னியில் எமது மக்கள் ஏதிலிகளாஇடம்பெயர்ந்து வீதியோரமாக குடிலமைத்து வாழ்வது போன்ற அமைப்பு.*

- *செயல்*

*கமலநாதன் ஓரிடத்தில் அமைதியாக யோசனையில் ஆழ்ந்திருக்கும்போது அவரது பிள்ளைகள் குகனும் கீதாவும் சற்று தூரத்தில் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். அவ்வேளை விமலா கணவனை நோக்கி வருதல்*

விமலா: என்னப்பா இப்பிடி பேயறைஞ்சமாதி குந்தியிருக்கிறியள்? பிள்ளையள் பசி பசியென்று கத்த, போய் விளையாடுங்கோ என்று அதுகள துரத்திப்போட்டு நிக்கிறன். இப்ப என்னப்பா செய்யிறது...

கமலர்: அதுதான் யோசிக்கிறன். எங்க போறது ஆரட்ட போறது .எல்லார்ற்ற பாடும் இதேமாதிரிதான்.

விமலா: சரியப்பா அதுக்கு இப்படியே இருந்தா சரிவருமே .எழும்புங்கோ தேத்தண்ணி போடுறன்.

கமலர்: சீனி கிடக்கே...தேயிலைச்சாயம்தானோ வெறும் அல்லது ...

விமலா: ஒரு சொட்டு கிடக்குது நக்கிக் குடியுங்கோ...

கீதா: அம்மா பசிக்குது .

விமலா: பொறம்மா அப்பா கடைக்கு போட்டு வந்தவுடன சமைச்சுத் தாறன் இப்ப தேத்தண்ணி தாறன் குடிச்சுப்போட்டு அண்ணாவோட போய்விளையாடடி செல்லம்.

குகன்: அம்மா இன்றைக்கு தைப்பொங்கலாமெண்டு கோபு சொன்னவன். நாங்கள் பொங்கேல்லையே.?

விமலா: பொங்குவோமப்பு பொறு அப்பா சாமான்கள் வாங்கியரட்டும்.

- *செயல்*

*கமலா வருதல்*

கமலா: ம்..... போனமுறைப் பொங்கல் ஆற்றையோ வீட்டில எப்படியோ போச்சுது . இந்தமுறை பொங்கல் நடு ரோட்டில வந்து நிக்குது ம்........(பெருமூச்சு)

விமலா: ஓமப்பா சொந்த வீடு வாசல இழந்து உறவுகள இழந்து ஏனிப்படி .......பாருங்கோ பிள்ளையள் பசியில கிடந்து துடிக்குதகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலா: ஒ ஆனா இது நிலைக்கிற காரியமில்ல கெதியில இதுக்கு முடிவிருக்குது.

குகன்: அப்பா நேற்று போட்ட குண்டு எங்கட பள்ளிக்கூடத்தில விழுந்து பள்ளிக்கூடம் இடிஞ்சிட்டுதாம். கோபுவின்ர அப்பா இப்பத்தான் பாத்திட்டு வந்தவராம்.

கீதா: ஐயய்யோ அப்ப நாங்கள் இனி பள்ளிக்கூடம் போகேலாது

- *செயல்*

*நண்பர் தவம் வருதல்*

தவம்: கமலண்ண கமலண்ண

கமலா: ஓம் தவமண்ண வாருங்கோ

விமலா: என்னண்ண கனநாளா இந்தப்பக்கம் காணக்கிடைக்கேல எங்கேயும் போயிருந்தனீங்களே.

தவம்: ஓந்தங்கச்சி கொழும்புக்கு போட்டு வந்தனான்.

கமலா: கொழும்புக்கோ என்ன விசேசம் நீங்களும் வெளில எங்கயும் போகப்போறியளோ?

தவம்: நானோ இந்த மண்ண விட்டிட்டோ நினைச்சும் பாக்கமாட்டன் கண்டியளோ . ஆனா என்ன செய்யிறது வாழவேணுமே அதான் மகனட்ட கொஞ்ச காசு வாங்கியாந்தன்.

விமலா: நீங்கள் வாங்கியாந்து தனியவே சாப்பிடுறியள் அவைக்கு இவைக்கு எண்டு பிச்சுபிச்சு குடுத்துப்போட்டு

தவம்: ஓந்தங்கச்சி இந்த நேரம் நாங்கள் இருக்கிறத இல்லாதவைக்கு குடுத்து சாப்பிடவேணும். ஆனா கொழும்பென்ன எங்க போனாலும் தமிழனுக்கு கஸ்டம்தான்

கமலா: ஒ நாங்கள் ஆடுமாடுகளவிட கேவலமாப்போனம் காரணமில்லாம பிடிக்கிறான்கள் அடிக்கிறான்கள் எங்களப்பத்தி கேக்க ஆருமில்ல எங்கள நாங்கள்தான் பாக்கவேணும்.

- *செயல்*

*பசியால் அழுதல்*

கீதா: அம்மா பசிக்குது .

குகன்: அப்பா எனக்கு தலைசுத்துறமாதிரி இருக்கு

விமலா: இஞ்சாருங்கோ என்னப்பா பிள்ளைக்கு தலைச்சுத்துதாம். நானோடிப்போய் ஆரட்டையும் ஏதாவது வாங்கியரட்டே .

கமலா: நீங்கள் எங்க போகப்போறியள் நான் ஏதாவது தேடிக்கொண்டு வாறன். இப்ப சட்டெண்டு வாறன்.

தவம்: கமலண்ண காசு இருந்தாலும் சாமான் ஒண்டும் வாங்கேலாது .மரவள்ளிக் கிழங்கும் வத்தாளையுங்கூட இப்ப அருகிவருது .இஞ்ச இதில கொஞ்ச அரிசி கொண்டு வந்தனான் இதப்போட்டு கஞ்சியா காச்சுங்கோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமலா: அண்ண உங்கள நாங்கள் மறக்கமாட்டம்

கமலா: தவமண்ண முன்பின் ஆரெண்டு தெரியாது அகதியா எங்கெங்கிருந்தெல்லாம் வந்தம் எப்பிடியெப்பிடியெல்லாம் வாழ்ந்தம் இப்ப பாத்தியளே......... அண்ண உங்களுக்கு ரொம்ப நன்றி

தவம்: உண்மைதான் நாங்கள் எங்களுக்குள்ள ஒற்றுமையா இருந்தால்தான் இந்த பிஞ்சுகளின்ர வாழ்க்கைக்கு ஒரு வழிகாணமுடியும்.

குகன்: தங்கச்சி அம்மா பொங்கல் செய்யிறா ஓடியாங்கோ

கீதா: அச்சா அம்மா எனக்கு நிறைய வேணும் நான் சாப்பிட்டு வளந்தாத்தானாம் புலிமாமாக்களோட வரமுடியும்.

தவம்: ஓகோ ஆர் சொன்னது .

குகன்: குணா மாமாதான் சொன்னவர். எங்களுக்கு புதுப்பள்ளிக்கூடமும் கட்டித்தருவினமாம்

கமலா: உண்மைதான். எங்கட நாட்ட சீர்படுத்தி ஒரு சுதந்திர நாடாக மாத்தவேணும்.

விமலா: அதுக்குமுதல் நாங்கள் நிம்மதியாய் இருந்து கஞ்சிகுடிக்க சுதந்திரமாக இருக்க விடுதலை வேணும்.

கமலா: அது சும்மாவே கிடைக்கும் ஆயிரமாயிரமாய் பறிகுடுத்த எங்கட பிள்ளைகளோட நாங்கள் ஒன்றா நிக்கவேணும். நிண்டு போராட வேணும். நாங்கள் செத்தாலும் எங்கட பிள்ளையல அதுக்கேத்தபடி வளத்துப்போட்டு சாகவேணும்.

தவம்: கமலண்ண எங்களுக்கு முதல் பிள்ளையள் நல்ல தெளிவாயிருக்கினம். நாங்களும் கூட இருந்தால் கண்ணுக்கு முன்னால சுதந்திரம் வந்திடும் கண்டியளோ.

விமலா: சரி வாங்கோ பொங்கியாச்சுது .

தவம்: இது பொங்கல் இல்ல இந்த சூரியன் இனியும் வரும் எங்கட நாட்டில நாங்கள் சுதந்திரமா கூடி கொண்டாடப்போற அந்தப் பொங்கல்தான் பொங்கல்.

விமலா: ஓ..... அடுத்தப் பொங்கல் எங்கட சுதந்திர பொங்கல்தான்.

<u>நிறைவு</u>




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பந்து

நாடகவகை: குமுக இசை நாடகம்

களங்களின் எண்ணிக்கை: 1. களம்

திறந்தமேடை

மூன்று குழுக்கள் குழுக்களை உடையால், அலங்காரத்தால் வேறுபடுத்திக்காட்டல்

கலைஞர்கள்

1. கீர்த்தனா
2. இலக்சி
3. மீனுகா
4. இரதிவன்
5. சர்மிலி
6. சௌந்தரி
7. சீலா
8. இலமானி
9. சிந்துஜன்
10. சுருதி
11. திணேஸ்

*திறந்த மேடையில் பாடல் ஒலிக்க சில சிறுவர்கள் ஒரு பந்தைக் கொண்டு வந்து விளையாடல் . அவ்வேளை வேறொரு சிறுமி (இலக்சி) கவலையுடன் வந்து ஓர் இடத்தில் ஏக்க மூச்சுடன் விளையாடு பவர்களைப் பார்த்துவிட்டு அமர்தல் .*

❖ *பாடல்*

*பந்தடிப்போம் பந்தடிப்போம் பந்தடிப்போமே*
*பாலர் நாங்கள் கூடியாடி பந்தடிப்போமே*

*பந்தடிப்போம் பந்தடிப்போம் பந்தடிப்போமே*
*பாலர் நாங்கள் கூடியாடி பந்தடிப்போமே*

கீர்த்தனா: ஏன் இதில இருக்கிறீங்கள் *(தனிமையில் இருக்கும் (இலக்சி) சிறுமியைப் பார்த்துக் கேட்டல்)*

இலக்சி: என்னட்டத்தான் பந்து இல்லயே !நான் எப்பிடி விளையாடுறது?

மீனுகா: இந்தாயிருக்கு, இது எங்கட பந்துதானே வாங்கோ சேந்து விளையாடுவம்.

- *செயல்*

*எல்லோரும் சேர்ந்து மீண்டும் விளையாடல்*

❖ *பாடல்*

*அப்பா பணம் கொடுத்து அம்மா வாங்கித்தந்த பந்து*
*அனைவரும் நாம் கூடிவிளையாடவந்த பந்து(2)*

*பந்தடிப்போம் பந்தடிப்போம் பந்தடிப்போமே*
*பாலர் நாங்கள் கூடியாடி பந்தடிப்போமே*

*உரிமையுடன் உதைத்து விளையாட வந்த பந்து*
*உங்களுக்கும் எங்களுக்கும் சொந்தமான பந்து.*

*குழு 1*

கீர்த்தனா: என்னமோ சத்தம் கேக்குது

மீனுகா: அதொன்றுமில்ல நீங்கள் பந்த போடுங்கோ

இலக்சி: ஓ ...யாரோ வருகினம்

இரதிவன்: எங்கள ஏமாத்தின ஆக்கள்தான் வருகினம் போலத் தெரியுது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- *செயல்*

*பாடல் ஒலிக்க குழு 1 சிறுவர்கள் அப்படியே பின்னின்று அசைதல் குழு 2 ஆடி வருதல்*

- *பாடல்*

*தன்னன தன்னன தானனன்னே*
*தன்னன தன்னன தானனன்னே*

*புன்னகையை போர்த்திக் கொண்டு வாருங்கள்*
*பொய்யுரையை மூடிக்கொண்டு நடவுங்கள்*

*தன்னன தன்னன தானனன்னே*
*தன்னன தன்னன தானனன்னே*

*வித்தைகளைக் காட்டி நிதம் வாழ்ந்திடுவோம்*
*விண்ணுக்கும் மண்ணுக்கும் பாலம்போடுவோம் .*

*தன்னன தன்னன தானனன்னே*
*தன்னன தன்னன தானனன்னே*

*குழு 2*

சர்மிலி: ம்….. இஞ்ச பாருங்கோ அவை நல்ல பந்தொண்டு வைச்சிருக்கினம்.

சௌந்தரி: ஓ…. இஞ்ச இஞ்ச எனக்கு அத வாங்கித் தாறீங்களா?

சீலா: என்ன அதையோ அவையட்ட எத்தனை முறை இப்பிடி சாமான்கள வாங்கிட்டம் இனி தராயினம்….

சௌந்தரி: இல்ல எனக்கு அது வேணும் (சிணுங்கி அழுதல்)

சர்மிலி: ஓ ..எங்களுக்கு அந்தப் பந்து வேணும்.

சீலா: கண்டதெல்லாம் வேணுமென்றால் என்ன செய்யிறது

இலமானி: பொறுங்கோ! பிள்ளையள் கேட்டா வாங்கி கொடுக்கவேணும்

சீலா: ஆனா அத எப்படி கேக்கிறது? நாங்கள் முதலும் ஏமாத்தியிருக்கிறோம்

இலமானி: சரி கனக்க யோசியாதைங்கோ இந்தாங்கோ இதப்போட்டுக் கொண்டு கேப்பம் *(ஆளுக்கொரு முகமூடி போட்டுக்கொள்ளல்)*

- *செயல்*

*நடிகர்கள் அசைந்தாடக்கூடிய தாளயிசை*

இலமானி: எல்லாரும் சுகமா இருக்கிறியளோ?

- *செயல்*

*குழு 1 சட்டென தம்முள் கூடி காதுக்குள் பேசிக் கொள்ளுதல் குழு 2 சந்தேகத்துடன் எட்டியும் ஒட்டியும் கேட்க முயல்தல்*

கீர்த்தனா: நீங்கள் பொய் பேசுறனீங்கள்

இலக்சி: ஓ ..எங்கள ஏமாற்றிப் போட்டுப் போவீங்கள்

இரதிவன்: முகமூடி போட்டிருக்கினம்

சௌந்தரி: நாங்கள் சும்மா விளையாட்டுக்குப் போட்டிருந்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலமானி: எட இனி எமாத்துறது கஸ்டம்தான்

மீனுகா: எங்கட பந்த நீங்கள் பறிச்சுக் கொண்டு போயிடுவீங்கள்.

சீலா: சே ..சே ..நாங்கள் அப்படி செய்யிற ஆக்களில்ல நாங்கள் நல்ல ஆக்கள்

இலமானி: அது உங்கட பந்து அதயேன் நாங்கள் பறிக்கிறம்

சர்மிலி: நாங்களும் சேந்து விளையாடத்தான் கேக்கிறம்

இலக்சி: நாங்கள் எப்படி நம்புறது

கீர்த்தனா: வேண்டாம் நாங்கள் தனியா விளையாடுவம்

மீனுகா: வாங்கோ நாங்கள் அங்கால போவம்

சௌந்தரி: ஏன் நாங்கள் ஒற்றுமையா சேந்து விளையாடுறது சரியில்லையா?

சர்மிலி: நீங்கள்தானே ஒற்றுமையா வாழவேணும் எண்டு சொன்னீங்கள்

கீர்த்தனா: இல்ல வேண்டாம் இவை ஏதாவது சூழ்ச்சி செய்வினம்

இலமானி: நீங்கள் நம்ப மாட்டீங்கள் பொறுங்கோ ஒரு நம்பிக்கையான ஆளப் பாத்து கூட்டிவாறம் .

மீனுகா: உங்களையும் நம்ப முடியாது உங்களோட வாற ஆட்களையும் நம்பமுடியாது.

சர்மிலி: கொஞ்சம் பொறுங்கோ நல்ல ஆட்கள கூட்டிவருகிறோம்.

*குழு 3*

- *செயல்*

*மேடையில் நிற்பவர்கள் மேடையை விட்டு சற்று ஒதுங்கி நிற்க குழு 3 ஒருவரை மையமாக வைத்து இருவர் ஆடிவருதல்*

- *பாடல்:*

*உலகப் பொது மனிதர் எங்கள்*
*உள்ளம் கவர் கள்வர் (2)*
*மேதினியில் நல்ல*
*மேன்மையைக் கண்டவர். (2)*

*உலகப் பொது மனிதர் எங்கள்*
*உள்ளம் கவர் கள்வர்*

*நீதியை நேர்மையுடன்*
*நிறுத்தெடுத்து தந்திடுவார்*
*பாதியாய் போனவரை*
*நேர்த்தியாய் நிறுத்தி வைப்பார்.*

*ஊதியம் இல்லாத ஊர்வேலைக்காரர்*
*அதிகாரம் வேண்டாத அவதார மனிதர்*

சிந்துஜன்: ஆ......கா.....கா யாருக்கு என்ன வேணும் பாருக்கு படியளப்போம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருதி: சோறுக்கு கறி கொடுப்போம் .மீனுக்கு முள்ளெடுப்போம்

சிந்துஜன்: சே ..என்ன பேசுறாய் யாருக்கு, பாருக்கு , சோறுக்கு மீனுக்கு

சுருதி: அதுதான் கவிதை எப்படி இருக்கிறது என் புலமை?

சிந்துஜன்: ஆகா அற்புதம் ம் ...இந்த கால்பிடிக்கிற வேலைய விட்டுட்டு கவிதை எழுதப் போகலாம்

சுருதி: நாங்களே காசு குடுத்து வாங்கி நாங்களே படிச்சு நாங்களே எங்களுக்கு

சிந்துஜன்: பட்டங்கள் சூட்டலாம் பொன்னாடைகள் போர்த்திக் கொள்ளலாம் .

சுருதி: மாலைகள் சூடலாம்

திணேஸ்: செருப்படியும் போடலாம் நான் பாத்துக்கொண்டு இருக்கிறன் இங்க என்ன ஞாயம் பிளக்கிறியள்

சுருதி சிந்து: தலைவர் வாழ்க தலைவர் வாழ்க *(தாமே கொண்டு வந்திருக்கும் மாலையைப் போடுதல்)*

திணேஸ்: நன்றி நன்றி (எல்லோரையும் கும்பிட்டு வணக்கம் செய்தல்)

சிந்துஜன்: ஊரெல்லாம் ஞாயம் சொல்வார் அநியாயத்தை தட்டிக் கேப்பார்

சுருதி: உங்கட பிரச்சனைகள சொல்லுங்கோ சரியா விசாரிச்சு தீர்ப்பார்.

- *செயல்*

*தாள இசை மூவரும் ஆடி பின் நகர்தல்*

சர்மிலி: பாத்தியளே இவர் நேர்மையானவர் எனக்கு இவர நல்லாத்தெரியும் நான் பலமுற

சீலா: ஸ் ...என்ன பேசுறீர் முதலே தெரியுமெண்டு சொன்னால்

சௌந்தரி: அதில ஊழல் இருக்கு எண்டு சொல்வினம்

சர்மிலி: இல்ல இல்ல நான் அவரக் கண்டதேயில்ல யார் இவர்? இவர நாங்கள் எப்படி நம்புரது

இலமானி: ஐயோ காரியம் கெடப்போகுது நீ என்ன பேசுராய் வாய மூடிக்கொண்டு அங்காலப் போ..

கீர்த்தனா: நீங்கள் இப்பிடித்தான் குழப்புவியள் பேசாமல் போங்கோ

இலக்சி: ஓ ..நாங்கள் விளையாடப் போறம் .

சர்மிலி: அப்ப நாங்களும் வாறாம் சேந்து விளையாடுவம்

சிந்துஜன்: நல்லது சேந்து சந்தோசமா விளையாடுங்கோ

திணேஸ்: ஸ் ..அத நான் சொல்ல வேணும் சரி நான் பாத்துக்கொள்றன் நீங்கள் குழப்பம் இல்லாம சேர்ந்து விளையாடுங்கோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்துஜன்: ஆகா ஆகா அற்புதமான தலைவர் பார்த்தீர்களா தீர்ப்பை

சுருதி: தீர்ப்போ

மீனுகா: பாருங்கோ என்ன கதைக்கினமெண்டே தெரியாமல் இருக்கினம்

சர்மிலி: ஆனா நாங்கள் அப்பிடியில்ல நாங்கள் விளையாடுவம்

இலக்சி: கூடிப் பேசுதல் மற்றவர்கள் தமக்குள் பேசிக் கொள்ளுதல் எங்கட பந்து எங்கட தான் ஆனா

கீர்த்தனா: இந்த உபகாரி பொதுவா இருக்கிறார் என்ற நம்பிக்கையில விளையாட வாறம் .

- *செயல்*

*குழு 2 சந்தோசமாக துள்ளி கைகுலுக்கிக் கொண்டு விளையாட ஆயத்தமாதல்*

- *பாடல்*

*பந்தடிப்போம் பந்தடிப்போம் பந்தடிப்போமே*
*பாலர் நாங்கள் கூடியாடி பந்தடிப்போமே*

*பந்தடிப்போம் பந்தடிப்போம் பந்தடிப்போமே*
*பாலர் நாங்கள் கூடியாடி பந்தடிப்போமே*

*அப்பா பணம் கொடுத்து அம்மா வாங்கித்தந்த பந்து*
*அனைவரும் நாம் கூடிவிளையாடவந்த பந்து*

*உரிமையுடன் உதைத்து விளையாட வந்த பந்து*
*உங்களுக்கும் இல்ல*
*எங்களுக்கு மட்டும் இது சொந்தமான பந்து.*

- *செயல்*

*பந்து விளையாட்டு நடைபெற குழு 2 இடையிடையே பந்தை அபகரிக்க முற்படல் முடிவில் பந்தை தம் வசப்படுத்திக் கொள்ளல்*

மீனுகா: பந்தப் போடுங்கோ

சர்மிலி: பந்தோ எங்க இருக்கு? *(சட்டென மறைத்தல்)*

கீர்த்தனா: அவர்களை சுற்றி வந்து பார்த்து பந்தைக் காட்டி பொய் பொய் நீங்கள் பொய் சொல்லி ஏமாத்திறியள்

சீலா: இது எப்படி உங்கட பந்தாகும்

இலமானி: ஓ ..இது உங்கட பந்துதான் என்றதுக்கு என்ன ஆதாரம்?

இலக்சி: நீங்கள் எங்கள நெடுகளும் ஏமாத்தி எங்கட சாமான்களயெல்லாம் பறிக்கிறனீங்கள்

மீனுகா: நான் கண்டிட்டன் கண்டிட்டன் மறைச்சி வச்சிருக்கினம்

கீர்த்தனா: உங்கள நாங்கள் நம்பினது தப்பு

சர்மிலி: யார் உங்கள நம்ப சொல்றது நீங்கள்தான் எங்கட பந்த எடுத்தனீங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்கள்: பொய் பொய் சுத்தப்பொய்

இலக்சி: இது நம்பிக்கைத்துரோகம்

சிந்துஜன்: உஸ் .......சத்தம் போடாதைங்கோ எங்கட தலைவர் நித்திரையில இருக்கிறார் .

சுருதி: ஓ ..இது கொஞ்சம் யோசிக்கவேண்டிய விசயம்

சிந்துஜன்: பந்து யாருடையது *(வழக்கறிஞரைப்போன்ற பாவனை)*

சர்மிலி: எங்கட நாங்கள்தான் கொண்டு வந்தனாங்கள்

சீலா: பாருங்கோ கைய விளையாடின அடையாளம் இருக்கு

சுருதி: ஓ ...சரி அடையாளம் இருக்கு

சிந்துஜன்: யார் நீங்கள்? (குழு ஒன்றைப்பார்த்துக் கேட்டல்)

இலக்சி: யாரோ எங்கடதான் பந்து உங்களுக்கு கண்ணில்லையே?

சுருதி-சிந்து: வீணான வார்த்தைகள் தேவையில்லை (இருவரும் காதுக்குள் குசுகுசுத்தல்)

சீலா: சரி நீங்கள் போங்கோ ஏன் இன்னும் நிக்கிறீங்கள்

இலமானி: அதுதானே இது நாங்கள் விளையாடின இடம்.

சிந்துஜன்: தலைவர் எழும்பிட்டார் தலைவர் எழும்பிட்டார்

சுருதி: சத்தம் போடாதைங்கோ

திணேஸ்: எழுந்து முறிவெடுத்து பின் ஏன் எல்லாரும் இதில நிக்கிறீங்கள்

கீர்த்தனா: ஓ ...இவர்தான் நியாயவாதியா

இலக்சி: ஒ ..அநியாயத்த தட்டிக் கேட்டு சரியான தீர்ப்பு சொல்லுவாராம்

சீலா: அவர் அநியாயம் சொல்லயில்லயே

திணேஸ்: உஸ் ..இங்க நான் கேக்கிறன் மற்றவை பதில் மட்டும் சொல்லவேணும்.

மீனுகா: நீங்கள் யார் நீங்கள் உண்மைய பேசுறனீங்களா?

இலமானி: அவர் பொய் பேசமாட்டார் உண்மையத்தான் பேசுவார்

சர்மிலி: நீங்கள் கொஞ்சம் சத்தம் போடாமல் இருங்கோ

கீர்த்தனா: சரி சொல்லுங்கோ

- *பாடல்*

*கூடிக் கூடிக் கதைக்கிறார் நீதியத்தான் மறைக்கிறார்*
*நாகரீகமாக வந்து நரிக்குணத்தை காட்டுறார்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கையூட்டு வாங்கியே காரியத்தை செய்கிறார்*
*காணமல் போக உண்மை கையாடல் செய்கிறார்*

- *செயல்*

*குழு 3, குழு 2 ஆட்களுடன் கூடிக் கதைத்தல் சிறுவர்கள் தமக்குள் கூடிக் கதைத்தல்*

சிறுவர்கள்: பந்த தாறியளோ இல்லையோ

திணேஸ்: நான் விசாரிக்கிறன் பொறுங்கோ

சீலா: இது எங்கட பந்து

கீர்த்தனா: பொய் அது எங்கடப் பந்து

இலக்சி: அவையள் எங்கள ஏமாத்தி எடுத்துப்போட்டினம் .

மீனுகா: இனி நாங்கள் பேசாமல் இருக்க மாட்டோம்

சௌந்தரி: ஏன் என்ன செய்வியள்

சிந்துஜன்: சண்டை போடாதைங்கோ தலைவர் யோசிக்கிறார்

திணேஸ்: இது உங்கட பந்துதான் என்பதற்கு என்ன ஆதாரம்

சுருதி: சரியான கேள்வி

சர்மிலி: சட்டம் தெரிஞ்சவர் அழகா கேக்கிறார்.

இலக்சி: அது அவையின்ர பந்துதான் என்றதுக்கு என்ன ஆதாரம்

சௌந்தரி: நீங்கள் கேக்கக் கூடாது தலைவர் ஏன் இருக்கிறார் அவரே சொல்லட்டும்

திணேஸ்: அதுதான் பாக்கத் தெரியுதே அவையட்டத்தானே பந்து இருக்கு

மீனுகா: இது அநியாயம்

இலக்சி: துரோகத்தனம்

சீலா: தலைவரே இனி பேசிப்பிரயோசனமில்ல

சௌந்தரி: நாங்கள் போகலாம்

கீர்த்தனா: முடியாது போகவிடமாட்டோம்

இலமானி: ஏன் முடியாது என்ன செய்வியள்

திணேஸ்: இது அவைக்கு சொந்தமானது என்றது தெரியுது பிறகு நீங்கள் ஏன் சண்ட பிடிக்கிறியள்

சிந்துஜன்: சமாதானமா போங்கோ விட்டுக்கொடுத்து வாழ வேணும் அது தெரியாதே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீனுகா: சரி விட்டுக்கொடுத்து வாழலாம் நீங்கள் உங்கட உடமைகள எங்களட்டத் தாருங்கோ

கீர்த்தனா: ஓ ..அதத் தந்தால் பந்தத்தாரம்

திணேஸ்: என்னோடையே விளையாட்டா?

இலக்சி: பாத்தியளே கோபம் வருது அப்பிடித்தான் எங்கடபொருள் எங்கடதான்.

சுருதி: இல்லாட்டி ஆளுக்கு பாதியாய் வெட்டியெடுக்கலாம்.

திணேஸ்: ஆகா ..அது சரி யாரங்கே இந்தப்பந்தை அறுத்து ஆளுக்குப் பாதியாக கொடுங்கள்

சுருதி-சிந்து: ஆகட்டும் தலைவரே

சிறுவர்கள்: சே ..அறிவுகெட்டவர்கள் உங்களோட பேசி பிரயோசனமில்ல

திணேஸ்: ஏன் என்ன செய்யப்போறீங்கள்

கீர்த்தனா: ம்.... (குழு குழுவாக கூடிக்கதைத்தல்)

சிந்துஜன்: தலைவரே என்னை யாரோ கூப்பிடுகினம் போல இருக்கு

சுருதி: என்னையுந்தான்

சிறுவர்கள்: யாரும் இங்கயிருந்து போக முடியாது

சீலா: ஏன் சின்ன வாலுகள் எங்கள வெருட்டுதுகள்

திணேஸ்: ஸ்..பொறுமையா இருங்கோ அவை சின்ன ஆக்கள்தான் ஆனா பலசாலிகள்

சர்மிலி: அதுக்கு

சிந்துஜன்: உள்ளதும் போயிடும் பிறகு..

இலமானி: சரிதான் உங்கட உபதேசம் எங்களுக்கு வேண்டாம்

சௌந்தரி: வாங்கினத தந்திட்டு நீங்கள் போங்கோ

சீலா: எல்லாத்துக்கும்தலையாட்டி எங்களுக்கு சார்பா தீர்ப்பு சொல்றதெண்டுபோட்டு

சர்மிலி: இப்ப கதைக்கினம் கதை வாங்கினதுகள மரியாதையா தந்திட்டுப்போங்கோ

சுருதி: என்ன தந்தனீங்கள்

இலமானி: என்னவோ? பணம் பொருள் தங்கம் வெள்ளி என்று எத்தனையைத் தந்தோம்

- *செயல்*

*குழு 3 கூடிப்பேசிவிட்டு மெதுவாக புறப்பட, குழு 2 பிணக்குப்படல்*

❖ *பாடல்*

*பிணக்கு பிணக்கு பிணக்கு - இங்கே*
*கணக்கு மாறிப்போச்சு*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*உனக்கு எனக்கு உனக்கு - உரிமை*
*இணக்கம் இன்றி போச்சு*
*சுணக்கம் சுணக்கம் செய்து பாடை*
*ஏறகணக்கு ஆகும்*
*தினக்கு தினக்கு தின்னா மெதுவா*
*நகர்ந்து போகப்பாரு*

திணேஸ்: அமைதி அமைதி நான் உங்கள் பிரச்சனையை தீர்க்கிறேன் எல்லோரும் ஒருக்கா கண்ண மூடுங்கோ

சிந்துஜன்: தலைவரே ஏதாவது வித்தை செய்யப் போறீங்களா?

சுருதி: நாங்களும் கண்ணை மூடவேணுமா? *(எல்லோரும் கண்ணை மூடி நிற்க தலைவர் மெதுவாக வெளியேறல்)*

இலக்சி: ஐயா உபகாரி எங்கே ரகசியமாய் ஓட்டம்

திணேஸ்: உங்கள ஏமாற்ற முடியாது என்ன விடுங்கோ நான் ஓடிவிடுறன்

மீனுகா: சரி ஓடுங்கோ எங்கட விசயத்த நாங்களே பார்க்கிறம்.

கீர்த்தனா: நீங்கள் ஏன் நிக்கிறீங்கள் உங்கட தலையாரி ஓடிவிட்டார்

சர்மிலி: இது அநியாயம் தீர்ப்பு சொல்லவந்தவைய துரத்துறீங்கள்

மீனுகா: ஓ ..நியாயம் உங்களுக்குத் தெரியாது

- *செயல்*

*குழு 1 கோபத்துடன் குழு2 சுற்றி வருதல்*

இலக்சி: நாங்கள் உங்களுக்கு பயப்பிடயில்ல

சௌந்தரி: நாங்கள் பெரியாக்கள் கனபேர் உங்களால என்ன செய்ய முடியும்

இலமானி: சும்மா வெருட்டினாலே ஓடிடுவினம்

சீலா: நாங்கள் எத்தனைபேர் நிக்கிறம் தெரியுமா?

கீர்த்தனா: பந்து எங்களுடையது பயம் எங்களுக்கில்லை

இலக்சி: மனோபலம் எமக்குண்டு எத்தனை பேர் என்றாலும் பந்தை பற்றுவோம்

மீனுகா: செய் அல்லது செத்துமடி

கீர்த்தனா: உடமையை உரிமையாக்கு அதற்கு உயிரையும் உரமாக்கு

- *செயல்*

*குழு 2 பயந்து நடுவே நின்று தடுமாறல் இசையொலிக்க ஆடல். முடிவில் பந்தை குழு 1 எடுக்கிறார்கள் குழு2 மயங்கி கீழே விழுகிறார்கள்*

*<u>நிறைவு</u>*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு

நாடகவகை: ஓரங்க குமுக நாடகம்

களங்களின் எண்ணிக்கை: 1. களம்

திறந்தமேடை

| கலைஞர்கள் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 1. அ | 2. ஆ | 3. இ | 4. ஈ | 5. உ | 6. ச |
| | 7. சீ | 8. ரா | 9. த | 10. தி | 11. தாய் | |

- *செயல்*

*மேடையில் தலைவிரி கோலத்துடன் ஒரு இளம் பெண் (அ) எல்லாவற்றையும் இழந்த நிலையில் நடந்து திரிதல்.*

அ: எனக்கு வாழவே பிடிக்கேல்ல...

ஆ: அப்ப செத்துப்போ..... (இசை அ மெதுவாக தலை உயர்த்திப் பார்த்தல்)

அ: செத்துப்போறதோ

இ: சாகவே பிறந்தனாங்கள் வாழப்பிறந்தனாங்கள்

ஆ: அப்ப ஏன் சாகவேணும்?

அ: வாழ முடியேல்லயே

ஆ: ஏன்

அ: மனிசத்தன்மை செத்துப்போச்சு ...என்னால வாழ முடியேல்ல ...

- *செயல்*

*ஈ அன்பை கூவி விற்றல்*

ஈ: அன்பு விற்பனைக்கு உண்டு ஒரு கிலோ 50 யூரோ ...முந்தி வாறவைக்கு முழுசா கிடைக்கும்...அன்பு ....அன்பு ....ஒரு கிலோ 50 யூரோ மட்டுமே ...ஓடி வாங்கோ...ஓடி வாங்கோ..

அ: எங்க எங்க காட்டுங்கோ....

- *செயல்*

*எல்லோரும் இடிபட்டுக் கொண்டு பார்த்தல் பின் ஏமாற்றத்துடன் திரும்பி கவலைப்படுதல்*

ஈ: இன்னும் உயிர் இருக்கு வாங்குங்கோ...கிலோ 30 யூரோக்கு தாறன் (Angebot) அன்கபோட்

ஆ: அன்பு செத்துப்போச்சு

இ: சுயநலத்துக்காக யாரும் எதையும் செய்ய தயாரா இருக்கினம்

ஈ: காசு காசு ..அதுதான் உலகம்...காசிருந்தா என்னவும் செய்யலாம்.

- *செயல்*

*ஒரு தாய் தன்பிள்ளையுடன் (மேடையில்) வந்து பிள்ளைகளுக்கு பாசத்துடன் அலங்காரம் செய்து அன்பு காட்டுதல் மேடையில் இருப்பவர்கள் எல்லோரும் ஆர்வத்துடன் எட்டிப்பார்த்தல்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ: அம்மா ...நான் போய் விளையாடட்டா..

தாய்: ஓமடா என்ர செல்லம் கவனமாய் போய் விளையாடுங்கோ..

ஈ: (தாயையும் பிளைளையையும் காட்டி) இந்த அன்பு நல்ல விலை போகும் ..தாயும் பிள்ளையுமல்லே..

- *செயல்*

*இ தாய் பிள்ளைகளின் உரையாடல் செயல்களைப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு ஓடிவருல்*

இ: நான் கண்டிட்டன் நான் கண்டிட்டன்....

ஆ: என்ன என்ன

இ: இவா அன்பு வச்சிருக்கிறா (தாயைக்காட்டிக் கூறல்

அ: உண்மையாவா..

ஆ: இருக்காது அது செத்துப்போச்சுது.

இ: உண்மையா நான் கண்டன் வந்து பாருங்கோ..

அ: அது ஏன் எல்லாறட்டையும் இல்ல ..சுயநலமும் சுரண்டலும் வஞ்கமும் மட்டும்தானே பெரிசா தெரியுது

தாய்: எல்லாறட்டையும் எல்லாமும் இருக்கு ஆனா...

ஈ: என்ன ஆனா . ...இதுவும் வளர வளர மாறிடும் ..எல்லாம் போலி..

அ, ஆ, இ: என்ன வாழ்க்கை போலியானதா? அன்பு போலியானதா?

- *பாடல்*

*வாழ்க்கை என்பது ஒரு போலி - நாம்*
*வந்து பிறந்தது ஒரு தோல்வி*
*நேசம் என்பது முழு வேசம் - இங்கு*
*காசே வாழ்வின் பரிணாமம்*
*காசே வாழ்வின் பரிணாமம் வாழ்கை...*

- *செயல்*

*பாடல் முடிய கலைஞர்கள் நிலையாக நிற்க சந்தோஸ் பயத்துடன் ஓடிவந்து ஒவ்வொருவரிலும் மறைந்து எட்டி எட்டிப் பார்த்தல்*

தாய்: ஏனப்பு பயந்து நிக்கிறாய் யார் பிள்ளைய அடிச்சது
(சந்தோஸ் தேம்பி தேம்பி அழுதல் சந்தோசை தடவி அழ வேண்டாம் எனக்கூறி அன்பு காட்டுதல்)

சீ: உமக்கென்ன என்ர தம்பியில அலுவல் உம்ம ஆரும் கேட்டதே...

ரா: பிள்ள அழுதா கேப்பினம்தானே..... அதுக்கேன்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீ: அது எனக்குத்தெரியும் நீங்கள் உங்கட வேலையப் பாருங்கோ.. கலோ... கலோ (தொலைபேசியில் உரையாடல்)

தாய்: யாருக்காக நாங்கள் வாழுறம் எதுக்காக வாழுறம் ஏன் வாழுறம்...

அ: ஓ ...ஏன் வாழுறம் எதுக்காக? கருணையில்லா உலகத்தில வாழுறது வீண்

ஆ: அப்பா அம்மா வேலை, வேலை முடிஞ்சு வந்தால் உழைச்ச களைப்பு

இ: எது கேட்டாலும் எரிஞ்சி எரிஞ்சி விழுவினம்

தி: யேய் என்னடி செய்யிறாய் ...

சீ: ஸ் .....அந்தாள் வருது நான் பிறகு கதைக்கிறன் ...

தி: நீ யாரோட டெலிபோன் கதைக்கிற கொண்டா டெலிபோன...கொண்டா...

சீ: இல்ல தரமுடியாது நீங்கள் உங்கட வேலையப் பாத்துக்கொண்டு போங்கோ...

தி: என்னடி சொன்னாய் ...ம் ...ஆரெண்டு நினைச்சனி என்னை

தாய்: நிப்பாட்டுங்கோ ..என்ன வேணும் உங்களுக்கு ஏன் இப்பிடி கத்துறியள் ..

தி: நான் கத்துவன் ஆடுவன் பாடுவன் அது என்ர விருப்பம் ..நீயாரடி...

அ: போதும் நிப்பாட்டுங்கோ

சீ: நாங்கள் தடுமாறி; போறதுக்கும் தடம்மாறி போறதுக்கும் நீங்கள்தான் காரணம்...

அ: நாங்கள் வாழவே பிடிக்காமல் போறதுக்கு நீங்கள்தான் காரணம்

தி: என்னடி சொன்னாய். (அடிக்க கை ஓங்குதல்)

ரா: அடி நல்லா அடி அதுக்குப் பிறகாச்சும் உனக்கு அன்பு வருதா எண்டு பாப்பம்...

தாய்: ஆத்திரத்த விட அன்பால ஒருதர ஒருதர் புரிஞ்சு கொள்ள வேணும் அதுதான் வாழ்க்கை

தி: இவா வந்திட்டா தத்துவம் பேச (ராவை பார்த்து) இஞ்சபார் நீ வாய மூடிக்கொண்டு இரு ..

இ: இனி வாய மூடிக்கொண்டு இருக்கேலாது ..நாங்கள் வாழப்பிறந்தனாங்கள்..

ஆ: ரெண்டு கலாச்சாரத்துக்க மாட்டுப்பட்டு நாங்கள் தவிக்கிறம்...எங்ளுக்குள்ள எவ்வளவு பிரச்சனைகள்..

அ: ஆரத கேக்கினம்

ரா: என்னத்த கேக்கிறது ...பெத்து உழைச்சி கஸ்டப்பட்டு வளர்க்கிற பெத்தவைக்கு எத்தனை பேர் உண்மையா நடக்கினம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்: உண்மதான் படிக்க பள்ளிக்கூடம் அனுப்பினா பள்ளிக்கூடம் எண்டு சொல்லிப்போட்டு வேறெங்கயோ போறது சாமம் சாமமா ரெலிபோனில கொன்பிரன்ஸ் செய்யிறது ..

ரா: பெத்ததுகளயும் மதிச்சி யோசிச்சி நடக்க வேணும் .

தி: என்ன குறை வச்சனான் உங்களுக்கு கேட்டதெல்லாம் வாங்கித்தாறன் சாப்பாடு போடுறன் படிக்க வைக்கிறன் இத விட வேறென்ன வேணும்

அ: அன்பு வேணும் ஆதரவு வேணும் பாசம் காட்ட வேணும்

தாய்: காசு பணம் சொத்து சுகம் மட்டுமே வாழ்க்கை

ஆ: எங்களுக்கு நல்லது கெட்டத சொல்லித்தர நேரமில்ல காசு... காசு...

அ: அன்பில்லா வாழ்க்கை தேவையில்ல

இ: அதுக்கு என்ன செய்யலாம் ஒருதருக்கும் விளங்குதில்ல....

தி: எல்லாருக்கும் எல்லாமும் விளங்கும். நீ வாய மூடிக்கொண்டிரு.

சீ: என்னில பாஞ்சி இப்ப ஊரில தாவுது உந்த ஆள்.

தாய்: உப்படி ஏட்டிக்குப் போட்டியா பேசினா முரண்பாடுதான் வரும்.

அ: ஐயோ.... நான் சாகப்போறன்.... ஒருதரட்டையும் அன்பில்ல.....

ஆ: நீ சொல்லிக்கொண்டுதானிருக்கிறாய் இன்னும் சாகயில்ல....

ச: இந்தப்பொம்மை வேணுமா உங்களுக்கு..... இந்தாங்கோ..... வைச்சுக்கொள்ளுங்கோ.

ரா: பொம்மைக்குள்ள குண்டிருக்கும்

ஈ: புதுசா... இறக்குமதி செய்திருக்கிறன் உங்களுக்குத் தேவையான அன்பு

அ: உண்மையாவா.... காட்டுங்கோ....

ஈ: 50 யூரோ தந்தாக் காட்டுவன்.... இது வெளிநாட்டில வாங்கினது....

தாய்: பிள்ள அன்ப விக்கவும் முடியாது வாங்கவும் முடியாது... அவர் ஏமாத்துறார்

- *செயல்*

*தி. அடப்பட்ட காயத்தோடு வந்து விழுதல் + எல்லோரிடமும் உதவி கேடேடல்.*

சீ: நல்லா படட்டும்... எப்ப்ப் பாத்தாலும் ஏசுறது பேசுறது.. அடிக்கிறது.... நல்லா

தாய்: ஐயோ.... என்ன தம்பி என்ன நடந்தது. இஞ்ச ஓடிவாங்கோ.....

- *செயல்*

*தாய், ச இருவரும் காயப்பட்ட தி யிடம் சென்று உதவ மற்றையவர்கள் தூரத்தில் நின்று பார்த்தல். அ அவரிடம் செல்ல எத்தனிக்க மற்ரையவர்கள் தடுத்தல்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ: அவர் பாவம்....

ரா: உந்தாள் கொடுமைக்காரன் கூடாதவர்... யாரும் போகாதைங்கோ..

ஆ: ஆனா...பாவம்.... அவர் இப்ப பேசயில்ல அழுகிறார்.

ஈ: அது நடிப்பு அவரட்ட கோவம்தான் இருக்கு பொல்லாதவலர்

ச: இவரட்ட அன்பும் இருக்கு வந்து பாருங்கோ...

தி: என்னில உங்களுக்கு கோபமா.... எனக்கு சரியா வலிக்குது.....

அ: அழாதைங்கோ.... மருந்து போடுறம்....

ஆ: நீங்கள் நல்லவரா... கெட்டவரா....

ஈ: கெட்டவர்.... எழுந்தா அடிச்சுப்போடுவார்.

தி: இல்ல இனி யாரையும் அடிக்க மாட்டன் கோபிக்க மாட்டன்.....

தாய்: எல்லாரும் நல்லவர்கள் ஆனா பலருக்கு அன்ப வெளிக்காட்டத் தெரியாது.

சீ: ஓ... என்னட்டையும் இருக்கு... எனக்கு கண்ணீர் வந்திட்டுது....

இ: எனக்கும் இவரப் பாக்க பாவமா இருக்கு... உதவி செய்ய விருப்பம்வருது...

அ: அப்ப எல்லாரிடமும் அன்பு இருக்கா......

தி: ஓ இருக்கு.... பலர் காட்டாமல் இருக்கினம்.

தாய்: பலருக்கு காட்டத்தெரியேல்ல....

ச: இனிக் காட்டுவம் சண்டைப்போடாமல் இருப்பம்.

அ: நான் வாழப்போறன்... மகிழ்ச்சியா......எல்லாரோடும்....

ஈ: நானும் உங்களோட வாறேன்..

தாய்: அன்புதான் எல்லாமே...

*நிறைவு*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத்தங்கள்

நாடகவகை: ஓரங்க குமுக தாளலயம்

களங்களின் எண்ணிக்கை: 1. களம்

திறந்தமேடை

கலைஞர்கள் 1. கனகம் 2. சுந்தரம் 3. நாதன் 4. சுந்தரி 5. டேரிசி 6 மத்திஸ்

- *செயல்*

*அனைத்துக் கலைஞர்களும் தாளக்கட்டுடன் வசனங்களை பேசி நடித்தல். இடையே உரிய இடத்தில் (யேர்மன்) தத்தமது வாழிட மொழியை இணைத்து நடித்தல் சிறப்பு*

கனகம்: சுந்தரி பிள்ள சுந்தரி எங்க ஆளக் காணயில்ல எங்க ஆளக் காணயில்ல பாட்டைம்முக்குப் போட்டு இன்னும் வரயில்லையோ?

டேரிசி: வாங்கு வாங்கு காகமண்டி வாங்கு வாங்கு காகமண்டி

கனகம்: என்னடி சொல்லுறாய் என்னடி சொல்லுறாய் காகமெண்டோ சொல்லுகிறாய்?

டேரிசி: கோக்காதைங்கோ, கோக்காதைங்கோ, கோக்காதைங்கோ கமகமண்டி தமில் பேசவாருதில்லே கோக்காதைங்கோ கமகமண்டி தமில் பேசவாருதில்லே

கனகம்: உது நல்ல கதபிள்ள உது நல்ல கதபிள்ள தமிழ் பேச தெரியாதெண்டா தமிழ் பேச தெரியாதெண்டா நாகரீகம் எண்டுறியோ

சுந்தரம்: கனகமக்கா கனகமக்கா என்ன உங்க நிக்கிறியள் என்ன உங்க நிக்கிறியள்

கனகம்: வா தம்பி சுந்தரம் வா தம்பி சுந்தரம் வேலையால வாறியோ வேலையால வாறியோ?

சுந்தரம்: ஒரு வேல முடிஞ்சிட்டுது மற்ற வேலைக்கு போக வேணும்

கனகம்: புல்டைம முடிச்சுப்போட்டு பாட்டைமுக்குப் போறாய் போல? புல்டைம முடிச்சுப்போட்டு பாட்டைமுக்குப் போறாய் போல?

சுந்தரம்: பின்ன என்ன செய்யிறது பின்ன என்ன செய்யிறது? காலுக்கு மேல கால போட்டு காத்திருந்தா சாப்பாடுதான் வந்திடுமோ?

நாதன்: ஓகோ கோ 2 காலநேரமில்லாம கடுமையாக உழைச்சி போட்டு மிச்சம் என்ன வச்சிருக்கிறீர் மிச்சம் என்ன வச்சிருக்கிறீர்

சுந்தரம்: என்ன நான் செய்யிறது 2 உங்களுக்கு நல்ல வேல கௌரவமா செய்யிறியள் என்னுடைய நிலைய பாத்தா கேவலமா இருக்குப் போல.

கனகம்: ரெஸ்ரோரன்டில கோப்ப கழுவி பாட்டைம்ல ரொயிலட் கழுவி வாழ்க்கை பூரா கழுவப்போனா கேவலம்தான் மிச்சம் வரும்.

நாதன்: வேலை எதுவும் கூடாதில்ல 2 வாழுறது ஒருமுறதான் வடிவாக வாழவேணும்

சுந்தரம்: வாழுறது வடிவாவோ அதென்ன வாழ்க்கைங்கோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதன்: டொச்சில கடிதம் வந்தா ஆரட்டையும் ஓடுகிறம் டொச்சுக்காரர் கதைக்கும் போது பேந்த பேந்த முழுசுகிறோம் வேல வீடு எண்டு ஓடி வெறுமையாக வாழுகிறம்.

மத்திஸ்: ஒண்டும் விலங்காது யா யா சொல்லுரது மட்டும்தான் யா யா

டேரிசி: வெக்கக் கேடு வெக்கக் கேடு தமில் சனத்தால் வெக்கக் கேடு...

மத்திஸ்: நாங்க தனியா வாழவேணும் மொடனாக வாழவேணும்

கனகம்: நாகரீகம் எண்டு சொல்லி நாசமாக வேணாமப்பு

சுந்தரி: கனகமக்கா கனகமக்கா வந்து கனநேரமோ? வந்து கனநேரமோ? நாதன் அண்ண நலமாத்தான் இருக்கிறியளோ சுந்தரத்தார் வேலையாள வேளைக்கே வந்திட்டார் ..

டேரிசி: கனக்க நேரமாவயில்ல பியட்டல் ஸ்சுண்ட தானிருக்கும் கனகமண்டி எண்டு சொல்ல காகமெண்டு கத்துறா

கனகம்: கடவுளே !அடக் கடவுளே !என்ன பிள்ள புலம்புகிறாய் என்ன பிள்ள புலம்புகிறாய் தமிழ் தெரியா பிள்ளையுனக்கு எந்த கத புரியப்போது

மத்திஸ்: Sie verstehen kein Deutsch. Ich habe Kopfschmerzen, ich habe Kopfschmerzen!

டேரிசி: Das sind dumme Leute, das sind dumme Leute

சுந்தரி: பாத்தியளோ நல்லா பாத்தியளோ டொச்சு நல்லா கதைக்குதுகள்

சுந்தரம்: கொன்னைத் தமிழ் பேசுவினம் குறுக்க டொச்ச சேர்ப்பினம்

கனகம்: நல்லாத்தானிருக்கும் நல்லாத்தானிருக்கும் தமிழுக்குள்ள டொச்ச சேத்து டொச்சுக்குள்ள தமிழ சேத்தா நல்லாத்தானிருக்கும்

நாதன்: பிள்ளையளில குத்தமில்ல அறியாத பெற்றாரின்ர அவலமான வாழ்க்கையது

சுந்தரி: அதுகள் நல்ல கெட்டிக்காரர் ) 2 ) மொடனாக வாழப்போற நாகரீக பிள்ளையள்

கனகம்: நெசனால்ட்டி எடுத்தவைக்கும் நல்ல விசா உள்ளவைக்கும் கொன்னத்தமிழ் நாகரீகம் கலர் பூச்சு நாகரீகம் தலைக்கு கலர் பூச்சு நாகரீகம் வண்டிய பாதிகாட்டி வயித்தில குண்டு குத்தி தோப்பலா உடுப்பு போட்டா

சுந்தரம்: நிப்பாட்டுங்கோ கதைய நிப்பாட்டுங்கோ நாகரீகம் எண்டு சொல்லி நாய்குணத்த ஊட்டுகினம்

சுந்தரி: விசர்க்கத கதையாதைங்கோ வீணாக கொளுவாதைங்கோ கெட்ட கோபம் வந்ததெண்டா தாறுமாறா பேசிடுவன்.

கனகம்: வேண்டாமடி பிள்ள வேண்டாமடி கேடுகெட்டு போறனெண்டா குறுக்கவர நானில்ல

மத்திஸ்: Tamilen sind doch blöd.

டேரிசி: Sie denken, dass Tamil für uns wichtig ist.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திஸ்: Ich verstehe es nicht.

டேரிசி: Wir leben doch hier.

மத்திஸ்: Ja, wofür brauchen wir schon Tamil. Das nützt uns doch sowieso nichts.

சுந்தரம்: புரியாத பாசையில ஏதேதோ பேசுதுகள் புரியாத பாசையில ஏதேதோ பேசுதுகள்

நாதன்: புரியாத பாசையெண்டு புலம்பியென்ன செய்யிறது? (2) வந்து 10 வருசமாச்சி வந்து 10 வருசமாச்சி டொச்சு பேச தெரியவில்ல வெக்கக் கேடு வெக்கக் கேடு

சுந்தரி: குத்தல் கத கதையாதிங்கோ (2)

மத்திஸ்: இவாவுக்கு என்ன தெரியும் (2)

கனகம்: Kinder was redet ihr da? Denkt ihr etwa ich kann kein Deutsch? Für was hält ihr uns eigenlich?

சுந்தரி: ஐயய்யோ கனகமக்கா நீங்க டொச்சு கதைப்பியளோ ஆச்சரியமா இருக்கு அதிசயமாகிடக்கு

சுந்தரம்: எங்கயக்கா படிச்சனியள் எப்பவக்கா படிச்சனியள் நம்பேலா எனக்கு நம்பேலா..

கனகம்: வாழுகிற நாட்டில உள்ள மொழி படிக்கவேணும் நாகரீகம் எண்டு சொன்னா நகநட்டும் உடுப்புமில்ல

சுந்தரம்: தப்பல்லோ செய்து போட்டன் ( 2 ) கழுவி துடைச்சி காலந்தள்ளி கண்டதொண்டும் மிச்சமில்ல

கனகம்: காலமின்னும் போகயில்ல கவலப்பட தேவயில்ல பெற்றாரும் பிள்ளையளும் புரிஞ்சு கொண்டு வாழவேணும்.

சுந்தரி: என்ரபிள்ள படிக்குதெண்டு இறுமாப்பா இருந்திட்டன் என்ன ஏது எண்டு எனக்கு ஒண்டுமே தெரியவில்ல

கனகம்: பெற்றார பேய்க்காட்டி பிள்ளையள் சுத்துதுகள் தெரியாத பெற்றாரும் சரியெண்டு சொல்லுதுகள்

சுந்தரம்: உணர்ந்திட்டன் நான் அறிஞ்சிட்டன் பிள்ளையள் பேசயில புரியாம தலையாட்டி தெரியாம வாழயினி ஒருபோதும் நானில்ல

நாதன்: எங்கட பிள்ளையள்தான் இத எடுத்துச் சொல்ல வேணும்

சுந்தரி: கால நேரமில்லாம கடுமையாக உழைச்சி கொட்டி பொறுப்பில்லா வாழ்க்கையில நான் போகமாட்டன் இனி போகமாட்டன்

மத்திஸ்: தமிழ் தெரியா பிள்ளையெண்டு தரம்கெட்ட வார்த்தை வேண்டாம்

டேரிசி: படிக்கப் போகப்போறன்; தமிழ் படிக்கப் போறன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதன்: புத்திமதி இல்லையிது புரிஞ்சுகொண்டு வாழுவம்.


ஒருவர்: புனர்வாழ்வுகார பெடியள் வீட்ட வந்தா ஆளில்லை எண்டு சொல்லி மறைஞ்சிருந்து துரத்துவினம்

*நாட்டில சமாதானம் எண்ட கத கேட்ட உடன் காணி வாங்க ஓடுகினம் சிரிப்பாக இருக்குதுங்கோ (2 ) நாட்டுக்கு குடுக்க காசில்ல காணிவாங்க காசிரிருக்கு அகதியான வாழ்க்கையிலயும் அழகு இருக்க வேணும் பெற்றாரும் படிக்க வேணும் பிள்ளையளும் படிக்க வேணும் நல்ல வாழ்க்கை வாழவேணும் நாலுபேர் மதிக்க வேணும் .*

*எல்லோரும்: எல்லாருக்கும் பொங்கல் நல் வாழ்த்துக்கள் நன்றி வணக்கம்*

*நிறைவு*







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயமகாண்டம்

நாடகவகை: *நகைச்சுவை நாடகம்*

களங்களின் எண்ணிக்கை: 1. களம்

திறந்தமேடை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கலைஞர்கள் | 1. இயமன் | 2. சித்திரபுத்திரர் | 3. கிச்சா | 4. சிச்சா | 5. குட்டியமன் |
| | 6. மானிடன் | 7. கிழவி | 8. வியாபாரி | 9. பெண் | |

திறந்த மேடையில் கிச்சா சிச்சா என்ற இரு யமதூதர்கள் பயத்துடன் ஓடிவந்து யமன் வரப்போவதை அறிவித்தல்.

கிச்சா: எல்லாரும் அமைதியா இருங்கோ யமதர்மராஜா வருகிறார்.

சிச்சா: வருகிறாரில்ல வந்திட்டார் சத்தம் போடாதைங்கோ........

கிச்சா: அதுக்கேன் நீ கத்துறாய்? உது யமதர்மராசாவே நன்றாகப் பார்

சிச்சா: ஓ குட்டியமன் இந்த சுட்டியேன் இப்போது வந்தது?

குட்டி: ஏய் வாயிங்கே

சி கி: சொல்லுங்கள் பிரபு

குட்டி: யார் சுட்டி எனது காலைப் பிடித்து விடுங்கள்

- *செயல்*

அவ்வேளை யமதர்மனும் சித்திரபுத்திரனும் மேடைக்கு வருதல்

யமன்: அட்டகாசமான சிரிப்பு (சித்திர புத்திரா

சித்திர: சுவாமி... ?

யமன்: என்ன நன்றாக உறங்கி எழுந்தீரா?

சித்திர: ஆமாம் சுவாமி ஆனால் தாங்கள் நேற்றய தினம் கொண்டு வந்த ஒரு மானிடனால் துயிலவே முடியவில்லை சுவாமி.

யமன்: ஓகோ அவனா அவனுக்கு இன்னும் தண்டனை கொடுக்கவில்லையா?

சித்திர: இல்லை சுவாமி ..

யமன்: சீக்கிரம் இழுத்து வாருங்கள்.

சித்திர: இதோ அழைத்து வருகிறேன்.

யமன்: ஏய் கிச்சா

கிச்சா: வந்தேன் சுவாமி

யமன்: பூலோகத்தில் யாருடன் உனக்கு தொடர்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிச்சா: சுவாமி.....வந்து

யமன்: என்ன வந்தும் போயும் யாருடன் தொடர்பு கொண்டிருக்கிறாய்?

கிச்சா: சத்தியமாக தவறான தொடர்பு இல்லை சுவாமி ..அங்குள்ள

சிச்சா: சுவாமி தாங்கள் உத்தரவுகொடுத்தால் நான் சொல்கிறேன்...

யமன்: ம் சொல்..

கிச்சா: சுவாமி நானே சொல்கிறேன்.

யமன்: சரி சொல்..

கிச்சா: பூலோகத்தில் இப்போது எல்லாமே கணணிமயம் சுவாமி ..எம்மைவிட மானிடர்கள் அதி புத்திசாலிகள்

யமன்: யார் சொன்னது? மடையர்களே...

- *செயல்*

*சித்திரபுத்திரர் ஒரு மனிதனை இழுத்து வருதல்*

சித்திர: சுவாமி இவன் வர மறுக்கிறான்) .குட்டியமன்; சென்று உதவுதல்(

குட்டி: உமக்கு ஒரு மனிதனை கொண்டுவரக்கூட முடியவில்லையா வெட்கம்

யமன்: என்ன உனக்கு அவ்வளவு திமிரா? அழைத்தால் வரமுடியாதா?

மானிடன்: யமதர்மராசாவே ..நான் அப்படி சொல்லேல்ல உங்கட வால் யமன்தான்

குட்டி: ஏய் வாயை மூடு என்ன உளறுகிறாய் ..

கிச்சா: குட்டியமன் அவர்கள் எம்மோடும்

குட்டி: என் தந்தையின் வாகனத்தில் யார் யார்

சிச்சா: ஐயய்யோ பிரபு தங்கள் சிறப்பைப் பற்றி சொல்ல எத்தனித்தோம்.

குட்டி: இவர்கள் என்னை அவமதிக்கிறார்கள்

யமன்: என்ன தூதர்களே வாய்க்கொழுப்பா ..நசித்துவிடுவேன் தெரியுமா?

கிச் சிச்: ஐயோ சுவாமி எங்களை மன்னியுங்கள் .உண்மையை கூற எத்தனித்தோம்

மானிடன்: அடடா ..உதுகளவிட்டிட்டு என்ர விசயத்துக்கு வாங்கோ..

யமன்: ஏய் மானிடா எனக்கு நீயா கட்டளையிடுவது என்னை யாரென்று நினைத்தாய்..

சித்திர: சுவாமி கோபம் வேண்டாம் தயவுசெய்து அமைதியாக இருங்கள்

யமன்: சரி போகட்டும் விடுகிறேன் .சித்திரபுத்திரா இவனது குற்றம் குறைகளைக் கூறும் பார்க்கலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திர: சுவாமி இவனது பெயர் மாணிக்ஸ் ..

மானிடன்: யா ..ஐ எம் மாணிக்ஸ்.

யமன்: என்ன மாணிக்சா அதென்ன மாணிக்ஸ்..?

மானிடன்: அதொண்டுமில்ல மாணிக்கவாசம் என்ற என்ர பேர மாணிக்ஸ் எண்டு சுருக்கிட்டன்

சித்திர: சுவாமி இவன் தன்பெயரை மட்டும் சுருக்கவில்லை பலருடைய சொத்தையும் சுருட்டி வைத்திருக்கிறான்

யமன்: ஆகா சுருட்டியா ...ம் தொடரட்டும்.

சித்திர: சுவாமி சீட்டு என்ற பெயரால் பல மக்களின் பணத்தை அபகரித்தவன் .அத்தோடு வெளிநாடுகளில் அகதியாகியிருக்கும் பலரின் உடமைகளை வஞ்சகமாக திருடியிருக்கிறான் .

மானிடன்: உதுபொய் நான் ஆரையும் ஏமாற்றயில்ல சில ஏமாறுகிறதுகள் இருக்கயில நானென்ன செய்யிறது .காச வட்டிக்கு வாங்கிறதுகள் எனக்கே வால்காட்டுங்கள் அதுக்காக நான் அவையளின்ர பாஸ்போட்ட நகைநட்டுகள வாங்கிறனான்.

சித்திர: பாருங்கள் சுவாமி ..

மானிடன்: யேய் சும்மா இரய்யா நான் சொல்லி முடியேல்ல ..வாங்கின சொத்த அனுபவிக்க விடாம இழுத்துக்கொண்டு வந்திட்டியள்.

யமன்: நீ அதிகமாக கதைக்கிறாய்

மானிடன்: உஸ் சத்தம் போடாதைய்யா இங்க கொண்டு வந்திட்டியள் இனி என்னத்த கத்தினாலும் ஆகிறது ஒண்டுமில்லதானே ..அது சரி யமதர்மராசா நானொண்டு உங்களட்ட கேக்கலாமே..

யமன்: ம் சரி கேள்..

மானிடன்: என்னட்ட இருக்கிறதில பாதியத் தாறன் என்னை விட்டுவிடுறியளா..

யமன்: என்ன லஞ்சமா அதுவும் என்னிடம் !!ஓ இந்த மானிடன் என்னை நிந்தித்து விட்டான் .இவனை உடனே கொதிக்கும் எண்ணையில் போடுங்கள்.

- *செயல்*

*யமதூதர்கள் மானிடனை இழுத்துச்செல்லல்*

சித்திர: சுவாமி மன்னிக்கவும் இப்பொழுது இன்னும் சில நிமிடங்களில் நாம் ஒரு வயோதிப மாதை கொண்டுவரவேண்டும் அவளின் காலம் முடிந்துவிட்டது.

யமன்: ஓ ..அப்படியா யாரங்கே கொண்டுவாருங்கள் எனது வாகனத்தை.

கிச்சா: இதோ உடனே சுவாமி..

சித்திர: சுவாமி அந்த மாதை சில பாவிகள் அடித்து கொலை செய்வதாகவே நமது தீர்ப்பு உள்ளது ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யமன்: என்ன ஆனால் ..தீர்ப்பை யாராலும் மாற்ற முடியாது.

சித்திர: ஆமாம் சுவாமி ஆனால் நாம் செல்ல நாழியாகிவிடுமே..

யமன்: ஆகா ..அருமையானவர்கள் எங்கே போய்த்தொலைந்தார்கள்..

சிச்சா. சுவாமி சுவாமி தயவு செய்து எங்களை மன்னிக்கவும்

யமன்: ஏன் என்ன நடந்தது ..எங்கே எனது வாகனம்

கிச்சா: சுவாமி மன்னிக்கவும் உங்கள் வாகனம் மேச்சலுக்குப் போய்விட்டது.

சிச்சா: சுவாமி ..தங்கள் வாகனம் முன்பைப் போலில்லை .

சித்திர: சுவாமி தாங்கள் சம்மதித்தால் நான் ஒரு கோரிக்கையை முன்வைக்கலாமா?

யமன்: ம் ..சொல் பார்க்கலாம்.

சித்திர: சுவாமி .தாங்கள் தங்கள் எருமையில் சென்று தங்கள் கடமையை ஒழுங்காக செய்ய முடியாது .தாங்கள் பூலோகத்தில் உள்ள மானிடர்கள் வைத்திருப்பது போல் ஒரு யமகா கொண்டா சுசுக்கி என்றோ அல்லது ஒரு குட்டி ஸ்மாட்கார்....

கிச்சா: சுவாமி ..சித்திரபுத்திரர் சொல்வது சரியென நான் நினைக்கிறேன்.

யமன்: சரி நான் வரும் போது கொண்டு வருகிறேன் .எனக்கு தாமதமாகிவிட்டது.
*(யமன் கிச்சா இருவரும் செல்லல்)*

சித்திர: ஏய் சிச்சா வாயிங்கே

சிச்சா: சுவாமி யமதர்மராஜா போனதும் தாங்கள் அவரது ஆசனத்தில் இருப்பது சரியா

சித்திர: எது சரி எது தவறு என்று எனக்குத்தெரியும் .நீ பூலோகத்தில் இருந்து என்ன கொண்டு வந்தாய் அதையெடு .

சிச்சா: சுவாமி ..நான் நான் ..ஒன்றுமே கொண்டு வரவில்லை...

சித்திர: ஆகா என்னிடமே பொய்யா ..

சிச்சா: சுவாமி மன்னிக்க எனக்கோர் அற்ப புத்தி ..மானிடர்கள் கணணியில் தங்கள் காரியத்தை வெகு இலகுவாக செய்கிறார்கள் அதுதான் ..

சித்திர: உண்மைதான் எம்மால் படைக்கப்பட்டவர்கள் எம்மைவிட அறிவாளிகளாக இருப்பது ஆச்சரியம்தான் சரி இதைப்பற்றி நாம் பின்பு பேசிக்கொள்ளலாம் நான் ஒரு அவசர காரியம் செய்யப் போகிறேன் .அவையை பார்த்துக்கொள்.

சிச்சா: ஆகட்டும் சுவாமி

- *செயல்*

*சித்திர செல்லல், சிச்சா தனது எண்ணப்படி நடத்தல்*

சிச்சா: ம் யமதர்மனே .. இப்போது நானே சகலமும்.. ஆகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- *செயல்*

*யமனின் ஆசனத்தில் அமர்ந்தபடி உறங்கல், சற்று நேரத்தில் யமன் வருதல்*

குட்டி: ஆகா அருமை தந்தையே பாருங்கள் தங்கள் சீடனை

யமன்: ஏய் என்ன துணிச்சல் உனக்கு எனது ஆசனத்தில் .. சித்திர புத்திரா ..எடு என் கோதண்டத்தை..

சிச்சா: (சிரிப்புடன்) யார் நீ ..என்ன அதட்டுகிறாயா ..நான் யாரென்று தெரியுமா? (சிச்சா கணணி மனிதனைப்போல் நடக்க மற்றவர்கள் பயந்து பார்த்தல்)

சித்திர: சுவாமி இவனுக்கு என்ன நடந்தது ? இவனேன் .(கிழவி தனது தடியால் சிச்சாவின் தலையில் அடிக்க சிச்சா கீழே விழுந்து பின் எழுதல்)

கிழவி: உவனார் உன்ர உதவியாளே? சும்மா தட்ட சுருண்டு விழுறான் உவங்கள வச்சிக்கொண்டே தொழில் செய்யிற?

கிச்சா: ஏய் கிழவி ..வாயை மூடு

கிழவி: என்ன சொன்னனி கிழவியோ ஆர் நானோ விட்டனெண்டா... ..

யமன்: ஏய் கிழவி அமைதியாயிரு சித்திர புத்திரா இந்தப் பெண்மணியின் விபரத்தைக் கூறுபார்க்கலாம்.

சித்திர: ஆகட்டும் சுவாமி ..இவள் பெயர் தங்கமணிப்பிள்ள .60 வருட வாழ்க்கை இந்த 60 வருடத்துக்குள் இவளாள் ஆன நன்மைகள் தீமைகள் பற்றிய பட்டியலைத் தருகிறேன்.

கிழவி: இஞ்சார் உந்த பட்டியலயும் கிட்டியளையும் விட்டிட்டு நான் கேக்கிற கேள்விக்கு பதிலச் சொல்லு நாகரீகம் வளந்திட்ட இந்த காலத்தில உதென்ன உடுப்பு ஜேமனில கிடக்கிற பெனாக்கள் மாதி ..

யமன்: ஓகோ எம்மில் உனக்கு அவ்வளவு அக்கறையா? பறவாயில்லை ..

சித்திர: சுவாமி இம்மாது ஒரு சாதாரண வீட்டுப்பணிப்பெண் ஆனால் வேலை செய்யும் வீடுகளில் கலகம் மூட்டிவிடுவதில் கெட்டிக்காரி தினம் தினம் யாராவது சண்டை போட்டுக்கொள்ள காரியம் செய்வாள்.

கிழவி: இஞ்சப்பார் சும்மா விசர்க்கத கதையாத சொல்லலிப்போட்டன் .நானென்ன சண்டைக்காரியே? இப்ப சனம் தொட்டதுக்கெல்லாம் வெட்டுறன் குத்துறன் எண்டு நிக்குதுகள் நானேன் கலகம் மூட்டுறன்.

சிச்சா: சுவாமி ..இந்தக்கிழவி அதிகமாக கதைக்கிறாள் தங்கள் வாகனத்தைப் பார்த்து நல்ல கொழுத்த எருமையாம் பங்கு போட்டால் நல்ல லாபம் வரும் என்றாள்.

யமன்: அப்படியா விசயம்

கிழவி: கலோ ஆர் ஆர் கதைக்கிறது ..என்னபிள்ள செய்யிறது நான் வாழவேண்டி வயசில உந்த அறுவாங்கள் உங்க யமலோகத்துக்கு கொண்டு வந்திட்டாங்கள் . என்ன யமனோட கதைக்கப்போறியோ பொறு கேட்டுப்பார்க்கிறன் .இஞ்சப்பு என்ற ரெண்டாவது பெட்ட உன்னட்ட ஏதோ கதைக்கப் போறாளாம் ஒருக்கா என்னெண்டு கேளன் ( பேசியை யமனிடம் கொடுத்தல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavahaham.org

யமன்: யாரது?

குரல்: கலோ யமதர்மராஜாவே என்ன? நான் தங்கமணிப்பிள்ளையின்ற 2 வது மகள் தங்கராணி கதைக்கிறன் .எப்பிடி சுகமா இருக்கிறியளே?.. அதுசரி நீங்கள் உப்பிடி செய்தது சரியில்ல எங்கட வீட்டுக்குப் பக்கத்து வீட்டு ஜேமன்காரி 99 லயும் அங்கயிங்கயெண்டு இழுத்துக்கொண்டு திரியிது அதக் கொண்டு போகாம எங்கட அம்மாவ .. சரி பரவாயில்ல ஒரு முக்கியமான உறுதி சம்பந்தமா அம்மா ஒரு கையெழுத்து போடவேணும் ஒரு நாளைக்கு மட்டும் விட்டுப் பிடிக்க ஏலாதா?....

யமன்: ஏய் என்ன ஏளனமா? சித்திரபுத்திரா இந்தக்கிழவியை அடைத்து வை நான் பின்பு விசாரித்துக் கொள்கிறேன் ( யமன் கோபத்துடன் வெளியேறல்)

சித்திர: கிச்சா ..இழுத்துச் செல் இந்தக் கிழவியை

சிச்சா: சே ..சுவாமி வர வர நமது தொழில் மிக கேவலமாகிறது ..என்னால் தொடர்ந்து இந்தப் பதவியில் நீடிக்க முடியும் என்று நான் நினைக்கவில்லை

கிச்சா: உண்மைதான் ஆனால் நாம் ராஜினாமா செய்தால் யமதர்மராஜா ஏற்பாரா?

சித்திர: ஆகா மதிகெட்டு பேசுகிறீரா? பேசும் நான் வருகிறேன் (செல்லல்)

கிச்சா: சுவாமி தயவுசெய்து நாங்கள் வாய் தவறி பேசியதை கூறிவிடாதீர்கள்.

சிச்சா: ஐயய்யோ யமதர்மராஜாவிடம் சித்திரபுத்திரர் சொல்லிவிட்டால் ..

கிச்சா: பயப்பிடாதே ..அவரே மெச்சுமளவுக்கு நாம் நமது வேலையை திறம்பட செய்வோம்

வியாபாரி: வணக்கம் நீங்கள் நாடக நடிகரா?

சிச்சா: யாரிவன்

கிச்சா: எனக்கெப்படித் தெரியும் யமதர்மர் இல்லாத நேரம் என்ன செய்யலாம் (குட்டியமன் வருதல்)

குட்டி: ஏய் யார் நீ ..எப்படி இங்கு வந்தாய்

வியாபாரி: உஸ் ஏன் இப்ப சத்தம் போட்டு கத்துறியள் ?

குட்டி: ஏய் மானிடா இது பூலோகமல்ல யமலோகம் புரிகிறதா?

சிச்சா: இவனெப்படி இங்கு வரமுடியும் காலம் குறிக்காமல்..

வியாபாரி: உதென்ன புதுக்கதை காலமோ என்ன காலம் இறந்தகாலமோ நிகழ்காலமோ?

சிச்சா: இவனுக்கு புத்தி பிசகிவிட்டது பொறு சுவாமியை தேடிவருகிறேன்.

கிச்சா: ஐயோ என்னை தனியே விட்டுப் போகாதே ..நானும் வருகிறேன் .மானிடர்கள் பொல்லாதவர்கள் .(இருவரும் செல்லல்)

குட்டி: (ஆசனத்தில் அமர்ந்து உரையாடலை கவனித்தல்)

வியாபாரி: சே ..என்ன வாழ்க்கை எவ்வளவு கஸ்டப்பட்டு உழைச்சாலும் நிம்மதியில்ல.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழவி: ஓ ..எப்பிடி நிம்மதி வரும் ஊரார் உழைப்பில காலம் தள்ளினவனல்லே நீ...

வியாபாரி: ஆரது .. தெரிஞ்ச குரலா கேக்குது?

கிழவி: பின்ன தெரியாமல் இருக்குமே.

வியாபாரி: எட தங்கமாக்கா

கிழவி: ஓமோம் தங்கமாக்காதான்

சித்திர: சுவாமி ..இங்கே பாருங்கள் இந்த மானிடர்களை!

யமன்: யார் நீ எப்படி இங்கே வந்தாய்? என் ஆணையில்லாமல் வந்த உன்னை என்ன செய்கிறேன் பார்..

கிழவி: யமதர்மராசாவே கொஞ்சம் பொறுமையா இருக்க வேணும் இவன் எனக்கு தெரிஞ்ச ஊர் பெடியன்தான்.

யமன்: யாரங்கே இந்தக் கிழவியை காவலில் வைக்கச் சொன்னேனே யாரிவளை வெளியே விட்டது.

வியாபாரி: உந்தக்கிழவி யமனுக்கே இரும்பு குடுப்பா இவாவுக்கு ஆரால காவலிருக்க முடியும்?

கிழவி: பாத்தியே உன்ர குணத்த காட்டிப் போட்ட ..

வியாபாரி: என்ன என்ர குணம் சும்மா விசர் கதை கதையாத

கிழவி: என்னடா விசர் கத நாட்டில சனம் சாப்பிட வழியில்லாம கஸ்டப் படுதுகள் அவங்கள் புனர்வாழ்வுக்காரப் பெடியள் வந்தா வீட்டில ஆளில்லையெண்டு பிள்ளையளட்ட சொல்லி விடுரனியல்லே ..

சித்திர: சுவாமி எமது குறிப்பில் இல்லாத விடயமெல்லாம் இவர்கள் மூலமே நாம் அறிந்து கொள்ளலாம்.

யமன்: ஆமாம் சற்று பொறுமையாயிரு..

குட்டி: மனிதர்கள் நன்றாக கதைக்கிறார்கள்

யமன்: மகனே நீ சென்று வெளியே விளையாடு போ (குட்டி செல்லல்) ..

வியாபாரி: நீதான் நாட்டில இருக்க முடியேல்ல அங்க பெடியள் ஒருபக்கம் அடிக்கிறாங்கள் ஆமிக்காரங்கள் ஒருபக்கம் அடிக்கிறாங்கள் எண்டு சொல்லி பொய்யா அசூல் அடிச்சி..

கிழவி: டேய் டேய் நிப்பாட்டு உப்பிடித்தானே உங்க எல்லாரும் செய்கினம் ஆனா உன்ன மாதி ..கலப்படம் செஞ்சி...

வியாபாரி: பொறு பொறு என்ன சொல்லுறாய் கலப்படமோ ..நீயென்ன கண்டனியோ?

கிழவி: யமதர்மராசா நீயே ஒருக்கா கேளப்பு உவன்ர அநியாயத்த..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திர: சுவாமி இவன் உண்மையிலேயே கலப்படம் செய்பவன்தான் மிளகு போலிருக்கும் பப்பாசி விதையை மிளகுக்குள் சேர்த்து விற்றிருக்கிறான் .அது மட்டுமல்ல....

யமன்: அதிருக்கட்டும் அவன் எப்படி எமது அநுமதியில்லாமல் எம்மிடம் வந்தான்.

வியாபாரி: பிள்ளைகளையும் பெஞ்சாதியையும் சும்மா பேக்காட்ட என்னவோ குளிசயொண்ட போட்டன் இப்ப இங்க வந்து நிக்கிறன் .ஆனா இங்கயும் பிரச்சனயில்ல இதிலயே ஒரு கடய போட்டிடலாம் உங்க வாறவைக்கும் உதவும் உங்களுக்கும் பொழுது போகும் .

கிழவி: உவன இங்க தொழில் செய்ய விட்டியளோ எல்லாம் கெட்டிடும்.

வியாபாரி: கிழவி நீ ஓவரா கதைக்கிற ..

யமன்: ஏய் மானிட மடையர்களே உங்களை அங்கம் அங்கமாக அறுத்து கொடும் கழுகுகளுக்கு படைத்துவிடுவேன் வாயை மூடுங்கள்.

சித்திர: சுவாமி முதலில் இந்த மானிடனுக்கு தண்டனை வழங்கப்படவேண்டும் . ஏனென்றால் அவனது கால எல்லை நேற்றோடு முடிவாகிவிட்டது .

யமன்: அப்படியா நடக்கட்டும்..

சுவாமி: மனிதர்களை ஏமாற்றி கொள்ளை லாபம் ஈட்டி பணத்தை குவித்து வைத்த இவனால் ஒருவித பிரயோசனமும் இல்லை .கையேந்தி வந்தவர்க்கு ஒரு சல்லிக்காசு இட்டதில்லை .பசித்து வந்தவர்க்கு பரிதாபப் பட்டதில்லை.

யமன்: கொடுமை கொடுமை மனிதன் மனிதனை மதித்து ஒருவரை ஒருவர் சார்ந்து இன்பமாக வாழவேண்டிய வாழ்வை சுயநலத்தில் புதைக்கும் இவனைப் போன்றவர்களை விட்டு வைக்கக் கூடாது .உடனே இவனை கொதிக்கும் எண்ணையில் இட்டு சிதையுங்கள்.

கிச்சா: உத்தரவு சுவாமி.

வியாபாரி: ஐயா இது கொடுமை !என்னை ஒரு முறையாவது மன்னிக்கக் கூடாதா?

யமன்: ம் ..இழுத்துச் செல்லுங்கள்.

சித்திர: சுவாமி மன்னிக்கவும் எனது கடிகாரம் ஏதோ பிணக்குப் பட்டதால் அடுத்த தங்கள் கடமைக்கு சற்று தாமதமாகிவிட்டது .

யமன்: என்ன உளறுகிறாய் நேரம் தவறாமல் செய்ய வேண்டிய கருமத்தை இப்படி தாமதப் படுத்தி செய்யலாமா?

கிழவி: உது பரவாயில்ல எங்கட சனங்கள் இப்ப நேரத்தப் பத்தி கவலப் படுறதேயில்ல .. ஒரு கல்யாண காட்சியெண்டா என்ன ஒரு கூட்டம் விழாவெண்டாவென்ன எல்லாம் இப்ப நேரமில்லாமதான் நடக்குது .எட ஐஞ்சு பத்து நிமிசமெண்டா பரவாயில்ல மணித்தியால கணக்கிலவெல்லே இழுக்குதுகள்.

சித்திர: சுவாமி இது தமிழர்கள் ஏற்படுத்திக்கொண்ட நிலை 5 மணிக்கு ஒரு நிகழ்வு என்றால் 6 மணிக்கு அல்லது 7 மணிக்கு என அவர்கள் அர்த்தப் படுத்தி யுள்ளார்கள் தாங்கள் இதை கவனத்தில் எடுக்காது..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யமன்: ஆமாம் எங்கே எனது பாசக்கயிறு ..கொண்டுவாருங்கள்

சிச்சா: சுவாமி ..ஒரு சிறு விண்ணப்பம்

யமன்: என்ன

கிச்சா: தாங்கள் பாசக்கயிற்றை வீசி உயிர்களை பிடிப்பதைவிட சுலபமாக உயிர்பிடிக்க நாம் தங்களுக்கு ஒரு உபகரணம் கொண்டுவந்தோம் .

குட்டி: தந்தையே அந்தப் பாசக்கயிற்றை என்னிடம் தாருங்கள்

யமன்: உபகரணமா? எங்கே பார்க்கலாம்.

சிச்சா: இதோ சுவாமி..

சித்திர: சுவாமி இதை மனிதர்கள் இப்பொழுது மிகச் சாதரணமாக பாவிக்கிறார்கள் இதற்கு சுடுகலன் ஏ கே 47 என்று பெயர்.

குட்டி: ஆகா எனக்கு பாசக்கயிறு வேண்டாம் இதுதான் வேண்டும்.

யமன்: ஏ கே 47 சுடுகலனா பார்க்க அழகாக இருக்கிறது.

கிச்சா: சுவாமி அவதானமாக கையாளுங்கள் வெடித்து விடும்.

சிச்சா: சுவாமி பூலோகத்தில் பெரியவர் முதல் சிறுவர் வரை இந்த சுடுகலனால் ஒருவரை ஒருவர் சுட்டுக்கொள்வதால் தங்கள் வேலை சுலபமாகிறது.

யமன்: சரி பார்க்கலாம் எனது பாசக்கயிற்றைவிட இது சுலபமாகத்தான் இருக்கிறது.

சித்திர: சுவாமி .. இவ்வேளை நாம் உடனே..

யமன்: புரிகிறது .கொண்டுவாருங்கள் எனது வாகனத்தை

சிச்சா: உத்தரவு சுவாமி இதோ தங்களுக்கான யமகா மோட்டார்வண்டி .தாங்கள் வரும் போது பூலோகத்திலேயே பெற்றோல் நிரப்பி வருவது நல்லது.

யமன்: என்ன எனக்கே கட்டளையா?

சிச்சா: சுவாமி மன்னிக்க நான் இனி வாய்திறவேன்.

குட்டி: தந்தையே நான் இவர்களுக்கு தண்டனைக் கொடுக்கலாமா?

யமன்: நீ உள்ளே செல்

கிச்சா: ஐயோ அங்கே பாருங்கள் அந்தக் கிழவியை எஜமானின் ஆசனத்தில் படுத்துக் கிடக்கிறாள்.

சிச்சா: ஏய் கிழவி ..எழுந்திரு

கிழவி: ஏன் கத்துறாய் நல்ல கனவொண்டு கண்டன் கெடுத்தப் போட்டாய்.

சித்திர: இவளை உடனே சிறையில் தள்ளுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி கிச்: ஆகட்டும் சுவாமி

யமன்: பெண்ணே வா

பெண்: யார் நீ ஏன் என்னை கூட்டிப் போகிறாய்.

யமன்: நான்தான் யமன் உயிர் அறுவடை செய்வது எனது தொழில்.

பெண்: நான் எங்க இருக்கிறன் இதென்ன ஐயோ எனக்கு பயமா கிடக்கு.

யமன்: சித்திர புத்திரா

சித்திர: வந்தேன் சுவாமி. (யமதூதர்களும் ஓடி வருதல்)

யமன்: எங்கே குறிப்பேடு கொண்டு வாரும் சீக்கிரம்

பெண்: குறிப்பெண்டா டயரியக் கேக்கிறியளோ?

கிச்சா: (சிரிப்பு) அதில்ல குறிப்பேடு ..அது..

யமன்: ம்......(முறைத்தல்)

சித்திர: சுவாமி இவள் ஒரு தரகர் அதாவது ஏஜென்சிக்காரி பெயர் நித்தியக் கலாதேவராணி..

சிச்சா: என்ன அருமையான பெயர்.

சித்திர: ம் குழப்பாதே..

யமன்: ஏஜென்சி என்றால் தரகரா? சரி கூறும்.

பெண்: ஓ இது பெரிய தொண்டு கண்டியளோ எல்லாராலயும் செய்ய முடியாது . அதுக்கெண்டு சில கெட்டித்தனம் வேணும்.

யமன்: அப்படியா? எங்கே உன் கெட்டித்தனத்தைப் பார்ப்போம்.

சிச்சா: சுவாமி மன்னிக்கவும் மேச்சலுக்குப் போயிருந்த தங்கள் வாகனமான எருமை வந்து நிற்கிறது....

சித்திர: ஆ முட்டாள்களே சுவாமியின் கோபத்துக்கு ஆளாகாமல் ஒதுங்கி நில்லுங்கள்.

யமன்: சித்திரபுத்திரா என் அனுமதியில்லாமல் போன அந்த கழுதையை கட்டிப்போட்டு உணவு கொடுக்காமல் வற்றவிடுங்கள்.

கிச்சா: சுவாமி அப்படியே செய்கிறோம் ஆனால் ஒரு சிறு விண்ணப்பம் .

யமன்: என்ன

கிச்சா: அது கழுதையல்ல எருமை..என்பதை...

யமன்: அடே முட்டாளே எனக்குத் தெரியாதா ..போய் சொன்னதை செய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்: ஓகோ நீங்கள் எருமையை கழுதையெண்டுதான் சொல்லுவீங்களோ?

யமன்: பேசாதே ..வாயை மூடு

பெண்: என்ன இது கொடுமை மனிசனுக்கு பேச்சு சுதந்திரம் கூட இல்லையா?

சித்திர: நீ பேச வேண்டிய இடம் பூலோகம் இங்கல்ல

பெண்: எங்கயெண்டா என்ன மனிசன அடக்கி வைக்க முடியாது.

கிச்சா: மனிதருக்கு மட்டுமே அந்தப் பிரச்சனை..

சித்திர: சுவாமி அடக்குதலைப் பற்றி பேசும் இவள் பல மக்களின் வாழ்க்கையை நாசமாக்கியவள் .மக்களை வீட்டுக்குள் அடைத்து வைத்து..

பெண்: சும்மா கதையாதையும் ஏஜென்சி வேலையெண்டா சும்மா லேசுபட்ட விசயமில்ல சிலோனில இருந்து ஒராள ஜேமனிக்கு கொண்டுவாறதென்றத ஒருக்கா யோசிச்சுப்பாரும்..

யமன்: சரி அதை ஒரு தொண்டு என்கிறாயா? மனிதாபிமானமாகவா செய்தாய்

சித்திர: சுவாமி இந்தப் பெண்ணால் பாதிக்கப் பட்டவர்கள் ஏராளமானவர்கள் ஒரு கோழியைக் கொடுத்து 30 பேரை சாப்பிடச் சொல்லியிருக்கிறாள். குளிக்க வசதியில்லாத தமது அன்றாட தேவையைக் கூட பூர்த்தி செய்யமுடியாத ஒரு வீட்டுக்குள் 3 மாதங்கள் அடைத்து வைத்திருந்திருக்கிறாள் .

பெண்: உதென்ன பெரிய குற்றமே? வெளிநாட்டுக்கு வாறதெண்டா உதெல்லாம் அநுபவிக்கத்தான் வேணும் வெளி நாடெண்டா சும்மாவே

சிச்சா: குளிப்பதென்றால் என்ன..

கிச்சா: அதுதான் தண்ணீரில் விழுந்துகிடப்பது

சிச்சா: ஓ எமது எருமையைப் போலா..

கிச்சா: உஸ் சத்தம் போடாதே ..பிறகு சுவாமி எங்களை குளிக்கும் படி கூறிவிடுவார்.

யமன்: பரவாயில்லை நீ நன்றாக கதைக்கிறாய் நல்ல வாயாடி

பெண்: வாயில்லையெண்டா வாழமுடியுமே

யமன்: எங்கே நான் கேட்கும் கேள்விகளுக்கு பதில் கூறு பார்க்கலாம்

பெண்: தாராளமா ஆனா நீங்கள் கேக்கிற கேள்விகளுக்கு நான் சரியா பதில் சொல்லிட்டால் என்ன தருவியள்?

யமன்: தருவதல்ல பிரச்சனை உனக்கான தண்டனைப் பற்றித்தான் பிரச்சனை

சித்திர: சுவாமி கேள்விஞான புத்தகத்தை கொண்டு வரட்டுமா?

யமன்: ம் ..வேண்டாம் இது பொதுக்கேள்வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிச்சா: அப்படியானால் பொதுப் பரீட்சையாக்கும்.

யமன்: ம் சித்திரபுத்திரா எடு என் கோதண்டத்தை..

கிச்சா: சுவாமி சுவாமி அடியேனை மன்னித்துவிடுங்கள்...

சிச்சா: சுவாமி தங்கள் கோதண்டத்தை ஏலவிற்பனைக்கு வைத்திருக்கிறோம்.

சித்திர: இவர்கள் இப்போது தமது கடமையை ஒழுங்காக செய்வதில்லை..

யமன்: எப்படி யாரால் ஏற்பாடு செய்யப்பட்டது ஏலவிற்பனை

சித்திர: தெரியவில்லை சுவாமி மானிடர்களுக்கு முன்னால் எமது பிரச்சனைகளை தவிர்ப்பது நல்லது என நான் நினைக்கிறேன் இனி தங்கள் சித்தம்.

பெண்: உங்களுக்குள்ளேயே பிரச்சனையெண்டா..நீங்கள் எப்படி

யமன்: சரி அதைப்பற்றி பின்பு பார்க்கலாம் .பெண்ணே சொல்பார்க்கலாம்

பெண்: கேள்வியே இன்னும் வரவில்லையே

குட்டி: தந்தையே நானும் கேட்கலாமா?

யமன்: நீ உள்ளே போ) செருமலுடன் (பிரிக்கக்கூடியது என்ன

பெண்: அரிசியில் கல்

யமன்: பிரிக்கமுடியாதது என்ன?

பெண்: ஈரும் பேனும்

யமன்: சேர்ந்தே இருப்பது

பெண்: செங்கல் தூளும் செத்தல்மிளகாய்த்தூளும்

யமன்: சேராதிருப்பது

பெண்: ஓடும் புளியும்

யமன்: கூடிக்கெடுப்பது

பெண்: வொட்காவும் இறைச்சிப் பொரியலும்

யமன்: தேடிக்கெடுப்பது

பெண்: பெண்ணும் புறணியும்

சித்திர: அழியாதிருப்பது

பெண்: அதூலடித்த ஆரம்ப கையடயாளம்

சித்திர: அழிக்கப்படுவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்: கடவுச்சீட்டும் கள்ளப் பாஸ்போட்டும்

யமன்: தேடிக்கொள்வது

பெண்: சொத்தும் சோம்பேறித்தனமும்

சித்திர: தேடாமலே வருவது

பெண்: இருமலும் தும்மலும்

யமன்: தேடிவருவது

பெண்: யமனும் பாசக்கயிறும்

சித்திர: தேடாதிருப்பது

யமன்: போதும் போதும் நீ புத்திசாலி உன்னை நான் மெச்சுகிறேன் நீ மீண்டும் பூலோகத்தில் ஒரு கிளியாக பிறந்து பேசித்திரிவாயாக (இழுத்துச் செல்லல்)

குட்டி: இல்லை இல்லை இவள் புத்திசாலியில்லை எனது கேள்விக்கு பதில் தரவில்லை . நான் வருகிறேன். (செல்லல்)

சித்திர: சுவாமி கிளியாக பிறந்து எப்படி பேசித்திரிய முடியும்?

யமன்: உஸ் சத்தம் அவளை தொடர்ந்தும் பேசவிடக் கூடாது பின் எம் தொழிலுக்கே ஆபத்தாகிவிடும்

கிச்சா: சுவாமி சிறையிலிருந்த அந்தக்கிழவியைக் காணவில்லை

சிச்சா: குட்டியமன் பிரபு அவர்கள் கிழவியுடன் ஏதோ பேரம் பேசிக்கொண்டிருந்தார் .

யமன்: என்ன? உடனே தேடுங்கள் அவர்களைத் தேடுங்கள் தண்டனையிலிருந்து யாரும் தப்ப முடியாது சீக்கிரம் திரையை மூடுங்கள் .குட்டியமனை எங்கிருந்தாலும் என்னிடம் கொண்டுவாருங்கள்.

*நிறைவு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பானைப்பத்திரம்

நாடகவகை: நகைச்சுவை நாடகம்

களங்களின் எண்ணிக்கை: 1.

திறந்தமேடை- இரவுக்காட்சி

| கலைஞர்கள் | 1. தாய் | 2. தந்தை | 3. தீகன் | 4. புவனா | 5. சிவகாமி |
|---|---|---|---|---|---|
| | 6. தம்பி | 7. மெனிக்கே | 8.காமினி | 9..உதவியாள் | 10. பிக்கு |
| | 11.இநிதியா | 12. வெளிநாட்டார் 1, 2 | | | |

*திறந்தமேடையிலே சிலபிள்ளைகள் விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். அவ்வேளை தாயின் குரல் கேட்க பிள்ளைகள் ஓடி மறைந்துகொள்ளுதல்.*

தாய்: பிள்ள சிவகாமி... தம்பி டேய்.... எங்க போட்டுதுகள் பொழுது மங்கிற நேரம்...

- *செயல்*

*பிள்ளைகள் மறைந்திருப்பதையும் அவர்கள் இருந்த கோலத்தையும் கண்டு பேயென பயந்து கத்தல்*

தாய்: சே.... என்ன இது விளையாட்டு அம்மா பயந்துபோனன்

தீகன்: என்னம்மா இதுக்கு பயப்பிடலாமே..

தாய்: அது சரி உதென்ன? அட புவனா மாமிக்கு தைச்ச உடுப்புகள் ஐயோ பிள்ளைகள் கழட்டுங்கோ ..

புவனா: என்னடி ..உதுகளின்ற கோலம் என்ன செய்திருக்குதுகள்.

- *செயல்*

*பிள்ளைகள் சட்டென அம்மாவின் சேலையொன்றை எடுத்து போர்த்திக்கொண்டு ஓரமாய் படுத்துக் கொள்ளல்*

தாய்: பாருங்கோ புவனாக்கா தைச்சுவச்ச உடுப்ப செய்திருக்கிறத..

புவனா: சரி விடு அதுகள் சின்னன்கள் நீ பிறகு கழட்டி மடிச்சுத்தா இந்தா இது நான் இடிச்ச அவல் பிள்ளையளுக்கு செய்து குடு .அதுகள் இப்பவே பொங்கலின்ர கலாதில நிக்குதுகள் .

தாய்: பாருங்கோ ..பிள்ளையள் உதென்ன பழக்கம் உடுப்பெல்லோ கழட்டச்சொன்னன்..

புவனா: அதுகளுக்கு ஆச கொஞ்ச நேரம் போட்டிருக்கட்டும் விடு ..சரி ..எனக்கு நேரமாகுது நான் போட்டுவாரன்.

தாய்: சரியக்கா நான் தம்பியட்ட உடுப்ப குடுத்துவிடுறன் *(புவனா வெளியேறல்)* இந்தப் பிள்ளையளுக்கு கொழுப்பு கூடிட்டுது. அப்பர் வரட்டும்..... நல்லா படுங்கோ..

- *செயல்*

*பொழுது மயங்க இருள் கசிகிறது. தந்தை வருதல்.*

தாய்: ஆரது .. ஆரது ...ஆர் நீங்களா..?

தந்தை: இல்ல நான்தான்; பேய்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்: ஐயோ பேயா ..டேய் தம்பி பேய் வருதாம் பிள்ள எழும்புங்கோ ..

தீகன்: எங்க ..எங்க (கையில் கிடைத்த தடியொன்றை எடுத்துக்கொள்ளல்)

சிவகாமி: பேய தடியால அடிக்கலாமே ..நெருப்பாலதான் சுடவேணும்.

தம்பி: ஏய் பேயே ஓடிப்போயிடு ..

தாய்: உஸ் ..சத்தம் கிட்ட கிட்ட கேக்குது ..பூமணிக்கிழவிதான் போனகிழம செத்தவா....

- *செயல்*

*தந்தை உள்ளே வர தாய் பிள்ளைகள் பாய்ந்து ஒரே நேரத்தில் அடித்தல்*

தந்தை: ஐயோ அடியாதைங்கோ அது நான் ..அடேய் நான் அப்பா..

- *செயல்*

*பிள்ளைகள் தாய் அடிப்பதை விட, தந்தை மூச்சுவாங்கிக் கொண்டே சொல்லுதல்*

தந்தை: நான் என்ன பேய்மாதிரியே இருக்கிறன் நாளைக்குத்தான் பொங்கல் எனக்கு இன்றைக்கே பொங்கல். கொண்டுவந்த சாமான்கள் என்னபாடோ...

தாய்: கோவியாதைங்கோ நீங்கள் நான்பேய் என்றீங்கள் அதுதான்

தந்தை: அதென்ன பேய் தான் வாறது போறது ஊர்பேர் விலாசமெல்லாம் சொல்லிக் கொண்டே வரும்

சிவகாமி: அப்பா பொங்கலுக்கு என்ன வாங்கியாந்தனீங்கள்?

தந்தை: ஓ..... நல்லா அடிச்சுப்போட்டு கேளுங்கோ

- *செயல்*

*சிவகாமி தடியைத்தேடுதல் தடியை எடுத்துக்கொண்டுவந்து தந்தையை அடித்தல் பின்*

தந்தை: ஐயோ பிள்ள சிவகாமி அடிக்காத..

தாய்: பிள்ள ஏன் அப்பாவ அடிக்கிறாய்?

சிவகாமி: அப்பாதான் சொன்னவர் நல்லா அடிச்சுப்போட்டு கேள் என்று.

தந்தை: என்ன பொருத்தம் தாய்க்கும் மகளுக்கும் ..உனக்கு அறிவிருக்கே

தாய்: அது இருந்தால் ஏன் உங்கள கட்டுறன்

தந்தை: சரி சரி விடிந்தால் பொங்கல் பிள்ளையல் சாப்பிட்டினமா

தாய்: ஓ ..பிள்ளையள் வாங்கோ வந்து படுங்கோ (எல்லோரும் படுத்தல்)

- *செயல்*

*தீகன் மெதுவாக எழுந்து தவழ்ந்து சென்று தந்தை வாங்கி வந்ததை களவாக பார்த்தல் .அதைக் கண்ட சிவகாமியும் தம்பியும் பின் தொடர்தல்.*

சிவகாமி: அண்ணா என்ன செய்யிறீங்கள் அம்மாட்ட சொல்லட்டே..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீகன்: உஸ் ..சத்தம்போடாதைங்கோ ..தம்பி நீங்கள் போய்படுங்கோ

தம்பி: ஏன்? பிறகு அப்பாட்ட சொல்லுவன்.

தீகன்: சரி சரி சத்தம் பொடாதைங்கோ

சிவகாமி: அண்ணா ஆரோ வருகினம் போல சத்தம் வருது ..

தீகன்: சரி அப்பிடியே படுங்கோ ..உஸ் சத்தம் போடாதைங்கோ

- *செயல்*

*சிறுவர்கள் அப்படியே படுத்துக்கிடத்தல் வேறு ஒருசாரார் களவாக குறித்த வீட்டை நோக்கி வருதல்.*

பிக்கு: பொடிமெனிக்கே ..நாளைக்கு அவங்கள பொங்கவிடாம செய்தா நல்லதுதானே..

மெனிக்கே: ஒவ் ஆனா எப்பிடி போறது பயமா இருக்கிறது

உதவி: நான் பாத்திட்டுவாரன் (செல்லல்)

காமினி: அக்கே நீங்க போகாதீங்க ..பொடிநோனா நீங்க போய் பாத்திட்டு வாங்க.

- *செயல்*

*உதவி பயந்து பயந்து படுத்திருப்பவர்களின் அருகே வந்து பார்த்தல் சிறிது நேரத்தில் அவர்களைக் கூப்பிடுதல்*

உதவி: எல்லாரும் படுத்திட்டினம் வாங்கோ...

- *செயல்*

*சத்தம் கேட்டு தாய் எழுந்து பார்த்தல் உதவியாள் விழுந்து படுத்தல்*

தாய்: இஞ்ச என்ன சத்தம் கேட்டியளே..

தந்தை: உனக்கு கனவிலயும் பேய்ப் பயந்தான் பேசாமல் படு (படுத்தல்)

உதவி: எல்லாரும் படுத்திட்டினம் வாங்கோ

பிக்கு: இப்படி சத்தமாவே கத்துரது ..சரி நீ ஆக்கள பாத்துக்கொள் ..பொடிமெனிக்கே .. நீங்களே எடுங்கோ ..

மெனிக்கே: சரி பின்னால பிடிச்சுக் கொள்ளுங்கோ ..விட்டுராதைங்கோ நான் தேடி எடுக்கிறன் . (எதையோ தேடுதல்)

பிக்கு: மெனிக்கே கிடைச்சிட்டுதா?

காமினி: அக்கே வடிவா தேடிப்பாருங்கோ நாங்கள் வடிவா பிடிச்சுக்கொள்ளுறம்.

மெனிக்கே: காணயில்ல ..எங்க வச்சிருக்கினம்

காமினி: நான் தேடிப்பாத்து சொல்லட்டே..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிக்கு: இல்ல இல்ல அத மெனிக்கேதான் எடுக்கவேணும் அவர்தான் சகல வல்லமையும் உள்ளவர்.

உதவி: உண்மதான் அவா தேடிக் கண்டுபிடிச்சிருவா ..ஆனா என்னத்த தேடுறா?

மெனிக்கே: தேரர் நாங்கள் என்னத்த எடுக்க வந்தனாங்கள்.

உதவி: அது தெரியாமல் எப்பிடி தேடுறது தேடி எடுக்கிறது?

பிக்கு: அது சரி மெனிக்கே என்னத்த தேடுறீங்கள்

மெனிக்கே: தெரியேல்ல என்னத்த எடுக்கிறது..

காமினி: அக்கே விடியப்போகுது கெதியா எதையாவது எடுங்கோ

பிக்கு: ஓ ..பிறகு எங்கடையெண்டு சொல்லலாம்.

உதவி: இது நல்லகத இப்பிடித்தான் யார்டையும் பொருள எடுத்துப்போட்டு பிறகு தங்கடயென்று சொல்றது..

பிக்கு: ஏய் என்ன புறுபுறுக்கிறாய்.

உதவி: ஒன்றுமில்ல நாளைக்கு உவைய பொங்க விடக்கூடாது பானைய களவெடுப்பம்

மெனிக்கே: சரி கண்டுட்டன் ஆனா பானை வரமாட்டுதாம்.

உதவி: பானைய கூப்பிட்டா வராது மெனிக்கே எடுங்கோ

காமினி: அக்கே ..விடியப்போகுது ..எனக்கு பயமா இருக்கு ..

மெனிக்கே: தேரர் பானைய எடுக்க முடியேல்ல கையவிட்டு உள்ள என்ன இருக்கு என்று பாக்கிறன் (பானையுடன் சிறிது போராடல்)

பிக்கு: மெனிக்கே விடிஞ்சிட்டுது *(படுத்தவர்கள் எல்லோரும் எழுந்து பார்த்து திகைத்தல் அத்தோடு பானையை பிடித்து இழுபறிபடுதல்)*

தந்தை: ஏய் யார் நீ ..எப்படி இஞ்ச வந்தனி ..

தாய்: ஓ ..பாருங்கோவன் அவான்ர இத எங்கட பானைய எடுக்க வந்திருக்கிறா..

மெனிக்கே: இது என்ர பானை ..விடு..

தாய்: உன்ர பானையோ விட்டனென்றால்..

உதவி: பானைய இப்பிடி பிடிச்சுக்கொண்டு ஆளாளுக்கு சண்டைபிடிச்சா பானைதான் உடையும்

தாய்: பானை எங்கடதான் இவா வந்து திருடினவா

மெனிக்கே: இல்ல இது என்ற பானை ஆனா இவா தன்ரை என்று உரிமை கொண்டாடுரா

பிக்கு: ஓ இது இவான்ரதான் எங்களுக்கு தெரியும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- செயல்

  இந்தியா, வெளிநாட்டவர் வருதல் ( முகமூடி அல்லது உடைமூலம் காட்சிப்படுத்தல்)

உதவி: ஐயய்யோ வெளியாக்கள் வருகினம் மானம் போகப்போகுது

தந்தை: அது இருந்தாதானே ..எங்கட பொங்கல் பானைய களவெடுத்துப்போட்டு....

காமினி நீங்கள் நியாயவாதிகள். நீதி நியாயம் தெரிஞ்சவை இங்கே வாருங்கள்.

தந்தை இது எங்கட பானை இது எங்கட வீடு இவை இங்க வந்து களவெடுத்துப்போட்டு இப்ப ஆர வைச்சி என்னத்த விசாரிக்கப்போகினம்.

தீகன் பச்சத்திருட்டு பானைய குடுத்திட்டுப்போங்கோ..

இந்தியா தம்பி கொஞ்சம் பொறுங்கோ, நாங்கள் பக்கத்து வீட்டுக்காரர் எங்களில உங்களுக்கு நம்பிக்க வேணும். இஞ்ச பாருங்கோ... இவர் வெள்ளையா இருக்கிறார் பொய் பேசமாட்டார்.

பிக்கு முதலில் விசாரிங்கோ... இது எங்கட பானை....

- *செயல்*

*இந்தியா, வெளிநாட்டவர் பானையையும் ஆட்களையும் சுற்றிச் சுற்றிப் பார்த்தல்.*

வெளியார் 1: பானைக்குள்ள எப்பிடி கை போனது (செயலில் பானையையும் கையையும் விடுவிக்கப் பார்த்தல்)

இந்தியா: பானை அவாவின்ர கையிலதான் இருக்கு அப்ப அவாவின்ரதானே... (வெளிநாட்டவரைப் பார்த்து) இத நாங்கள் பாக்கிறம் நீங்கள் போங்கோ

வெளியார் 2: இல்ல இல்ல நீங்கள் இவையின்ர வீட்ட வந்துதானே எடுத்திருக்கிறீங்கள்..

பிக்கு: இது எங்கட பிரச்சனை நாங்கள் பாத்துக்கொள்வோம் நீங்கள் உங்கட வேலையப் பாருங்கோ..

தந்தை: இல்ல நீங்கள் இருங்கோ இவையின்ர சுரண்டல் எல்லாருக்கும் தெரியவேணும்

மெனிக்கே இது எங்கட பானை எங்கட கையில இருக்கு. வீணான குழப்பம் வேண்டாம்.

காமினி: அக்கே பானை எங்கட ஆர்வந்தாலும் விடாதைங்கோ

இந்தியா:: ஓ ..நாங்கள் இருக்கிறோம் இது உங்கடதான் விடாதைங்கோ

வெளியார் அப்ப நாங்கள் என்ன செய்யிரது..... பாத்துக்கொண்டிருக்கிறதா.

பிக்கு ஆமாம் கண்ண மூடிக்கொள்ளுங்கோ..... நான் பௌத்த மதகுரு

வெளியார் ஆகட்டும் புத்தர் அகிம்சை சொன்னவர், அமைதி காத்தவர், அன்பானவர், அவர் வழி உங்களை மதிக்கிறோம்.

தந்தை அறியாதவர்கள் புரியாதவர்கள் தெரியாதவர்கள் பாவம்... இவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்: சரி பாப்பம் பிள்ளையள் விடாதைங்கோ

தந்தை: ஓ ..இன்றைக்கு ஒரு கை பாத்திட்டுத்தான் மற்ற வேல..

உதவி: உங்களுக்கு ஒரு சின்ன பானையத்தாரம் பேசாம விட்டுடுங்கோ

தீகன்: எங்கடபானைதான் எங்களுக்கு வேணும்
சிவகாமி: ஓ வேற பானை எங்களுக்கு வேண்டாம்

மெனிக்கே: பானைய விடாட்டா வீணான பிரச்சனை வரும்

பிக்கு: ஓ ..பிறகு வீண் விளைவுகள சந்திப்பியள்.

தந்தை: பரவாயில்ல விளைவுகள் வரட்டும் பாப்பம்

உதவி: மெனிக்கே அவங்கள் உசாரா இருக்கிறாங்கள் பேசாமல் விட்டுடுவம்

காமினி: உனக்கு முதல் அடி போடவேணும் வாய மூடு

பிக்கு: இதில யாரும் தலையிட வேண்டாம் மெனிக்கே கை போனால் பரவாயில்ல நீங்கள் இழுங்கோ

காமினி: அக்கே இழுங்கோ *(இழுத்தல்)*

தாய்: பிள்ளையள் விடாதைங்கோ பானைபத்திரம் இழுங்கோ..

வெளி இந்: உங்களுக்கு அறிவிருக்கா சாதாரண பானைக்காக சண்டையா பேசாமல் விட்டுடுங்கோ

வெளியார் 1: இல்ல இது நியாயம் இல்ல

வெளியார் 2: ஓ ..

உதவி: ஓ கையா பானையா

வெளியார்: ஒரு கத்திய கொண்டு வாருங்கள்

பிக்கு: ஏன்

வெளியார் 1: கைய வெட்டி பானைய எடுப்பம்

மெனிக்கே: என்ன கைய வெட்டுறதோ

காமினி: பிறகு கைய எப்பிடி எடுக்கிறது?

உதவி: பானைய உடைச்சித்தான்.... அதுதான் தீர்ப்பு

- *செயல்*

*பானையையும் கையையும் பார்த்து இடையே வெட்டுவது போன்ற பாவனை*

பிக்கு காமினி: பரவாயில்ல இன்னொரு கை இருக்குத்தானே ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்: ஓ ..மற்ற கைய இன்னொரு பானைக்கு விட தேவைதானே..

மெனிக்கே: ஐயோ ..என்ர கை ..

தந்தை: பரவாயில்ல அதுதான் 2 கை இருக்கே..

வெளி இந்: இது நியாயமில்ல ஓர வஞ்சகம்

வெளியார் 2: ஓ.... இன்னொரு பானைக்க உங்கட கையவிடுங்கோ வஞ்சகமில்லாமல் தீர்ப்பம்

உதவி: உவையாள ஒருபிரயோசனமும் இல்ல இவைதான் துரோகம் செய்யிறவை..

தீகன்: எங்கட பானையத் தாருங்கோ நாங்கள் பொங்க வேணும்

வெளியார் 1: சரி கைய வெட்டுவம்

மெனிக்கே: இல்ல இல்ல வெட்டாதைங்கோ...என்ர கை வெளிய வரமாட்டுதாம்

தாய்: உள்ளுக்கு கையில என்ன இருக்கு அத விட்டா கை தானா வரும்

வெளியார் 2: சரி கைய விட்டிட்டு ஒழுங்கா உங்கட வீட்ட போங்கோ

பிக்கு: இதும் எங்கட வீடுதான்

தாய் : அடி செருப்பால *(பிக்கு காமினி மெனிக்கே ஓடுதல் உதவியாள் வேறு திசையில் ஓடுதல்)*

தந்தை: பக்கத்தில இருந்து நியாயம் சொல்லாத நீங்கள் யார்? பிறகு உங்களுக்கேன் எங்கட விசயத்தில மூக்கு நீளுது

தாய்: பிள்ளையள் உயிர் போனாலும் பரவாயில்ல பானைய விட்டுடுடாதைங்கோ.சரி இப்ப காப்பாத்திட்டியள் வாங்கோ பொங்கல் பொங்குவம்

- *செயல்*

*எல்லோரும் மகிழ்வாய் பொங்கல் பொங்குதல்.*

*நிறைவு*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரங்கள்

நாடகவகை: குமுக நாடகம்

களங்களின் எண்ணிக்கை: 1.

திறந்தமேடை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கலைஞர்கள் | 1. தேவதை | 2. அனர்த்தம் | 3. அம்மா | 4. அப்பா | 5. மகள் |
| | 6. தம்பி | 7. தாய் | 8. ஒருவர் | 9. பெண் | 10. விது |
| | 11. சிறுவன் | 12. சிறுமி | 13. அசரீரி | | |

- செயல்

*தேவதை மேடையில் இழுத்து வரப்படுகிறாள். அவளை ஒரு மனிதன் சாட்டையால் அடிக்கிறான். தேவதை அழுது புலம்புகிறாள்*

தேவதை: போதும் போதும். இனி எங்களால் தாங்க முடியாது.....நாங்கள் வெகுவாக நொந்து போனோம். போதும் போதும்.....

அனர்த்தம்: *(சிரிப்பு)* போதுமா? எப்படி போதும்? அடிமையாய் உங்களை துடிக்க வைத்தது போதுமா?

தேவதை: ஆமாம் போதும். வல்லமை பெற்று மானுடம் வென்ற எங்களுக்கு இனி எந்தத் துன்பமும் வேண்டாம்.

அனர்த்தம்: எப்படி போதும் !அறுகுபோல் வேர் கொண்டு ஆல்போல் விழுதாகும் உங்கள் வலுவை இதோ சுனாமி எனும் பெயரால் நையப்புடைக்கிறேன்.

தேவதை: ஓ... அழிவும் அனர்த்தமும் எம்மை நோகடித்து சாகடிக்கிறதே... ஐயகோ... எம்மையார் காப்பார்.

- *செயல்*

*தேவதை அனர்த்தம் மேடையில் அசவற்று நிற்க மேடையின் ஒரு பக்கமாக படுத்துக் கிடக்கும் மனிதனின் நினைவுகளாக... தொடரும் காட்சி.*

*நினைவுக்காட்சிக் கலைஞர்கள் வெள்ளை ஆடையில் காட்சித்தருதல்*

அம்மா: இஞ்சேருங்கோ எழும்புங்கோ. எங்கேயோ அவசரமாக போக வேணுமெண்டியள். இப்ப படுத்துக் கிடக்கிறியள். எழும்புங்கோ.

அப்பா: உஸ்....சத்தம் போடாதேயும் .ஆள் குறட்டை மட்டும் தான் விடேல.

மகள்: அப்பா நானும் படுக்கப் போறன்.

அப்பா: தம்பிய எழுப்பிப் போடாம இஞ்சால வா.

அம்மா: ஏய்... லூசு ...எழும்படி ...எழும்பி அம்மாவிற்கு கொஞ்ச வேல செய்து தா.

அப்பா: என்ர பிள்ள லூசோ?

அம்மா: நீங்க முழு லூசு .உங்கட பிள்ள அரை லூசு.

மகள்: அப்பா ஆரப்பா முக்காலூசு?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பி: அம்மா தான்....

அம்மா: டேய்....படவா நான் முக்காலூசோ? பொறு கொப்பர் போன பிறகு வருவாயல்லோ.

தம்பி: அச்சா அம்மா.

அப்பா: பாத்தியே கட்சி மாறிட்டான் .உன்ன....

அம்மா: சரியப்பா வேளைக்கு போட்டு வாங்கோ.

- *செயல்*

*நினைவுத்திரும்பியவரின் பதற்றமான காட்சி நினைவுக்காட்சி கலைஞர்கள் வெளியேறல்*

ஒருவர்: என்ர பிள்ளையள் எங்க? என்ர மனிசி எங்க? போட்டு வாங்கோ எண்டு என்ன அனுப்பிப் போட்டு நீங்க எல்லாரும் போட்டியளே.....

- *செயல்*

*புத்திப் பேதலித்தத் தாய் ஒருவர் ஒரு பொம்மையை வைத்துக்கொண்டு அதை தன் மகவாக எண்ணி நடித்தல்*

தாய்: என்னடா பிள்ளைக்கு நித்திரை வந்துட்டுதே. ஓ..... அழாதையடா செல்லம். நீ அழுதா அம்மாவும் அழுவேனல்லே. (மேடை, அவையோரை பார்த்து ) உஸ்.....சத்தம் போடாதேங்கோ பிள்ள நித்திரை கொள்ளுறான் ! மோடுகள் !சரி சரி நீ படு என்ர செல்லம்.

- *செயல்*

*கீழே வளர்த்தி விட்டு வேறு பக்கம் பிள்ளையை தேடுதல்*

தாய்: எங்க என்ரபிள்ள ஆர் கொண்டு போனது ஐயய்யோ !என்ர பிள்ள. நீ இங்கேயா இருக்கிறாய் ? அம்மா பயந்திட்டன்.

- *செயல்*

*தாய், ஒருவர் மேடையில் அசையாது நிற்க தேவதை அசைதல்*

தேவதை: இதென்ன கொடுமை .இறந்து விட்ட தன் மகனை நினைத்து பேதலித்து விட்டாளே இந்தத் தாய்....

- *செயல்*

*பெண்ணொருத்தி வருதல்உடன் சிறுமி, சிறுவன் கூடவருதல். ஏனையவர்கள் அசையாது நிற்றல்*

பெண்: இது தான் என்ர அக்கா. இது என்ர அம்மா, அப்பா. அக்கா எல்லைப்படை வீரராய் இருந்து மாவீரராய் போய்ட்டா .எனக்கு இப்ப யாருமேயில்ல. தங்கச்சி எழும்புங்கோ.

சிறுமி: அக்கா.... இன்னுமொருக்கா சுனாமி வருமா? எங்கட வீட்டில எல்லாரும் தண்ணியோட போட்டினம்.

- *செயல்*

*சிறுவன் மேடையில் கிழிந்த சட்டையோடு கூனிக் குறுகிக்கிடத்தல்...பின் மெதுவாய் எழுந்து தன் உறவுகளைத் தேடுதல்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவன்: அம்மா அம்மா....எங்க நிக்கிறீங்கள்? அப்பா.... அப்பா... இப்ப நான் மட்டும் தான் இருக்கிறன். என் அம்மா அப்பா அக்கா எல்லாரையும் தண்ணி கொண்டு போட்டுது.

- *செயல்*

*தேவதை அசைதல். ஏனையவர்கள் அசையாது நிற்றல்*

தேவதை: அழிவுகள் இழப்புகள் பிரிவுகள் துயரங்கள் துன்பங்கள் இயற்கையாலும் அழிவு, யுத்தத்தாலும் அழிவு. ஏன் எங்களுக்கு இப்படி ஒரு தொடர் கதை.

அசரீரி: ஆமாம் தொடர்கதை .தொடர்கதைக்கு முடிவுரை எழுத விடுதலை வேண்டும்.

தேவதை: எப்படி இது இயற்கை அழிவு?கடலன்னை ஏன் எமை காவு கொண்டு விட்டாள்?

அசரீரி: எதையும் வெல்லும் சக்தி எம்மக்களிடம் இருக்கிறது.

தேவதை: புரியவில்லை !இது விதி தானே.

அசரீரி: விதியா? அப்படியென்றால்? ம்.... விதியென்றிருந்தால் உன் மண்ணில் விடுதலை துளிர் விட்டிருக்குமா?

- *செயல்*

*புலம் பெயர் நாட்டில் ஒரு குடும்பத்தில் நடைபெறும் நிகழ்வு*

அப்பா: விது எங்கடியம்மா ரிமோட்கொன்றோல்?

விது: தம்பிதான் கடைசியா வச்சிருந்தவன். தம்பி.... ஆ.... இந்தா இருக்கு.

- *செயல்*

*அப்பா தொலைக் காட்சியை முடுக்கி விட்டு உணவை கையில் எடுக்கிறார்*

அப்பா: என்னடா இது? இஞ்சேரப்பா இஞ்ச ஓடி வாங்கோ

அம்மா: என்னப்பா? ஏன் கத்துறியள்? ஐயோ....என்ன இது? எங்கட நாட்டிலயே?

விது: என்னம்மா இவ்வளவு தண்ணி.சனங்கள் தண்ணீல போகினம்.

அசரீரி: காலங்காலமாய் அடிமையாய் இருந்த தமிழன் இன்று உடலெங்கும் சிதறிக் கிடக்கின்றான்.

தேவதை: எங்கு அவர்கள் வாழ்ந்தாலும் இனமானத்தோடு வாழ்கிறார்கள். ஆனால்....

அசரீரி: என்ன ஆனால்? ஒரு தானைத்தலைவனின் உறுதியில் புடம் போடப்பட்டவர்கள் தம் இனத்தை தம் சுயத்தை தெரிந்து கொண்டவர்கள்.

அப்பா: *(தொலைபேசியில்)* ஓம் மாஸ்டரும் மகளும் மகனும் சட்டுக்க வந்து நிப்பினம். நீங்கள் கூட்டிக்கொண்டு போங்கோ .நான் உங்கள அங்க சந்திக்கிறன். ஓமோம் சரி சொல்லிவிடுகிறேன். *(பேசியை வைத்து விட்டு)* இஞ்சப்பா என்ன நீ வசந்தி அக்கா வீட்ட போய்.....

அம்மா: ஓமோம் .நான் எங்களட்ட இருக்கிற நல்ல உடுப்புகள கட்டிக்கொண்டு போறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவதை: தமிழரை இனியாரும் அசைக்க முடியாது .என் நாடு என் மக்கள் என் இனம் என்ற பிரிவுகள் இல்லை. யாவரும் எம் உறவு ,தமிழே நம் ஓர்மத்தின் உந்து சக்தி.

- *செயல்*

*சிறுவர்கள் உண்டியல் குலுக்குதல். துண்டுப்பிரசுரங்கள் கொடுத்து ஏனைய மக்களுக்கு எம்மக்களின் நிலையை விளங்கப்படுத்தல்.*

*அடிமைத்தளையறுத்து விடுதலை முரசறைந்து விடியல் விளக் கேற்றிய தமிழர் ஒற்றுமையின் உன்னதச்சின்னமாம் அண்ணன் பிபாகரன் அவர்களின் வழியில் இனியெந்தச்சுனாமியும் எமைத் தாக்கும் முன் அறிவறிந்து அரணமைப்போம். அதற்காய் ஆற்றல்தனை வளர்த்தெடுப்போம்*

<u>*நிறைவு*</u>







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்க்கரிசி

நாடகவகை: குமுக நாடகம்

களங்களின் எண்ணிக்கை: 1.

திறந்தமேடை-

கலைஞர்கள் 1. வாசிப்பாளர் 1, 2 2. அரசியல்வாதி 1, 2, 3, 4,5 ,6, 7 3. பொது 1, 2, 3, 4

தாளம்:
*தத்தின் தின்னா தத்தின் தின்னா தத்தின் தின்னா தின் தின் தின்னா தின்.*

- *செயல்*

*உலக நாடுகள் அரசியல் வாதிகள் இலங்கை அரசு ஆடி வருதல். சங்கீத இருக்கை வடிவில் வட்டமாக ஆடி ஒவ்வொருவரும் ஒவ்வொரு இருக்கையில் அமர்தல். சிலருக்கு இருக்கை இல்லாது போக ஒரு இருக்கைக்காக அடிபடுதல்.*

வாசிப்பாளர்: அறிவித்தல் இருக்கைகள் இல்லாதவர்கள் வெளியேறலாம். ஆனால்....

- *செயல்*

*அறிவித்தலை ஒவ்வொருவரும் வாங்கிப்பார்த்து திருத்தம் செய்து வாசிக்க கொடுத்தல்.*

வாசிப்பாளர்: அடுத்த சண்டை நடக்கும் போது பறித்தெடுக்கலாம்

- *செயல்*

*வாசிப்பைக் கேட்டவுடன் இருக்கைக்கான சண்டை தொடருதல்.*

வாசிப்பாளர்: திருத்தம்.

- *செயல்*

*மீண்டும் வாசித்தல் ஒருவர் எழுந்து வந்து வாசிப்பவரின் காதுக்குள் சொல்ல வாசிப்பவரின் காதுக்குள் சொல்ல வாசிப்பவர் மீண்டும் வாசிக்கிறார்.*

வாசிப்பாளர்: மன்னிக்கவும் சீர் திருத்தம்.

- *செயல்*

*மீண்டும் ஒருவர் வந்து காதுக்குள் ஏதோ கூறுகின்றார்.*

வாசிப்பாளர்: இல்லை. திருத்தம்.

*மீண்டும் ஒருவர் வந்து காதுக்குள் ஏதோ கூறுகின்றார்.*

வாசிப்பாளர் 2: மன்னிக்கவும். சட்டதிருத்தம். இருக்கைகளின் துண்டுகளை வைத்திருப்பவர்களும் எமது அரசியல் அரங்கில் கலந்து கொள்ளலாம்.

- *செயல்*

*மீண்டும் ஒருவர் வந்து காதுக்குள் ஏதோ கூறுகின்றார்.*

வாசிப்பாளர்: ஆமாம். பெரிதாக வைத்திருக்கும் நபருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

- *செயல்*

*மீண்டும் ஆட்டம் ஆரம்பமாகிறது. இருக்கை துண்டுகளை அதனை பாதுகாப்பாக வைத்துக்கொண்டு மற்றவரின் இருக்கைதுண்டை களவாட முனைதல். தமிழ் அரசியல் வாதிகள் விலை பேசுதல். சிலர் துரத்திவிடுதல். ஆரவாரப்படுதல்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ-வாதி 3: நிறுத்துங்கள். மக்களுக்கு முன்னால் இப்படி நடந்து கொள்ளக்கூடாது என்பது விதி.

அ-வாதி 1: மக்களின் முன் பகிரங்கமாக சண்டையிடுவது தவிர்க்கப்பட்டுள்ளது.

வாசிப்பாளர்: இதை நான் தான் கூற வேண்டும்.

அ-வாதி 2: ஆ.....விடயத்தை யார் சொன்னால் என்ன?

வாசிப்பாளர் 2: விழித்திருக்கும் மக்களை உறங்க அல்லது மயக்க நிலைக்கு கொண்டு சென்ற பின்னே உங்கள் சண்டைகளை நிகழ்த்தலாம். மீறு வோரின் இருக்கைகள்.....

- *செயல்*

*வாசிப்பாளர தன் முடிவைக் கூறும்.முன் அதைக் கேட்டு ஒவ்வொரு அரசியளாலரிடமும் ஓடிக் கேட்டல். அரசியலாளர்கள் தமக்குள் காரணமின்றி வாக்குவாதம் செய்தல். ஒருவர் அமைதிப்படுத்தல்.*

அ-வாதி 3: அமைதி இது மக்கள் மன்றம் .வீணான வாதங்கள் தவிர்க்கப்பட்டுள்ளது.

அ-வாதி 4: ஆமாம் அதை நான் வரவேற்கிறேன்.

வாசிப்பாளர் 2: அறிவித்தல், நாளை இலங்கை தொடர்பான கருத்தாடல் இடம்பெறவிருக்கிறது.

அ-வாதி 5: சரி அவை கலைகிறது.

- *செயல்*

*அரசியலாளர்கள் கலைந்து செல்ல முயலுதல்.*

பொது 1: ஆகா....நல்லது. எங்கள் கருத்துக்களை நாளை முன் வைக்கலாம்.

பொது 2: இனியேனும் ஒரு விடிவு கிடைக்கட்டும்.

பொது 3: எத்தனை காலம் இப்படி அடிமையாய் வாழுறது.

பொது 4: இப்போதெல்லாம் போதும். இனி ஏதாவது ஒரு முடிவு வந்தா அம்மாளாச்சி....

- *செயல்*

*செல்ல முயன்ற அரசியலாளர்கள் மீண்டும் திரும்பி வருதல்.*

அ-வாதி 3: இருக்கையில்லாதவர்கள் வருவது தடை செய்யப்பட்டுள்ளது.

அ-வாதி 1: அது சரி இருக்கை இல்லாதவர்களுக்கும் இங்கு இடமில்லை.

அ-வாதி 5: இதென்ன உங்கள் வீடென்று நினைத்தீர்களோ?

அ-வாதி 6: இது உலக மக்களின் பொது மன்று.

அ-வாதி 7: இங்கே இருக்க இருக்கை வேண்டும் .பேச தகுதி வேண்டும்.

அ-வாதி 8: எதுவுமில்லாமல் நாக்கு வழிக்க முடியாது.

பொது 2: இருக்கையை தரவும் மாட்டீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது 3: எடுக்கவும் விட மாட்டார்கள்.

பொது 4: இல்லாதவர்கள் வரவும் கூடாது.

பொது எல்லோரும்:
இது நியாயமில்லை.

வாசிப்பாளர் 2: இது பொதுச்சபை ஆரவாரங்கள் கூச்சமிடல்கள் இங்கே தடை செய்யப்பட்டுள்ளன.

பொது 1: சரி அப்போ நாங்கள் யாரிடம் எமது குறைகளை கூறுவது?

வாசிப்பாளர்: பொது மன்றிடம் தான்.

பொது 3: இது தானே பொது மன்றம்.

அ-வாதி 2: ஆனால் இருக்கை இல்லாதவர்களுக்கு இங்கு இடமில்லை.

பொது 1: சரி அப்போ எங்களுக்கு ஒரு இருக்கையை தாருங்கள்.

அ-வாதி 3: அதெப்படி முடியும் .உங்களுக்கு நாடு இருக்கிறதா?

அ-வாதி 4: கொடி இருக்கிறதா?

அ-வாதி 6: ஏதுமில்லாத உங்களுக்கு எப்படி இருக்கை இருக்கும்?

பொது 6: அப்போ எங்கள் நிலை?

அ-வாதி 7: அது நீங்கள் உங்களை கேட்க வேண்டும்.

பொது 5: பிறகெதற்கு இந்த மன்று?

வாசிப்பாளர்: மக்கள் பொது மன்றில் முரணான வார்த்தைகள் தடை செய்யப்பட்டுள்ளது.

அ-வாதி 2: சரி. வெளியேறுங்கள். உங்கள் குறைகளை மக்கள் பொது மன்றில் கூறுங்கள்.

பொது 3: ஐயா இதுதானே மக்கள் பொது மன்று.

வாசிப்பாளர் 2: இருக்கையில்லாதவர்கள் இங்கு பேச முடியாது.

பொது மன்று :சரி எதிர்வரும் திகதி இத்தனை மணிக்கு வருகிறோம்.

வாசிப்பாளர்: இத்தோடு மன்றம் கலைகிறது.

பொது மக்கள்: பொது மன்றம் ஊமையாகி குருடாகிவிட்டதா?

அரசியலாளர்: பொது மன்றை இழிவு படுத்தியது குற்றம். உங்களை பொது இராணுவத்தைக் கொண்டு தாக்க எமக்கு அதிகாரம் இருக்கிறது.

வாசிப்பாளர் 2: தயவு செய்து எல்லோரும் வெளியேறுங்கள்.

பொது மக்கள்: ஐயோ......தலைய சுத்துது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ *பாடல்*

*பொது 2: சுத்துது சுத்துது தலைய சுத்துது.*
*கத்தி கத்தியே தொண்டையும் போச்சுது.*
*ஒத்துடா அட ஒத்துடா இது*
*ஒருக்காலும் வேகாத பருப்படா*

• *செயல்*

*பொது மக்கள் சோர்வோடு வெளியேறுதல்.*

வாசிப்பாளர் 2: சரி இத்தோடு சபை கலைகிறது.

• *செயல்*

*அரசியலாளர்கள் தத்தமது இருக்கைகளை தூக்கிக் கொண்டும் இலங்கை தொடர்பாகப் பேசிக்கொண்டும் வெளியேறல்.*

ஊடகம்: இலங்கை தொடர்பாக பேசப்போகிறோம் என்றதும் பொதுமன்றின் பணியாளர்கள் மிகுந்த ஆர்வமாக மக்கள் மன்றை நோக்கி வந்து கொண்டிருக்கின்றார்கள்.

படப்பிடிப்பாளர் 1:
செயல் காணொளி எடுத்தல்.

ஊடகம் 2: இலங்கையில் ஏற்பட்டிருக்கும் இனப்பிரச்சினைக்கு இன்று ஒரு தீர்வு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் காத்திருக்கும் மக்களுக்கு விடிவு கிடைக்கும நம்பிக்கை. இதோ பாதிக்கப்பட்ட மக்களின் குறை களை கதைக்க வேண்டுமென்று வந்திருக்கும் அயல்நாட்டு அமைச்சர் அவர்களை சந்திக்கின்றோம்.

படப்பிடிப்பாளர் 2:
செயல் காணொளி எடுத்தல்.

ஊடகம்: வணக்கம் .நீங்கள் என்ன யோசிக்கின்றீர்கள் என்று புரிகிறது .எமது நாட்டிலும் பாதிக்கப்பட்ட மக்கள் இருக்கின்றார்கள் .எமக்கும் அதன் வலி தெரியும் . அவர்களுக்கான நல்ல முடிவு விடிவு கிடைக்கும் நன்றி வணக்கம்.

ஊடகம்: நீண்ட காலமாக தமது நிம்மதியான விடிவுக்காக....

விளம்பி: யோவ் என்ன விடிவு, மடிவு அங்க பார் அசிங்கம் பட நடிகை வந்திருக்கின்றா.

ஊடகம் 2: நேயர்களே....அசிங்க பட நாயகி ஆடை இழந்த....

விளம்பி 2: யோவ் சும்மா வாயளக்காம அவளப்போய் வடிவா படத்த எடு போ...

• *செயல்*

*இலங்கை தொடர்பாக அரசியலாளர்கள் மேடையில் கதைத்துக் கொண்டிருத்தல். அவ்வேளை முதன்மை அரசியலாளர் வருதல். மற்றவர்கள் அமைதி காத்தல்.*

*தாம் திதித்தோம் தத்தோம் தாம் திதித்தோம் தத்தோம் தாம்.*

*இலங்கை அரசியலாளர்கள் சந்திப்பு*

அ-வாதி 1: நாளை உலகப்பொதுமன்று வரப்போகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ-வாதி 4: வந்தால் எங்களிடம் என்ன பதில் இருக்கின்றது.

அ-வாதி 8: சரி அமைதியாக இருங்கள்.

அ-வாதி 3: என்ன கலக்கம்.

அ-வாதி 1: எங்களுக்கு கலக்கமில்லை....ஆனால்.....பாதிக்கப்பட்டவர்கள் வீதிக்கு வந்தால்.....

அ-வாதி 8: அடித்து வீட்டில் அமத்த வேண்டியது தானே.

அ-வாதி 3: ஆமாம். மீறுவோரை கடுமையாக தண்டியுங்கள். வயது வேறுபாடுகளை பார்க்காதீர்கள்.

அ-வாதி 1: எமது நாடு தொடர்பாக எங்கள் வளங்கள் தொடர்பாக பேச வந்திருப்பவர்கர்களே வணக்கம்.

- *செயல்*

*அரசியலாளர்கள் வருதல்.*

*தாம் திதித்தோம் தத்தோம் தத்தோம் தாம் திதித்தோம் தத்தோம்.*

அரசியலாளர்கள்:
வணக்கம்.

அரசியலாளர்கள்:
பொது மன்றில் நீங்கள் ஒரு அங்கம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நாங்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் .அதற்கு தடை வரக்கூடாது.

அ-வாதி 1: ஆமாம் அவைக்கு நாங்கள் கட்டுப்படுகின்றோம் நீங்கள் உங்கள் சொந்தக் கண்களால் பார்க் கலாம் .இங்கு என்ன நடந்தது என்று.

அ-வாதி 3: வேறுபாடுகளற்ற சுதந்திரமான வாழ்க்கையை எமது மக்கள் வாழ்கிறார்கள்.

அ-வாதி 4: உண்மை நாங்கள் அறிவோம்.

அ-வாதி 5: இலங்கை அழகான நாடு.வளமான நாடு.

அ-வாதி 2: அதனால் தான் உலகத்தினர் எங்களை நேசிக்கின்றார்கள்.

அ-வாதி 1: வாருங்கள் நாட்டை சுற்றிப் பார்க்குமுன் பசி ஆறி செல்லலாம்.

- *செயல்*

*அரசியலாளர்கள் வெளியேறல். வெள்ளைத்திரை இடையே கொணர்தல். நிழலாக நிகழ்வுகளைக் காட்சிப்படுத்தல்.*

*(தாம் திதித்தோம் தத்தோம் தாம் திதித்தோம் தத்தோம் தத்தோம்)*

*இளம் பெண்களை வல்லுறவுக்கொள்ளுதல். கொலை செய்தல்.அடித்தல்.சிறுவர்களை, முதியவர்களை, தாக்குதல், கொலை செய்பவர்களுக்கு அரசியல் வாதிகள், நாடுகள் உதவி செய்தல். பாதிக்கப்பட்ட மக்கள், இசைப்பிரியா, தளபதிகள், கைகள் கட்டப்பட்ட நிலையில் கொல்லப்பட்ட மக்களின் நிலைகளை காட்சிப்படுத்தல். உலகம் கண்ணை மூடிக்கொள்ளல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ-வாதி 3: இது எங்கள் நாடு .இங்கே யாருக்கும் இடமில்லை. யாரேனும் எதிர்த்தால் இதே நிலைதான் வரும். கொலை செய்வதும் குடி அளிப்பதும் எமக்கு புதிதல்ல...

அ-வாதி 2: குரல் கொடுத்து கத்தினால் கழுத்தை அறுத் தெறியுங்கள்.

அ-வாதி 3: பெண்களின் கருக்களை சிதையுங்கள். இளைஞர்கள் யாரையும் விடாதீர்கள். கொல்லுங்கள் இது எங்கள் நாடு.

- *செயல்*

*சில உலகப்பொது அரசியலாளர்கள் திரைக்கு முன் கேளிக்கையில் ஈடுபடல். காட்சிப்படுத்தல் நின்றபின் மக்கள் ஊர்வலம், அரசியல், போராட்டம் நிழலாக காட்சிப்படுத்தல். அரசியலாளர்கள் தமக்குள் பேசிக்கொள்ளுதல் பின் தமது கண்களை துணியால் கட்டிக்கொள்ளுதல் .தங்களை மறைத்துக்கொள்ளுதல் .தம்மை மறைத்துக்கொண்ட பின் அரசியலாளர்கள் எழ முற்பட அவர்களை உபகாரம் செய்து கவனித்து அமரச்செய்தல்.அமைதிப்படுத்தல்.*

பொது மன்று: ஓ..... மக்களின் அழிவு அதிகம் தான்...நாங்கள் உங்கள் நாட்டை பார்வையிட வேண்டும். உலகெங்கும் பாதிக்கப்பட்டவர்கள் கருதுகிறார்கள். நாங்கள் உண்மையைக் காண வேண்டும்.

அ-வாதி 4: தாராளமாக பார்க்கலாம் .தங்கள் வருகைக்காக எங்கள் நாடும் எங்கள் மக்களும் காத்திருக்கிறோம்.

- *செயல்*

*அரசியலாளர்கள் வெளியேற இலங்கை அரசியலாளர்கள் தமது நாட்டை சுத்தம் செய்தல். கொலைகளை, பிரதேசங்களை, குருதியை மறைக்க முயலுதல்.அவற்றை முடி மறைத்து பொது மன்றின் அரசியலாளர்களை அழைத்து வருதல்.*

*(தாம் திதித்தோம் தத்தோம் தத்தோம் தாம் திதித்தோம் தத்தோம் தாம்.)*

*பொது மக்கள் அரசியலாளர்களைக்கண்டு தம் வலிகளை சொல்ல முயலுதல். இராணுவம் தடுத்து தள்ளுதல்.*

வாசிப்பாளர்: உங்கள் நாடு அழகான நாடு .இன்னும் ஆங்காங்கே இருக்கும் குப்பைகளை ஒதுக்கிவிட்டால் இன்னும் சுத்தமாக இருக்கும்.

அ-வாதி 3: ஆமாம் அதை உடனடியாகச்செய்கிறோம்.

அ-வாதி 1: இந்த அழகான நாட்டில் பயங்கரவாதம் இருக்க கூடாது.

வாசிப்பாளர் 2: ஆனாலும் உலகறிய கத்திக் கொண்டிருக்கும் அவர்களுக்கு ஏதாவது செய்ய வேணும்.

அ-வாதி 2: ஆமாம். செய்ய வேண்டும் .அறிக்கை எழுதச் சொல்வோம் .நீதி விசாரணை செய்யச் சொல்வோம்.

அ-வாதி 3: என்ன நீதி விசாரணையா?அறிவோடு தான் பேசுகிறோமா?

வாசிப்பாளர்: ஆமாம். மக்கள் அமைதியாக வேண்டும். ஆரவார மில்லாத உலகம் வேண்டும்.

அ-வாதி 3: எம்மை நீங்கள் மாட்டி விட முடியாது. ஏனென்றால் எங்களுக்கு பக்கபலமாக இருந்து உதவியது நீங்கள் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ-வாதி 8: அதையேன் இப்போது பேசுகின்றீர்? பயம் வேண்டாம்.

அ-வாதி 6: யார் குற்றவாளிகள்?

அ-வாதி 3: நாங்கள் எல்லோரும் தான்.

அ-வாதி 2: இல்லை. இப்போது நீர் மட்டும் தான். அதனால் அறிக்கையை நீரே எழுதும்.

அ-வாதி 1: ஆகா...அருமை...

அ-வாதி 5: நீதிபதியும் நீர்தான் .விசாரிப்பதும் நீர் தான்.

அ-வாதி 3: ஆகா...அருமை...அருமை...இது நல்ல தீர்ப்பு.

அ-வாதி 2: அறிக்கையை எழுதிக்கொண்டு பொது மன்றுக்கு வாரும். நாங்கள் புறப்படுகிறோம்.

பொது மக்கள்: ஐயோ... ஆயிரமாயிரம் மக்கள சாகக்கொடுத்திட்டு நியாயமில்லாமல் சாகிறோமே.

பொது: செத்த பிறகு போடுற வாய்க்கரிசிய வாழும் போது போடுறாங்கள் .இவங்கள கேட்க யாருமில்லையா?

பொது 1: காலம் காலமா இது தான் எங்கட நிலம.

பொது 3: இவங்கட்ட கேட்டா கிடைக்காது.

பொது 4: எடுக்க வேணும்.

அ-வாதி 4: அன்பான மக்களே! உங்கள் கோரிக்கைகளை நாங்கள் வடிவா கேட்டிருக்கிறோம் உங்கள் வலிகள் எங்களுக்கு தெரியுது.

அ-வாதி 4: கவலை வேண்டாம் .அமைதியாக உங்கள் வீடுகளுக்கு போய் வாருங்கோ.

அ-வாதி 5: விடியல் தூரமில்லை.

- *செயல்*

*அரசியலாளர்கள் வெளியேறல்.*

*(தாம் திதித்தோம் தத்தோம் தாம் திதித்தோம் தத்தோம் தத்தோம் தாம்.)*

பொது மக்கள்: ஓ.....விடியல் எப்ப வரும். நாங்கள் இழிச்ச வாயர்கள்.

*நிறைவு*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெட்கம்

நாடகவகை: தாளலயம்

களங்களின் எண்ணிக்கை: 1. களம்

திறந்தமேடை

கலைஞர்கள் 1.தாய் 2. அப்பா 3. அக்கா 4. தம்பி 5. தங்கை 6. பனியாளர் 1,2

*(தொலைபேசியில்)*

தாய் : ஆரது புவனாவே? சொல்லடி சொல்லடி காலையில் என்ன விசயம். ஓ......ஓ...... அவன் எப்ப கட்டினவன் ?

அப்பா: வந்தனண்டா காட்டிடுவன் .வந்தனண்டா காட்டிடுவன். ஆரது ரெலிபோனில காலையில கதைபேசி கழுத்தறுப்பு செய்யிறது ? சே.....சே....நிம்மதியா கண்ணமூடி படுக்க முடியவில்ல.

தாய்: கண்ணமட்டும் மூடாம காதையுந்தான் சேர்த்து மூடிஇழுத்து மூடி படுங்கோவன் . ஒண்டுமில்ல புவனா நீர் சொல்லும் .ஒண்டுமில்ல புவனா நீர் சொல்லும். ஊர் சுற்றி திரிஞ்சவன் உடும்புப் புடி புடிச்சுப் போட்டான் ஊர் சுற்றி திரிஞ்சவன் உடும்புப் புடி புடிச்சுப் போட்டான். கொழுத்த காசு வாங்கியிருப்பான். கொழுத்த காசு வாங்கியிருப்பான்.

அப்பா: காலையில ரெலிபோனில் கண்டறியா கதையப்பார் சனிக்கிழம கூட கொஞ்சம் சந்தோசமா இருக்க ஏலா பணத்த சேத்து வச்சும் இஞ்ச நிம்மதிய காணயில்ல.

தாய்: அதுகளென்ன பிள்ளையளே பேய்மாதிரி திரியுதுகள் அதுகளென்ன பிள்ளையளே பேய்மாதிரி திரியுதுகள். தேப்பன்தாய ஏச்சுப்போட்டு தெருத்தெருவா திரியுதுகள்.

அக்கா: அப்பா தம்பி அடிக்கிறான் .கண்டபடி கடிக்கிறான்.

தம்பி: அக்கா சும்மா சொல்லுறா .நான் சும்மா விளையாடினன்

தங்கை: அண்ணா அக்காவ விடாதேங்கோ. அவவ ஓட விடாதேங்கோ.

அப்பா: அச்சச்சோ....அச்சச்சோ....லீவு நாளில் கூட மனுசன் நிம்மதியா இருக்க ஏலா. படுக்கவிட மாட்டுதுகளாம் பள்ளிக்கூடம் ஏதுமில்ல.

தாய்: ஏனிப்ப கத்துறியள் .பள்ளிக்கூடம் லீவு என்று உங்களுக்கு தெரியாதோ?

அப்பா: பள்ளிக்கூடம் லீவு விட்டா படிப்ப ஆர் சொல்லிக் கொடுப்பார் .தமிழ்ப்படிப்பு எண்டு சொல்லி பள்ளிக்கூடம் போறதால நீட்டி நிமிந்து படுத்தெழுந்து நீண்ட முழுக்கு ஒண்டு போட்டு, சின்னதா ஒரு பெக்கெடுத்து, இரண்டு படம் எடுத்து பாத்து பொழுத ரசிச்சு பாப்போமண்டால்.

அக்கா: அம்மா ஒருக்கா வாருங்கோ .கெதியா ஓடி வாருங்கோ.

தம்பி: அக்கா பயந்து கத்திறா .அம்மாவ கத்திக் கூப்பிடுறா.

தங்கை: அப்பா...அப்பா...எழும்புங்கோ .இவைய வந்து பாருங்க.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா: என்ன இது பிள்ளையள்? சத்தம் ஏன் போடுறியள்?ஐயோ இவள் ரெலிபோனில ஆனந்தமாக பேசுகிறாள் ஐயோ இவள் ரெலிபோனில ஆனந்தமாக பேசுகிறாள். நொந்து படும் என் பாட்ட யாரிட்ட நான் சொல்வன்

அக்கா: ஆரோ மணி அடிக்கினம் ஆரோ மணி அடிக்கினம்

தம்பி: ரெண்டு பேர் கதவடியில் பாத்துக்கொண்டு நிக்கினம்

அப்பா: ஆரெண்டு பாத்து கதவ அம்மாவ திறக்கச் சொல்லு

தம்பி: தங்கச்சி கதவ திறந்து போட்டாள். தங்கச்சி கதவ திறந்து போட்டாள். ஆக்கள் உள்ள வந்திட்டினம்

தாய்: வாங்கோ! அண்ண வாங்கோ வந்து கனகாலமாச்சு.

பணி 1: ஆறுமாசம் முதலொருக்கா அவசரமா வந்தனாங்கள்

பணி 2: போனவருசம் கூட நாங்கள் தேடியிங்க வந்தனாங்கள். வருசம் வருசம் வந்து போறம்.

அப்பா: கதவதிறந்து விட்டனியோ?பேந்துன்ன கவனிக்கிறன் கதவதிறந்து விட்டனியோ? பேந்துன்ன கவனிக்கிறன்.

தாய்: என்ன நாங்கள் செய்யிறது?எல்லார் பாடும் கஸ்ரம் தானே .வருசா வருசம் வாறதாக பதிவுவச்சு சொல் லுறியள் .வச்சுக்கொண்டோ இல்லயெண்டு சொல்லுகிறோம்.

பணி 1: நீங்க பொய் சொல்லுறதா நாங்க ஒண்டும் சொல்லேல. காலம் வெகு வேகமாக ஓடுறத சொல்லியிருப்பார். கோவமாக எடுக்காதேங்கோ குறை நினைச்சு போடாதேங்கோ.

தாய்: கோவப்பட்டு என்ன பலன்.குறை நினைச்சு என்ன பயன். கால கஸ்ரம் எங்களுக்கு கண் கலங்கி நிக்கின்றோம் காலையில போன மனுசன் இன்னும் வரக்காணேல. புவனா நீலைனிலையோ? புவனா நீ லைனிலையோ? அண்ண குறையாக நினைக் காதேங்கோ. அவசரமா பேச வேணும். கொஞ்ச நேரம் விட வேணும். *(கொஞ்ச நேரம் பணியாளர்கள் செய்வதறியாது நிற்றல்)*

அப்பா: தம்பி டேய்..... தம்பி டேய்.... அப்பா இங்க இல்லயெண்டு அவையளிட்ட சொல்லிட்டு வா .அப்பா இங்க இல்லயெண்டு அவையளிட்ட சொல்லிட்டு வா.

தம்பி: அப்பா வீட்ட இல்லயெண்டு உங்களிட்ட சொல்லச் சொன்னார்.

தாய்: யாருன்ன கேட்டது? யாருன்ன கேட்டது? பெரிய மனுசன் மாதிரி இஞ்ச வந்து கதைக்கிறாய் உள்ளே போ.உள்ளே போ.

அக்கா: அம்மா தம்பிய பேசாதீங்கோ. அம்மா தம்பிய பேசாதீங்கோ. அப்பா சொன்னத சொன்னதால அவன ஏன் பேசுறீங்க.

பணி 1: பிள்ளையள பேசாதீங்கோ .அவையளுக்கு விளங்காது.

பணி 2: நாட்டுக்காக நாங்கள் ஏதோ செய்ய வேணும். காலங்காலமா கஸ்ரப்படும் தமிழனுக்கு நாங்கள் ஏதோ செய்ய வேணும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்: விடிவு வேணும் .விடிவு வேணும். நாங்கள் அதுக்கு தடையில்ல. நாங்கள் அதுக்கு தடையில்ல.

அக்கா: ஈழத்தில எங்களுக்காய் சண்ட செய்து நாட்டக்காக்கும் அண்ணாமாரும், அக்காமாரும் பாவமல்லோ. அவையள் எல்லாம் பாவமல்லோ.

பணி 1: உண்மை பிள்ள .உண்மை பிள்ள.அவையள் அங்கு போராட நாங்க இங்க

அப்பா: தயவு செய்து போட்டுவாங்கோ .உந்த உண்ம பொய் இஞ்ச வேண்டாம்.

பணி 2: ஏனண்ண கோவப்பட்டு பேசுறியள் .நாங்கள் தமிழ் மக்களெல்லோ.

தாய்: அவரென்ன சிங்களமெண்டோ சொன்னவர். கால நேரம் வந்து இப்படி கஸ்ரம் கொடுக்க வேணாமண்ண போட்டு வாங்கோ நீங்க போட்டு வாங்கோ.

பணி 2: நாட்ட மீட்க வேண்டுமெல்லோ நாடி வந்தோம் உங்களட்ட வீட்ட வந்து கேட்பதற்கு வெட்கம் தான் எங்களுக்கு. நாட்ட மீட்க வேண்டுமெல்லோ நாடி வந்தோம் உங்களட்ட வீட்ட வந்து கேட்பதற்கு வெட்கம் தான் எங்களுக்கு.

அப்பா: இயக்கம் எண்டு சொல்லுறியள் வீரமாக பேசுறியள் வெட்கப்பட்டு என்ன பயன். இயக்கம் எண்டு சொல்லுறியள் வீரமாக பேசுறியள் வெட்கப்பட்டு என்ன பயன்.

பணி 1: நாட்டுப்பற்று உள்ளவை வீட்ட வந்து குடுக்கினம். நாட்டுப்பற்று உள்ளவை வீட்ட வந்து குடுக்கினம். கேட்குமட்டும் பாராம நாட்டக்காக்க தருகினம்

தாய்: நாங்கள் தர இல்ல ஏதும் பேசம போய் வாங்கோ.

பணி 1: சரியக்கா போட்டு வாறம் மனமொருக்கா மாறும். அது வரைக்கும் வந்து பாப்போம்.

பணி 2: போட்டு வாறோம் .நாங்கள் போட்டு வாறோம்.

அப்பா: ஆரெண்டு பாக்காம கதவ திறந்து விட்டது யார்?

அக்கா: அப்பா இது சரியில்ல .அப்பா இது சரியில்ல.

அப்பா: வாய மூடு நீ வாய மூடு.

தம்பி: தமிழர்கள் எல்லாரும் காசு எடுத்து குடுக்கினமாம் நாங்கள் மட்டும் இல்ல எண்டு பொய் சொல்லி பேசுறம் நாங்கள் மட்டும் இல்ல எண்டு பொய் சொல்லி பேசுறம்.

தாய்: வாய் உனக்கு கூடிட்டுது .பெரியாளா பேசுகிறாய்

அப்பா: நீ குடுத்த செல்லமது வாய் காட்டி பேசுதுகள் நீ குடுத்த செல்லமது வாய் காட்டி பேசுதுகள்.

அக்கா: நல்லத நாங்கள் சொன்னால் வாய் எண்டு பேசுறியள் நாட்டுக்காக நாங்கள் என்ன செய்தனாங்கள் சொல்லுங்கள்.

தம்பி: நாங்கள் நல்ல உடுப்பு போட்டு. நல்ல உணவு நாளும் உண்டு. சந்தோசமா இருக்கிறோம் நாட்டுக்காக ஏதாவது செய்ய வேணும் எண்டு சொன்னா எங்கள ஏன் பேசுறீங்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா: அது எங்களுக்கு தெரியுமப்பு .நீங்கள் புத்தி சொல்ல வேண்டாம் .பெத்ததுகள் வளர முன்ன புத்திசொல்ல வருகுதுகள்.

தங்கை: நாங்கள் ஏன் நாட்டிற்கு பங்களிப்பு செய்கிறோமில்ல நாங்கள் ஏன் நாட்டிற்கு பங்களிப்பு செய்கிறோமில்ல.

தாய்: பள்ளிக்கூடம் போனதால புள்ளிவிவரம் பேசுதுகள்.

அக்கா: வாழும் போது முடிஞ்சத செய்து நாங்கள் வாழ வேணும் மண்ணென்று இனமென்று மார்தட்டி வாழவேணும்

தம்பி: அம்மா என்ர உண்டியல நாட்டுக்காக குடுக்கப்போறேன்.

அப்பா: உண்டியல குடுத்துப்போட்டு உழைச்சி பேந்தும் குடு மோன. உண்டியல குடுத்துப் போட்டு உழைச்சி பேந்தும் குடு மோன.

அக்கா: நாட்டுக்காக நானும் ஏதும் வீட்டு பேரில் செய்ய வேணும். மண்ண மறந்த மக்கள் எண்டு மரியாத கெட்டு இனிவெளி நாட்டில வாழ்றதெண்டா மனுசராக இருக்க ஏலா.

- *செயல்*

*பிள்ளைகள் வெளியேறுதல்*

அப்பா: பாத்தியே பாத்தியே உன்ர பிள்ள பேசினத அடக்கமில்லா பொம்பிளைய அப்பனிட்ட பேசுறத.

தாய்: அவள் அடக்கமுள்ளவள். அறிவிலயும் வல்லவள். மொழிப்பற்றும் இனப்பற்றும் உள்ளவள். எங்களிட்ட இல்லாதத அவள் நிறைய வச்சிருக்காள்

அப்பா: என்ன நீ சொல்லுகிறாய் அறிவிழந்தா நிக்கிறாய் என்ன நீ சொல்லுகிறாய் அறிவிழந்தா நிக்கிறாய்.

தாய்: செத்துக்கித்துப் போனாலும் நாலு சனம் மதிக்க வேணும் பெத்ததுகள் சொன்னதில தப்பேதும் இல்லயப்பா.

அப்பா: உண்மையத்தான் சொல்லுறியோ? உறுதியாக சொல்லுறியோ? உண்மையத்தான் சொல்லுறியோ? உறுதியாக சொல்லுறியோ?

அக்கா: சந்தோசம் அம்மா .சந்தோசம் அப்பா .இது சரியப்பா. மானத்தோடும் வாழ வேணும். இனமானம் காக்க வேணும்.

<u>*நிறைவு*</u>





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றவாளிகள்

நாடகவகை: நவீன நாடகம்

களங்களின் எண்ணிக்கை: 1. களம்

திறந்தமேடை

கலைஞர்கள் 1. பணியாளர் 1,2 2. சிறுமி 1,2 3. பெண் 4. அப்பா 5. சிறுவன் 6. தாய் 7. மாணவி 1,2 8. பெண் 9. ஆசிரியர்

- *செயல்*

*மேடையில் ஒரு சிறுமி தன்னந்தனியே படுத்துக் கிடத்தல். அருகே பரவலாய் கறுப்புப் போர்வைக்குள் குற்ற வாளிகள் தம்மை மூடிய படி படுத்துக்கிடத்தல்.*

பணியாள் 1: தயவு செய்து யாரும் சத்தம் போடாதீர்கள். அவள் ஆழ்ந்து உறங்குகின்றாள். படுக்கப் பாயில்லை .ஆனால் துன்பங்களை மறந்து, துயரங்களை மறந்து மிக அமைதியாக உறங்குகின்றாள். எனினும் அவளின் வலியின் வடிவம் கண்களில் காய்ந்து கிடக்கும் கண்ணீரில் தெரிகின்றது. மனித கற்பனைகளை மிஞ்சும் கொடுமைகள் உலகின் ஒவ்வொரு மூலையிலும் நடக்கின்றது. ஆனால் இந்த வளரும் தளிர்களை மிதிப்பவர்கள் யார்?

- *செயல்*

*சிறுமி எழுந்து பயந்து சுற்றிலும் யாரையோ தேடல். பயங்கலந்த வேதனையான பின்னணி இசை.*

பெண்: பெத்ததுகள் ஆமி போட்ட குண்டில் செத்துப்போய்ற்றுதுகள். பாவம் இது றோட்டில கிடக்குது.

சிறுமி: அம்மா.... அம்மா... அப்பா...... எனக்கு யாருமே இல்லையா? *(சிறுமி ஏக்கத்துடன் அழுதல்)*

அப்பா: *(குடிகாரர்)* தா.....னன....நா.....ந.....

- *செயல்*

*குடிகாரர் தன் நினைவில்லாமல் போதையில் தள்ளாடி வர அவரது மகன் பாரமான பொதியை தாங்கி வருதல்.*

அப்பா: என்னடா வாறியோ?

சிறுவன்: அப்பா என்னால தூக்க முடியேல .சரியான பாரம்.

அப்பா: டேய் இஞ்ச வா.. கிட்ட.....வா.... *(ஒரு விரலைக் காட்டி மகனை அருகே அழைத்தல்)*

அப்பா: என்னடா சொன்னி ? உன்னால தூக்க முடியாதோ? தூக்க முடியாது ஆனா நல்லா தின்ன தெரியும். ம்........ மாடு போடா போய் சா..... *(மகனை அடித்து துரத்தல்)* டேய்.... வாயிஞ்ச ..போய் சின்னயாட பின் வளவிலகள்ளு விப்பாங்கள். போய் ஒரு போத்தல் கள்ளு வாங்கியா .அப்பா பிறகு காசு தாறமண்டவர். எண்டு சொல்லி வாங்கியா.

பெண்: எப்பபார் நிறத்தண்ணி தான் மனுசன். பிள்ளையள் திண்டுதோ இல்லையோ இதின்ர கூத்து தெருக்கூத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவன்: அ......அ.....அப்பா....அங்க கடி.....கடிக்கிற நாய் நிக்குது.

அப்பா: அதயேன் நீ கடிக்கிறாய் .நீ பேசாமல் போய் வாங்கியா.

சிறுவன் :எனக்கு பயமாயிருக்கு.

அப்பா: என்னடா என்னதான் உன்னால ஏலும் .போய் செத்து துலை...சீ....போ. *(மகனை அடித்து விட்டு போதல்)*

பெண்: அட... குடிகாறப்பாவி. பெத்த பிள்ளய இப்படி அடிக்கிறீயே

பணியாள் 2: உது சரியே? பிள்ளையளிட்ட சொல்லிற வேலையா இது?

- *செயல்*

*சிறுவன் விழுந்து அழும்போது சிறுமி வந்து சிறுவனை ஆதரவாக தொட்டுப் பேசுதல்*

சிறுமி: அழாத எழும்பு அழாத.

சிறுவன்: என்ர அப்பா என்னை நெடுக அடிக்கிறார்.

சிறுமி: ஆனா எனக்கு அப்பாவே இல்லையே.

சிறுவன்: ஏன் எங்க போட்டார்.

சிறுமி: எனக்கு தெரியாது. (அழுதல்)

சிறுவன்: சே.....அழாத இந்தா....

சிறுமி: என்னது.

சிறுவன்: ராசம்மா பாட்டி கடல தந்தவ. இந்தா சாப்பிடு.

பணியாள் 1: பாத்தியளே இவையின்ர பாசத்த. இந்த பிஞ்சுகள ஏன் இந்த நிலைக்கு ஆளாக்கிறம்.

- *செயல்*

*சிறுவர்கள் கடலை சாப்பிடும் போது ஏதோ சத்தம் கேட்டு ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு மறைதல். பின் வளரந்த சிறுமி நொண்டிக்கொண்டு ஒரு பக்கம் மறைதல் .அவ்வேளை ஒரு தாய் நொண்டி சிறுமியை தேடிய படி வருதல்*

தாய்: எங்க போட்டாள் இவள்? அடியேய் எங்கடி போனனீ? தம்பிய பாரடி .ஏனடா நொண்டிக் கழுத எனக்கு விடுப்பு காட்டுது. இண்டைக்கு உன்ன விடமாட்டன்.

பெண்: என்னக்கா கோவமா நிக்கிறியள்?ஏதும் பிரச்சனையா?

தாய்: ஓ......நீ உன்ர வேலையை பாத்துக்கொண்டு போ.

பெண்: அதுக்கேன் இந்த வெட்டு .பாத்து கழுத்து முறியப் போகுது.

தாய்: என்னடி?

- *செயல்*

*பெண் ஓடுதல்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்: நொண்டியை பெண் காணல் உதுக்க என்னடி செய்யிறாய்? கொப்பர் போட்ட குண்டில பொட்டெண்டு போட்டார். நான் உங்கள வச்சு சாகிறன் சிறுமியைப் பிடித்து அடிக்க முனைதல்

சிறுமி 2: அம்மா அடிக்காதேங்கோ. நான் தம்பியப் பார்த்துக் கொண்டுதான் இருந்தன். ஆனா அவன் ஓடவும் என்னால ஓடவும் முடியேல்ல.

தாய்: சாட்டோடி சொல்றாய்?அவன மாதிரி நீயும் ஓடு எங்கேயும் போய் செத்து துலையுங்கோ.

பணியாள் 2: பிள்ள உண்மையத்தான் சொல்லுறா! ஆனா அத கேட்டு விசாரிச்சு யோசிக்க தாய்க்கு முடியேல்ல. ஏன்? இது வறுமையா? குடும்பச் சுமையா?

தாய்: நான் என்ன செய்வன்? ஆரப்பாப்பன்? வயித்தில வாறத்திற்கு என்னத்தப் போடுவன்? உதுகளுக்கு என்னத்தப் போடுவன் .விதிய போகிறதா?

பணியாள் 2: பசி, பட்டினி, வறுமை இது தான் உவையள இப்படி செய்ய சொல்லுதோ? ஆனா பாவம் பிள்ளையள்.

சிறுமி: அக்கா.... அக்கா அழாதேங்கோ....

- *செயல்*

*சிறுவர்கள் தம்மை ஒருவரை ஒருவர் விசாரித்து ஆறுதல் பகிர்கின்றனர்*

- *பாடல்*

*பிஞ்சு மனம் கொஞ்சி விளையாடும் வேளை.*
*நெஞ்சம் எல்லாம் பஞ்சு போலே படரும் பாரும்*
*பிஞ்சு மனம் கொஞ்சி விளையாடும் வேளை*
*நெஞ்சம் எல்லாம் பஞ்சு போலே படரும் பாரும்.*
*வஞ்சகத்தார் வஞ்சனையில் துஞ்சு போகுதே*
*வாழ வழி தெரியாமல் நொந்து போகுதே.*
*பெற்றவரும் உற்றவரும் பிரிந்து போயினர் கூடி*
*வாழ்ந்தவரும் வறுமையாலே பிரித்துப் போக்கினர்.*

- *செயல்*

*சிறுவர் பாடல் முடிவடைய மாணவர் அவசரமாக ஓடி வருகிறார்கள். பின் ஆசிரியர் வருகிறார் . வந்ததும் நொண்டி மற்றும் சிறுவர்களை துரத்துகிறார்*

மாணவர்கள்: வணக்கம் சேர்

ஆசிரியர்: ஏய் உங்க என்ன செய்றீங்கள்? கெதியா ஓடுங்க.

பெண். நல்லா படிச்ச மனுசன். ஆனா என்ன பிரயோசனம் நாய் மாதிரி வள்ளெண்டு விழுது.

- *செயல்*

*மாணவர்கள் பயத்துடன் தமது உடமைகளை எடுத்து வைத்துக் கொண்டு பாடம் படித்தல்*

பணியாள் 1: படிப்பிக்கிறவைய கண்டா ஆச வரவேணும். மரியாத வரவேணும். ஆனா உதப் பாருங்கோ.

மாணவி: அறம் செய்ய விரும்பு .ஆறுவது சினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்: என்ன எல்லாம் ஒழுங்கா படிச்சியோ? கொண்டா கொப்பிய பாப்பம்.

- *செயல்*

*வாங்கிப் பார்த்தல். பிள்ளை பயத்துடன் அவரை பார்த்தல்*

ஆசிரியர்: என்னடி இது? கண்மணி கடைக்குப் போனால் எந்தள்ளடி போட்டிருக்கிறாய்? உதுகூட தெரியாம இஞ்ச..... அழிச்சிட்டு எழுதடி.....

- *செயல்*

*மாணவி வாங்கி சட்டென செய்துவிட்டு கொடுத்தல்*

ஆசிரியர்: யேய் இதென்னடி சட்ட கிழிஞ்சு இப்படியே படிக்க வாறது?

மாணவி: எங்களிட்ட காசு இல்ல சேர்.

ஆசிரியர்: காசில்லையோ? பிறகேன் பள்ளிக்கூடத்திற்கு வாறாய்? போய் ஆடு மாட்டை மேச்சு
சம்பாதிக்கலாமே. வந்துட்டுதுகள்.உங்களுக்கெல்லாம் படிப்பு ஒரு கேடு.

மாணவி 2: சேர் அப்படி சொல்லாதைங்கோ. நான் நல்லா படிச்சு பெரியாளா வந்து எங்கட அம்மாவ காப்பாத்த வேணும்.

ஆசிரியர்: சேக் கழுத எண்ணத்தப்பார். தின்ன உடுக்க வழியில்ல பேசுறா.

மாணவி: நீங்கள் இப்படி பேசக்கூடாது.

ஆசிரியர்: ஆரடி சொன்னது இப்படி பேசக்கூடாது எண்டு? உனக்கு வாய் என்ன கழுத! எனக்கே புத்தி சொல்லுறியா.....

பணியாளர் 2: பாத்தியளே படிப்பிக்கிறவ உப்படி நடக்கலாமே?

- *செயல்*

*ஆசிரியர் மாணவரை அடித்து துரத்துகிறார்*

ஆசிரியர்: இந்த 5ம் 6ம் பாடத்தப் பாத்து அஞ்சஞ்சு முற எழுதியா போ....எடியேய் உனக்கு தனியா சொல்லோணுமோ? போ போய் ஆளுக்கு அஞ்சஞ்சு முற எழுதுங்கோ.

மாணவி 2: இந்த சேர் படிப்பிக்க மாட்டார் .ஆனா நிறைய பேசுவார்.

மாணவி 1: பேசுறது மட்டுமல்ல கண்டபடி அடிப்பார்.

பணியாளர் 1: இது கடமைக்காக !இப்படியான படிப்பிக்கிறவைய பாத்தா பிள்ளைகள் பயப்படுதுகள். பிறகு என்னெண்டு படிக்குங்கள்.

❖ *பாடல்*

*கற்றிடத்தான் கல்வி பெற்றிடத்தான் பேறு*
*பற்றிடத்தான் வாழ்வை பாலகர் இங்கே பாரீர்*
*பற்றிடத்தான் வாழ்வை பாலகர் இங்கே பாரீர்*
*வறுமையிலே வாட்டம் வந்தது பார் போராட்டம்.*
*சிறுமையாய் சிலர் கூட்டம் சிந்துது பார் கல்வி கண்ணீரை.*
*தன்னானே தன்னானே தானே.....*
*தன்னானே தன்னானே தானே....*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- *செயல்*

*பாடல் ஒலித்து முடியும் தருவாயில் மாணவர்களிடம் சிறுமியர் சிறுவன் ஆகியோர் வந்து கூடியிருந்து பேசி மகிழ்தல்*

சிறுமி 2: நீங்கள் எல்லாரும் பள்ளிக்கூடம் போனனீங்களே?

மாணவி 1: ஓ.... நான் நாலாம் வகுப்பு படிக்கிறேன்.

சிறுவன்: எனக்கும் படிக்க சரியான ஆச. ஆனா அப்பா விடமாட்டாராம்

மாணவி: ஆனா எங்கட சேர் பேசுவார்.

மாணவி 2: திட்டுவார்

மாணவி: படிக்கவே பிடிக்காதது.

சிறுமி 2: அதென்ன பாடம் எனக்கும் சொல்லித் தாறீர்களா?

மாணவி 1: உங்கட கால் உடைஞ்சிட்டுதா?

சிறுமி: ஓ..... அவ நொண்டிதான் நடப்பா... பாவம்.

சிறுவன்: நாங்கள் ஏதாவது விளையாடுவோமா?

மாணவி 2: ஓ.... என்ன விளையாட்டு விளையாடுவம்

மாணவி 1: ஓர் அம்மா கடைக்கு போனா விளையாடுவம்

எல்லாரும்: ஓ.....

- *பாடல்*

*கள்ளமில்லா சிரிப்பு கவலையில்லை உள்ளம்.*
*வெல்லம் போல சுவை உள்ள குழந்தைகள்*
*அன்பில் கூடிடும் அழகின் மொட்டுகள்*
*அகத்தில் நிறைந்திடும் ஆனந்த சிட்டுகள்*
*துன்பம் அறியா வெள்ளை மனங்கள்*
*துயரில் தோயா பிள்ளை உள்ளங்கள்*
*கூடும் பொழுதே குவலயம் சிரித்திடும்*
*ஈடு இல்லை இவர்களின் எல்லைக்கு*

- *செயல்*

*பாடல் முடிய பிள்ளைகள் மகிழ்வாய் சிரிக்கையில்*

தாய்: என்னடி செய்யிறாய் இஞ்ச....?

அப்பா: அட என்ர புத்திரசிகாமணியுந்தான் நிக்கிறார் டேய் உன்ன கள்ளு வாங்கச் சொன்னான். அதுக்கு ஏலாது எண்டுபோட்டு இஞ்ச என்னடா இழிச்சுக்கொண்டு நிக்கிறாய்?

ஆசிரியர்: படிக்கச்சொன்னால் குரங்குச் சேட்ட செய்யுதுகள் .உதுகள....இப்படி விட்டா சரி வராது.

பெண்: பிள்ளையள் விளையாடுதுகள் .பிழையே மொக்குகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது: உங்க பார் ஒரு அநாத....யேய் காலையில றோட்டில கிடந்தது.... யாரது இவள கூட்டி வந்தது.

அப்பா: உந்த நொண்டியோட தான் நிண்டது.

மாணவி 1: அவாவ நொண்டி எண்டு சொல்லாதைங்கோ.

பொது: பின்ன வேற எப்படி கூப்பிடுறது? வாரும் நீர் வந்து சொல்லித் தாரும்.

ஆசிரியர்: உதுகளுக்கு வாய் கூடிப்போச்சு .நல்லா ரெண்டு சாத்துப்போட்டா எல்லாம் அடங்கும்.

பெண்: வேற என்ன தெரியும் .அடி உத மட்டும் தான் தெரியுமாக்கும்.

பொது: அடி போட்டாத் தான் அடக்கம் வரும்.

தாய்: நான் சொன்னன் கண்டதுகளோட ஊர் மேயாத எண்டு கேட்டியே.

மாணவி 2: அவவ ஏன் அடிக்கிறீங்க?

பொது: யேய் உனக்கென்ன கோபம் பொத்துக் கொண்டு வருது. பொறு முதல்ல உனக்கு போட வேணும்.

சிறுவன்: ஏன் இப்ப அடிக்க வாறீங்கள்? நாங்கள் ஒண்டும் செய்யேல்ல.

அப்பா: அடி சக்க நீ பேச வெளிக்கிட்டீயோ?உன்ன....

ஆசிரியர்: உதுகள் ஒண்டா சேந்தது தான் பிழ.

சிறுமி 2: ஏன் எங்கள இப்படி செய்யுறியள்?

மாணவி 1: நெடுக பேசுறியள் .அடிக்கிறியள் .ஏன்?

சிறுவன்: கல்லெடுத்து மண்டய உடச்சுப்போடுவன்.

பெண்: உதுதான்ரா சரி .சொன்னத செய் .அப்பதான் புத்தி வரும்.

ஆசிரியர்: என்னடா சொன்னனி?

- *செயல்*

*பிள்ளைகளை ஆளுக்கொருவர் பிடித்து அடித்து ஆக்கினை செய்தல்*

பணியாளர் 1: போதும் நிப்பாட்டுங்கோ. அறிவு கெட்ட தனமா நடக்கிறீங்கள்.

ஆசிரியர்: ஆருக்கு அறிவில்ல?

பணியாளர் 2: உங்களுக்குத்தான் !பாத்தா படிச்ச மனுசன் மாதிரியே தெரியுது?

பணியாளர் 1: உங்களமாதிரியான ஆசிரியர முதல் நிறுத்த வேணும்.

ஆசிரியர்: ஓ..... அப்ப என்ன திருத்துங்கோ. எப்படி அத சொல்லித் திருத்துங்கோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாளர் 1: எங்கட பிரச்சனைகளையும் எங்கட முட்டாள் தனத்தையும் பிள்ளைகளில காட்டக்கூடாது.

அப்பா: ஆர் முட்டாள் நானோ? தெரியுமே....அந்த காலத்தில

பெண்: சரிதான் போ.....உந்த மனுசன் தொடங்கப்போகுது. இண்டைக்கு குடி கெட்டுது.
பணியாளர் 2: ஓ..... உதில ஒண்டும் குறைச்சலில்ல .ஆனா பிள்ளையளோட எப்படி நடக்கோணும் .பழகோணும் எண்டு தெரியாது.

தாய்: இதென்ன பேசுறியள்?அப்ப எங்களுக்கு பிள்ள வளர்க்க தெரியாதே... தெரியாமலே பெத்து வளர்க்கிறோம்.

பெண்: பின்ன.....அதுதான் தெரியுதே....

தாய்: நீ வாய மூடு....எனக்கு கெட்ட கோவம் வரும்.

- *செயல்*

*மீண்டும் வாய்த்தர்க்கம் தொடர்கிறது .வெளிநாட்டுப் பிள்ளைகள் தங்கட பாட்டில திரியுதுகளாம்*

- *பாடல்*

*பெற்றதும் பிழையோ பெற்றவர் பிழையோ*
*உற்றவர் சுற்றம் உறவுகள் பிழையோ.*
*ஏற்றம் காணா வாழ்வில் எது தான் பிழையாம் பிழையப்பா.*
*உழைப்பதும் வேண்டும் .பிழைத்திட வேண்டும்.*
*உரிமையாய் வாழ்ந்திட ஒற்றுமையும் வேண்டும்.*
*குற்றம் களைந்திட ஏற்றம் எழுந்திடும்*
*பற்றும் பரிவும் படர்ந்திட வேண்டும்.*
*ஏற்றம் மாற்றம் எங்களில் வேண்டும்.*

பணியாளர் 1: பிள்ளைகள ஒழுங்கா வளர்க்க தெரியாதவ குற்றவாளிகள் தான்.

அப்பா: அப்ப நான் பிள்ளைய ஒழுங்கா வளக்கேலையோ?

பெண்: ஐயோ! பிள்ளைய கண்ணும் கருத்துமா எவ்வளவு அன்பா வளக்கிறார்.

தாய்: உங்கட கதப்படி நான் குற்றவாளி.

பொது: உதக்கேக்க விசராக்கிடக்கு .பெத்தவன் பேசி அடிச்சு வளத்தா குற்றமே?

பணியாளர் 1: காரணமில்லாமல் அவையளின்ர மனச புரிஞ்சு கொள்ளாம அவையள

அடிமைகளா அடக்கி வளர்க்கிறது குற்றம்.

பணியாளர் 2: பிள்ளைகளோட அன்பா பழக வேணும். அவையளின்ர மனச காயப்படுத்தக் கூடாது.

சிறுமி 2: நான் நொண்டி எண்டா என்ன நொண்டி எண்டு கூப்பிடுகினம்.

மாணவி 2: என்னட்ட போட நல்ல சட்டையில்லையெண்டு அதச்சொல்லி சிரிக்கினம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவன்: நான் தான் பீடி சுருட்டு வாங்க வேணும்,கள்ளும் வாங்க வேணும். அது கூடாதெண்டா ஏன் அத ஏன் என்னட்ட சொல்லுகினம்?

மாணவி 1: படிக்க ஆசப்படுறது பிழையா?ஏன் எங்கள பேசுகினம்

சிறுமி: எனக்கு யாரும் இல்லையெண்டா என்ன ஆரும் வளர்க்க மாட்டினமா?

- *செயல்*

*குற்றவாளிகள் வெட்கப்பட்டு பிள்ளைகளிடம் மன்னிப்பு கேட்டல் பிள்ளைகளை பணியாளர்கள் அரவணைத்து காப்பகம் நோக்கி அழைத்துச்செல்லல்.*

பணியாளர் 2: எங்களில் அநாதைகள் எண்டு யாருமில்லை.

பணியாளர் 1: எல்லோரும் வாழ வேணும் .நாங்கள் நாங்களா சுதந்திர மனுசரா உலகத்தில் வாழ வேண்டும் எண்டால் எங்களில் ஒற்றுமை தேவை.அது இருந்தாத்தான் எங்களில் அவலங்கள் வராது.

பெண்: உண்மைதான் .இனி கண்ண மூடிக்கொண்டு இராதேங்கோ .எங்கட பிள்ளைகள நாங்கதானே வளத்து ஆளாக்க வேணும்.

பணியாளர் 1: எல்லோரும் ஒன்றாக கைகொடுப்போம். வறுமையை ஒழிச்சு வசதிய படைச்சு பிள்ளைகள வாழ வைப்போம்.

*<u>நிறைவு</u>*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கண்

நாடகவகை: நவீன நாடகம்

களங்களின் எண்ணிக்கை: 1. களம்

திறந்தமேடை

கலைஞர்கள் 1. தீகன் 2. இடிலக்சி 3. கௌசி 4. சகானா 5. தியான்

- *செயல்*

*இருவேறு குணங்களை உடைய உருவம். ஒருவர் பாதி பாதி வெவ்வேறு உருவமைப்பில் நிற்றல். கலைஞர்கள் ஒவ்வொருவராக மேடைக்கு மெதுவாக வந்து நிற்றல்*

*முகம் 1*

தீகன்: விடியேல்ல இன்னும் விடியேல்ல

இடிலக்சி: விடிஞ்சிட்டுது........ விடிஞ்சிட்டுது ஆனா.......

கௌசி: சூரியனக் காணயில்ல.... ஆனா விடஞ்சிட்டுது.

தீகன்: வெளிச்சமா இருந்தாக் காணுமா... இது போதாது....

சகானா: இந்த வெளிசத்திலயே வாழ்ந்திடலாம்..

தீகன்: அதெப்படி

இடிலக்சி: சூரியன்.... வந்தா...

கௌசி: அது மறஞ்சிருக்கு

சகானா: பேசாம இரு வெளிச்சம் காணும்.

தியான்: வாழவேணும் நாங்கள் வாழவேணும் இருக்கிறக் கொண்டு வாழவேணும் வெளிச்சத்தை இங்கே காணாவிட்டால் இருட்டுக்க வாழப் பழக வேணும் இருக்கிறதக் கொண்டு வாழ வேணும். இல்லையெண்டா இருக்கிறதும் போயிடும்.

- *செயல்*

*எல்லோரும் ஆச்சரியத்துடன் ஒலியை எதிர் கொள்ளல். நடிப்பு திசை மாறுதல்.*

*முகம் 2*

கௌசி: உண்மை உண்மை இருக்கிறதக் கொண்டு வாழ வேணும்

தீகன்: வீதி வெளிச்சம் போதும்.

இடிலக்சி: ஒரு மெழுகுதிரி போதும்.

சகானா: விடிஞ்சென்ன விடியாமலென்ன... எல்லாம் ஒண்டுதான்.

கௌசி: கிடைச்சதக்கொண்டு காலத்தக் கடத்திட்டாப் போதும்

தீகன்: இருட்டில வாழப்பழகிட்டா பிரச்சனையில்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- *செயல்*

*எல்லோரும் ஓ... எங்களுக்கு வெளிச்சம் தேவையில்ல...... இப்படியே இருந்திட்டுப்போவம்*

தியான்: அப்போ இருட்டுக்குப் பயமில்லையோ......பாம்பு கடிக்கும், பேய் பிடிக்கும், பூதம் சாப்பிடும் நல்லா யோசியுங்கோ நல்லா...... யோசியுங்கோ

தீகன்: பாம்போ..... ஐயய்யோ இதென்னக் கொடுமை.....

இடிலக்கசி: பூதம்..... பூ.... த....ம்......

கௌசி: எனக்கு இருட்டில இருக்கிறது பயம்

சகானா: என்ர கடவுளே என்னால முடியாது

தியான்: உங்களால இருட்டில வாழ முடியாது வெளிச்சமில்லாம எப்படி வாழப் போறீங்கள்

- *பாடல்*

*பாம்பு கடிச்சி பேய் பிடிச்சி பூதம் சாப்பிட்டு....*
*பாம்பு கடிச்சி பேயும் பிடிச்சு*
*பூதம் திண்டு போச்சுதெண்டா*
*இருட்டு வாழ்க்கை வாழுகிற*
*குருட்டு வாழ்க்கை வேண்டாமய்யோ*

- *செயல்*

*நேர்முகம் எல்லோரும் பயத்துடன் நேர்முகம் காட்டி நிற்றல்*

எல்லோரும்: இருட்டில வாழுறதா வெளிச்சத்தில வாழுறதா இருட்டில இல்ல வெளிச்சத்தில இருட்டில இல்ல வெளிச்சத்தில இருட்டில இல்ல வெளிச்சத்தில இருட்டில இல்ல வெளிச்சத்தில

தியான்: நிப்பாட்டுங்கோ....இருட்டில வாழ விரும்புகிறவை இருட்டுக்குப் போங்கோ வெளிச்சம் வேணுமெண்டுறவை வெளிசத்தை தேடுங்கோ...

கௌசி: அதுக்கு சூரியன் வரவேணுமல்லே

சகானா: இன்னும் நல்லா வெளிக்கயில்ல எப்படி வாழுறது....

இடிலக்சி: பாம்பு கடிக்கக் கூடாது என்று சட்டம் போடுவம்.

சகானா: பேய்கள என்ன செய்யிறது..... பூதம்....

தீகன்: என்ன செய்யிறது ஒண்டுமாப் புரியேல்ல....

தியான்: மேகம் மூடி வானை முட்டி தந்தனத்தோம் பாடுது தாளம் தப்பிப் போனதால இராகம் மாறிப் போச்சுது நாடும் போச்சு வீடும் போச்சு நாதியத்து கிடக்குது வீதியில வந்து கத்தி வெறுமைபட்டுக் கிடக்குது

- *செயல்*

*கலைஞர்கள் மேடையில் விழுந்து கிடத்தல் பின் கரு மாற்றம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*முகம் 2*

- *செயல்*

*தீகன் ஓடிவந்து எல்லோரையும் எச்சரித்தல் எல்லாரும் எங்கையெண்டாலும் போய் ஒளியுங்கோ....*

கௌசி: ஏன் எதுக்கு.....

இடிலக்சி: ஏன் எதுக்கெண்டு கேட்கப்படாது ஒளிக்கச் சொன்னா ஒளிக்கவேணும்.

சகானா: நமக்கேன் ....வீண் வம்பு

கௌசி: நான் எதுக்க ஒளிக்கிறது....

தியான்: அன்பான எம் உறவுகளே எங்களுக்காக தங்களைத் தியாகம் செய்த மறவர்களை எண்ணி நடக்க இருக்கும் வணக்க நிகழ்வுக்கு உங்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

தீகன்: உதுக்குத்தான் ஒளிக்கச் சொன்னன் அங்க போனா நாட்டுக்குப்போக ஏலாது

கௌசி: அட ஓம் சனம் காட்டிக்குடுத்திடும்.

இடிலக்சி: எல்லாரும் ஒளிப்பம்.... வாங்கோ...

சகானா: எங்க ஒளியிறது

தீகன்: சில அரை லூசுகளால எப்பவும் சிக்கல்தான். போய் ஒளிங்கோ....

தியான்: உங்கட சுயநலங்களுக்காகவே அவை செத்தவை.... வாழத்தெரியாமலே களத்துக்குப் போனவை உங்களுக்கு மிக அதிக சுயநலம். ரோசமில்லாதவை. உங்களுக்கு இருட்டுத்தான் சரி செத்து துலையுங்கோ...

*முகம் 1*

சகானா: எங்களுக்காக செத்தவை எங்கட மண்ணுக்காக செத்தவை

தீகன்: அவையள் எங்கட தெய்வங்கள்

இடிலக்சி: அவையளுக்கு நாங்கள் மரியாதை செய்ய வேணும். வணங்க வேணும்.

கௌசி: நாட்டுக்குப் போனா யார் பிடிப்பினம் உது பொய்

தீகன்: எல்லாரும் போய் போய் வருகினம் ஆனா இங்க நடிக்கினம்

சகானா: வாழும் வாழ்க்கைய எங்களுக்கு தந்து மாண்டவையின்ற நினைவுகூட இல்லாட்டி நாங்கள் வாழ்ந்தென்ன லாபம்

தியான்: அப்போ இங்க இருக்கிறவை ஏன் வணக்க நிகழ்வுகள புறக்கணிக்கினம் ஒரு ஊர்வலம் என்றா வருகினமில்ல....சினிமா நிகழ்ச்சிகளுக்கு அள்ளுப்பட்டுப் போகினம்

கௌசி: உண்மை உண்மை அப்ப நடிக்கினம்...... சனங்கள் நடிக்கினம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடிலக்சி: யார் சனங்கள்

சகானா: நீ..... நீ.... நீங்கள்தான் பொய்யான வாழ்க்கை......

தீகன்: எல்லாரும் நடிக்கினம் எல்லாரும் நடிக்கினம் பாவம் மாவீரர்கள் மாண்டவர்கள்.

தியான்: நாடகத்தை நடத்துகினம், நடிச்சு முடிச்சுப்போடுகினம், தாய்நாட்டில் பாசம் காட்டி வேசமிட்டு போகுதுகள். நெறிஞ்சு முள்ளப் போல அவர் நிலை மறந்து குத்துதுகள்

- *செயல்*

*கலைஞர்கள் அமைதியாக மேடையில் அமர்ந்திருத்தல்.*

தியான்: ரிங் போகுது எடுக்கிறானில்ல.... உந்த மெயில்பொக்சில எத்தனை முறை கத்திட்டன்......சிவா காசெடுக்கும் போது மட்டும் வாயா ஆவெண்டு பிளந்து கொண்டு கேள்.....கட்டுக்காச கேட்டா இல்லாத காரணத்தை மட்டும் சொல்லுறாய்.... எனக்கு இண்டைக்குப் பின்னேறத்திக்கிடையில காசு வரயில்லெயெண்டா நான் மனுசனா இருக்மாட்டன்

கௌசி: இஞ்சாருங்கோ.... உந்த சீட்டுக்காச குடுத்துத் துலைங்கோவன்... மனிசர நிம்மதியா இருக்கவிடுறானில்ல...

இடிலக்சி: எனக்கு ஒரு 200 € தாங்கோ.... சப்பாத்து வாங்க வேணும்.

தீகன்: எனக்கும் காசு வேணும்.... இண்டைக்கு என்ர நண்பர்களோட வெளியப்போறன்.

தியான்: சப்பாத்துக்கு 200 € கூடிப்போச்சு

கௌசி: சும்மா குடுங்கோ மற்றதுகள் போடுற மாதிரி என்ற பிள்ளையும் போட வேணும். அவனுக்கும் குடுங்கோ... உழைச்சி உழைச்சி பணத்த கட்டி வைக்கிறதுதான் வேல.

தீகன்: யாரோ மணியடிக்கினம்

கௌசி: போய் ஆரென்று பாத்து கதவ திற....

இடிலக்சி: மாவீரர் நாள் செய்யிற ஆக்கள் வருகினம்

தியான்: நான் வீட்ட இல்ல..... நான் வீட்ட இல்ல... மறந்திடாத

தீகன்: அப்ப 100 € கூடத்தரவேணும் அதோட நான் விடியத்தான் வருவன்

இடிலக்சி: எனக்கும்

தியான்: நேரம்பாத்து கழுத்தப்பிடிக்குதுகள் சரி போ....

சகானா நான் பல முறை வந்திட்டன் உங்கட அப்பா வீட்டில இருக்கிறதில்ல அம்மா நிக்கிறாவோ...

தீகன்: அம்மா யாரோ நீங்களாம்

சகானா: வணக்கம் நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌசி: தெரியும் அவர் வேலைக்குப்போட்டார். சம்பளமும் இந்னும் வரயில்ல. எங்கட நாலுபேர்ட வாழ்க்கைய கொண்டுபோகவே ஏலாம இருக்கு குறை நினைக் காதீங்கோ...

தியான்: ஆசை ஆசை ஆசை. பணத்தில்தான் பேராசை பகட்டில் காட்டு ஆசை. அட பாடையில் போனாலும் சாகாத பேராசை.

சகானா: சரி நான் போட்டு வாரன்... அண்ணரட்ட நான் கேட்டதா சொல்லுங்கோ.... இந்தாளட்ட 5 சதத்தக்கூட வாங்கேளாது. ம்.... இதுகளுக்காகவும்தான் நாடு...

தியான்: ஆரப்பா ஆள் போட்டுதே... சும்மா காசு காசு.....

தீகன்: ஏன் நாங்கள் குடுக்கிறதில்ல... எங்களட்ட காசு இருக்குத்தானே....

கௌசி: உனக்கு 100 இல்ல 50தான். இனிக்கதச்சா அதுவும் இல்ல.

தியான்: நாடு இவர்களுக்காகவும்தான் விடிய வேண்டும்.

*களமாற்றம்*

தியான்: காலம் தந்த ஞால வாழ்வில் தாய்ப் புலமும் இல்லை வாழ் நிலமும் இல்லை தாளம் மாறித் தட்டாமல் சீலம் செய்யும் சிலராலே வெல்லும் வெளிச்சம் உலகாள சொல்லும் உறுதி இவராலே.

கௌசி: காத்து பலமா அடிக்குது

தீகன்: விளக்க அணைய விடாம.. சுத்தி வாருங்கோ..

சகானா: விளக்கப் பாதுகாப்பா வைச்சி வெளிச்சத்த ஏத்துங்கோ...

இடிலக்சி: இருட்டுக்குள்ள வாழ ஏலாது... வெளிச்சத்தப்பாதுகாத்து வாழுவம்.

தியான்: சூரியன் இல்லாமல் இருக்கேலாது... நீங்கள் இருக்கிற வெளிச்சத்த கவனமா பாருங்கோ வெளிச்சம் வேணுமெண்டா வாருங்கோ.....யாரும் சூரியன் இல்லாம இருக்கேளாது...நேசத்தை மறந்து போகாதீர் நெறி தவறி தப்புச் செய்யாதீர் தேசம் விடந்திட வேணுமென்றால் நாசமென்பதே வீச்சாகும். காரணங்களை காட்டிக்கொண்டு களமண்ணையல்லவோ இழந்துவிட்டோம் மானத்துடன் நாம் வாழவென்றால் மண்ணை மீட்க எழுந்திடுவீர்.

<u>*நிறைவு*</u>






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழின் மூன்று, இயல் இசை நாடகம்



மொழிகள் தோன்று முன்பே ஒலிகள் தோன்றி ஒலியோடு உடலசைவுகள் தோன்றி வாய் வழி மொழியாகி இலக்கணமாகி அது வாழ்வின் இயலாகி காற்றளைந்த ஒலி இசையாகி இயலான வாழ்க்கை கதையாகி நாடகமாகி நம் இரசனைக்குரியதாக கண்வழி தொட்டு கருத்துடன் புதையும் அற்புதம் நாடகம்.

எனது நாடக முயற்சியானது இந்த நாடக நூலை உங்கள் பார்வைக்குக் கொண்டு வந்திருக்கிறது. சிறுவயதிலேயே நாடகத்தின்பால் ஈடுபாடு கொண்டிருந்த எனது பயணத்தில் 68 நாடகங்களை நெறிப்படுத்தி மேடை ஏற்றியிருக்கின்றேன். அவற்றில் இந்த துகள் என்னும் நாடகத்தொகுப்பில் 21 நாடகங்களைக் கோர்த்து வெளியிடுகின்றேன்.

குமுகத்தின் நிலைகளை என் மண்ணின் வலிகளை என் மக்களின் அவலங்களை புலம்பெயர் வாழ்வின் சுமைகளை எனது கற்பனைகளின் கோடுகளில் வரைந்திருக்கிறேன்.

மேடை நாடகம் என்பதன் பெரு வீழ்ச்சி இன்றைய திரையும் சின்னத்திரையும் என்பது தவறில்லை. ஒரு வளர்ச்சி இன்னுமொரு அடிப்படை வேரை வெட்டுவதாக அமையின் அது வளர்ச்சியாக கொள்ளமுடியாது.

புலம்பெயர் நாடுகளின் நாடகத்துறையானது தன் தரத்தை இழக்காது இன்றும் உயர்வாகப் போற்றப்படுவதும் அதை குறைவின்றி நகர்த்தும் ஆளுகையும் எம்மை வியப்படைய வைக்கிறது.

அன்பானவர்களே நாடகம் எமது தமிழின் முத்திரை எமக்கான முகவரி அதனை பேணிக் காப்பதும் அடுத்த தலைமுறையினர்க்குக் கொடுப்பதும் எமது அவசியமான பணியாகிறது.

இந்நூலில் உள்ள நாடகங்கள் உங்களுக்கு பயன்படுமாயின் அது எனது வெற்றி. எக்கலையும் உயர்கலை நாடகக் கலை நம் உயிர்க்கலை அதை உலகறியச் செய்வோம். அதற்காக உழைப்போம்.

துகள் நாடக நூல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org